சினேந்த்ர மாலை

	சூரி செ	சுக்	புதன்
சந் ராகு	இராசி		சனி
			கே
	குரு		ல

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 301

சினேந்திரமாலை

ஆசிரியர் :

சமண முனிவர்

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் :

கலைமாமணி

பேராசிரியர் ***சி. கோவிந்தராசனார்,***

கரந்தை, தஞ்சாவூர்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும் ஆய்வு மையம்

தஞ்சாவூர்

2009] [விலை : ரு. 100-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	சினேந்திரமாலை
பதிப்பாசிரியர்கள்	:	கலைமாமணி கரந்தை சி. கோவிந்தராசனார்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	301
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	நான்காம் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	மார்ச், 2009
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	24 x 14 செ. மீ.
பக்கங்கள்	:	284
படிகள்	:	1000
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	சோதிடம்
விலை	:	ரூ. 100-00

வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வமாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக் கருவூலமாகவும், பன்மொழி நூற்களஞ்சியமாகவும், பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. இந்நூலகம் தமிழகத்தினர் மட்டுமின்றிப் பிற மாநிலத்தவரும், பிற நாட்டினரும் பயன்படுத்தி வருகின்ற ஓர் அரிய ஞான ஆலயமாகும். இந்நூலக வெளியீடான சினேந்திரமாலை எனும் இந்நூல் தற்போது நான்காம் பதிப்பாக வெளிவருகிறது. இந்நூல் சுவடி எண்கள் 667 மற்றும் 1002 ஆகிய இரு சுவடிகளில் பதிவாகியுள்ளது.

உலகத்தில், வரும் முன்னர் அறியும் கலையைச் சோதிடம் என்று உரைத்து வருகின்றனர். எல்லாச் சாத்திரங் களிலும், கலைகளிலும் சோதிடத்தையும், முன்னோர் இணைத்து வந்தனர். மன்னர்கள் காலத்தில்கூட அவர்களுக்கு நோய் ஏற்படின் நோய்க்கு மருந்து தரும் மருத்துவர்கள் சற்று நிதானித்துச் சோதிடத்தைப் பார்த்த பின்னரே மருந்து கொடுப்பது வழக்கில் இருந்திருக்கிறது. தஞ்சையை ஆண்ட மன்னர் சரபோஜி அவர்களும் ஒவ்வொரு மருத்துவ நூல்களிலும் இந்த முறையைப் பின்பற்றி இருக்கிறார் என்பது தெளிவு.

மிகத் துல்லியமாக கோள்களின் நகர்வுகளை கணித்து, கணக்குகளை கொண்டு சோதிடச் சாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது என்பதை காணும்போது அக்காலத்தில், எவ்வித நவீன விஞ்ஞான கருவிகள் இல்லாத நிலையில், வானியல் அறிவு இந்தியாவில் எந்த அளவுக்கு முன்னேறி இருந்தது என்பதை பெருமிதத்தோடு உணர்கிறோம்.

சங்க காலத்தில்கூடக் கணியர்கள் (சோதிடர்கள்) இருந்து வந்திருக்கின்றனர். கணியன் பூங்குன்றனார் இயற்றிய "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் அடிகள் என்றும் வாழும் பெற்றிக்குரிய தமிழகப் பண்பாட்டின் மணிமுடிக் கருத்தாக உள்ளது. சோதிட சாத்திரம் விரிந்து, பரந்து, அகன்று, ஆழ்ந்து கூறும் பொருண்மைச் சிறப்புடையது. இதில் தன்னிடம் வருவோன் விருப்பத்தினை மனக்கணக்கியல் கணிப்பாகக் கூறுவது ஆருடக் கலையாகும்.

சினேந்திரமாலை எனும் இந்நூல் ஆரூடச் சாத்திரமாகும். செய்யுட்கட்குரிய கருத்தும் பொழிப்புரையும் அருஞ்சொல் பொருளும் சிறப்பாகத் தொகுத்துக் கொடுத்துள்ளார் இந்நூலின் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியரான கலைமாமணி பேராசிரியர் சி. கோவிந்தராசனார் அவர்கள். இந்நூல் ஆரூடம் கற்போருக்கும் சோதிட ஆர்வலர்களுக்கும் ஐயம் தெளிய விழைவோர்க்கும் மிகவும் பயனுறும் என நம்புகிறேன்.

இந்நூல் வெளிவர நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர, கணினி பிரிவில் பணிபுரியும் அனைவருக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம். எஸ். சண்முகம், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
24-3-2009

முன்னுரை

உலகம் ஓரச்சில் நின்று சுழன்றுகொண்டே இருக்கின்றது. இவ்வியக்கத்தினாலேயே அனைத்து சீவராசிகளும் செயல்களும் இயங்குகின்றன. பூமிக்குள் மறைந்து நிற்கும் சக்திகளின் ஒருமித்த வெளிப்பாடு, சூழ்ந்துள்ள பொருள்களையும் வெளிமண்டலங்களிலிருந்து வரும் கதிரியக்கத் தாக்கங்களையும் இலேசாக ஈர்த்துக்கொண்டே இயங்கும் புவியீர்ப்பு நிகழ்ச்சி மாறாது செயற்பட்டு வருகின்றது.

கடலும் மலையுமாகக் காட்சிதரும் பூமியைச் சூழ்ந்துள்ள வெளிப்பரப்பும், அதனிடத்து மண்டலித்துச் சுழலும் காற்று மண்டலமாகிய வளிநிலை ஆகாயமும், அதன் மேலாகச் சூழ்ந்த காற்று இல்லாத வறிதான மண்டலமும், அதன் மேல் நட்சத்திரங்களும், கிரகங்களும் இயங்கும் அண்டவெளி மண்டலமும், அதற்கப்பால் உள்ள பரவெளியாகிய மூலசக்திகளின் ஒருமித்த பேரொளி மண்டலமும் பூமியைச் சூழ்ந்ததாகவும், அப்பாலும் பல்வேறுபட்ட நிலைகளில் இயங்குகின்றன. இவை அனைத்தும் ஒளிக்கதிரால் ஒலியும், சீவசக்தியும் தரும் சூரியனைச் சார்ந்துள்ள இயல்பும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலோடு அமைந்த புவியின் இடையறாத இயக்கத்தினால் ஆக்கம்-காத்தல்-அழித்தல் ஆகிய செயல்களும், அகத்தே மறைத்தல், புறத்தே ஆக்கமுற அருளால் ஆகிய நிகழ்வுகளும் நிகழ்கின்றன. பரவெளி ஆக்கவுணர்வு ஒன்றால் இவைகள் நிகழ்கின்றன என்பதொரு தத்துவமும் கொள்ளப்பெற்றளது.

இவ்வாறமைந்த தெய்வீக ஆக்கக் கூறுபாடுகளை ஞான நிலையில் கண்டறிந்த தமிழகச் சிற்பியொருவன், ஓருருவில் தத்துவமாகச் சித்தரித்துச் சிலையாக்கி ஆடல் வல்லான் என்னும் பெயருந்தந்து, அகில உலகத்திற்கும் அறிமுகப்படுத்தியுள்ளான். இச்செயல் கி. பி. ஐந்தாம்

நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்பெறுகின்றது. பின்னர் பல்லவர் காலத்தில் பரவி, சோழர் காலத்தில் பல்வேறுபட்ட நிலைகளில், தத்துவக்கோட்பாடுகளின் ஆக்கமாகவும் ஆடவல்லான் திருமேனிகள் ஆக்கப்பட்டுள்ளன.

புவியின் இயல்பினையும், அதனைச் சூழ்ந்த தாக்கக் கதிர்களையும், மூலக்கூறுபாடுகளையும் ஞானிகளும், சித்தர்களும் தங்களது தவவலிமையாலும், நுண்ணிய பரிச உணர்வுகளாலும் காட்சியளவைகளாலும் கண்டு, உண்மை நிலைகளை ஆராய்ந்து, புவியுள்ள சீவராசிகட்கும் வெளிப்புறச் சக்திகட்கும் உள்ள தொடர்பினை அளவிட்டுக் கூறியுள்ளனர்.

அவர்களது கணிப்பில் பன்னிரண்டு ராசிகளும், அசுவதி முதலாகிய இருபத்தெட்டு நட்சத்திரங்களும், சூரியன்-சந்திரன் முதலாகிய ஒன்பது கோள்களும் அவற்றின் சாயைகளும் அளவிடப்பட்டு, இவற்றால் புவியிடத்துத் தோன்றி இயங்கும் சீவராசிகட்குப் பொருந்திய விளைவு களையும் அறிந்தனர்.

தாங்களறிந்த காலநிலைக் கணிப்பினை, உலக மானுடர் அறிந்து, முக்கால நிகழ்வுகளையும் உணர்ந்து நடந்துகொள்ளு வதற்கு ஏதுவாகப் பல்வேறுபட்ட நிலைகளில் எழுதி வைத்தனர். அவையே சோதிட சாத்திரங்களாகும்.

மற்றும், பூமியின் ஈர்ப்புச் சக்தியுடன் அவ்வப்போது இயைந்துஇணைந்து புதுமைகளை விளைவிக்கும் பரவெளி ஆக்கசக்தியின் கதிரியக்கத்தினை அளவிட்டறிந்து, முறையே பூமியை வஸ்து (பெண்) என்றும், அதனோடு பொருந்தும் இயக்கத் தாக்கத்தினை அனுமானித்து வாஸ்துபுருஷன் என்றும் குறிப்பிட்டுள்ளனர். வாஸ்து பற்றிய விளக்கங்களை மனையடி சாத்திரங்களில் காண்க.

சோதிடக் கணிப்பும், அதன் அங்கங்களாகும் நிமித்த சாத்திரம், ஆருடசாத்திரம், பறவை சாத்திரம், மனைக் கணிப்பு, ஆகிய காலக்கணிப்பு நியதிகள் தமிழகத்தில் சங்க

காலத்திலேயே மக்கள் வழக்கில் பின்பற்றப்பட்டுள்ளதனை புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களால் அறியலாகும்.

தனக்கென வாழாது, மன்னுயிர்கட்கு உதவும் மாண்புடன் சான்றோர் ஓர்ந்து உணர்ந்து பட்டறிவோடு தெளிந்து எழுதிவைத்த சோதிட சாத்திரங்களுள் பழமையானதாகக் கருதப்படுவது, **சினேந்திரமாலை** என்னும் பெயரில் அமைந்த இச்சோதிட ஆரூட விளக்க நூலாகும்.

இந்நூலாசிரியரின் பெயர் மூலச்சுவடியில் குறிக்கப் பெறவில்லை. நூலின் முற்பகுதியாகும் பாயிரம் என்னும் முன்னுரையில் தெய்வ வணக்கமாக,

"உலகம் தளிர்க்க விண்ணகத்தில் இயலும் சிறந்த சந்திரனாகிய பொற்குடையின் கீழமர்ந்த தீர்த்தங்கனாகிய கடவுளனை எந்நாளும் பணிந்து போற்றும் மனத் திட்பத்துடன் அமைந்த தீராத விருப்பத்தினால், "சினேந்திர **மாலை**" என்னும் நூலினை, உலகத்தோர் அறிந்து உய்யும் பொருட்டு அன்புடன் உரைத்தேன்" என்று ஆசிரியர் கூறுகின்றார்.

இவ்வாறு தீர்த்தங்கரர் வணக்கத்துடன் நூலின் பெயரையும், அருகதேவர் வணக்கம், சாவகர் வணக்கம் ஆகிய சமணசமய கோட்பாடுகளையும் முறையாக ஆசிரியர் எழுதியுள்ளதால் இந்நூலாசிரியர் சமண சமயத்தவராகிய ஞானியாகவோ, சித்தராகவோ இருக்கிறார் என்பது புலனாகின்றது.

மற்றும், தாம் இயற்றிய நூலிற்குப் பெயர் குறிக்கும் ஆசிரியர், சமண சமயத்தலைவர்களாகத் தொடர்ந்து விளங்கிய தீர்த்தங்கரர்களுக்குரிய சிறப்புப் பெயராகிய **"சினேந்திரன்"** என்னும் பெயராலேயே **சினேந்திரமாலை** என்று பெயர் வைத்திருப்பதும் சான்றாகும்.

சோதிட சாத்திரம் என்பது ஒரு கடல்போன்று அளவிட்டறிய முடியாது விரிவுபெறும் காலக்கணிப்பியல் ஆகும். உலகிலுள்ள அனைத்து சீவராசிகட்கும் நிகழ்ச்சிகட்கும் சோதிடக்கலை அமைந்ததாயினும், சிறப்பாக மனிதருக்குரியதாகக் கணக்கிட்டுரைக்கும் வழக்கே தொடர்ந்து வருகின்றது.

ஒரு குழந்தையின் பிறப்புக் காலத்தினை, அன்றைய சூரிய சஞ்சார இருப்பு இராசியிலிருந்து கணக்கிட்டுக் கணித்து லக்கினமாகக் கொண்டு பன்னிரண்டு ராசிகளிலும் அப்பொழுது நிலவிய கிரகங்களின் இருப்பினைக் குறிப்பதோடு, சந்திரன் நின்ற இராசி முதலாகவும், லக்கினம் முதலாகவும் தொடர்ந்த இராசிகளில் நின்ற கிரகங்களின் நட்பு, பகை, ஆட்சி, உச்சம், நீச்சம் ஆகிய தன்மைகளையும், நோக்கின் கதிரளவுகளையும், திசாபுத்திகளையும் கணித்துப் பலன் காண்பதாகும்.

இவ்வாறு காணும் சோதிடக் கணிப்புமுறை திட்டவட்டமான பலனைப் பிறப்பியல்போடு விரிவாகக் காண்பதற்கும். இம்முறையினை அடிப்படையாகக் கொண்டதாயினும், தன்னிடம் வந்தவன் விருப்பத்தினை, அப்பொழுதே மானசீகக் கணிப்பினால் உணர்ந்து கூறுவது ஆருடக்கலையாகும்.

ஆருடச் சோதிடனிடம் தனக்கு ஏற்பட்ட குறை நிறைகளுக்கான செய்தியை அல்லது பலனை அறிய வந்தவன் நேர்நின்ற காலக்கணிப்பும், அவன் நின்ற இடத்திற்கமைந்த மானசீகமாக வரைந்துகொண்ட இராசியும்- உதயமாகும் இராசிகளின் அப்பொழுது சஞ்சாரம் செய்துள்ள கிரகங்களின் நிலைகளைக் காண்பித்து - கவிப்பாகும். உதயத்தினை முதலாகக் கொண்டு இராசிகளில் உள்ள கிரகங்களின் பார்வைக் கதிரளவுகள் - கயிறாகும்.

இவ்வாறு அனுமானுத்துக் காணும் சக்கரமே ஆருட சக்கரமாகும்.

இவ்வாறு அமைந்த சக்கரத்தினை அனுமானித்து வரைந்துகொண்டு, உதயாரூடப்பலன் முதலாக நூலில் கூறியுள்ள பலன்களை நினைவு செய்தும், அனுபவத் திறனைக் கொண்டும் சாதுர்யமாகக் கணிப்பிட்டு, வந்தவன் வந்த நோக்கத்தினை உணர்ந்து தேர்ந்து தெய்வவாக்குபோல் கேட்பவன் வியக்குமாறு செய்திகளைத் தப்பாமல் சொல்லும் அறிவியல் மனனக்கலையே ஆரூடக்கலையாகும்.

சினேந்திரமாலை ஆரூடக்கலைச் சாத்தியமாகவே எழுதப்பட்டுள்ளது. பாயித்துள் கடவுள் வணக்கத்துடன் ஆரூட ஆசான் திறமும் கூறப்பட்டுள்ளது. நூலில் இடம் பெற்றுள்ள ஆரூட இலக்கணத்தில் ஆரூட ஆசான் காணும் திறங்களுள் - பொருள் நட்டம், களவுபோன பொருள், பிரிந்துபோன சீவன், தொடர்ந்துள்ள அல்லது தொடர இருக்கும் தொழில் அல்லது செயல் பற்றிய விபரம், வியாபாரம் பற்றிய விபரம், பலாபலன்கள், வாழ்க்கை பற்றிய விபரம், வந்த நோய் தீரும் வழியும் காலமும் ஆகியவற்றைக் காணும் முறைகள் கூறப்பட்டுள்ளன.

நட்டமும், முட்டுப்பாடும், துன்பமும் ஏற்பட்ட நிலையில் நட்டமுட்டி சிந்தனையுடன் தன்னை நாடிவந்த மனிதன், தன் எதிரே வந்துநின்ற காலக்கணிப்பாகும் உதயம், இராசிச் சக்கரத்தில் இடம், இராசிகளில் கிரகங்களைக் கொண்டு காணும் கவிப்பு, அவற்றின் தாக்கமும் நோக்கமு மாகும் கயிறுகள் ஆகியவற்றை நொடிப்பொழுதில் கணிப்பிட்டறிந்து, வந்தவனது சிந்தனையினை நூலாட்சி அறிவுத்திறம் ஆகியவற்றால் வகுத்துப் பகுத்துத் திட்டமாக ஆரூடம் கூறும் முறைகளை, ஆசிரியர் விரிவாக வெண்பா செய்யுள் வடிவில் கூறியுள்ளார். உரைநடையாகப் பிற்பகுதியில் தந்துள்ள விளக்கங்கள் மிக்க பயன்தரும் பகுதிகளாகும். மற்றும், ஆரூடம் கற்பார் சினேந்திர மாலையுடன் சரசுவதி மகால் நூல் நிலைய வெளியீடாக வந்துள்ள சகாதேவ நிமித்த சூடாமணி என்னும் ஆரூட சாத்திரத்தினையும் கற்றுத் தேர்தல் பயன் மிகுந்ததாகும்.

செய்யுட்கட்குரிய கருத்தும், பொழிப்புரையும் அருஞ்சொற்பொருளும் தரப்பட்டுள்ளன. ஆரூட முறைமைகளுக்குரிய கணிப்புகள், உதய, தாது, மூல காண்டங்களால் உணர்த்தப்படுகின்றது. இன்னவகை சீவனைப் பற்றியது என்பதனை அறிந்து கூறும் உபாயம் சீவகாண்டம் கூறுகின்றது. அடுத்துள்ள நட்டாமுட்டி சிந்தனைக் காண்டத்துள், பல்வேறு நிலைகளில் தன்னை நாடிவருபவனின் மனநிலையினை உணரும் விதிமுறைகள் கூறப்பட்டுள்ளன. பொருள் இன்னது என்பதுடன், அதுபற்றிய அனைத்து விபரங்களையும் கண்டுகூறும் தந்திரம் ஆறாவது காண்டம் அளவிட்டுரைக்கின்றது.

அடுத்துள்ள ஏழாவது காண்டம் சல்லியகாண்டம் என்பதாகும். சல்லியம் என்பது வீடு கட்டும் பூமியிடத்தின் உள்ளேயும், தேவையான பூமிப்பகுதியிடத்திலேயும் உள்ளே இயற்கையாகவும், செயற்கையாகவும் உள்ள பொருள்கள் இன்னவை என்பதுடன் அவற்றால் வரும் பலாபன்களையும் கணிப்பிட்டு உரைக்கும் ஆரூடக்கலையாகும். சல்லியமாக உள்ள இயற்கைச் சுவடுகள் செம்மண், களிமண், மணலீடு, பாறைக்கற்கள், உலோகத்தாதுக்கள், படர்பாறை என்பன போன்றவைகளாகும். செயற்கையாகப் புதைந்துள்ள சல்லியம், உலோகப் பொருள்கள், சிலைக்கற்கள், உலோகச் சிலைகள், புதையல்கள், நாணயங்கள், எலும்பு வகைகள், கரீயீடுகள் ஆகியவைகளாகும். இவை 16 வகை எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

தொடர்ந்து எட்டாவதாகவுள்ள கீழ்நீர்க் காண்டம் பூமிக்கு அடியில் நீரோட்டமுள்ள இடமும், ஆழத்தின் அளவும் கணித்துக்கூறும் ஆரூடப்பகுதியாகும்.

ஏழு, எட்டாம் காண்டங்கள் நாட்டில் வேளாண்மை விருத்திக்குரிய நிலவியலறிதல், நீர்ப்பாசன வளர்ச்சிக் காணல் ஆகியவற்றிற்குப் பயன்தரும் ஆரூடக்கலைகளாகும்.

நூலின் பக்கம் 187-ல் இருந்து தொடரும் உரை விளக்கப் பகுதியில், நூலின் முற்பகுதியான ஆரூட ஆறுகாண்டங்

களிலும் இல்லாததும், புதியதுமான ஆறு காண்டங்கள் எழுதப்பட்டுள்ளன. அவை, (1) பிணிக்காண்டம், (2) நன்மை தீமை காண்டம், (3) உணவு, சுவை காண்டம், (4) காம் காண்டம், (5) மகப்பேறு காண்டம், (6) சுரிகை (ஆயுதம்) காண்டம் என்பனவாகும்.

இவற்றால், முன்னர் சொல்லப்பட்ட ஆரூட முறைகளை விரிவாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ளலாகும். சிறப்பாக, மனைவியைப் பற்றியும் (காம காண்டம்) பிள்ளைகள் பிறக்கும் ? இல்லையா? வம்ச விருத்தி உண்டா இல்லையா? ஆகிய வாழ்வியலுக்குரிய ஆரூடக் கணிப்புமுறைகள் அறியத்தக்கதாகும்.

நூலிலுள்ள வெண்பாக்களில் சில மகடூஉ முன்னிலை என்ற வகையில், பெண்ணை முன்னிலைப்படுத்தி உரைப்பதைப்போன்ற அமைப்பில் கூறப்பட்டுள்ளன. சான்று,

இறப்பு நிகழ்வு எதிர்வென்றிம் மூன்று
திறப்பில் சுபாசுபங்கள் தேர்ந்து - திறப்படுப்பன்,
சேலனைய கண்மடவாய் / சீரார் சினேந்திர
மாலையெனும் பேரிதனுள் வைத்து.

பிரதி செய்யப்பட்ட வால்யூமில் சில பகுதிகள் விளங்கிக்கொள்ள இயலாததாக இருந்தமையால், ஒப்பிட்டுத் தெளிவுகாணும் முயற்சியாகப் பிற சுவடிகளைத் தேடலானேன்.

மதுரை தமிழ்ச் சங்கத்திலுள்ள சுவடியும், தென்காசி வட்டம் கீழப்பாவூர் வாத்தியார் வீட்டுக் கைப்பிரதியும் எனக்கு உதவியாக அமைந்தன. அவற்றைக்கொண்டு பாடல்களை ஒப்பிட்டுத் தெளிவு செய்ததுடன், சோதிட முறைமைகளைக் கொண்டு பொழிப்புரையும் அரும்பத உரையும் எழுத முடிந்தது.

அச்சாகுங்கால் ஒருசில பிழைகள் நேர்ந்துள்ளன. இன்றியமையாத பிழைகட்குத் திருத்தம் பிற்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆரூடம் கற்பார்க்கும், சந்தேகம் தெளிய விழைவார்க்கும், திட்டமாக நூலில் இடம் காண்பதற்குரியதாக உரிய பக்கங்களுடன் பொருளடக்கம் விரிவாகத் தரப்பட்டுள்ளது.

தஞ்சை, சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூல் நிலையம் வெளியிடும் சினேந்திரமாலை என்னும் ஆரூட சல்லிய கீழ்நீர் சாத்திர நூல், சோதிட ஆரூடம் கற்போருக்கும், காண்போருக்கும் பயன்தரும் நூலாகும் என்பது எனது கருத்தாகும்.

இந்நூலினைப் பதிப்பிக்கும் பணியை அளித்த முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர் அவர்கட்கும், இப்பொழுதுள்ள இயக்குநர், பன்மொழிப் புலவர் பேராசிரியர். உயர்திரு மு. சதாசிவம் அவர்கட்கும் எனது உளமார்ந்த நன்றியுரித்தாகும்.

இந்நூல் உருவாவதற்கு அன்புடன் ஆவன உதவிய வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு. அ. பஞ்சநாதன் அவர்கட்கும், நூலினை நன்முறையில் அச்சிட்ட சரசுவதி மகால் நூலக அச்சகத்தார்க்கும் ஏனையோர்க்கும் நன்றிகூறி மகிழ்கின்றேன்.

தஞ்சை

10-9-1990 **சி. கோவிந்தராசனார்**



பொருளடக்கம்

	பக்கம்
பாயிரம்	1 - 8
1. உதயகாண்டம் (9 - 61)	
கவிப்புக்கு நட்பு, நட்புறவு காணல்	9
கோள்களின் நட்பு, ஆட்சி, உச்சம், அத்துச்சம்	10 - 13
பகைக்கோள், நீச்சவிராசிகள், நீச்ச அளவு	14 - 16
இராகு, கேது - இராசி நிலைகள்	16 - 17
இராசிகளின் வடிவம்	17 - 18
ஆரூட சக்கரம் வரையும் முறை	19
திரிசக்கரம் வடிவம் - கோள்கள்	20
எதிர் கயிறுகள் (நேர் நிலைப் பார்வை)	21 - 22
ஆதித்தன் சஞ்சாரம் - விளக்கம்	23
கயிறு காணும் கணக்குமுறை	24 - 26
கவிப்பில் - மற்றொரு வகை	27 - 29
இராசிகளில் ஆரூட உதய இடங்கள்	28 - 29
இராசிகளில் கால்கள், வலிமை - பிற	30 - 31
இராசி வலிமைபெறும் இடங்கள்	31 - 32
இராசிகளின் நோக்கு அளவுகள்	33 - 35
இராசிகள் கோள்கள் பார்வைத்திக்கு	36 - 37
ஆண் - பெண் இர்ராசிகள் அறிதல்	37 - 39
கோள்கள், இராசிகள் - குலம்	40 - 41

	பக்கம்
இராசி கோள் பிறப்புவகை - வடிவு	42 - 44
கோள்களின் வலிமை, கதிரளவு	45 - 46
இராசிகளின் ஒளி அளவுகள்	47
கோள்களின் - காத அளவுகள்	48
கோள்களின் வயது, மறு, வடு, சுவை, அங்கம்	49 - 51
இராசிகளின் இயக்கம்	52
கோள்களினால் விலங்குகள் அறிதல்	53 - 54
கோள்கள் உள்ள இராசிகளால் ஆரூடம் காணல்	55 - 56
கோள்களினால் இரவு, பகல், சந்தி அறிதல்	57
கவிப்புக்குரிய கால அளவுகள்	58
ஆரூடசாமக்கோள்கள் - உதயம்	59
மறைந்துள்ள கிரகங்களின் காலநிலை	60 - 61

2. தாது காண்டம் (62 - 69)

தாது, மூலம், சீவன் - இராசிகள்	62
கோள்களினால் தாது மூல இடங்களறிதல்	63
கோள்களினால் தாது, உலோகம் காணல்	64
கோள்களின் கருவிகள்	65
கோள்களின் பூமி, தாது, இரத்தினங்கள்	66 - 67
கோள்களின் உலோகத் தோற்றம், ஆபரணங்கள்	67 - 69

3. மூல காண்டம் (70 - 81)

கோள்களினால் தாவரவகை, பயன் அறிதல்	70 - 79
நிலவகை, நீர்வகை அறிதல்	79 - 80

பக்கம்

4. சீவ காண்டம் (82 - 102)

கோள்களின் முறைப்பெயர், உறுப்புகள், உயிரறிவு	88
கோள்களின் சீவனறிதல்	83 - 85
நான்குவகை சீவன்கள் அறிதல்	85 - 87
கவிப்புக்குரிய சீவனின் பயனறிதல்	88
பறவைகட்கு நிலமறிதல்	89
மானுடர் வகை நிலை அறிதல்	90 - 93
பிராணிகள் விலங்குகள் அறிதல்	94 - 99
சீவ இராசியினால் ஆரூடம் காணல்	99
பசு, எருமை ஆருட பலாபலன் அறிதல்	99 - 101
காண்டத்தில் கோள்களின் இயக்க பலன்	102

5. நட்டாமுட்டி சிந்தனைக் காண்டம் (103 - 111)

தாது, மூலம், சீவன், கவிப்பு காணல்	103 - 104
நட்டமுட்டி சிந்தனை இடங்கள்	105
சந்திரனால் காணும் ஆரூடக் கணிப்பு	106
ஆரூட உதயம் - சக்கரம் - குறிப்பு கூறுதல்	107
நட்டம் சிந்தனை காணல்	108
கேட்டவன் சிந்தனை - காரியம் காணல்	109 - 111

6. பொருள், பேறு, கெடுதி காண்டம் (112 - 154)

கேட்டவனது நன்மை-தீமை காணும் உபாயம்	112 -114
திரிசக்கரக் கயிறு - கவிப்பு பலன்கள்	114 - 117
வந்தவனுக்குரிய கவிப்புப் பலன்	118
உதயாரூடக் கவிப்பில் கிரகங்கள் - பலன்	119 - 130

	பக்கம்
சரராசியால் - பலன் கண்டுகூறுதல்	130 - 132
தீங்கின் வலிமை அறிதல்	133
போனபொருள் தானே வருவதற்கு ஆரூடம்	133
கெட்ட பொருளை விட்ட இடம் நட்டம் வரவு	134 - 135
குரு, புதனால் நற்பலன்கள் காணல்	136
களவுபோன பொருள் இரத்தினங்கள் அறிதல்	138 - 140
ஆரூடத்தில் நாற்கால் சீவன் அறிந்து கூறல்	138 - 140
ஆரூடத்தில் களவுபோனபொருள்களை அறியும் நுட்பம்	141
களவாடியது ஆண், பெண் என்று அறிதல்	142
நட்டத்திற்குக் காரணம் இது என்பதைக் காணல்	143
கெட்டுப்போன பொருள் சென்றுள்ள திசையறிதல்	144 - 145
களவுபோன பொருள் உள்ள தடம் இடம் காணல்	146 - 150
களவுபோன நாளினைக் கணித்துக் கூறுதல்	151 - 152
களவுபோன பொருள் வருமா ? வராதா ? தெளிவு காணல்	153 - 154

7. சல்லியக் காண்டம் (155 - 171)

சல்லியம் என்றால் என்ன ? கணிப்பும் விளக்கமும்	155
சல்லியம் 16 வகையும் அதன் பயன்களும்	156 - 157
சல்லியம் அறியும்முறை - இடம்	158 - 159
சல்லியம் உண்டு இல்லை - காணல்	160
சல்லியம் இன்னது என்பது அறிதல்	161 - 164
சனி - இராகுவுக்குரிய சல்லியம்	164
சல்லியத்தால் நன்மை-தீமை பயன் கூறுதல்	165 - 166

பக்கம்

சல்லியம் இருக்கும் ஆழம் அறிதல் 167 - 168

சல்லியம் காணுதற்குச் சக்கரம் 169 - 171

8. **கீழ் நீர் காண்டம் (172 - 188)**

நிலத்தடியில் நீரோட்டம் காணல் 172 - 173

கீழ் ஊற்று, மேல்ஊற்று அறியும் உபாயம் 174 - 176

பழங்கிணறு, கரையழிவு காணல் 177

உவர் நீர், நல்ல நீர் காணல் 178

கிணறு தோண்டும் இடத்தில் சல்லியம் பலன்கள் 179 - 180

கீழ்நீர் காண தோண்டும்போது பெறும் பலன்கள் 180

கீழ்நீர் உள்ள இடத்தை அறியும் நுட்பம் 181 - 182

கிணறு தோணட விளையும் பலாபலன்கள் 183

தோண்டும் கிணற்றில் நீர் காணும் ஆழம் 183 - 184

கிணறு தோண்டுவதற்குரிய திசைகள் பலன்கள் 184 - 186

உரை விளக்கம்

1. **உதய காண்டம் (பொது)**

பாயிரம் - விளக்கச் சுருக்கம் 187

கோள் இராசிகளின் நட்பு, உச்சம் முதலிய நிலைகள் 188 - 190

ஆரூடச்சக்கரம் வரையும் முறை 191

எதிர்கயிறு - விளக்கம் 192

நட்சத்திர சக்கரம் - கவிப்பு உதய விளக்கம் 193

கிரக உதய இராசி சீவன் கண்டங்கள் 194

கண்டங்களின் பலன் - கோல் பலன் 195

கோள் இராசிகளின் நோக்கு விளக்கம் 196

இராசி கிரகம் பற்றிய முழு விளக்கம் 197 - 199

இராசி கிரகம் - கதிர் வயது, வடு, கலை விளக்கம் 200

இராசிகளின் நிலை, பலன் 201

களவுபோன பொருள் கெட்டுப்போன பொருள் ஆரூடம் 202 - 203

கோள்கள் பலன்தரும் கால அளவுகள் 204

நட்டமுட்டி சிந்தனைக்கு - பலன்கூறும்முறை 205

2. **தாது காண்டம்**

தாது, மூலம், சீவன்

3. **மூலகாண்டம்**

கோள் ராசிகளால் தாவர வகையறியும் ஆரூடம் 209 - 211

ஆழ்நீர் அறிந்த ஆரூடம் கூறல் 212

4. **சீவகாண்டம்**

கோள் இராசிகளின் கவிப்பால் சீவவர்க்கம் காணல் 213

சீவனது வகையறியும் ஆரூடம் 214 - 215

5. **மானுடவர்க்ம் - இனவகை**

இராசி கோள்களால் மானுடவகை, செயல் பிற அறிதல் 216 - 217

6. **நாற்கால் விதி - விலங்குகள் வகை**

விலங்குகளின் வகை, நிறம், குறி அறியும் ஆரூடம் 218 - 220

7. **சிந்தனைக் காண்டம்**

வந்தவன் சிந்தனை, விருப்பம் அறியும் ஆரூடவிதி 220 - 222

8. **பொருள், பேறு, அழிவு காண்டம்**

ஆரூடம் காணும் நுட்பங்கள் 223 - 224

கவிப்பினால் பலன் காணுதல் 225 - 226

கோள்களின் உதயம், பாடு - பலன் 227 - 232

நாற்கால் சீவன் கெடுதி அறிந்து கூறுல் 233

களவுபோன பொருள் உள்ள இடம் மறைப்பு 234 - 238

வந்தவன் சிந்தனை யாவையும் அறியும் ஆரூடம் 239 - 242

9. **பிணிக் காண்டம்**

நோய்கள் பற்றிய ஆரூடக் கணிப்பு வகை 242 - 246

10. **நன்மை, தீமை காண்டம்**

வந்தவன் சிந்தனை விருப்பம் அறியும் உபாயம் 247 - 249

11. **உணவு, சுவை காண்டம்**

வந்தவன் - உணவு, கலை கண்டுகூறல் 250 - 252

12. **காம காண்டம்**

பெண் சேர்க்கை, நட்பு, பகை, விருத்தி கூறல் 252 - 253

13. **பிள்ளைப்பேறு காண்டம்**

பிள்ளைப்பேறு உண்டா ? இல்லையா ?
கண்டுகூறல் 253 - 257

14. **சுரிகை காண்டம்**

வந்தவனது ஆய்ந்த பலன்,
வெற்றி-தோல்வி கூறல் 258 - 259

15. **சல்லியக் காண்டம்**

பூமிக்கு அடியிலுள்ள பொருள்கள்
இன்னது என்று காணல் 259 - 261

16. **கீள்நீர்க் காண்டம்**

பூமிக்கு அடியிலுள்ள நீர்நிலைபற்றிய
விபரம் கூறுதல் 262 - 263

எமது வெளியீடுகள்

ஜாதக அலங்காரம்	125-00
காலபிரகாசிகா	100-00
நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-I)	200-00
நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-II)	100-00
அமரகோசம் (பாகம்-I)	65-00
அமரகோசம் (பாகம்-II)	60-00
அமரகோசம் (பாகம்-III)	60-00
பிரகதீஸ்வர மாகாத்மியம்	43-00
ஜைனிஸம் கேட்லாக்	10-00
தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதை	35-00
காயத்ரீ கோசம்	30-00
கீதகோவிந்தம்	25-00
கல்பலதா (ஸ்ரீருத்ரபாஷ்யம்)	22-00
பாணினீய தாதுபாடம்	30-00
விருத்தரத்னாவளி	30-00
பலவதி	120-00
நந்திநாகரி சுவடிகளின் அட்டவணை	25-00
பிரபஞ்சசாரசார ஸங்கிரஹம் (பாகம்-I)	180-00
பிரயோக ரத்னமாலா	55-00
ரத்ன பரீக்ஷை	40-00
சப்தம் தாளம் சொற்கட்டு	40-00
ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ தீபிகா	100-00
ஸ்தோத்ர ராமாயணம்	25-00
நாககுமார காவியம்	55-00
விமானார்ச்சன கல்பம் (பாகம்-II)	75-00
சூலினிகல்பம்	50-00
சூர்யசதகம்	50-00
தஞ்சை நாயக்கர் வரலாறு	205-00
யதிராஜவிஜயம்	35-00
பிரபோதசந்திரிகை	70-00

சினேந்திர மாலை

பாயிரம்

வெண்பா

விண்ணியலு மாமதி பொன்குடைக் கீழ்ப்
பண்ணவனை நாளும் பணிந்தேத்தித் திண்ணியல்பிற்
றீராத காதலினால் செப்பு சினேந்திரனூல்
பாரோர்க்குச் சொன்னேன் பரிந்து.

எ-து : தெய்வ வணக்கம் சொல்லியது

இ-ள் : உலகம் தளிர்க்க விண்ணகத்தில் இயலும் சிறந்த சந்திரனாகிய பொற்குடையின்கீழ் அமர்ந்த தீர்த்தங்கரனாகிய கடவுளனை எந்நாளும் பணிந்து போற்றும் மனத்திட்பத்துடன் அமைந்த தீராத விருப்பத்தினால், சினேந்திரமாலை என்னும் நூலினை, உலகோர் அறிந்து உய்யும் பொருட்டு அன்புடன் உரைத்தனன்.

அருகதேவர் வணக்கம்

ஆழிசூழ் வையத்து மண்டலத்து மப்புறத்தும்
மூழிசூழ் பொய்கடந்த வும்பரினும் - வாழியவென்
றெண்ணரியா னேத்தரியா னீண்டொழியானெவ்வுயுர்க்குந்
தண்ணளியான் பாதஞ் சரண். 2

எ-து : அருகதேவர் வணக்கம் கூறியது.

இ-ள் : கடல் சூழ்ந்த மண்ணுலகம், அந்தரவுலகம், சுவர்க்கம் என்கின்ற மூன்று உலகங்களாலும், ஆகாமிய

சஞ்சித பிராரத்துவம் என்கிற மும்மலங்களாலும் சூழ்தற் பெற்ற, உருவ அருவ காரண சரீரத்திரயத்தையும் வெறுத்த தெய்வத்தன்மை பெற்றவனும், தேவர்களாலும் மனத்தால் தியானிக்கவும், வாக்கினால் துதிக்கவும், அரிதானவனும், அளவற்ற சீவகோடிகளைப் பாதுகாத்தற்குரிய சீவகாருண்யக் கருணையே வடிவானவனுமாகிய அருகதேவனது திருவடிகளைச் சரணாகக்கொண்டு, எடுத்த நூல் குறைவின்றி முடிதற்பொருட்டு வணங்கிப் போற்றுகின்றேன்.

கருத்து : அருகதேவனை மனத்திலே தியானிக்கவும், வாக்கினாலே துதிக்கவும் அரிதாதலின், காயத்தினாலே வணங்குகின்றேன் என்பதாம்.

சாவகர் வணக்கம்

பத்திறத்தோ டெண்ணலும் பேணிப் பயன்றெரிந்து
முத்திறத்துக் கொத்த முதனோக்கி - எத்திறத்தும்
பாங்காமென் றேத்திப் பண்ணவா வென்றான்
சாங்கஞ்சேர் தாள்வணக்கஞ் சார்பு. *3*

எ-து : சாவகரை வணக்கஞ் செய்தல்.

இ-ள் : பக்தித்திறத்தோடு மனத்தில் எண்ணுதலும், அந்நெறியினைப் பேணிப் பயன்தெரிந்து, கடவுள் ஆகமம் குரு ஆகிய முத்திறத்தின் ஏற்புடைய முதல் கடவுளனாகிய தீர்த்தங்கரரைக் குறித்து எத்திறத்தானும் பாங்காகும் என்று உணர்ந்து போற்றிசெய்து, உலகில் எல்லாவற்றையும் கேவல்ய ஞானத்தால் உணரும் முதல்வன் என்று போற்றி செய்தவனான சாவகதேவனின் அடைக்கலம் சேர்ந்த தூய பாதங்களுக்கு எனது வணக்கம் சார்பாகும்.

கருத்து : சாவகரை வணங்குகின்றேன் என்பதாம்.

அ-உரை : சாவகர்-சமண ஞானியார். சாவகதேவன்-சமண தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர்.

நூலின் வழி

கேழ்வலிய ஞானத்தின் கேழ்வி வழியொழுகி
மூவுலகு மெஞ்ஞான்று முற்றுணர்ந்த - நாவலர்தம்
பாதஞ் சரணாகப் பாத்தொடுப்பன் பன்னூலின்
வேதத்துள் மெய்ப்பொருளை யான். 4

எ-து : நூலின் வழிமுறைச் செப்பியதாம்.

இ-ள் : உலகில் நிலவும் உயிர்களின் அனைத்து நிலைகளையும், முக்கால நிகழ்வுகளையும் ஞானத்தின் சிறப்பால் முழுமையாக உணரும் கேழ்வலிய ஞானத்தின் பேராற்றல் வழியே வாழ்தலோடு, மூவுலகங்களின் நிகழ்ச்சிகளையும் நிறைவாக உணர்ந்த பொய்யாமொழியுடைய புலவர்களாகிய ஆசாரியரின் பாதங்களைச் சரணாகக் கொண்டு, ஞாலத்தையும் காலத்தையும் அளவிட்டுச் செயல்களை அறிவிக்கும் ஞானிகள் அருளிய ஆரூட நூல்களாகிய வேதத்துள் அமைந்த உண்மைகளை இந்நூலின் வழியே யான் பாக்களாக உரைக்கின்றேன்.

கருத்து : ஞானிகள் கூறியுள்ள ஆருடச் சாத்திரத்தின் வழிநூலாகச் செய்கின்றேன் என்பதாம்.

அ-உரை : கேழ் வலிய ஞானம் - ஒளி நிரம்பிய சக்தி நிறைந்த முழுமையான ஞானம். இதனைக் கேவல்யஞானம் என்றும் கூறுவர்.

நூல் பெயர் - கருதியது

இறப்பு நிகழ்வு எதிர்வென்றில் மூமூன்று
திறப்பில் சுபாசுபங்கள் தேர்ந்து - திறப்படுப்பன்
சேலனைய கண்மடவாய் சீரார் சினேந்திர
மாலையெனும் பேரிதனுள் வைத்து. 5

எ-து : நூற்பெயரும் நோக்கும்.

இ-ள் : சேல்மீனை ஒத்த கண்களை உடைய பெண்ணே! சிறப்புப் பொருந்திய சினேந்திரமாலை என்னும் பேரினால் திகழும் இந்நூலில் பொருந்தியதாக இறப்பு நிகழ்வு எதிர்வு

என்ற மூன்று காலங்களிலும் காலங்களின் மும்மூன்று பாகுபாட்டிலும் உயிர்களிடத்து பிறப்பின் பயனாக முறையாக நிகழும் செயல்களையும், நன்மை தீமைகளையும் ஆராய்ந்து தெளிந்து வெளிப்படையாகவும் திட்பாகவும் சொல்லு கின்றேன்.

கருத்து : சினேந்திரமாலை என்னும் பெயரமைந்த இந்நூலின் வழியே உயிர்களின் முக்கால முறைமைகளை ஆருடக் கணிப்புடன் சொல்லுகின்றேன் என்பதாம்.

ஆருடங்காணுதற்குரிய ஆதாரங்கள்

ஐந்து மறிந்து நிலநால் வலியறிந்து
வந்த கயிற்றின் வரவறிந்து - முந்திக்
கவிப்பதனை ஓர்ந்துதயங் கண்டிவற்றுள் நோக்கும்
பகுத்தறிவான் மன்னோர்க்குத் தாய். 6

எ-து : ஆருடத்திற்கமைந்த அடிப்படை மூலங்களை அறிந்துகொள்ளும் ஆசானின் சிறப்பு கூறியது.

இ-ள் : கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சம் ஆகிய ஐந்தினையும் அறிந்து, திசை நிலத்து வலியினை அறிந்து, இராசியில் சந்திரனின் வரவு அறிந்து, இவற்றால் நிகழும் கவிப்பாகும் காலபலன் தோன்றும் கணிப்புணர்ந்து ஆருடம் உதயம் கவிப்பு ஆகியவற்றாலாகும் நோக்கும் அறிந்து, அவ்வவற்றின் நுட்பங்களைப் பகுத்தறிந்து ஆருடம் சொல்லும் ஆசான் மக்களுக்குத் தாய்போன்றவனாவான்.

கருத்து : ஆருட ஆசான் திறம் கூறியதாம்.

நூல் உணர்த்தும் பொருள்வகை

நிலம்திசை நோக்குடனான் பெண்ணொற் றிரட்டை
குலவண்ணம் கால்விலங்கு மக்கள் - நலங்கொள்
கதிரளவு காலம் சுவைமுப் பிளமை
விதிப்பளவு நோக்குஞ்சொல் வேன். 7

எ-து : நூல் நுதலிய பொருள்.

இ-ள் : இந்நிலத்தில் இன்னவிராசி நோக்கமாக ஆண், பெண், ஒற்றை, இரட்டை, குலம், நிறம் ஆகியவற்றுடன், விலங்கு-மனிதர் இவர்களது ஆருடமும், அவைகட்குப் பொருந்திய பிறப்பும், வயதளவாகும் சீவிதகாலமும், சுக போகங்களும், மூப்பு-இளமை ஆகிய விதிப்பளவும் நோக்கும் முறையாகச் சொல்லுவேன்.

ஆசிரியர் இப்பாடலில் ஆருடம் சொல்லும் முறைமையைக் குறிப்பாகக் கூறியதுகொண்டு, மானுடர் முதலாக, நடப்பன பறப்பன முதலிய சீவராசிகட்கும்; ஆண், பெண், ஒற்றை-இரட்டை, குலம்,நிறம், வடிவம், அடையாள மருக்கள், தோற்றம், அளவு, தொலைவு, தூற அளவு, வயது, உணவு, வடு, வலம்-இடம், ஒளி-மறைவு, தளர்ச்சி, நோய், சுகம், பெறுவது, தொலைவது, விருத்தி இவை யாவும் பிறவும் ஆரூட நோக்கிற்கு உரியதாகும் என்பர்.

ஆரூட ஆசான் திறம்

கண்ட வயதுங் கருது மறுவடுவும்
உண்டுவந்தான் வந்ததோ ரொற்றியதும் - தெண்டிரைசூழ்
மன்னுலகில் வாழும் மனிதரறி யும்புலமும்
என்னுத்தி யாலுரைப்பன் என்றும். ***8***

எ-து : ஆசான் திறம் கூறப்பெற்றது.

இ-ள் : ஆருட காலத்தில் கண்ட வயதும், குறித்த அடையாளங்களும், உணவுண்டு வந்தவன் சுவைத்த சுவையும், பிறவற்றையும், தெளிந்த அலைகடலால் சூழப்பட்ட நிலைபெற்ற பூமியில் வாழ்கின்ற மனிதர் அறியும் வகையில் ஆரூடஞான சூட்சமத்தினால் கணித்துக் கூறுவன் என்றவாறு.

கருத்து : ஆரூடத்திற்கருதிய பொருளைக் கணிப்புடன் வெளிப்படுத்துவதாம்.

ஆரூட ஆசான் மேன்மை

நிலைகொட் பிருமாண் பினஞ்சேர் விடமும்
உலையா விராப்பகலு மோர்ந்து தொலையாக்
காலம் பொழுதறிந்து கட்டுரைப்பான் தான்கடவுட்
பாலங்கு வைக்கப் படும். 9

எ-து : ஆரூட ஆசான் மேன்மை கூறப்பெற்றது.

இ-ள் : மனிதர் தங்கட்கு நேர்ந்த நிலைகொள்ளாத துன்பங்ளையும், உண்டான நன்மை-தீமைகளையும், அவை அவை நேர்ந்த இடங்களையும் நிலைமாறாத காலத்துடன் பொழுதினையும் நன்கறிந்து, கூடிய செய்தியை முறையாக உரைப்பவனாகிய ஆரூட ஆசானானவன், கடவுள் மதிப்பில் வைத்து வணங்கப்பெறும் உயர்வுடையவனாவன்.

கருத்து : உயர்ந்த ஆரூட ஆசான் கடவுள் மதிப்பில் வைக்கப்பெறும் மேன்மை பெறுவன் என்பதாம்.

ஆரூட நூலின் காண்ட வகை

தாதுமூலஞ் சீவன் நட்டமுட் டாலுணர்ந்
தேகமிலாக் கேட்டல் பிடித்தளவு - நீதியாற்
சிந்தைபெருட் பேரழிவு தீங்கணுகல் நோய்மரணம்
வந்தவகை யானுரைப்பன் மாண்பு. 10

எ-து : ஆரூடத்தின் வகைநிலை உரைப்பன் என்றவாறு.

இ-ள் : தாது, மூலம், சீவன் நிலை, நட்டமுடன் வந்த தட்டுப்பாடுகள், திட்டமில்லாது கேட்டல், நுட்பமறிந்து அளவிடல், நிலையறியும் சிந்தனை, பொருள்காணும் காணாது என்றல், பகை அணுகல், வந்தநோய், மரணக் குறிப்பு ஆகிய இந்த வகையினைச் சிறப்புடன் நூலின் உரைக்கின்றேன்.

கருத்து : ஆரூடத்திற்கமைந்த அனைத்து நிலைகளையும் சுட்டியதாம்.

நூலின் - இயல் வகை

உண்டனவுங் கண்ட கனாச்சகுன மோதுமணங்
கண்டவதி காமமுடன் கட்டுரையும் - கொண்ட
மகப்பெறுதல் வான்சுரிகை சல்லியம் கீழ்நீர்
மிகத்தெரிய யானுரைப்பன் மேல். 11

எ-து : இதுவுமது.

இ-ள் : உண்ட உணவு, கண்ட கனவு, நேர்ந்த சகுனம் குறித்த திருமணம், தான் அனுபவித்த காமம், உண்டான பழிச்சொல், விதிவழிகண்ட பிள்ளைப்பேறு, பெருஞ் சுரிகை (மதிப்புடைய உடைவாள்), பூமியில் காணும் சல்லியம், நிலத்தடி காணும் நீர் ஓட்டம் ஆகியவற்றை மிகவும் தெரிந்து கொள்ளுமாறு மேலான முறையில் உரைப்பன்.

கருத்து : ஆரூடக் கணிப்பால் கண்டது, கொண்டது, இருப்பது உரைப்பன் என்றவாறு.

அ-உரை : சல்லியம் - நிலத்தினுள் தோண்டும்போது புலப்படும் இரும்பு, எலும்பு, சிதைந்த ஓடுகள், மயிர்க்கற்றை ஆகிய பொருள்கள். இவை மேல்மனை இருப்பார்க்குத் துன்பங்கள் பலவற்றைத் தோற்று விப்பனவாகும் என்பர்.

இதுவுமது

படைத்திறமும் பல்பொருட்குப் போயினார் பார்மேல்
நடைத்திறமும் நாடி நயந்து - கொடைத்திறத்த
வாறுமழை ம.:கங்கலம் வரவு மாறிமித்தங்
கூறுவன்யா னிந்தநூலைக் கொண்டு. 12

எ-து : இதுவுமது.

இ-ள் : பகைவரின் படைத்திறமும், செல்வம் பலவற்றை நாடி வணிகவழி வெளிநாட்டுக்குப் பயணம் போனவர் செயல்திறமும், ஆராய்ந்து பார்த்து விருப்பத்துடன் பருவகாலம் வழங்கும் நிறைவான மழை, குறைவான மழை ஆகியவற்றுடன், கடல்கடந்து போனவர் மீண்டு வரும் கப்பல் வரும் காலம், உண்டான சகுனங்கள் முதலியவற்றையும் இந்த நூலின் வழியே கூறுவன் என்றவாறு.

கருத்து : பகைத்திறம், வணிகம், பருவமழை, கலம் வரவு, சகுனம் ஆகியவற்றையும் கூறுவன் என்பதாம்.

பாயிரம் முற்றும்.

உதயகாண்டம்

கவிப்புக்கு - நட்பு

நட்புசேய்க்குப் புந்திபுகா வெள்ளிக்குச் சேய்சனி
புந்திகுரு வாதவற்கு ஆசான் - காரிக்கு
புந்திவெள்ளி பொன்னாம் பொன்மதிக்குப் புகர்குரு
வந்தநட்பு மன்னும் நடப்பு. /3

எ-து : கவிப்பிற்குக் கிரக நட்பு கூறுமாறு.

இ-ள் : செவ்வாய்க்கு-வெள்ளியும் புதனும், வெள்ளிக்கு-செவ்வாயும், சனியும், புதனும், வியாழனும், ஆதித்தனுக்கு-வியாழனும்; சனிக்கு-புதனும், வெள்ளியும், வியாழனும்; சந்திரனுக்கு-புதனும், வியாழனும் நட்பாவார்கள் என்றவாறு.

கருத்து : கிரகங்களின் நட்புநிலை அறிவித்ததாம்.

அ-உரை : வெள்ளி-சுக்கிரன், புந்தி-சுக்கிரன், புகர்-புதன், சேய்-செவ்வாய், ஆதவன்-சூரியன், ஆசான்-குரு, காரி-சனி, பொன்-குரு, மதி-சந்திரன், வியாழன்-குரு.

கோள்களின் - நட்புறவு

புதற்குறவு திங்கள்சேய் பூத்தபொன் வெள்ளி
விதித்த சனியுடனா மென்னும் - குருவுக்குப்
புந்திபுகர் காரிமதி ஆதித்தற்கு என்றிவை
வந்தவகை யாகுமிகு நட்பு. /4

எ-து : கிரக நட்புத் தொடர்ச்சிக் கூறுகின்றது.

இ-ள் : புதனுக்குத் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி, சனியும்; வியாழனுக்குப் புதனும், வெள்ளியும், சனியும், சந்திரன் சூரியனுக்கும் நட்பு வந்தவகையாகும்.

கருத்து : கிரகங்களின் மிகு நட்பு கூறிற்றாம்.

அ-உரை : உறவு-நட்புறவு, சேய்-செவ்வாய், பூத்த புதன்-ஒளி விளங்கும் புதன், வெள்ளி-சுக்கிரன், விதித்த சனி-ஆயுளை விதித்த சனி. புகர்-சுக்கிரன், மிகுநட்பு-ஆரூடத்திற்கமைந்த மிகுந்த நட்புடையவர்கள் என்பர்.

கோள்களின் நட்பு ராசிகள்

சிலையா ழரிவைமீ னேறுசனி நட்பாம்
சிலைமீன் கதிர்க்கு,செவ் வாய்க்கேறு - துலையாழ்பெண்
நட்பாகுஞ், சோமனுக்கு யாழ்மீன் தனுசுகன்னி,
யுட்காப்பி னுள்ளுறவென் றோது. 15

எ-து : கிரக நட்பு ராசிகள் கூறுகின்றது.

இ-ள் : சனிக்கு-ரிஷபம், மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இவை ஐந்தும் நட்பு ராசிகளாம். சூரியனுக்கு-தனுசு, மீனம் இரண்டும் நட்பு ராசிகளாம். செவ்வாய்க்கு-ரிஷபம், துலாம், மிதுனம், கன்னி இவை நான்கும் நட்பு ராசிகளாம். சந்திரனுக்கு-மிதுனம், மீன், தனுசு, கன்னி இவை நான்கும் நட்பு ராசிகளாம். இந்நட்பிடங்கள் கிரக உள்ளுறவு ஆகும் என்றறிந்து சொல்.

கருத்து : கிரகங்களின் உள்ளுறவு இராசிகளிடம் ஓதியதாம்.

அ-உரை : தனுசு, வில், யாழ்-மிதுனம், ஏறு-இடபம், காளை, கதிர்-சூரியன், துலை-தராசு, துலாம், பெண்-கன்னி, சோமன்-சந்திரன், சின்னி-கன்னிகை. உள்ளுறவு-அந்தர நட்பு.

இதுவுமது

கொச்சையில் தேன்மான் குடமேறு கோலலவன்
மெச்சிய மேதைக்காம் வெள்ளிக்கு-கொச்சை
சிலையாழ் குடந்தேள்மான் பொன்னுக் கெருது
துலையாழ் குடமரி மாது. 16

எ-து : இதுவுமது

இ-ள் : மெச்சிய புதனுக்கு-மேஷம், தனுசு, விருச்சிகம், மகரம், கும்பம், ரிஷபம், துலாம், கடகம் இவை எட்டு இராசிகளும்;

சுக்கிரனுக்கு-மேஷம், தனுசு, மிதுனம், கும்பம், விருச்சிகம், மகரம் ஆகிய ஏழு இராசிகளும்;

குருவுக்கு-இடபம், துலாம், மிதுனம், கன்னி, கும்பம், சிங்கம் ஆகிய ஆறு இராசிகளும் நட்பு ராசிகளாம்.

கருத்து : புதன், சுக்கிரன், குரு ஆகியோரின் நட்பு ராசிகள் கூறிற்றாம்.

அ-உரை : கொச்சை-ஆடு, மேடம்; தேள்-விருச்சிகம்; மான்-மகரம், கோல்-துலாம், தராசுக்கோல்; அலவன்-நண்டு, கடகம்; மெச்சியமேதை-தேவர்களால் புகழப்பட்ட சாஸ்த்திரம் கல்வி மேதையாகிய புதன், அரி-சிங்கம், மாது-கன்னி.

நட்பு முற்றும்.

கோள் ஆட்சி இராசிகள்

ஆடுதேள் செவ்வாய்க் கடலேறு கோல்புகர்க்காம்
பாடும்யாழ் கன்னியிவை பாகற்காம் - நீடுஞ்
சனிகலைசால் பொன்கயல்வில், சாற்று கதிர்சீயம்,
பனிமதியம் ஞெண்டாம், பார். / 7

இ-ள் : செவ்வாய்க்கு - மேஷமும், விருச்சிகமும்
சுக்கிரனுக்கு - ரிஷபமும், துலாமும்
புதனுக்கு - மிதுனமும், கன்னியும்
சனிக்கு - மகரமும், கும்பமும்
குருவுக்கு - தனுசும், மீனமும்
சூரியனுக்கு - சிம்மமும்
சந்திரனுக்கு - கற்கடகமும் ஆகும்.

இவை ஆட்சி இராசிகளாம்.

கருத்து : கிரக ஆட்சி இராசி நிலை கூறிற்றாம்.

அ-உரை : ஆடு-மேஷம், தேள்-விருச்சிகம், அடலேறு-வலிமை மிகுந்த காளை, ரிஷபம், கோல்-துலாம், புகர்- சுக்கிரன், பாடும்யாழ்-பாடுதற்கமைந்த யாழ், மிதுனம், பாகன்-புதன், கலை-மகரம், பொன்-குரு, கயல்-மீனம், வில்-தனுசு, கதிர்-சூரியன், சீயம்-சிம்மம், மதியம்-சந்திரன், ஞெண்டு-கடகம்.

உச்சமாவன

வெய்யோன் மதியூர்கோள் விற்கிழவற் றூமம்
கையார் கணக்கன் சனிபாம்பு - செய்ய
சிலையதுசேய் னுட்பஞ் செழும்புகர்க காடாதி
உலையாத உச்சக்கோ ளோர். /8

எ-து : இராசிகளில் உச்சக்கோள் நுட்பம் கூறுகின்றது.

இ-ள் : சூரியனுக்கு-மேடமும், சந்திரனுக்கு-இடபமும், பரிவேடத்துக்கு-மிதுனமும், வியாழத்துக்கு-கற்கடகமும், தூமத்துக்கு-சிங்கமும், புதனுக்கு-கன்னியும், சனிக்கு-துலாமும் ராகுக்கு-விருச்சிகமும், இந்திரதனுவுக்கு-தனுவும், செவ்வாய்க்கு - மகரமும், சுக்கிரனுக்கு-மீனமும் உச்சிதமான இராசிகளென்று அறிவாயாக.

கருத்து : கிரகங்களும் பரிவட்டங்களும் உச்சம்பெறும் இராசிகள் கூறியதாம்.

அ-உரை : பரிவேடம்-சந்திர, சூரியரைச் சூழத்தோன்றும் வட்டம், சூரியனின் கதிர்வட்ட அணுக்கம், தூமம்-கேது, இந்திரதனு-சூரிய வட்டம், வானக்கதிர். கணக்கன்-புதன், பாம்பு-இராகு, சிலை-தனுசு, சேய்-செவ்வாய், ஆடு-மேஷம், தூமம்-வெள்ளி என்றும் காண்பர்.

அத்துச்சமாவன

ஆடொருப தாஞ்சேய்நா லேழ்புத்தி பெண்ணாகும்
பத்தஞ்சா மாசான்ஞண் டஞ்சாகும் - பாடான்
மீனமொடுங் கோற்கதியுச் சப்பாகை காண்கதிரோன்
பின்னெழும் நீசம் பெறும். /9

எ-து : அத்து உச்சமெனும் நீச்சநிலை கூறிற்று.

இ-ள் : ஆதித்தனுக்கு - மேடத்தின் பத்தாம் பாகமும், சந்திரனுக்கு-இடபத்தின் மூன்றாம் பாகமும், செவ்வாய்க்கு-மகரத்தில் இருபத்தெட்டாம் பாகமும், புதனுக்கு-கன்னியின் ஐந்தாம் பாகமும், சுக்கிரனுக்கு-மீனத்தில் இருபத்தேழாம் பாகமும், சனிக்கு-துலாத்தில் இருபதாம் பாகமும் அத்துச்சமாவது. சுக்கிரன் கிழ........மேழாந்தானமான கிரக ராசிகளிலே முன்சொல்லப்பட்ட பாகங்கள் நீசமான பாகங்கள் என்றவாறு.

கருத்து : இராசிகளில் கிரகங்கள் பெறும் நீச்சபாக அளவு கூறுகின்றதாம்.

குறிப்பு : சுவடியில் உள்ளவாறு எழுதப்பட்ட பிரதிப்படி எழுதப்பெற்றது.

அ. உரை : அத்துச்சம் - உச்சத்தின் இணை நிலைச்சார்பு.

இதுவுமது

அத்துச்ச மென்பது தணியிழை யாடாதி
பத்துமுன் றைந்து பதினைந்து - மெய்த்திலகு
பத்திரட்டி நான்கே ழிருபத்தே ழாம்படைப்பு
வித்தகத்தார் சொற்ற விதி.

இ-ள் : சூரியனுக்கு மேஷத்தில் 10-ம் பாகமும், சந்திரனுக்கு ரிஷபத்தில் 3-ம் பாகமும், குருவுக்கு கடகத்திலே 5-ம் பாகமும், புதனுக்குக் கன்னியிலே 15-ம் பாகமும், சனிக்குத் துலாத்திலே 20-ம் பாகமும், செவ்வாய்க்கு மகரத்திலே 28-ம் பாகமும், சுக்கிரனுக்கு மீனத்திலே 27-ம் பாகமும் அத்துச்ச பாகங்களாம்.

மிதுனத்திலே பரிவேடத்திற்கும், சிம்மத்திலே தூமத்திற்கும், விருச்சிகத்திலே பாம்பிற்கும், தனுசிலே இந்திரதனுசுக்கும், கும்பத்திலே நுட்பத்திற்கும், முதன்முதற்

பாகங்களே அத்துச்ச பாகங்களாகும். இவற்றைப் பிரித்தற்கு இல்லையாதலின் சொல்லாதொழிந்தனவென்று ஆய்ந்து காண்பர்.

பகைக் கோள்களும் - பகை இராசிகளும்

தூதுவற்கு வெய்யோன் சுடர்சீர் மதிபுகற்குப்
பூதகற்குச் செவ்வாய் பெரும்பகையாம் - நீதியாற்
புந்திபுகர் பொன்னொழிய வெல்லாம் பகைசனிக்குத்
தந்தநில மும்பகையாற் சாற்று. 20

எ-து : கிரகங்களின் பகைக்கோள்களும், பகை இராசிகளும் குறிப்பது.

இ-ள் : புதனுக்கு-ஆதித்தனும், சுக்கிரனுக்கு-ஆதித்தனும், சந்திரனும்; வியாழனுக்கு-செவ்வாயும்; சனிக்கு - ஆதித்தனும், சந்திரனும், செவ்வாயும் இவர்கள் இத்தன்மையே பகையாவார்கள்.

இவர்கள் நிலங்களும் இத்தன்மையே பகையாகும் என்றவாறு.

கருத்து : கிரக பகை, இராசியிடம் கூறிற்றாம்.

அ-உரை : தூதுவன்-புதன்; வெய்யோன்-சூரியன், ஆதித்தன்; மதி-சந்திரன்; பீதகன்-குரு (பீதனன்); புந்தி-புதன், பொன்-குரு; தந்த நிலம்-அந்தந்த கிரகங்களுக்குரிய இராசிகள். நிலம்-இராசி, சாற்று-கூறு; பொன்னொழியவெல்லாம் பகை. சனிக்கு-வியாழன் நீங்கலாக மற்றைய கோள்கள் சனிக்குப் பகையாம்.

நீசவிராசிகள்

இரவி துலையெறிதேள் இந்துவுக்கு சேய்க்குக்
கரவில் கடகமீன்கற் றோர்க்கு-வரைவிலா
ஆட்டிற்குக் காரியரிவைபுகர் பொன்மகரம்
கூட்டியே நீசமெனக்க கூறு. 21

எ-து : நீசவிராசிகள் கூறிற்று.

இ-ள் : ஆதித்தனுக்கு-துலாமும், சந்திரனுக்கு-விருச்சிகமும், செவ்வாய்க்கு-கடகமும், தனுவுக்கு-மீனமும், சனிக்கு-மேடமும், சுக்கிரனுக்கு-கன்னியும், வியாழத்துக்கு-மகரமும் இவர்கள் உச்ச ஸ்தானத்திற்கு ஏழாமிடமாகிய ஸ்தானம் நீச்ச ஸ்தானமென்றவாறு.

கருத்து : கிரகங்களின் செயல்விரைய மந்த நீச்ச ஸ்தானங்கள் கூறிற்றாம்.

அ-உரை : இரவி-சூரியன், துலை-துலாம் இராசி, எறிதேள்-கொடிய தேள் இராசி, விருச்சிகம்; இந்து-சந்திரன், சேய்-செவ்வாய், கரவுஇல்-ஒளிவில்லாத, மீன்-மீனராசி, கற்றோர்-சோதிட ஆரூட நூல் கற்றோர். வரைவிலா-அளவில்லாத; ஆடு-மேடராசி, காரி-சனி, கரியன், அரிவை-கன்னிராசி. மகரம்-மகரராசி. கூட்டிய-மேலும் சொல்லப்பட்ட; நீச்சம்-தன்செயல் குறைக்கும் இராசியதிகாரம்.

நீச்ச அளவு

விடையார் வீரன் விலரி யிடப
முடையார் தனுவூர்கோள் காலதூ - முடையார்
கடைநீச நீசபகை காலரையொன் றாகும்ரா
சிடைவீ டறைந்தேன் யாம். *22*

எ-து : இராசிகளில் கிரக நீச்ச பலமளவு கூறிற்று.

இ-ள்: குருவுக்கு-இடபமும்; இந்திரனுக்கு-மிதுனமும், இடபத்துக்கு-சிங்கமும்; முக்கோளுக்கு-தனுவும், தூமத்திற்கு-கும்பமும், நீச்சஸ்தானம் என்றவாறு யான் திட்டமாகக் கூறினேன்.

இத்தன்மைத்தாகிய கிரகங்கள், நீச்ச ஸ்தானத்தில் நின்றால், கால் பலமுடையாரென்றும், பகை இராசியில் (நிலத்தில்) நின்றால் பாதி பலமுடையாரென்றும், நட்பு நிலத்திலே நின்றால் ஒருமடங்கு பலமுடையாரென்றும், ஆட்சி நிலத்திலே நின்றால் இருமடங்கு பலமுடையார் என்றும், உச்ச நிலத்திலே நின்றால் தத்தமக்குள்ள பலத்திலே பாதி மடங்கு பலமுடையாரென்றும் ஆகுமென்றவாறு.

கருத்து : இராசிகள், கிரகங்கள் நீச்சஸ்தான பலத்தளவு திட்டமிட்டதாம்.

அ-உரை : விலரி-இந்திரன், விலாரி; கோள்-கிரகம்; காலதூமம்-பருவ மழைக்குரிய சுக்கிரன்; கடைநீசம்-அதிக நீச்சம்; நீசபகை-நீச்சத்துடன் கூடய பகை; காலரையொன்று-இராசிகளில் கிரக நீச்சத்தின் பலாபலன் அளவு, கால், அரை, ஒன்று என்ற அளவில் காண்பது. இடைவீடு-ராசிக்கு ராசி இடையிட்ட இடம்; அறைந்தேன்-திட்டமுடன் உரைத்தேன்; யாம்-தன்மை சிறப்பு.

இராகு - கேது நட்பு, ஆட்சி, உச்சப்பாகை, நீசவிராசிகள்

நாகத்து புட்புக்கோ னன்மகர நாரியாழ்
வேகந்த ரும்வில்மீ னாட்சிக் - குடமாகும்
உச்சந்தேள் ஞெண்டரி மேடம்பகை நீசமேறு
மெச்சந் தருநீச மேறு. 23

எ-து : பாம்பிற்காம் ஐந்து இராசிகள் கூறிற்று.

இ-ள் : இராகு-கேதுவுக்கு துலாம், கன்னி, மிதுனம், தனுசு, மீனமும் ஆகிய இராசிகள் நட்பென்றும், ஆட்சி கும்பமென்றும், உச்சம் விருச்சிகமென்றும், கற்கடக சிங்க மேடம் பகை நிலம் (இராசி) என்றும், இடப நீசமென்றும் அறிகவென்றவாறு.

கருத்து : இராகு - கேது நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் ஆகிய இராசி நிலை கூறிற்றாம்.

அ-உரை : நாகம்-இராகு, கேதுக்கள்; கோள்-கிரகம்; நாரி-கன்னி; யாழ்-மகரம்; குடம்-கும்பம்; தேள்-விருச்சிகம்; ஞெண்டு-கடகம்; ஏறு-இடபம்; எச்சந்தரு-குறைவைத் தருகின்ற நிலமென்பது இராசிகளுக்காகும் பொதுப்பெயர்.

பார்வை இராசிகள்

ஆதித்தன் நின்றநிலைக் கோர்மூன்றைந் தொன்பானாம்
சாதி பதினொன்றுந் தன்னிலத்து - நீதியால்
இட்டமொடு தூமம் வரிசிலையோ டென்னமதி
திட்டமாய்ச் சேர்ந்துவருஞ் செப்பு. 24

எ-து : நின்ற இராசிக்குப் பார்வை இடங்கள்.

இ-ள் : சூரியன் நின்ற இராசிக்கு மூன்று, ஐந்து, ஒன்பதாம் இடங்கள் பார்வையாம். இனமான மற்றப் பதினோரிடங்களும் தன் இராசிக்கு நேர்மையாக விருப்பத்தோடு சுக்கிரன் தனுசு ஆகியவற்றுடன் மதி திட்டமாகச் சேர்ந்துவரும் என்று சொல்.

கருத்து : சூரியன் பார்வைக்கு சுக்கிரன், சந்திரன் இணக்கம் கூறியதாம்.

அ-உரை : ஆதித்தன்-சூரியன்; நின்றநிலை-நின்ற இராசி; ஒன்பான்-ஒன்பது; சாதி-இனமான இராசிகள், தூமம்-சுக்கிரன் வரிசிலை-தனுசு; திட்டமாய்-கணிப்பாக; செப்பு-சொல்லுவாயாக.

இராசிகளின் வடிவு

குடந்துலையாழ் கன்னிதனுக் கோள்பரியு மக்கள்
தொடர்ந்த சுறாமான்பின் முன்பாம் - தடங்கண்ணாய்
மீனிரண்டுந் தெற்றில் விழுந்தெவுமா மிக்கவைக்குத்
தானுருவம் போலவையாம் சாற்று. 25

எ-து : இராசிகளின் வடிவம் விளக்கியது.

இ-ள் : கும்பம் குடங்கொண்டு நிற்பான். ஒரு புருடன் கையிலே தடியும், பெண்ணின் கையிலே தண்டிகையும் பிடித்துக்கொண்டு ஒரு கட்டிலிலேயிருப்பார்கள். கன்னி ஒரு கையிலே முளைப்பாலிகையும் ஒரு கையிலே விளக்கும் பிடித்துக்கொண்டு ஒரு தலத்திலே இருக்கும். தனுசு

விற்பிடித்துக்கொண்டு நிற்பான். அரைக்குக் கீழெல்லாம் குதிரை வடிவாயிருப்பான். மகரம் முன்பு மான் தலையாய்ப் பின்பு சுறா வடிவாயிருப்பான். மீனம் மீனாயத்தேற்று மாற்றாய் யெழுவதும் விழுவதுமாயிருக்கும். இவை அல்லாதவைத் தாம் தாம் பெயருக்குத் தக்கதாக வடிவு கொண்டிருக்கும் என்றவாறு.

கருத்து : இராசிகளின் அங்க அலங்கார வடிவுநிலை உணர்த்திற்றாம்.

வடிவ விளக்கம் - வேறு

கும்பம் : கும்பம் சுமந்த புருடன்.

துலாம் : துலாக்கோல் பிடித்த புருடன்.

மீனம் : ஒரு மீன் வாலை ஒரு மீன் கவ்விக்கொண்டு இரட்டை மீனாகச் சஞ்சரிப்பது.

கன்னி : கன்னிகையாகி கதிர்க்குலையும், அக்கினியும் கையில் வைத்திருப்பவள்.

தனுசு : அரைக்குமேல் புருடனாகக் கையிற்பிடித்த வில்லுமாக, அரைக்கீழ் குதிரை உருவமாக இருப்பது.

மகரம் : உடல் முழுதும் சமுத்திரத்திலமுழ்ந்திக் கிடக்கச் சிரசே ரூபமாகக் கடல் தீரத்தில் சஞ்சரிப்பது.

மிதுனம் : வீணை பிடித்த பெண்ணும், கதை பிடித்த புருஷனுமாகச் சதாமைதுன சம்பந்தமாக இருப்பது.

இடபமும் சிங்கக்கோளும் : நாலு காலுடைய விலங்குகளாகும்.

மீனமும் மகரமும் : இறகே காலாக சஞ்சரிப்பன.

கடகமும் விருச்சிகமும் : வெகு காலையுடையன.

மிதுனம், கன்னி, துலாம், கும்பம் இவை நான்கும் இரண்டு காலையுடையன.

ஆரூடச்சக்கரம்

சக்கரம் கீறும் வகையும் இராசிகள் நிற்கும் நிலையும்

ஆழியும் பாரும்போற் கீறிச் சிறுதிசைமே
லூழியோரோ ரொன்றுடன் கீறிச் - சூழும்
எருதாதி கீழ்திசைகொண் டீராறு மெண்ணிக்
கருத்தாய் நிலக்களிற்றைக் கண்டு. 26

◉

எ-து : ஆரூடச் சக்கரம் அமைத்துக்கொள்ளும் முறை.

இ-ள் : பூமியிலே வட்டமாகக் கீறி, பாரென்று சொல்லத்தக்க கவிரேகைகளைக் கீழ்மேலிரண்டு ரேகையும் தென்வடல் இரண்டு ரேகையும் கீறிக்கொண்டு, கோணங்கள் நான்கிலும் ஒவ்வொரு ரேகையும் கீறிக்கொள்ளப் பன்னிரண்டறைகளாம்.

அந்த அறைகளுக்குக் கிழக்கு முதலாக, இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேடம் ஆகிய ராசிகள் பன்னிரண்டையும் இடவல வலஞ்சுழல் இடபம் முதலாக நிறுத்துவது. பூச்சக்கரமான ஆருடச் சக்கரம் என்றறிக என்றவாறு.

உரை விளக்கம் : பூமியில் சக்கரமாக வட்டம் ஒன்று கீறி, வட்டத்தினுள்ளே ஆழியின் (சக்கரத்தின்) பாருகள் (கால்கள்) இரண்டிரண்டு இடம்விட்ட இணையாகக் குறுக்கும் நெடுக்குமாகக் கீறிக்கொள்ள, கிழக்கிலிருந்து மேற்களவும் ஊடுருவலாகவும், வடக்கிலிருந்து தெற்களவும் ஊடுருவலாகவும் நான்கு பார்களும் அமையும்.

தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு ஆகிய மூலைகள் நான்கிலும், மையமாகச் சிறுகால் ரேகைகள் வட்ட மையத்தில் ஊடுறுவாது அதன் மேலிருந்து வட்டக் கோட்டளவும் ஒவ்வொன்று கீறிக்கொள்ள பன்னிரண்டு வீடுகளாக அமையும்.

இராசிகள் எதிற்கயிறு அவ்வவற்றின் எதிரிலேதான் இருக்கும் என்பது கருதி, பன்னிரண்டு ராசியிடங்களில் நேர்க் கிழக்காகக்கொண்டு ரிஷபம் முதல் மேஷம் இறுதியாக இராசிகளில் முறையே எண்ணிக் காணப்படுவது ஆரூடச் சக்கரம் அமைப்பாகும்.

அ-உரை : ஆழி - சக்கரம்; பார் - சக்கரக்கால்.

திரிசக்கரத்தில் கோள்கள் வடிவம்

வெய்யவ னாகாயம் வெண்மதியம் பூமியாம்
வெய்யவ னாள்மதியம் பெண்ணாகும் - வெய்யோன்
தரிசக் கரமுயிராந் திண்மதி பூமி
திரிச்சக் கரமுடனாய்ச் சாத்து. *27*

எ-து : திரிசக்கரக்கோள் நிலை கூறிற்று.

இ-ள் : முன்சொல்லப்பட்ட ஆரூடச் சக்கரம்போல சக்கரமாய்க் கீறியதிலே, இடபாதி ராசிகளும், கீற்திகா நட்சத்திரங்களும் மு(ற்)றத்திலே சனிபகவானும், அதன்கீழ் வியாழபகவானும், அதன்கீழே அங்காரக பகவானும், அதன் கீழே ஆதித்த பகவானும், அதன் கீழே சுக்கிரபகவானும், அதன் கீழே புத பகவானும், அதன் கீழே சந்திரபகவானும் இப்படி ராசி நட்சத்திரமும் கிரகங்களும் கோலமுண்டு நிற்க, அத்தன்மைத்தாகிய சக்கரத்தைத் தக்கணமாயானா சுவத்திகமான திரிச்சக்கர தெக்கண பளிச்சமான சுவத்திகத்தின் நடுவே ஒரு துருவனும் இருந்து, உத்திரபாரிசமான சுவக்கிரகத்தின் நடுவே ஒரு துருவனுமிருந்து, சவ்வியந்தாம்

போல வியந்தரிக்க, பூர்வ பாகமாகிய அதரயுதரன்த மென்னத்தக்க சந்திகள் நாலுகண்டமாகப் பூச்சக்கரத்துக்கு உள்ளே ஆகாசத்துக்கு நடுவே, நடுவே நின்று சுழலா நிற்கும். அத்தன்மைத்தாகிய சக்கரத்தின் நடுவே ஆதித்த பகவானே புருடபகவான்.

திரிபூமியுமாய்ப் பொன்னுமா யாரூட சக்கரத்துக் குடலுமாய் நிற்குமென்றுஞ் சொல்லுவதென்றவாறு.

இப்படியே உதயாரூடமாகிய சக்கரத்தையறிந்து பூதவர்த்தமான பவுலியஞ் சொல்லுகவென்றவாறு.

கருத்து : திரிச்சக்கரத்தில் சுவத்திகமான சுழல் சாரமும் துருவக்கோளும் கூறிற்றாம்.

அ-உரை : கோலம்-முறைப்படி அமைந்த கோலம். தக்கணம்-தென்முகம், சுவத்திகம்-சுவத்திக சக்கரம் போன்ற சஞ்சாரம். திரிசக்கரம்-கோள் சஞ்சாரங்காணும் சக்கரம். துருவன்-நடுவமைந்த நாயகன், அச்சுக்கோள், சவ்வியம்-இடமாகக் காணும் சஞ்சாரம், பூர்வம்-முன்நிலை. சந்திகள்-இராசிகளின் கூட்டுறவுச் சந்திகள், புருடன்-தலைவன், உடல்-அடிப்படை, பூதவர்த்தமானம்-உலக நடப்புகள், பவுலியம்-எதிர்கால நடப்பு, சாத்து-அமைத்துக் கூறுவாயாக.

எதிர்க்கயிறுகள்

எருதெதிர்தேள் யாழ்சிலைஞென் டேர்கலையாஞ் சீயம்
சொரிகுடநற் றோகையர்க்கு மீனாம் - தெரியுங்கால்
ஆட்டிற்குக் கோலாமென் றாங்கறைந்த சக்கரத்தைக்
கூட்டி யெதிர்க்கயிற்றைக் கூறு. 28

எ-து : திரிசக்கர இராசிகளின் எதிர்க்கயிறு.

இ-ள் : இடபத்துக்கு விருச்சிகமும், மீனத்துக்கு தனுவும் கற்கடகத்திற்கு மகரமும், சிங்கத்திற்குக் கும்பமும், கன்னிக்கு மீனமும், துலாத்துக்கு மேடமும் இப்படிச் சக்கரத்தில் இராசிகள் ஒன்றுக்கொன்று எதிர்க் கயிறாக நிற்குமென்று சொல்லுக வென்றவாறு.

கருத்து : ஆருடச் சக்கரத்தில் இராசிகளின் எதிர்நிலை நோக்குப் பிணைப்புக் கூறியதாம். கயிறு-எதிர்நிலைப்-பார்வைப் பிணைப்பு.

உரை நுட்பம் : ரிஷபத்திற்கு விருச்சிகமும், விருச்சிகத்திற்கு ரிஷபமும், மிதுனத்திற்குத் தனுசும், தனுசிற்கு மிதுனமும், கடகத்திற்கு மகரமும், மகரத்திற்கு கடகமும், சிம்மத்திற்குக் கும்பமும், கும்பத்திற்குச் சிம்மமும், கன்னிக்கு மீனமும், மீனத்திற்குக் கன்னியும், துலாத்திற்கு மேஷமும், மேஷத்திற்குத் துலாமும் இராசிகளின் எதிர்க்கயிறாம். இம்முறையிலேயே ஆருட சக்கரத்தில் இராசி பிணைப்புக்கயிறு காணப்படும்.

நூலாசிரியர், தாம் முன்னர்கூறிய ஆருட சக்கரத்தைக் கீறி, அதில் கயிறு நிலை காட்டியுள்ளாரென்றறிக.

தென்னாட்டில் இராசிநிலை வரைவு, நாற்சதுரமாக அமைத்து அதில் பன்னிரண்டு பாக அமைப்புக் கொள்ளும் வழக்குள்ளதால், இவ்வாறுள்ள சதுரச்சக்கரத்திலேயும் இராசிகளின் எதிர்க்கயிறு மேலே பாடல் குறித்தபடி கொண்டு ஆருடக் கணிப்புக் காணலாகுமென்பதனைக் கூட்டி எதிர்க் கயிற்றைக் கூறு என்பதனால் அறியலாகும். அனுபவப்பட்ட சக்கர வழக்கில் ஆசிரியர் காட்டியுள்ள ஆருட முறையைப் பின்பற்றற்கு இது ஏற்புடையதாகும்.

இதுவுமது

கதிர்க்குப் புகராம் கடுஞ்சேய்க்குக் காரி
புதர்க்கரவு பொன்னவர்க்குத் திங்கள் - மதிக்க
எதிர்க்கயிறென் றோர்ந்துவைத் தேதிடமாச் சேர்த்துத்
தெரிப்புத் தெரிந்துரைக்கத் தேர்ந்து. 29

எ-து : ஆருடக் கோள்களின் எதிர்க்கயிறு - தொடர்ச்சி.

இ-ள் : ஆதித்தனுக்குச் சுக்கிரனும், அங்காரகனுக்குக் காரியும், புதனுக்கு ராகுவும், வியாழனுக்குச் சந்திரனும் இப்படி ஒருவருக்கொருவர் கிழக்கு முதலாக ஆரூடச் சக்கரமாக நிற்பார்களென்றவாறு.

கருத்து : ஆரூடச் சக்கரத்தில் கோள்நிலைக் கயிற்றின் தொடர்ச்சிக் கூறிற்றாம்.

அ-உரை : கடுஞ்சேய்-கொடிய செவ்வாய். காரி-சனி, அரவு-ராகு, பொன்-குரு, திங்கள்-சந்திரன், ஏது-பொருத்தமானது, தெரிப்பு-ஆராய்ந்து தெரிந்த முடிபு. தெரிந்துரைத்தலாவது-ஆசிரியர் காட்டிய நூன்முறை ஒழுங்கில் கயிற்றுநிலை அறிந்து ஆரூட பலன் காண்பது என்பதாம்.

ஆதித்தன் சஞ்சாரம்

அரியலவன் நண்டெருது மேடமாம் நயந்த
வரிசிலைதேள் மான்குடந் தண்டாகும் - தெரியுங்கால்
ஆடுமீன்கோல் கன்னிசிங்கம் கற்கடகமே றாமென்பர்
நீடுதையன் வீட்டு நிலை. ***30***

எ-து : ஆதித்தனின் பருவ சஞ்சரிப்பு இராசிகள்.

இ-ள் : ஆதித்தனுக்கு-சிங்கம், கடகம், மிதுனம், இடபம் ஆகிய நான்கும் மேட வீதியென்றும், தனுசு, விருச்சிகம், மகரம், கும்பம் ஆகிய நான்கும் மிதுன வீதி என்றும், மேடம், மீனம், துலாம், கன்னியாகிய நான்கும் இடப வீதியென்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : இராசிகளில் சூரியன் சஞ்சார வீதிகள் கூறிற்றாம்.

அ-உரை : வரிசிலை-நாண் பூட்டிய வில் (மான்-மிருகசீரிடம்) மான்-புதன் வீடு, மிதுனம்; கோல்-துலாம்; நீடுதையன்-நிலைத்த உதயத்தை உடைய சூரியன்; வீடு-சஞ்சார இராசியாகிய வீடு.

உரை விளக்கம் : சூரியன்-வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மாதங்களில் மேஷத்தின் வழியே சஞ்சரிப்பானாதலின் இந்நான்கு மாதங்கள் மேட வீதியென்றும்; கார்த்திகை, மார்கழி, தை, மாசி ஆகிய நான்கு மாதங்களில் மிதுனத்தின் வழியே சஞ்சரிப்பதால் மிதுன வீதி யென்றும்; சித்திரை, புரட்டாசி, ஐப்பசி, பங்குனி ஆகிய நான்கு மாதங்களில் ரிஷபத்தின் வழியே சஞ்சரிப்பதால் ரிஷப வீதியென்றும் காண்பர்.

இதனை வடநூலார் முறையே - உத்தராயணம், தக்ஷிணாயணம், பூர்வாயணம் என்று கூறுவர்.

* இவை சமண முனிவர் கூறிய வீதிகளென்றறிக.

கயிறு காண்முறை

வந்தான் கயிற்றைமகிழ்ந் தேழுமட்டா யெண்ணிவரு
முந்தி யுதயத்தை யேர்ந்ததனை - சிந்தித்து
நாடிக்கோத் தெண்ணவே நண்ணுமாம் நன்கவனை
கூடிக் கவிக்கக் குடை. *31*

எ-து : ஆரூட இராசி சக்கரக்கயிறுகாண் கணக்குப் பலன்.

இ-ள் : ஆரூடச் சக்கரத்தில் கருதிய இராசிக்கு நேர் நிற்கும் கோடாகிய கயிற்றை, மகிழ்வுடன் முதலாக வைத்து அதிலிருந்து ஏழு இராசிகளளவில் எண்ணி வருகின்ற உதய இராசியின் கிரக நிலைகளை ஆராய்ந்து, அதற்கமைந்த நட்பு, ஆட்சி, உச்சம், பகை ஆகியவற்றினைச் சிந்தித்து பலா பலன்களை அடைவுசெய்து முடிபாக எண்ணிப் பார்க்கவே நல்ல கருத்து உண்டாகும். அதனை ஆரூடம் கொள்வார் நிலையோடு கூடிக் கருத்துக்கூறல் பொருந்திய பலனாட்சி ஆகும்.

குறிப்பு : "கூடிக்கவிக்கக் குடை" என்னும் அடியில் "கூட்டிக் கவிக்கக்குடை" என்றும் பாடபேதம் உள்ளது.

கருத்து : சக்கரத்தில் வந்த கயிற்றை இடமாகக் கொண்டு சுவத்திகமாக ஏழு இராசிகள் எண்ணிப் பலன் கூறுக என்றவாறாம்.

1. கவிப்பென்பது யாதெனின் : ஆரூட சக்கரத்தில் துருவநிலை ஆதியாகக்கொண்டு காணும் கயிறாகும். கோட்டில் நின்ற இராசிவழி பிடித்துச் சூரியவீதி மட்டாக எண்ணிக்கண்ட தொகைக்கு, உதயத்தைப் பிடித்து எண்ணிக் கண்ட இராசியின்படி ஆரூடம் கூறும் கருத்தாகும் செய்தியே கவிப்பாகும். இதனை சோதிட ஆசான் கணக்கிட்டுக் கண்ட முடிபு என்றும் கூறலாகும். ஒருமுகமாக, ஒரே குறிப்பாக சந்தேகமின்றித் திட்டவட்டமாகக் கவித்துக் கூறப்படுதலின் கவிப்பு என்று பெயர் பெற்றதாம்.

2. ஆரூடம் என்பது யாதெனின் : ஒருவன் வந்து சோதிடனுக்கு எதிரேற நின்ற இராசியைக் கொண்டு கணக்கிட்டறிந்து அவன் கருதிவந்ததற்குரியதான செய்தியைத் திட்டமாகக் கூறுவதாம்.

3. வந்தான் கயிறு என்பதாவது : சோதிடன் **கண்கணி**ப்பாக பூமியில் அமைத்துக்கொண்ட சக்கரத்தில், வந்தவன் நின்ற இராசிக் கயிறிடம் என்பதாம்.

4. உதயமாவது : ஆரூடம் கேட்க வந்தவன் தோன்றிய இடம், காலம் முதலியனவாம் கணிப்பிற்குத் தோன்றியன என்பதாம்.

வந்த கயிறு என்பதேனெனின் : ஒருவன் வந்து நின்ற கயிற்றிடமாக சோதிடர் கண்டுகொண்ட கணிப்பு என்பதாம்.

வந்தவன் நின்ற இராசி மதிப்பில் மயங்கினால், நொடியளவு காலம் மாறுபட்டால், உதயம் பிறழ்ந்து போகும். உதயம் பிறழ-கவிப்பு பிறழ்ந்து போகும்.

கவிப்பிற்கமைந்த சக்கர கோணங்கள் மாறிப்போகும். கோணங்கள் மாறவே கண்டங்கள் மாறிப்போகும். கண்டங்கள் பிறழ்ந்து போகவே வலிதாகக் கருதும் திட்பம் பிறழ்ந்துபோகும். வலிது பிறழ்ந்து போகவே இரவு-பகல், நாள், பிறை, மாதம், வருடம் ஆகிய காலக்கணிப்பு முற்றிலும் பிறழ்ந்துபோகும். ஆரூடம் பலன் மாறிப்போகும்.

எனவேதான் உதயத்தை ஆரூடன் பலகாலும் சோதித்து சிந்தித்துத் திட்டமாக்கிக் கொள்ளல் வேண்டும் என்னும் ஞாபகத்தினையே, பாடலில் "வந்த கயிறு" என்று குறிப்புடன் ஆசிரியர் அறிவிக்கின்றார்.

கயிறின் கணிப்பிலக்கணம்

நிலைக்கயிற்றில் வந்தானை மேடமிட பம்கடக
துலைப்பிணியாழ் தன்னளவு மெண்ணி - நலத்தளவு
தம்பித்த தொகையளவு மெண்ணிக் காண்ப
சிதையாவாம் சென்ற கணிப்பு. *32*

எ-து : ஆதித்தன் வீதிகள் வழிவந்த நேர்கோட்டாம் கயிறுவழி காண்முறை கூறிற்று.

இ-ள் : யாவனொருவன் வந்த கயிறாகிய ஆரூடவிராசி தொடங்கி வீதி மூன்றினுள் ஆதித்தன் நின்ற வீதியறிந்து, அந்த இராசியளவு எண்ணிக் கண்டால், அவ்விராசி ஆரூடத்திற்கு உச்சந்திரமாம் என்றவாறு.

கருத்து : வந்தான் நின்ற கயிறுகண்ட இராசிவழி சூரிய வீதியறிந்து எண்ணிப் பலன்கண்டு கூறுதல் பிழைபடாத ஆரூடமாகும்.

அ-உரை : நிலைக்கயிறு-நேர்கோட்டுக்கயிறு; வந்தானை-இராசிக்குடையவனாக வந்த கோளினை. நலத்தளவு-சரியான அளவீடு; தம்பித்த-ஏழாம் இடமாக நிலைத்த; கணிப்பு-ஆரூட சக்கரக் கணிப்புமுறை.

கவிப்பிற் பிறிதொன்று

கயிற்றி னுதயங் கருதுகின்ற வீதி
பயிற்றியவெண் ணோர்பாதி யாக்கி - குயிற்றிய
வேட்சிதொட் டெண்ண விதுவுங் கவிப்பாம்
மாட்சியின் மிக்கோர் மதித்து. 33

எ-து : ஆரூடக் கவிப்பின் வகை.

இ-ள் : வந்தவன் நின்ற இராசிக் கயிற்றின் வழிகாணும் உதயம் அமைத்துக்கொள்ளுகின்ற பிறிதோர் முறையால், முன்னர் கொள்ளப்பட்ட எண்ணில் பாதியளவாக்கி, பழகிய எண்ணில் பலன்கண்டு கூறும் விருப்பத்தினால் எண்ணிக் காண, இம்முறையும் கவிப்பிற்கமைந்ததாம் என்று சோதிட நூலறிவில் பெரியோர் மதித்துக் கூறினார் என்றவாறு.

கருத்து : ஆருடக் கவிப்புக் காண்பதற்கு பிறிதோர் முறைமை கூறிற்றாம்.

அ-உரை : கருதுகின்ற வீதி-திட்டமாகக் கொள்ளும் சூரிய வீதி; பயிற்றிய-பழகிய; குயிற்றிய-திட்டமிட்டுச் சொல்லுகின்ற; வேட்சி (வேட்கை)-விருப்பம்; மாட்சி-சிறப்பு.

உரை விளக்கம் : ஆரூடத்தை கருத்தைச் செலுத்தி சூரியவீதி முதலாக எண்ணி, அவ்வெண்ணின் தொகையில் சரிபாதிக்கு உதயத்தை அமைத்துக்கொண்டு எண்ணக்கண்ட இராசி முன்கண்ட ஆரூடத்தைப் போன்ற கவிப்பாகும். எனவே, இம்முறையும் சான்றோர் கண்டு கூறிய கவிப்பாகவே கொள்ளப்பெறும்.

உதயகவிப்பு வகை

ஆடிரண்டே ரீராறி யாழ்பதினொன் றையிருஞெண்
டோடரிபெண் ணொன்பானெட் டோர்துலைதேள் - நீடு
குதைவில்லேழ் மானாறைந் துகுடம் கவிப்பி
னுகையக்கா வெண்ணிக் காண். 34

எ-து : உதயகவிப்பு வேறொரு வகை.

இ-ள் : மேடம் உதயமாகில் இடபம் கவிக்கும், இடபம் உதையமாகில் மேடங்கவிக்கும், மிதுனம் உதையமாகில் மேடங்கவிக்கும். கன்னி உதயமாகில் மிதுனம் கவிக்கும். மீனம் உதயமாகில் இடபம் கவிக்கும். இந்தப்படி இடபம் கவிக்கும். விருச்சிகம் உதயமாகில் மிதுனம் கவிக்கும். மீனம் உதையமாகில் இடபம் கவிக்கும் இந்தபடிக்கு உதய ராசியைக் கவிக்குகைக்குக் காணலாகும் என்றவாறு.

கருத்து : ஆரூடக் கவிப்பறியும் வகையிலொன்று காட்டியதாம்.

உரை விளக்கம் : மேஷத்திற்கு 2ஆம் இராசியும், ரிஷபத்திற்கு 2ம் இராசியும், மிதுனத்திற்கு 11ஆம் இராசியும், கடகத்திற்கு 10ஆம் இராசியு, சிம்மம் கன்னிகட்கு 9ஆம் இராசியும், துலாம் விருச்சிகங்கட்கு 8ஆம் இராசியும், தனுசிற்கு 7ஆம் இராசியும், மகரத்திற்கு 6ஆம் இராசியும், கும்பத்திற்கு 4ஆம் இராசியும், மீனத்திற்கு 3ஆம் இராசியும் உதயகவிப்பாம்.

இராசிகளில் உதய இடங்கள்

பெண்டீருந் தேளும் பெருங்குடமும் சீயமுந்
தண்டுந் துலையுந் தலையிலெழும் - ஞெண்டுமீன்
வாலுந் தலையுமாம், ஆடுமுத லாமவையே
போலும் புகற்குடையாப் போற்று. 35

எ-து : தலை, வால், பிருட்ட, சிரபிருட்ட உதய இடங்கள் காட்டிற்று.

இ-ள் : முன் சொல்லப்பட்ட திரிசக்கரத்திலே பூர்வாதியாக கன்னி, விருட்சிகம், கடகம், சிங்கம், மிதுனம், துலாம் என்னத்தக்க ஆறு இராசியும் சிரோதயமாக உதிக்கும் என்றும், மீனம் வாலும் தலையுமாகி கூடி உதிக்கும் என்றும்,

மேடம், இடபம், தனுசு, கடகம், மகரம் ஆகிய ஐந்தும் பிருட்டயுதையமாக உதிக்குமென்றும் அறிகவென்றவாறு.

கருத்து : இராசிகளில் கோள்களின் தலை, வால், பிருட்டம் ஆகிய உதய நிலைகள் கூறியதாம்.

அ-உரை : சிரம்-தலை; வால்-அடி; பிருட்டம்-பின்பக்கம்; சீயம்-சிங்கம்; தண்டு-மிதுனம், ஞெண்டு-நண்டு, கடகம்; ஆடு முதலாமவை-மேடம் முதலாக வந்த இடபம், தனுசு, கடகம், மகரம் ஆகிய இராசிகள் ஐந்து இடங்கள்.

கிரங்களின் உதய இடங்கள்

காய்ந்த கதிரொடு சேய்காரி புறக்குடையாம்
வாய்ந்த புகரொடுமால் மந்திரியும் - மாய்ந்தசனி
நாலுந் தலையெழுச்சி நன்மதியுங் கேதுவும்
வாலுந் தலையு மெழுமாம். 36

எ-து : கோள்களின் உதய பாகங்கள் கூறிற்று.

இ-ள் : ஆதித்தன், செவ்வாய், சனியுமாகிய மூன்று கிரகங்கள் பிருட்டோதயமாகவும், சுக்கிரன், குரு, புதன், ராகு ஆகிய நான்கு கிரகங்கள் சிரோதயமாகவும், சந்திரனும், கேதுவும் வாலும் தலையுமாக உதிப்பரென்றும் இப்படி கிரக உதயங்களறிக என்றவாறு.

கருத்து : தலை, வால், பிருட்டம், தலையுடன் பிருட்டம் ஆகிய உதயநிலைகளுடைய கோள்கள் குறித்ததாம்.

அ-உரை : காய்ந்த-வெய்யல் காய்ந்த; சேய்-செவ்வாய்; காரி-சனி; மாய்ந்த சனி- ராகு.

இராசிகளின் கால் நிலை

பாதநாதன் காடுசிலை யரியும் பாய்விடையுங்
கோதில் குடந்தண்டு கோல்மடந்தை - பாத
மிரண்டலவன் தேள்,கா லில்சுறவு மீனந்
திரண்டுபறந் தோடுமெனச் செப்பு. 37

எ-து : இராசிகட்குரிய கால்கள் அளவு அறிவிக்கின்றது.

இ-ள் : மேடம், தனுசு, சிங்கம், இடபம் ஆகிய நான்கு இராசிகள் நான்கு கால்களுடையனவென்றும், கும்பம், மிதுனம், துலாம், கன்னி ஆகிய நான்கு இராசிகளும் இரண்டு கால்கள் உடையனவென்றும், கடகம், விருச்சிகமாகிய இரண்டு ராசிகள் பறவையாமென்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : இராசி வடிவங்களுக்குரிய கால்கள் இத்தனையுடையன என்று அறிவித்ததாம்.

அ-உரை : அரி-சிங்கம்; கோதில்-குற்றமற்ற; குடம்-கும்பம்; மடந்தை-கன்னி; அலவன்-கற்கடகம், நண்டு.

உரை விளக்கம் : பாதம் இரண்டு அலவன், தேள் காலில் சுறவு மீனம் திரண்டு பறந்தோடும்-மகரம், மீனம் இரண்டும் காலின்மையால் பறவைபோல் சேர்ந்து ஓடுந்தன்மை உடையன என்க.

கோள்களின் கால் நிலை

மந்தன் பருதிசேய் மற்றிவை நாற்காலாம்
புந்திபுகர் பொன்னு மிருகாலா - முந்திய
பான்மதிய நாகம் பலகாலா மென்பரே
மேன்மதியோர் சொன்ன விதி. 38

எ-து : கோள்கணின்ற இராசிக்கால் கூறிற்று.

இ-ள் : சனியும், சூரியனும் செவ்வாயுமாகிய கிரகங்கள் நாற்காலுடையனவென்றும், புதனும், சுக்கிரனும், வியாழனுமாகிய கிரகங்கள் இருகாலுடையனவென்றும், சந்திரனும், பாம்புமாகிய கிரகங்கள் பலகால்கள் உடையன என்றும், நூலுணர்ந்தவர்களால் விதிக்கப்பட்டன என்றவாறு.

கருத்து : சோதிடநூல் உணர்ந்த முனிவர்கள் உரைத்த கோள்களின் கால்நிலை உணர்த்திற்றாம்.

அ-உரை : மந்தன்-சனி; பருதி-சூரியன்; சேய்-செவ்வாய், பொன்-குரு; பான்மதி-பால் நிலவாம் சந்திரன்; நாகம்-ராகு; விதி-முறைமை; பாம்பு-இராகு, நாகம் என்ற பொதுமையால் கேதுவும் கொள்ளப்படுமென்பர்.

கோள்களின் கால் வலிமை

உதைய முதல்தனுக் கீரிரண்டாம் நீர்க்கீழ்
உதைய மதற்கேழ்பா காகும் - உதயத்துச்
சித்தான பத்தர்கும் என்பரே பேதச்சு
மெச்சியோர் கண்ட விதி. 39

ஏ-து : கோள்களின் இராசிக்கால் வலிமையளவு கூறிற்று.

இ-ள் : இலக்கன உதய கண்டமென்னுமதனுக்கு நாலாம் ராசி நீர்க்கீழ்க்கண்டமென்றும், அதனுக்கு ஏழாம் ராசி பாகுகண்டமென்றும், அதனுக்குப் பத்தாம் ராசி உச்சிக் கண்டமென்றும், முன்பு சக்கரத்திற் சொல்லப்பட்ட சாதிகள் நாலாகியதாகக் கண்ட கண்டங்களின்படியே அறியும் தன்மையவென்றறிக என்றவாறு

கருத்து : கிரகங்களின் கால் நோக்கும் வலிதும் கண்டம் எனும் நிலைப்பு நோக்கும் கூறியதாம்.

அ-உரை : தனு-தனுசு; பாகு-அரைக்கண்டம்; சித்தான-அறிவுக்கமைந்த; பேத அச்சு-திரிசக்கரம்; மெச்சியோர்-பாராட்டிய அறிஞர்; கண்டவிதி-அறிந்த முறைமை. கால்-இராசிகளில் கோள் ஊன்றிய வலிநிலை.

இராசி வலிமை

இருகா லெழுச்சிக்கண் ணீரிரு காலுச்சி
யருகாத பல்காலாம் பத்தேழ் - வெருவ
பறப்பனநீர்க் கீழாம் பாங்குடைய வாரை
நெறியத்தான் வெல்லும் நிலம். 40

எ-து : இராசியது வலிமையிடம் அளவிட்டது.

இ-ள் : இருகால் இராசி உதயம் வலியவென்றும், நாற்கால் இராசி பத்தாமிடத்தில் வலியவென்றும், பலகால் இராசி ஏழாமிடத்து வலியவென்றும், பறவை இராசி நாலாமிடத்து வலியவென்றும், இவ்வாறு இராசிகள் வலியறிந்து கொள்க என்றவாறு.

கருத்து : இருகால், நாற்கால், பலகால், பறவை ஆகிய ராசிகளின் வலிமையிடம் மேலும் கூறிற்றாம்.

அ-உரை : எழுச்சி-செல்லுமிடம்; ஈரிரு-நான்கு; பத்தேழ்-பத்தாம், ஏழாமிடம்; வாரை-அச்சு; நெறிய-சக்கர வளைவில் நெறியுடையதாக; வெல்லும்-வலிமைப்பலன் செய்யும்; நிலம்-இராசி.

கோள்களின் கண்ட வலிமையிடம்

புந்திபொன் போதெழுங்காற் பொங்குச்ச மாங்கதிர்சேய்
மந்த னுகளுமே ழாமென்பர் - முந்திப்
புகர்மா மதிநான்கு வெல்லுவா ரென்ன
பகர்மா மதியோர் படி. 41

எ-து : கோள்களின் கண்ட இட இராசி வலிமை இடம் கூறிற்று.

இ-ள் : புதனும், வியாழனும் உதயத்துப் பலமுடையர் என்றும், ஆதித்தனும், செவ்வாயும் பத்தாமிடத்தில் பலம் உடையவரென்றும், சனியும், பாம்பும் ஏழாமிடத்தில் பலம் உடையவரென்றும் இப்படி கிரகங்கள் பலமுடைய வலியறிந்து சொல்லுக என்றவாறு.

கருத்து : கோள் உதயமுதல் கண்ட இராசி வலிமை இடங்களைச் சிறந்த அறிஞர் கூறியபடி கூறுவாயாக என்பதாம்.

அ-உரை : புந்தி-புதன்; மந்தன்-சனி; உகளு-ஊர்ந்து செல்லும் பாம்பு-ராகு; பகர்-கூறு; படி-சொன்னவாறு.

நோக்கின் கணிப்பு

எழுவது மேழு முழுநோக்கைந் தொன்பான்
பழுகா லரைமுக்கால் நான்கீரைந் - தெழுபாத
நோக்கரைக் கால்பதி னொன்றுமுன் றாகுமாம்
நோக்கு நோக்கும் விதி. 42

எ-து : கோள்களின் பார்வைவழி நோக்கம் கூறிற்று.

இ-ள் : உதய ராசியும் அதற்கு ஏழாம் ராசியும் முழு நோக்குடையனவென்றும், உதயத்திற்கு ஐந்தாம் ராசி அரை நோக்குடையனவென்றும், உதயத்திற்கு ஒன்பதாம் ராசி முக்கால் நோக்கு உடையனவென்றும், உதயத்திற்கு நாலாம் ராசியும், பத்தாம் ராசியும் கால் நோக்குடையனவென்றும், உதயத்திற்குப் பதினொராம் ராசியும் மூன்றாம் ராசியும் அரைக்கால் நோக்குடையனவென்றும் அறிக என்றவாறு.

கருத்து : திரிசக்கரத்தில் கோள்களின் பார்வை அளவுக் கணிப்புக் கூறிற்றாம்.

இராசிகள் வழி கோள்களின் நோக்கு வலிமை

வெய்யோன் மதிபுகர்மால் வென்றி முழுநோக்கு
செய்யோனு முக்காலிற் சீரியனாம் - மையோனுங்
கானோக்கில் வென்றி கணக்கனரை நோக்கில்
மானோக்கின் கண்ணாய் மதி. 43

எ-து : இராசிகளிடத்து கோள்கள் பெறும் வலிமை உணர்த்திற்று.

இ-ள் : மானைப்போன்ற நோக்கினை உடைய கண்ணாய்! ஆதித்தனும், சந்திரனும், வெள்ளியும், புதனும் முழுநோக்கில் வலியாம், செவ்வாய் முக்கால் நோக்கில் வலியாம், சனி கால் நோக்கில் வலியாம், வியாழன் அரை நோக்கில் வலியாம் என்றவாறு மதித்துக் காண்பாயாக.

கருத்து : கிரகங்களின் நோக்கில் வலிமைபெறும் நோக்கு குறித்ததாம்.

அ-உரை : புகர்-வெள்ளி, சுக்கிரன்; மால்-புதன்; வென்றி-வெற்றி பெறுவர்; செய்யோன்-(சேயோன்) செவ்வாய்; மையோன்-சனி; கணக்கன்-வியாழன்.

உரை விளக்கம் : சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன் இவைகட்கு ஏழாமிடம் முழுநோக்கு வலிமை. செவ்வாய்க்கு முக்கால் நோக்கு நான்காம் இடம் வலிமை. சனி மூன்றாம் இடமாகிய கால் நோக்கில் வலிமை. குரு ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் ஆகிய அரை நோக்கு இடங்களில் வலிமை. ராகு-கேது ஆகியவைகட்கு மூன்றாம் இடம், பதினோராம் இடம் ஆகிய இடங்களில் கால் வலிமை பெறினும், நுட்ப வலிமை மூன்றாமிடமேயாகும். இவ்வாறு இராசிகளில் நிற்கும் கோள்களுக்கு நோக்கு வலிமைகண்டு சோதிட நூலாசிரியர்கள் கூறியுள்ளனர்.

கிரகங்களின் நோக்கு இடங்கள் : *(பொது)*

சூரியன்	-	4, 7-ஆம் நேக்கில் வலிமை.
சந்திரன்	-	4, 7-ஆம் நேக்கில் வலிமை.
புதன்	-	4, 7-ஆம் நேக்கில் வலிமை.
சுக்கிரன்	-	4, 7-ஆம் நேக்கில் வலிமை.
செவ்வாய்	-	4, 8-ஆம் நேக்கில் வலிமை.
சனி	-	10, 7-ஆம் நேக்கில் வலிமை.
குரு	-	5, 9-ஆம் நேக்கில் வலிமை.
இராகு	-	3, 11-ஆம் நேக்கில் வலிமை.
கேது	-	3, 11-ஆம் நேக்கில் வலிமை.

குறிப்பு : மேல் பாடல் குறிப்பது கோள்களின் நிறைநோக்கு வலிமை இடங்கள் என்றறிக.

நோக்கின் தன்மை

விலங்கு விலங்கொடுநேர் நோக்கமாம் மக்கள்
கலங்காது செவ்வனே நோக்கும் - நலங்கிளர்
காட்டமே னோக்கும் பறவை தவழ்வனவாம்
நீடுவ னோக்கும் நிலத்து. 44

எ-து : நோக்கின் இயல்புத் தன்மை கூறிற்று.

இ-ள் : விலங்கு இராசியாகிய மேஷம், ரிஷபம், சிங்கம், தனுசு இவை நாற்கால் ராசிகள் விலங்கிப் பாற்பனவாம்.

மானுட இராசியாகிய மிதுனம், கன்னி, துலாம், கும்பம் இவை தொலைப்பார்வை நோக்குடையனவாம். தாழ்வான இராசியாகிய விருச்சிகம், கடகம் ஆகிய இவை பூமியைப் பார்க்கும் என்றும் கூறியவாறு.

கருத்து : இராசிகளின் உருவ அமைப்பின்வழி அவற்றின் நோக்கின் இயல்பு கூறியதாம்.

அ-உரை : விலங்கு-விலங்கின் வடிவமுள்ள இராசிகள்; நேர் நோக்கம்-துல்லியமான நோக்கம்; செவ்வை நோக்கம்-நேர் நோக்கம்; நலம்கிளர்-நன்மை விளைகின்ற; காட்ட-குறிப்பிட; நீடுவ நோக்கம்-தரை மட்ட பக்க நோக்கு.

உரை விளக்கம் : இருகால் இராசிகள் துல்லியமான பார்வை உடையனவாம். மக்கள் வடிவ இராசிகள் நேர் பார்வை உடையனவாம், சிறகுக்கால் இராசிகள், பறவைகள் பார்வைபோல குறிப்பான மேல்பார்வை உடையனவாம். பலகால் தவழ்வன இராசிகள் நிலத்தொடு சார்ந்த பார்வை போல கீழ்ப்பார்வை உடையனவாம் என்றறிக.

கிரக நோக்கின் நுட்பம்

மதிபொன் னெதிர்முகமே நோக்குமே னோக்கம்
கதிர்சேய் கடைக்கண் நோக்கும் - எதிராத
பாகான புகர்கவிழ்ந்து நோக்குமாம் பாம்புசனி
ஏகமாய் நோக்கு மெனில். 45

எ-து : கிரகங்கள் இராசியிலிருந்து நோக்கும் நோக்கங் களின் நுட்பம் கூறிற்று.

இ-ள் : சந்திரனும், வியாழனும் நேரே நோக்குவார்கள் என்றும், ஆதித்தன் மேல்நோக்கிப் பார்ப்பானென்றும், செவ்வாய் கடைக்கண்ணால் பார்ப்பானென்றும், புதனும், சுக்ரனும் கவிழ்ந்து பார்ப்பார்கள் என்றும், பாம்பும், சனியும் ஒரு கண்ணாலே பார்ப்பார்கள் என்றும் இவ்வாறு வேறுபாடறிந்து சொல்லுக என்றவாறு.

கருத்து : கிரகங்களின் நுட்ப நோக்கறிந்து சொல்லுக என்பதாம்.

அ-உரை : பொன்-குரு; நோக்கம்-பார்வை; எதிராத-மாறுபடாத; பாம்பு-ராகு; ஏகம்-ஒன்று.

குறிப்பு : பாடலில் மூன்றாம் அடி, முதல்சீர் பாகான் என்றிருத்தல் வேண்டும்.

இராசிகளின் பார்வைத் திக்கு

ஆடுகீழ் பாலரிவின் தென்கீழ்தெற் காமிடபந்
தேடு மகள்சுறவந் தென்மேற்கு - நீடிய
தண்டுமேல் பால்வடமேல் கோல்குடந் தான்வடக்கு
நண்டுதேள் மீன்வடகீழ் நாட்டு.

எ-து : இராசிகள் நோக்கும் பார்வைக்குரிய திக்கு கூறிற்று.

இ-ள் : மேஷத்திற்குப் பார்வை கிழக்கு என்றும், சிங்கத்திற்கும், தனுசுக்கும் பார்வை தென்கிழக்கு என்றும், இடபத்திற்குப் பார்வை தெற்கென்றும், கன்னிக்கும், மகரத்திற்கும் பார்வை தென்மேற்கென்றும், மிதுனத்துக்குப் பார்வை மேற்கு என்றும், கற்கடகத்திற்குப் பார்வை வடக்கு என்றும், விருச்சிகத்திற்கும், மிதுனத்திற்கும் பார்வை வடகிழக்கு என்றும் இப்படி ராசிகள் பார்வைக்குத் திசையறிக என்றவாறு.

கருத்து : இராசிகளின் பார்வைக்குரிய திசை திக்கு கூறிற்றாம்.

அ-உரை : ஆடு-மேஷம்; அரி-சிங்கம்; தேடுமகள்-கன்னி; நீடிய-தொடர்ந்த; தண்டு-மிதுனம்; நாட்டு-அறிந்துசொல்.

கோள்கள் நோக்கும் திக்கு

நாட்டுங் கதிர்புகர்சேய் நாகநடை மேலிலாம்
நோக்கு புதன்மதிபொன் னொள்ளியதாம் - கூட்டி
கொடிமுதலா யீங்கிவற்றைக் கொண்டெண்ணுங் காலை
நொடியுங்கோ ளெட்டும் நோக்கு.

எ-து : கோள்கள் நோக்கும் திக்கு உணர்த்திற்று.

இ-ள் : ஆதித்தனுக்கு நேர் கிழக்கு என்றும், சுக்கிரனுக்கு நோக்கு தென்கிழக்கு என்றும், செவ்வாய்க்கு நோக்குத் தெற்கு என்றும், பாம்பிற்கு நோக்குத் தென்மேற்கு என்றும், சனிக்கு நோக்கு மேற்கு என்றும், புதனுக்கு நோக்கு வடமேற்கு என்றும், சந்திரனுக்கு நோக்கு வடக்கு என்றும், வியாழத்துக்கு நோக்கு வடகிழக்கு என்றும், இப்படி கிழக்கு முதலாகிய உதயாதியாகக் கிரகங்கள் எட்டும் நோக்கும் திசைகள் எட்டும் அறிகவென்றவாறு.

கருத்து : கிரகங்கள் இராசிகளிலிருந்து நோக்கும் திக்கு கூறிற்றாம்.

அ-உரை : நாகம்-இராகு; ஒள்ளியதாம்-சிறப்பானதாம்; நொடியும் கோள்-சொல்லப்படும் கோள்கள்.

ஆண், பெண்இராசிகள்

கோலரியாழ் கூன்சிலைசால் கொச்சையிவை யாணாகும்
வாலெருது மீன்மகரம் கன்னியொடு - கால்பலவாய்
நாமறியுங் தேளலவ னென்றிவற்றை நானிலத்தோர்
தாமறியப் பெண்ணாகச் சாற்று. 48

எ-து : ஆண், பெண் இராசிகள் சுட்டியது.

இ-ள் : துலாம், சிங்கம், மிதுனம், தனுசு, கும்பம், மேஷம் இவை ஆறும் ஆணாகும். இடபம், மீனம், மகரம், கன்னி, விருச்சிகம், கடகம் இவை ஆறும் பெண்ணாகும் என்று அறிக என்றவாறு.

கருத்து : இராசிகட்குரிய ஆண், பெண் இனவகை கூறிற்றாம்.

அ-உரை : கோல்-துலாக்கோல், துலாம்; யாழ்-மிதுனம்; கூன் சிலை-வளைந்த சிலை; அலவன்-கற்கடகம்.

உரை விளக்கம் : மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் இவை ஆறும் ஆண் இராசிகள். ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இவை ஆறும் பெண் இராசிகள். இவ்வகையாக இராசிகளில் ஆண், பெண் மதித்து அறியப்படும்.

ஆண், பெண், அலி – கோள்கள்

வெள்ளி மதிநாகம் பெண்ணாகும் கேதுவோ
டொள்ளியமால் காரி யலியுருவாந் - தெள்ளிய
சேயருக்கன் பீதகனா மென்றிவற்றை ஆணாக
வாயுரைத்தோர் கண்ட வழக்கு.

எ-து : கோள்களின் ஆண், பெண், அலி வகை கூறிற்று.

இ-ள் : சுக்கிரன், சந்திரன், பாம்பு (ராகு) இவை பெண் ஆகும். கேது, புதன், சனி இவை அலியாகும். செவ்வாய், ஆதித்தன், வியாழன் (குரு) இவை ஆணாகும் என்றறிக என்றவாறு.

கருத்து : கோள்களில் ஆண், பெண், அலி வகையறிந்து கூறிற்றாம்

அ-உரை : வெள்ளி-சுக்கிரன்; நாகம்-இராகு; ஒல்லியமால்-அறிவுடைய புதன்; காரி-சனி; அலி-ஆண் பேடி.

உரை விளக்கம்: சூரியன், செவ்வாய், குரு இம்மூன்றும் ஆண் கோள்கள். சந்திரன், சுக்கிரன், இராகு இவை மூன்றும் பெண் கோள்கள். புதன், சனி, கேது இவை மூன்றும் அலிக்கோள்கள். இவ்வகையாகக் கோள்களின் ஆண், பெண், அலி அறிக.

இராசி - ஆண், பெண் - ஒற்றை, இரட்டை

யாழ்குடமும் கோலும் இருஞ்சிலையும் ஆணிரட்டை
ஊழிலரி யாடோடாம் ஒற்றை - சூழந்
தொடியிடபம் தேளலவன் சொல்லும்பெண் ணொற்றை
கொடிமகர மீனிரட்டைக் கூறு. 50

எ-து : இராசிகளின் ஆண் - பெண், ஒற்றை - இரட்டை விதிக்கின்றது.

இ-ள் : மிதுனம், கும்பம், துலாம், தனுசு இவை ஆண் இரட்டையாகும். சிங்கம், மேஷம் இவை ஒற்றையாகும். இடபம், விருச்சிகம், கடகம், கன்னி இவை பெண்ணிரட்டை என்றவாறு.

கருத்து : இராசிகளுக்குரிய ஆண் - பெண், ஒற்றை - இரட்டை கூறிற்றாம்.

அ-உரை : யாழ்-மிதுனம்; குடம்-கும்பம்; கோல்-துலாம், இருஞ்சிலை-வலிமையான வில், தனுசு; தொடி-கழுத்து வளையம்.

உரை விளக்கம் : மேஷம், சிம்மம் இவை ஆண் ஒற்றை. மிதுனம், துலாம், தனுசு, கும்பம் இவை ஆண் இரட்டை. ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம் இவை ஆண் ஒற்றை. மகரம், மீனம் இவை பெண் இரட்டை. இவ்வாறு இராசிகளின் ஆண் - பெண், ஒற்றை - இரட்டை அறிக.

r

ஆரல் கதிரோ னணிமதிய மிம்மூன்று
மோருருவே யாகு முணருங்கால் - நீர்தருவான்
பாகன் பசும்பொன் சனிபாம் பிவையிரட்டை
யாகு மெனவுரைத்தா ராய்ந்து. 51

எ-து : கோள்கள் ஆண், பெண், அலி, ஒற்றை, இரட்டை வகை கூறிற்று.

இ-ள் : செவ்வாயும், ஆதித்தனும், சந்திரனும், ஒற்றை எனக்கொள்க. வெள்ளி, புதன், வியாழன், சனி, ராகு, கேது இரட்டை எனக்கொள்க என்றவாறு.

கருத்து : கோள்களில் ஆண்-பெண், ஒற்றை-இரட்டை கூறிற்றாம்.

அ-உரை : ஆரல்-செவ்வாய்; அணிமதியம்-அழகிய சந்திரன்; நீர் தருவான்-சுக்கிரன்; பாகன்-புதன்.

உரை விளக்கம் : சூரியன், செவ்வாய் இவை ஆண் ஒற்றை. குரு ஆண் இரட்டை. சந்திரன் பெண் ஒற்றை. சுக்கிரன், இராகு பெண் இரட்டை. புதன், சனி, கேது அலி இரட்டை. இவ்வாறு நூலறிஞர் கூறுவர்.

அலியொற்றை இல்லை. முணருங்கால் என்பது கொண்டு மேலே வகை காணப்பட்டதாம்.

கோள்களின் குலம் (சாதி)

வெய்யவன்சேய் வேந்தனாம் வெண்மதிபொன் வேதியனாம்
மையுறைவான் புந்தியும் வாணிகனாம் - ஐயமிலா
வெள்ளியே வேளாளன் வெம்புசனி பாம்பிரண்டும்
வொள்ளியகீழ் மக்களென வோது. 52

எ-து : கோள்களின் இனவேறுபாடு கூறியது.

இ-ள் : ஆதித்தனும், செவ்வாயும் - அரசன், சந்திரன் - பிராமணன், வியாழன் - பிராமணன், புதன் - செட்டி, வெள்ளி-வேளாளன், சனியும், ராகுவும் கீழ்சாதியென்றவாறு.

கருத்து : கோள்களின் இனநிலை இவ்வாறாகும் என்று குறித்ததாம்.

அ-உரை : வெய்யன்-சூரியன்; வேந்தனாம்-அரச சாதியாம்; வேதியன்-பிராமணன்; மை-மேகம், வாணிகன்-வைசியன்.

உரை விளக்கம் : சந்திரன், குரு இவை இரண்டும் பிராம்மணன். சூரியன், செவ்வாய் இரண்டும் சத்திரியன். புதன் வைசியன், சுக்கிரன் வேளாளன், சனி, பாம்பு இவை இரண்டும் கீழ்சாதி என்று இவ்வகையாகக் கோள்களின் குலம் தெளிக.

இராசிகளின் குலம்

வேந்தனரி யாடாகும் வெஞ்சிலையும் வேதியனாம்
வாய்ந்ததேள் மீன்ஞெண்டே வாணிகனாம் - ஏந்தும்
துலையாழ் குடமூன்றும் வேளாளனாம் சொல்கீழ்
கலையே றுடன்மகளாங் காண். 53

எ-து : இராசிகட்குரிய குலவகை கூறிற்று.

இ-ள் : சிங்கமும், மேஷமும் அரசன் (சத்திரியன்). தனுசு, மீனம், கடகம், விருச்சிகம் பிராமணன். துலாம், மிதுனம், கும்பம் இவை செட்டி. மகரம், இடபம், கன்னி இவை கீழ்ச்சாதி என்றவாறு.

கருத்து : இராசிகள் பெறும் சாதிவகை கூறிற்றாம்.

அ-உரை : வேந்தன்-சத்திரியன்; வேதியன்-பிராமணன், வாணிகன்-வைசியன்; சொல்கீழ்-கீழ்ச்சாதி.

உரை விளக்கம் : தனுசு, மீனம் இவை பிராமணன், மேஷம், சிம்மம் இவை சத்திரியன். கடகம், விருச்சிகம் இவை வைசிகன். மிதுனம், துலாம், கும்பம் இவை வேளாளன். ரிஷபம், கன்னி, மகரம் இவை கீழ்ச்சாதி என்றிவ்வாறு இராசிகளின் குலம் காண்க.

இராசிகளின் நிறம்

வில்லரியா டுஞ்சிகப்பு வெள்ளேறு கோல்கடகம்
சொல்லரிய வெள்ளைமீன் தொல்குடந்தேள் - சொல்லுந்
திண்பசுமை யாகும் திறலியாழ் கன்னிசுறா
வொண்கருமை யென்றுரைக்க வோர்ந்து. 54

எ-து : இராசிகளின் நிறம் அறிவிக்கின்றது.

இ-ள் : தனுசு, சிங்கம், மேடம் இவை சிகப்பு. இடபம், துலாம், கடகம் இவை வெண்மை. மீனம், விருச்சிகம், கும்பம் இவை பச்சை. மிதுனம், கன்னி, மகரம் இவை கருப்பு என்றவாறு.

கருத்து : சிகப்பு, வெண்மை, பசுமை, கருமை நிற இராசிகளின் வகை கூறிற்றாம்.

அ-உரை : வில்-தனுசு; வெள்ளேறு-வெண்ணிறமான இடபம்; கோல்-துலாம்; தொல்குடம்-தெய்வத்தன்மை பொருந்திய கும்பம்; திண்பசுமை-திண்மையான பச்சை நிறம்; திறலியாழ்-வெற்றிதரும் யாழ், மிதுனம்; சுறா-மகரம்; வொண்கருமை-நல்ல கருப்பு நிறம்; ஓர்ந்து-ஆராய்ந்து கூறு.

கோள்களின் நிறம்

புகர்வெளிராஞ் சேய்செம்மை பொன்பொன்னாம் புந்தி
பகர்பசுமை பான்மதியும் வெண்மை - நிகரில்
விரிகதிர்க்குஞ் செம்பசுமை மெய்நொடியன் ராகுக்
குரியநிற மொண்கருமை யோர். 55

எ-து : வெள்ளி-வெள்ளை, செவ்வாய்-சிகப்பு, வியாழம்-பொன்னிறம், புதன்-பச்சை, சந்திரன்-வெண்மை, ஆதித்தனும், கேதுவும் செம்பசுமை. சனியும், ராகுவும் கருப்பு என்றவாறு.

கருத்து : கோள்களுக்குரிய நிறங்கள் கூறியதாம்.

அ-உரை : வெளிர்-வெளிரான வெண்மை; செம்மை-சிகப்பு; பொன்னாம்-பொன்நிறமாம்; வெண்மை-தூய வெண்மை; நொடியன்-முடவன், சனி; உரிய நிறம்-இவற்றிற்குப் பொருந்திய நிறம்; ஓர்-அறிந்துகொள்.

குறிப்பு :- புகர் புகராம் என்ற பாடவேறுபாடு உண்டு. புகராம் என்பது கருமை கலந்த ஒள்ளொளி நிறமாகும். பசுமை, செம்பசுமை என்பன, பசுமை நல்ல பச்சை, செம்பசுமை-வெளிர்ப்பச்சை என்றறிக. வெள்ளை-வெளிறியது; வெண்மை-தூய்மையானது.

இராசி, கோள் - பிறப்பு வகை

எறிதே ளலவன் தவளுமீன் புல்வாய்
பறவை பிறநடக்கும் பாங்காம் - நிறுவிய
நாகம் மதிதவழும் நற்பறவை புந்திசனி
யேகும் பிறநடக்கு மென். 56

எ-து : இராசிகளிலும், கிரகங்களிலும் பிறப்பு வகை கூறிற்று.

இ-ள் : விருச்சிகம், கடகம் - தவழுவனவாம். மீனம், மகரம் - பறப்பனவாம். இராசி நடக்கும் என்றபடியினாலே மேஷம், ரிஷபம், மிதுனம், சிங்கம், கன்னி, துலாம், தனுசு, கும்பம் இவை நடக்கும் இராசிகளாகும். சந்திரன், ராகு தவழும். புதன் - பறக்கும். சனி - ஒரு காலால் நடக்கும் (முடவன்). ஆதித்தன், செவ்வாய், வியாழன், வெள்ளி நடக்கும் என்றவாறு.

கருத்து : இராசிகட்கு நடப்பன, பறப்பன, தவழ்வன கூறியவாறே கோள்களுக்கும் கூறியதாம்.

அ-உரை : எறிதேள்-கொடியதேள்; புல்வாய்-கூரியவாய்; பாங்கு-முறைமை; நாகம்-இராகு; ஏகுதல்-முடங்கி நடத்தல்; பிற நடக்கும்-பிற இராசிகள் நன்றாக நடப்பனவாம்.

கோள்களின் வடிவு வகை

நாற்சதுரம் வட்டம் துடிவடிவு முக்கோணம்
ஏற்பமைந்த நீள்வட்ட மெண்கோணம் - ஏற்புடைய
வாய்ந்த நெருப்புமுத லாமிறுதி கோள்களில்
ஏய்ந்த வெண்கோட் கியம்பு. 57

எ-து : கோள்களின் வடிவளவு குறிக்கின்றது.

இ-ள் : ஆதித்தன்-நாற்சதுரம், சந்திரன் வட்டம், செவ்வாய்-துடிவடிவு, புதன்-முக்கோணம், வியாழம்- நீண்ட வட்டம், வெள்ளி-எண்கோணம், சனி-நெடுநாற்சதுரம், பாம்பு-நீண்டிருக்கும் (இவ்வாறு கண்ட வடிவங்களைக் கொண்டு) ஒருவன் கெடுத்தனவும், நினைத்தனவும் இந்தப்படி வடிவளவுகொண்டு சொல்லுவதென்றவாறு.

கருத்து : கோள்களின் வடிவளவு கண்டு ஆரூடம் சொல்லுக என்பதாம்.

உரை விளக்கம் : சூரியனுக்கு நான்கு சரிகோணச் சதுர வடிவம். சந்திரனுக்குக் குறுகிய வட்ட வடிவம். செவ்வாய்க்கு உடுக்கை போன்ற வடிவம். புதனுக்கு முக்கோண வடிவம். குருவுக்கு நீண்ட வட்ட வடிவம். சுக்கிரனுக்கு எண்கோண வடிவம். சனிக்கு களவு போன்று மேல் விரிந்து கீழ் குறுகிய வடிவம். பாம்பிற்கு நீண்ட வடிவம். துடி வடிவினை பிறை வடிவமாகவும் கொள்ளலாகும்.

ஏய்ந்தது என்ற பாடற் பகுதியால், அளவிட்ட வடிவினைக் கொண்டு ஆரூடங் கணக்கிட்டுக் கண்டுகொள்க என்பது குறித்ததாம்.

கோள்களின் வலிமை அளவு

கூம்புசுன்சேய் திங்கள் குறிய, நெடியவாம்
பாம்புமால் பீதகனும், பண்புணரின் - மேம்படுசீர்
பாங்குடைய வெள்ளி பகலானென வீரண்டுந்
தாங்குறிகொள் வார்க்குச் சமன்.

எ-து : இராசிகளில் கோள்களின் அளவு கூறிற்று.

இ-ள் : ஆரூடத்தில் நட்பு, ஆட்சி, உச்சத்தில், வலிபெற்று நின்ற கோள்களில், சனியும் செவ்வாயும், சந்திரனும் குறியது. ராகுவும், புனும், வியாழனும் நெடியது. வெள்ளியும், ஆதித்தனும் சமன். இந்தப்படி கோள்களின் (வலிமை) அளவு அறிகவென்றவாறு. இதில் வலிபெற்ற கோள்களின் வடிவு அறிந்து ஆரூடம் சொல்லுக.

கருத்து : இராசிகளில் அதிபதி கோள்களுக்குரிய அளவு குறித்ததாம்.

அ-உரை : கூம்புசுன்-குறுகிய சனி; பீதகன்-குரு, பகலான்-சூரியன்; குறிகொள்வார்-ஆரூடம் கணிப்பவர்; சமன்-சம அளவு; வலி-கோள்களின் வலிமை; குறியது-குறுகிய வலிமை; நெடியது- தொடர்ந்த வலிமை.

குறிப்பு :- இராசிகளின் அளவு திட்டம் அவ்வவற்றிற்குரிய கோள்களுக்கும் உரியதாயினும் கோள்களுக்கென்று அமைந்த வலிமை அளவு கூறினாரென்க.

கோள்களின் கதிர் அளவு

ஐந்திருபத் தொன்றேழதன் பின்னோர்க் கொன்பதுபத்
துந்திய வீரெட் டுரைக்குங்காண் - முந்திய
தீராத வீரிரண்டும் நான்காகு மென்ப
கதிராதி யெண்கோட் கதிர். 59

எ-து : கோள்களின் பார்வைக்கதிர் அளவு கூறிற்று.

இ-ள் : ஆதித்தன் கதிர்-5, சந்திரன் கதிர்-21, செவ்வாய் கதிர்-7, புதன் கதிர்-9, வியாழன் கதிர்-10, வெள்ளி கதிர்-16, சனி கதிர்-4, ராகு கதிர்-4. இவ்வாறு கோள்களுக்குக் கதிர் கொள்க என்றவாறு

கருத்து : இராசிகளில் நின்ற கோள்களின் ஒளிக்கதிர் இத்துணை என்றறிவித்ததாம்.

அ-உரை : ஈரிரண்டு-சனி ராகு கோள்களிரண்டும்; உந்திய-மேற்கூறப்பட்ட; ஈரெட்டு-பதினாறு; காண்-காண்பாயாக; கதிராதி-சூரியன் முதலாக எண்ணப்படும் கோள்கள்; கதிர்-கிரகங்களின் ஒளிக்கதிர்.

குறிப்பு :- எண்கோள் என்று குறித்ததனால் கேதுவுக்குக் கதிரில்லை என்று கொள்ளலாகாது. இராகுவின் கதிரளவே கொள்க என்றறிக.

கோள்களின் கதிரளவு

செங்கதிருக் கோரேழு திங்கட்கு மூவேழு
வெங்கதிருக் கைந்தொன்பான் மேதைக்கு - தங்கிய
பொன்னுக்குப் பத்தும் புகர்க்குப் பதினாறு
கன்னரவு நாலாஞ் சுடர். 60

எ-து : கோள்களின் கதிர்கள் அளவு கூறிற்று.

இ-ள் : செவ்வாய்க்குக் கதிர்-7, சந்திரனுக்குக் கதிர்-21, சூரியனுக்குக் கதிர்-5, புதனுக்குக் கதிர்-9, குருவுக்குக் கதிர்-10, சுக்கிரனுக்குக் கதிர்-16, சனிக்குக் கதிர்-4, ராகுவுக்குக் கதிர்-4 இவ்வாறு கோள்களின் கதிர் அறிக என்றவாறு.

கருத்து : கோள்களின் ஒளிக்கதிர் எண்ணளவு கூறிற்றாம்

அ-உரை : செங்கதிர்-சிவந்த கதிரை உடைய செவ்வாய்; மேதை-கல்வியில் சிறந்த புதன்; புகர்-வெள்ளி; சுன் (சுன்னன்)-சனி; அரவு-இராகு; நாலாம்- ஒவ்வொன்றிற்கும் நான்கு நான்காகும்.

குறிப்பு :- கோள்களின் பார்வைக்கும் வலிமைக்கும் அளவு அறிவதற்கு அவற்றின் ஒளிக்கதிர்களின் அளவு இன்றியமையாதது என்பதனை நன்குணர்ந்து ஆருடம் காண்க.

இராசிகளின் ஒளிவு

கொறியலவன் கோல்கும்ப மெட்டுக்கோ னேறு
அரிமகர யாழ்மிதுன மோரா - றரியேழ்
மங்கைதனுப் பன்னொன்று தேள்நான்கு வாழ்மீனுக்
கிங்கிருபத் தேழ்சுடரா மெண். *61*

எ-து : இராசிகளில் ஒளிவுநிலை கூறிற்று.

இ-ள் : மேஷம் கதிர்-*8*, கடகம் கதிர்-*8*, துலாம் கதிர்-*8*, கும்பம் கதிர்-*8*, இடபம் கதிர்-*6*, மகரம் கதிர்-*6* மிதுனம் கதிர்-*6*, சிங்கம் கதிர்-*7*, கன்னி கதிர்-*11*, தனுசு கதிர்-*11*, விருச்சிகம் கதிர்-*4*, மீனம் கதிர்-*27*, இவ்வாறு ராசிகளின் கதிர் அறிக என்றவாறு.

கருத்து : இராசிகட்குரிய கதிர் அளவு அறிவித்ததாம்.

அ-உரை : கொறி-ஆடு (மேடம்); கோனேறு-இடபம்; அரி ஏழ்-சிங்கத்திற்குக் கதிர் ஏழாகும்; மங்கை-கன்னி; தேள்-விருச்சிகம்; வாழ்மீன்-பன்னிரண்டு ராசிகளிலும் சஞ்சாரம் மீனம்; இங்கு-ஆருடம் அமைக்கும் போது; சுடர்-இராசி ஒளிநிலை.

குறிப்பு :- மீனம் கேந்திரத்திடத்திருக்க அவனது சுடர் மற்றைய இராசிகளில் ஒளிவு செலுத்தும் என்பது அறியத்தக்கது.

இராசி கதிர் வரை

ஏழெட்டோ ரைந்துமுன் றேழு பதினொன்றும்
காழ்பட்ட நான்மூன்று நான்காறும் - சூழ்பட்ட
வெட்டிருபத் தொன்றின்மே ழெட்டாம் கதிரிவிற்றை
ஒட்டிமேட மாதியா யோட்டு. 62

எ-து : இராசிகளில் கதிர் விதிப்பு கூறிற்று.

இ-ள் : மேடத்திற்குக் கதிர்-7, இடபத்திற்குக் கதிர்-8, மிதுனத்திற்குக் கதிர்-5, கடகத்திற்குக் கதிர்-3, சிங்கத்திற்குக் கதிர்-7, கன்னிக்குக் கதிர்-11, துலாத்திற்குக் கதிர்-12, விருச்சிகத்திற்குக் கதிர்-4, தனுசுக்குக் கதிர்-6, மகரத்திற்குக் கதிர்-8, கும்பத்திற்குக் கதிர்-8, மீனத்திற்குக் கதிர்-21. இவ்வாறு மேஷ முதலாக மீனம் இராசி வரையில் கதிரொட்டிக் கொள்வது.

கருத்து : மேட முதல் மீனம் வரையில் இராசிகளின் கதிர் நிலை கூறிற்றாம்.

குறிப்பு :- பாடலில் மூன்றாம் அடியில் எட்டு இருபத்தொன்றின் மேல் எட்டாம் என்ற குறிப்பால் கும்பம், மீனத்திற்கு முற்பட்ட ராசியெனக் குறித்துக் கொண்டு கதிரளவும் காட்டியதாம்.

கோள்களின் காதம் அளவு

இருபான் கருங்கோ ளிளந்திங்கட் கொன்றாம்
குருவுக்கொன் பானாம் குசற்கேழ் - தெரியுங்கா
லீரெட்டாம் வெள்ளிக் கெரிகதிரோன் மாலிவர்கட்
கோரெட்டாம் காதமென வோர். 63

எ-து : கோள்களின் நோக்கிற்குரிய காத அளவு கூறிற்று.

இ-ள் : சனிக்குக் காதம்-20, சந்திரனுக்குக் காதம்-1, குருவுக்குக் காதம்-9, செவ்வாய்க்குக் காதம்-7, வெள்ளிக்குக் காதம்-16, சூரியனுக்குக் காதம்-8, புதனுக்குக் காதம்-8 இவ்வாறு காதம் சொல்லுவது.

கருத்து : கோள்களுக்கு அமைந்த அளவுமுறை காதம் என்ற பேரளவு கொண்டு கூறியதாம்.

அ-உரை : கருங்கோள்-கரிய சனிக்கோள்; ஒன்பான்-ஒன்பது; குசன்-செவ்வாய்; ஈரெட்டு-பதினாறு; எரி கதிர்-எரிகின்ற சூரியன்.

குறிப்பு :- கோள்களின் அளவு என்பது, ஆருடக் கணிப்பிற்குக் கருதி அமைந்ததாகும். காதத்தின் அளவு 7½ நாழிகை வழியென்பதாகும்.

கோள்களின் வயது

நானான்கு சேய்புகரே ழையைந்தாம் புந்தியன்பொன்
தானாகு முப்பதும் தண்மதிக்கே - மானே !
எழுபதிர விக்கைம்ப தாம்பணி காரி
கொழுவொத்த நூற்றொன்றாய்க் கூறு. 64

எ-து : கோள்களுக்குரிய வயது அளவு கூறிற்று.

இ-ள் : செவ்வாய்க்கு வயது-16, வெள்ளிக்கு வயது-7, புதனுக்கு வயது-27, வியாழனுக்கு வயது-30, சந்திரனுக்கு வயது-70, சூரியனுக்கு வயது-50, பாம்புக்கும், சனிக்கும் வயது-100 என்றவாறு.

கருத்து : கோள்களுக்கு அமைந்த வயதுநிலை கூறிற்றாம்.

அ-உரை : புகரேழ்-வெள்ளிக்கு ஏழு வயது, தண்மதி-குளிர்ந்த சந்திரன், பணி-பாம்பு (ராகு), காரி-சனி; நூற்றொன்று-ஒரு நூறு வயது.

உரை விளக்கம் : சூரியனுக்கு வயது-50, சந்திரனுக்கு வயது-70, செவ்வாய்க்கு வயது-16, புதனுக்கு வயது-27, சுக்கிரனுக்கு வயது-7, குருவுக்கு வயது-30, சனி, ராகு இவை

இரண்டிற்கும் தனித்தனியே வயது-100. இவற்றுள் புதனுக்கு வயது-20 என்ற பாடமும் வேறு சுவடியில் உள்ளது.

கோள்களுக்குரிய சுவை

கரியும் பாம்பும் சுவைகைக்கு மின்சுவைபொன்
மாரி புளிக்கும் மதிதுவர்க்கும் - தேரின்
கரிக்குமாஞ் செவ்வாய் கணக்கன் உவர்க்கும்
எரிக்குஞ் சுவையிரவிக் கென் ? 65

எ-து : கோள்களுக்குரிய சுவைத்தன்மை கூறிற்று.

இ-ள் : சனி, இராகு இரண்டிற்கும் சுவை - கசப்பு. குருவுக்குச் சுவை - இனிப்பு. சுக்கிரனுக்குச் சுவை - புளிப்பு, சந்திரனுக்குச் சுவை - துவர்ப்பு. செவ்வாய்க்குச் சுவை - கரிப்பு. புதனுக்குச் சுவை - உவர்ப்பு. சூரியனுக்குச் சுவை - உறைப்பு என்றவாறு.

கருத்து : கோள்கள் விரும்பும் பொருந்திய சுவை வகை கூறிற்றாம்.

அ-உரை : பாம்பு-ராகு; கைப்பு-கசப்பு; இன்சுவை-இனிப்பு; மாரி-மழைக்குரிய கோள் (சுக்கிரன்); கணக்கன்-புதன்; எரிக்கும்-காறல் சுவை பெறும். காறல்-உறைப்பு, காரம்.

குறிப்பு :- இராசிகளில் சுவை விதிப்பு அவற்றின் கோள்களுக்கு உரியதேயாகும். இம்முறையிலேயே கோள்களுக்குரிய சுவையினை குறித்ததாகும்.

கோள்களின் மறுவடு பக்கங்கள்

பண்டிதனுஞ் சேயும் பருதியும் பைம்பொன்னும்
கொண்ட குறிவலப்பால் கூறுங்கால் - விண்ட
படநாகம் பான்மதியம் பார்கவன் பைங்காரிக்
கிடமாங் குறியென் றியம்பு. 66

எ-து : கோள்கட்குரிய பக்கநிலை கூறிற்று.

இ-ள் : புதன், செவ்வாய், ஆதித்தன், வியாழன் இவர்க்கு வலப்புறத்தில் மரு அல்லது வடு உண்டு. ராகு, சந்திரன், சனி, வெள்ளி இவர்கட்கு இடப்புறத்தில் மரு அல்லது வடு உண்டு என்று சொல்லுக என்றவாறு.

கருத்து : கோ ள்களுக்குரிய மரு, வடு அடையாள பக்க இடம் கூறியது.

அ-உரை : பண்டிதன்-வித்யாகாரகன் புதன்; சேய்-செவ்வாய்; பருதி-சூரியன்; குறி-மரு அல்லது வடுவாக உடலின் பகுதியில் இருக்கும் அடையாளம்.

உரை விளக்கம் : சூரியன், அங்காரகன், புதன், குரு இவை நான்கிற்கும் உடலின் வலப்பக்கம் மரு அல்லது வடு இருக்கும். சந்திரன், சுக்கிரன், சனி, இராகு இவை நான்கிற்கும் உடலின் இடப்பக்கம் மரு அல்லது வடு இருக்கும்.

இக்குறிப்புடன் ஆரூடம் கவிக்க வேண்டும் என்பதறிக.

கோள்களின் அங்கம்

புகர்முகஞ் சேய்முதுகு பொன்றோள்மால் கைக்கீழ்
மதியுச்சி யாகுமிகு நண்ணிற் றொகைசால்
மருங்கிற் கதிர்குறங்கு மந்தன்கீழ்க் கால்பாம்
பொருங்கே மருவடு வென்றார். 67

எ-து : இராசிகளில் கோள்களின் மருவடு கூறிற்று.

இ-ள் : வெள்ளிக்கு-முகத்திலும், செவ்வாய்க்கு-முதுகிலும், வியாழத்துக்கு-தோளிலும், புதனுக்கு-கைக் கீழும், சந்திரனுக்கு-தலையிலும், சூரியனுக்கு-மருங்கிலும், சனிக்கு-குறங்கிலும், ராகுவுக்கு-கணைக்காலிலும் இவ்வாறு மருவந்த வடு உண்டென்று சொல்லுக என்றவாறு.

கருத்து : கோளுக்குரிய மரு, வடு இடம்பெறும் அங்கம் கூறிற்றாம்.

அ-உரை : கைக்கீழ்-அக்கிள்கீழ்; உச்சி- தலை உச்சி, குறங்கு-தொடை; கீழ்க்கால்-கணுக்கால்; ஒருங்கே-ஒன்றாகவே (ராகு, கேது).

உரை விளக்கம் : சந்திரனுக்குத் தலை, சுக்கிரனுக்கு முகம், செவ்வாய்க்குக் கை, புதனுக்குக் கைக்கீழ் (அக்கிள்) சூரியனுக்கு இடை, சனிக்குத் தொடை, ராகுவுக்குக் கால் (கணுக்கால், பின்கால்) இவ்வாறு கோள்கட்கு அங்க மருவடு குறிக்கப்பெறும்.

இராசிகளின் இயக்கம்

ஏறரிதேள் கும்பமிவை நான்குமே நிற்பனவாம்
கூறலவன் கோல்மகரங் கொச்சையிவை - தேறின்
இயங்குவன வாகுமியாழ் கன்னிதனு வின்மீ
னிருப்பன வாயுரைப்ப லிங்கு. ***68***

எ-து : இராசிகளில் இயங்குநிலை கூறிற்று.

இ-ள் : ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் இவை நான்கும் நிற்பனவாம். கடகம், துலாம், மகரம், மேடம் இவை நான்கும் சுழல்வனவாம், மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இவை நான்கும் நிற்பனவோடு சுழல்வனவுமாகும் என்று இங்கு கூறப்படும்.

இடபம் விருச்சிகம் சிங்கம் கும்பம் இவை ஸ்திர ராசியாதலின் நிற்பனவாம். இவை உதயமாக வினவின் கேட்ட பொருளொன்று இழந்தவன் இல்லை. கெடுதியகலப் போனதுமில்லை, சாவில்லை, கேடில்லை, பிணி தீருமென்க. கொடுத்த பொருள் வருமென்க.

கடகம், துலாம், மகரம், மேஷம் இவை நான்கும் சஞ்சாரமாம். இவை உதயமாகக் கெடுதி காணாதென்க. பிணி தீராதென்க. படை வருமென்க, போனார் வருவாரன்க, வித்தை மிகவுண்டென்க.

மீனம், மிதுனம், தனுசு, கன்னி இவை நான்கும் உதயமாகில் உபைய சஞ்சாரமாதலின் கெடுதிகாணும். இவற்றில் குரு நிற்கில் பிணி தீரும். பகை நட்பாகும். வித்தை கொஞ்சம் உண்டு. யாத்திரை இல்லை, போனார் வாராரென்க. விறணமாறுமென்க என்றவாறு.

குறிப்பு :- நான்கு நான்காகக் கூறப்பட்ட இராசிகளில் உதய ராசி ஆரூட சக்கரக் கணிப்பில் ஒன்றாக அமைந்து காணப்படுதலின் அந்த இராசியின் குணம், நிறம் வலிமை ஆகியவற்றுடன் சாரநிலையில் அங்கிஷமான கோள்களின் கூட்டினால் வரும் நன்மை-தீமைகளை நன்கு சிந்தித்துக் கவித்துக் கூறுக என்ரவாறு.

உபய ராசிகள் உதயமாயின் திடமில்லாத பலாபலன்கள் இடம்பெறினும் கோள்களின் சார இருப்பறிந்து பலன் காணலாகும்.

கோள்களின் விலங்குக் கொம்புநிலை

மாலருக்கன் கோடு வளையு மதிமொட்டை
மேலெரிக்குக் கோடு மிகக்குறிய - மேலை
முனிபுகர்க்கு கோடு நெடிய முறியுஞ்
சனியரவின் கோடறுந் தான். 69

எ-து : கோள்களுக்குரிய கொம்புகள் நிலை கூறிற்று.

இ-ள் : விலங்கு சாதியாய் வந்தவிடத்து புதனுக்கும் ஆதித்தனுக்கும் கொம்பு வளைந்திருக்கும். சந்திரனுக்கு மட்டைக்கொம்பு. செவ்வாய்க்குக் கொம்பு குறியது. வியாழம், வெள்ளி இவற்றின் கொம்பு நெடியது. சனி, ராகு இவற்றின் கொம்பு முறிந்திருக்கும் என்றவாறு.

கருத்து : கோள்களின் கொம்பறிந்து விலங்கு நிலை கூறுக என்பதாகும்.

அ-உரை : மேலெரி-செவ்வாய்; மிகக்குரிய-மிகவும் சிறியதாக இருக்கும்; முனி-குரு; நெடிய-நீண்டிருக்கும்; முறியும்-முறிந்திருக்கும்; அறும்-அறுந்திருக்கும்.

குறிப்பு :- (1) வளைந்த கொம்பு, (2) தட்டை அல்லது கட்டைக் கொம்பு, (3) குறுகிய கொம்பு, (4) நீண்ட கொம்பு, (5) முறிந்த கொம்பு, (6) அறுபட்டைக்கொம்பு என்ற வகையில் உதய ராசிக் கோள்களின் கொம்பு நிலையினை அறிந்து, ஆரூடம் கவித்துக் காண்க.

இராசிகளில் - சேர்விடம்

ஆடுவில் காடரிவையாழ் ஊரரிக்கு மாமலையாம்
நீடுதுலை மீன்மகரம் நீளாறு - தேடலவன்
வாய்க்கா லெருது வயலாகுந் தேள்கிணறு
நீர்சால் கெடுதி நிலம். *70*

எ-து : இராசிகளில் சேர்ந்த இடவகை கூறிற்று.

இ-ள் : மேஷம் - காடு, தனுசு - தோட்டக்காடு, மிதுனமும் கன்னியும் - ஊர், சிங்கத்திற்கு - மலை, துலாத்திற்கு - ஆற்றங்கரை, கடகத்திற்கு - வாய்க்கால் கரை, ரிஷபத்திற்கு - விளைவு வயல், விருச்சிகத்திற்கு - கிணறு, கும்பத்திற்கு - நீர்நிலை இவ்வகையால் கெடுதிசேர் நிலம் அறிக என்றவாறு.

கருத்து : இராசிகளில் சேர்விடம் விரைய நட்டபாபம் மென்பது குறித்ததாம்.

உரை விளக்கம் : மேஷம், தனுசு - காடு; ரிஷபம் - வயல்; மிதுனம், கன்னி - ஊர்; கடகம் - வாய்க்கால்; சிம்மம்-மலை; துலாம், மகரம், மீனம் - ஆறு, கரை; விருச்சிகம்-கிணறு; கும்பத்திற்கு - நீர்நிலை, குளம், ஏரி என்று இவ்வகையில் இராசி உதய கவிப்பிற்கு நட்டம் சந்தேகம் வகையில் கெடுதியறிந்து உரைக்க.

கோள்களில் - ஆருட இடம்

காடு செயங்காரி சேய்கதிர் தன்னொடு
நீரோ டாமதிய சுங்கனாம் - நாடுங்கால்
ஊரகத்த வொண்பொன் மாலென் றுரைக்க
நேருங்கே டாகும் நிலம். 71

எ-து : இராசிகளின் இடம்கண்ட பலன் கூறிற்று.

இ-ள் : செவ்வாயும், சனியும், ஆதித்தனும் வலிபெற்று நின்றால், கேட்டன காட்டிடத்தனவென்றும், சந்திரனும், சுக்கிரனும் நீரிடத்தனவென்றும், வியாழமும், புதனும் ஊரகத்தனவென்றும், கேடுசேரும் நிலமறிந்து சொல்லுக என்றவாறு.

கருத்து : இராசிகளில் உதயமறிந்து, நிலமறிந்து கேடு கூறியதாம்.

அ-உரை : செயங்காரி- முழுமையாகக் கேடு செய்பவன்; சுங்கன்- சுக்கிரன்; ஊரகத்த - ஊரின் அகத்திலுள்ளது; வொண்பொன் - சிறந்த குரு.

குறிப்பு :- நாடுங்கால் என்பதனால், குரு-சுக்கிரன் ஆகியோர்க்கு ஊரைச் சார்ந்த ஆற்றங்கரை, குளம், ஏரி, சுனை, கடல் என்று கொண்டறிக.

இதுவுமது

குடந்தண்டு கோல்மடந்தை கொண்டுோர் குறுகும்
கடுந்தகர்தேள் விற்சியங் காடாம் - நடந்தியங்கு
நள்ளிகலை மீனேறு நன்னீ ரிடமாமென்
றுள்ளியவர்க் கெல்லாம் உரை. 72

எ-து : இராசிகளில் இடத்தான் வரும் நிலவகை கூறிற்று.

இ-ள் : கும்பம், மிதுனம், துலாம், கன்னி - கேடுற்று ஊர் சேருமென்றும், மேடம், விருச்சிகம், தனுசு, சிங்கம் - கெடுதி காடு சேருமென்றும், கடகம், இடபம், மகரம் - கெடுதி நாடு சேருமென்றும், மீனம் - கெடுதி நீர் சேருமென்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : ஆருடக் கவிப்புக்கு இராசிகளில் இடமறிந்து உணர்த்திற்றாம்.

அ-உரை : தண்டு-மிதுனம், கொண்டு-கெடுதி கொண்டு; தகர்-மேஷம்; சீயம்-சிங்கம்; நன்னீர் - நல்ல நீர்; ஆறு-குளம்; உள்ளிய கருதிவந்த.

குறிப்பு:- ஆரூடத்திற்குக் கருதி வந்தவன் நின்ற நிலமறிந்து அதன்வழி இராசியறிந்து, இராசியில் நின்ற கோளறிந்து, கோள் நிலை சாரமறிந்து, நின்ற இடவகை நேர்ந்து கவிப்பாகும் திட்டமான குறிப்பினைக் கூறுக.

இதுவுமது

பூமகற்குப் பூமி புகர்மதிநீர் பொன்புதன்
பாம்பாழ் புகலிடத்தா தித்தன்மேல் - தாமத்
திருக்கனேத்து குண்டம் சனிதான் வருமால்
விருப்புடனே வந்த நிலம். *73*

எ-து : கோள்களின் விதிப்பிடம் கவிப்புக்காண கூறிற்று.

இ-ள் : செவ்வாய் பெலத்து நின்றால் கெடுதி. பூமியிற் கிடைக்குதென்றும், சந்திரனும், சுக்கிரனும் கெடுதி நீரில் என்றும், புதன், வியாழமானால் கெடுதி அறுவை என்றும், ராகுவானால் துவாரம் பொந்துகளில் கெடுதி என்றும், ஆதித்தனானால் தூக்கியிருக்குமென்றும், சனிக்கு ஓமகுண்டமுள்ள இடம் என்றும் அறிக என்றவாறு.

கருத்து : கோள்களில் விதிப்பிடமறிந்து சிந்தனைக்கு உரிய இடம் கூறியதாம்.

உரை விளக்கம் : சூரியன், குரு இவை இரண்டிற்கும் - தெய்வத்தலம். சந்திரன், சுக்கிரன் - நீர்த்துறை. செவ்வாய் - பூமி. புதன் - படுக்கை, சனி - ஓமகுண்டம், அடுப்பு, விளக்கு. ராகு - மரப்பொந்து, தரைவளை. இவ்வாறு நட்டமுட்டி சிந்தனைகட்கு ஆருடம் கணிக்க இடங்கண்டு திட்டமாகக் கூறும் கவிப்புச் சொல்லக் காண்க.

இரவு, பகல், சந்தி - காணல்

பகலே நிலையோராப் பாங்கி னுழல்வ
புகலுமிராப் பொழுது பூணு - மிகலி
லிருமாண்பிற் சந்திப்போம் தென்றுரைத்த வேநூலின்
வருமாண்பு கண்டோர் வழக்கு. 73

எ-து : சிந்தனைக்கு-பகல், இரவு, சந்தி கூறிற்று.

இ-ள் : யாதானுமொரு காலங் குறித்தபோது திர ராசியில் வந்து வினவில் பகல் என்றும், சர ராசியில் வந்து வினவில் இரவு என்றும், உபய ராசியில் வந்து வினவில் சந்திப்பொழுது என்றும் காண்க என்றவாறு.

கருத்து : ஆரூடம் வினவிய காலங்கண்டு இரவு, பகல், சந்தி அறியும் வகை கூறிற்றாம்.

அ-உரை : நிலையோரா-இன்ன காலம் என்று அறியாத; பாங்கு-நிலைமை; உழல்வ-மயங்கும் நிலை; இகலில்-மாறுபாடில்லாத; சந்தி-சந்திப்பொழுது; வழக்கு-சோதிட நூல் வழக்கு.

உரை விளக்கம் : திரவிராசிகட்கும் கோள்களுக்கும் பகல் காலம் என்றும், சரவிராசிகட்கும் கோள்களுக்கும் இரவு காலம் என்றும், உபய இராசிகட்கும், கோள்களுக்கும் சந்திப்பொழுது காலம் என்றும் இவ்வகையாக ஆரூடம் வந்து வினவுவான் வந்த இராசிகோள் நிலையறிந்து சோதிட நூலோர் கண்டு கூறிய வழக்காம்.

கவிப்புகுக் கால அளவை

போதல் வருதல் புரத்தல் புகல்கிழமை
யாதல்முக் காலேயற் றைக்காகும் - நீதியா
லெக்காலும் மீரெட்டி லுற்ற திரவுபக
லக்கால மவ்வார மாம். 75

எ-து : நாள் - காலக் கணிப்புவகை கூறிற்று.

இ-ள் : செல்காலம், வருங்காலம், நிகழ்காலமாகிய மூன்று காலமும் நாள்தோறும் உதையாதி முதலாக மூன்றே முக்கால் நாழிகைக்கு ஒரு காலமாகச் செல்ல நின்ற காலம் எட்டு இரவு உதயமான யாதொரு காலமிவ்வாரமாகக் கொண்டு, சென்ற காலத்தில் நின்ற கோளாம் பூதமானது நிகழ்காலத்தில் பொசிக்கின்ற கோளின் பலமும் இரவு பகலும் மற்ற காலத்தில் கிரகங்களின் குணங்களும் கொண்டு சொல்லுக என்றவாறு.

கருத்து : இரவு, பகல்களில் பொழுதுகளும் வாரங்களில் கோள்கள் பொருந்திய இரவு பகலும் கூறிற்றாம்.

உரை விளக்கம் : இரவு முப்பது நாழிகையில் சென்ற நாழிகைவரையில் மூன்றே முக்கால் நாழிகை விகிதத்தில் இரவு முதலாகவும், பகல் முப்பது நாழிகையில் சென்ற நாழிகை வரையில் மூன்றே முக்கால் நாழிகை விகிதத்தில் பகல் முதலாகவும் எண்ணிக்காண்பது குறித்த காலத்தின் இரவு பகல் அறிதலாகும். நாள் அறுபது நாழிகையில் சென்ற நாழிகை வரையிலே மூன்றே முக்கால் நாழிகை விகிதத்தில் அன்றையவாரம் முதலாக எண்ணிக் காண்பது குறித்த காலத்தின் வாரமாம்.

குறிப்பு :- இவ்விதி ஆரூடம் குறித்த காலத்திற்கேயன்றி மற்றைய காலத்திற்குப் பொருந்தாது. இதனையே பாடலில் போதல் வருதல் புரத்தல் என்று ஆசிரியர் விகற்பமுடன் குறித்துக் காட்டினார் என்றறிக.

ஆரூட சாமக்கோள்கள்

கதிர்சேய் பொன்புதன் கடும்புகர் காரி
மதிபாம் பறுதியாய் வைத்து - மதியாற்
கதிராதி காலங்கொண்ட டேழரையா லோட்ட
வதிராத வெண்கோட்கு மாம். 76

எ-து : சாமக்கோள்களுக்கமைந்த கணிப்பு கூறிற்று.

இ-ள் : உதயாதி முதல் ஏழரை நாழிகைப் பொழுதாக, முதற்சாமம் ஆதித்தனாகவும், இரண்டாம் சாமம், செவ்வாயாகவும், மூன்றாம் சாமம் வியாழமாகவும், நான்காம் சாமம் புதனாகவும், ஐந்தாம் சாமம் சுக்கிரனாகவும், ஆறாம் சாமம் சனியாகவும், ஏழாம் சாமம் சந்திரனாகவும், எட்டாம் சாமம் இராகுவாகவும் இப்படி கிரக சக்கரம் ஏழரை நாழிகை ஒரு பொழுதாகத் திரித்தறிக என்றவாறு.

கருத்து : ஆரூடத்திற்கு நாளுக்குப் பொழுதெட்டும், அதற்குரிய கிரகங்களும் கூறிற்றாம்.

அ-உரை : காலக் கணிப்பு நூல்கள்; முறையே கதிர், சேய், பொன், மால், புகர், சனி, மதி, பாம்பு என்ற முறையிலேயே கூறியுள்ளன. அவை சூரியன், செவ்வாய், குரு, புதன், சுக்கிரன், சனி, சந்திரன், ராகு எனக்கொள்க.

ஆரூட உதய காலம்

ஆய்ந்த உதயத்தைக் கண்டு பலன்கொடுப்ப
வேய்ந்தக்கோள் எண்கோளாக மக்கோள்கொண் - டாய்ந்த
பொழுதினால் கெட்டல் பிடித்தல், நினைத்தல்
வழுவாது வந்தடைதல் மாண்பு. 77

எ-து : ஆண்டாதி கால உதயக் கணிப்புக் கூறிற்று.

இ-ள் : உதயத்தை நோக்கிப் பலந்தருவதாக நின்ற கிரகங்கள் யாதொரு கிரகமானாலும், கிரகத்திற்குச் சொல்லத் தக்க பொழுதிலே நட்டாமுட்டி சிந்தனையுந் தப்பாமல் வந்துகூடும் என்றறிக என்றவாறு.

கருத்து : வந்தவன் வந்த உதயகாலம், ஆரூடம் கூறுதற்குத் தப்பாமல் வந்து பலன் கூடும் என்பதாம்.

அ-உரை : உதயத்தை-ஆரூட சக்கரத்தில் கண்ட உதய ராசியை; வேய்ந்தக்கோள்-சேர்த்து எண்ணப்பட்ட கோள்களெட்டும்; கெட்டல்-கெட்டுப் போனவை; பிடித்தல்-கண்டுபிடித்தல்; நினைத்தல்-நினைத்து வந்த காரியம், வழுவாது-பிழையாது.

குறிப்பு :- ஆய்ந்த உதயம் என்ற குறிப்பினால், கோள்களுக்குரிய வருடம், அயனம், பருவம், மாதம், பட்சம், நாள், சந்தி, முகூர்த்தம் ஆகியவை உதயமறிதலாம். இதனை.

ஆண்டரவங் காரியய னங்கதிர வன்மால்
பூண்டவிரு திங்களொரு திங்கள் பொன் - நீண்ட
புகரின் வரைபக்கம் பூமகனா ளொன்றாம்
நிகரில் மதிமுகூர்த்தம் நேர். *78*

என்பதனால் அறியலாம்.

மறைந்துறை கிரகங்களின் காலநிலை

இரவி யெழுதூமம் வாளரவு மிந்து
விரவு சனிநுட்பம் வெள்ளி - பரவியசீர்
வில்லொடு மால்பொன்சேய் வேடமிவை யைந்தின்
நல்ல கடிகையாய் நாட்டு. *79*

எ-து : கரந்துறை கோள்கள் இவையென்பது.

இ-ள் : இத்தன்மையவாகிய உச்சக் கிரகங்கள் பனிரெண்டையும், ராசி சக்கரமாய்ப் பனிரெண்டிலும் இவ்வாறாகவே நிறுத்தி உதய முதலிறுதியாக விரவி தூமம், இராகு, சந்திரன், சனி நுட்பமாகிய கிரகங்களாறும், ஐந்து

நாழிகைக்கு ஒரு கிரகமாக வலம் சுழலாக உதிக்கும் என்றும், அஸ்தமான முதல் விருச்சிகாதியாக பார்க்க அந்திரத் தனுப்புதலுள், வியாழன்-செவ்வாய் பரிவேடமாகிய கிரகங்களாறும் இடம் சுழலாக உதிக்கும் என்றும் இப்படிச் சக்கரத்தை வலமிடமாகத் தரித்து யாவனொருவன் யாதொன்று வினவின காலத்துதயமான கிரகத்துக்கு நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சமும் வரத்து பலாபலமும் ஆரூட சக்கர உதையமும், வலியும் நோக்கின் வேறுபாடும் ஆண்-பெண் இயல் தட்டை சாதி நிறமும், விலங்கு மக்கள் கதிர் நெடுமை குறுமை தூரம் வயது சுவை மருவாகியதும் சரம் திரம் உபயமொடு சேரும் நிலமும், பகலிரவும் திரிசந்தியுமாம் காலங்களும் பொழுதும் பலன் தரத்தக்க நாழிகை நாள் திங்கள் இரண்டுமாகப் பொதுக்காண்டத்தை வகையறிந்து நட்டமுட்டி சிந்தனை முதலாகியவெல்லாம் தப்பாமல் சொல்லுகவென்றவாறு.

கருத்து : மேற்கூறிய ஆரூடத்திற்குரிய இராசி கோள் வகை முறைமையினைக் கணித்தறிந்து சொல்லுக என்பதாம். கதிர்-சூரியன். தூமம்-கேது, வாளரவு-கொடிய ராகு, இந்து-சந்திரன், விரவுசனி-பரவிய சனி, மால்-புதன், பொன்- குரு, சேய்-செவ்வாய், வேடம்-பரிவேடம், கரைந்துறைத்தல் - மறைவதுபோல் இருத்தல்.

உரை விளக்கம் : சூரியன், கேது, ராகு, சந்திரன், சனி, நுட்பம், வெள்ளி, இந்திரதனு, புதன், குரு, செவ்வாய், பரிவேடம் ஆகிய ஆரூடக்கோள்கள் பனிரெண்டிலும் வகை வழிமுறையாக உதயமான ஆரூட வட்டத்தில் ரிஷபம் முதலான இராசிகள் பன்னிரண்டிலேயும் காண்பதாம்.

காலவட்டம் ஐந்து நாழிகை கொண்ட இடங்கள் பன்னிரண்டென்றறிக.

உதய காண்டம் க-க்கு வெண்பா-78

உதயகாண்டம் முற்றும்.

தாது காண்டம்

தாது மூல சீவ இராசிகள்

மறிசுறா ரெண்டுகோல் வாய்ந்தமைத் தாது
வெறியுந்தே ளேறரிசால் மூலம் - நெறியாய்,
தண்டுசிலை மீனம் தளரிடையாள் நான்கும்
உண்டென்று சீவ னுரை.

எ-து : தாது மூலம் சீவன் இராசிகள் கூறிற்று.

இ-ள் : மேடம், கடகம், துலாம், மகரம் இவை நான்கும் சர ராசியாகிய தாது. இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் இவை நான்கும் உபய ராசியாகிய சீவன் என்றவாறு சொல்லுக.

கருத்து : உதயம் அறிந்த நெறியே இராசிகளின் கரு, உடல், உயிர் ஆகியவை உணர்த்திற்றாம்.

அ-உரை : தாது-இயற்கைக் கரு, விந்து, இந்திரியம்; மறி-ஆடு, மேஷம்; சுறா-மகரம்; தளரிடையாள்-கன்னி, தேறேறரிசல்-தேள் ஏறு அரி சால் - விருச்சிகம், ரிஷபம், சிங்கம், கும்பம்.

குறிப்பு :- திரிசக்கர ஆரூடத்திற்கமைந்த இராசிகள் கோள்கள் ஆகியவற்றின் பிற இலக்கணத்தினை உதய காண்டத்துள் உரைத்தவழி அவற்றின் இயற்கையினை விந்து, உடல், உயிர் என்ற பாகுபாட்டுடன் உணர்த்துகின்றார்.

தாது மூல சீவ - கோள்கள்

ஆடரவந் திங்கட்சேய் காரியுந் தாதுவா
மோடிரவி வெள்ளியுடம் மூலமாம் - நீடிய
பொன்புலவன் சீவனாம் என்பதனைப் பொய்யாச்சீர்
நன்புலவோர் கண்ட நடை. 2

எ-து : தாது மூல சீவக்கோள்கள் இவை என்பது.

இ-ள் : இராகு, சந்திரன், செவ்வாய், சனி நான்கும் தாது. சூரியன், சுக்கிரன் இரண்டும் மூலம். வியாழன், புதன் இரண்டும் சீவன் என்றவாறு.

கருத்து : எண் கோள்களின் இயற்கை ஆரூட நோக்கிற்கு ஆதாரமானது என்பதாம்.

அ-உரை : ஆடு-மேஷம்; அரவம்-ராகு; சேய்-செவ்வாய்; ஓடிரவி-சுழலும் சூரியன், உடல் மூலம்-உடலென்பதே மூலம்; புலவன்-புதன்; பொய்யாச்சீர்-பொய்யாகாத சிறப்பமைந்த நடை-ஆரூட முறைமை.

குறிப்பு :- முற்கூறிய தாது மூல சீவ இராசிகளை அறிந்து அவற்றுடன் தாது மூல சீவக்கோள்களையும் அறிதல் ஆரூட சக்கர நோக்கிற்கு அமைந்த ஆதாரங்களில் முதலிடம் பெறுவனவாகும் என்பதே.

கோள்களில் தாதுவகைப் பாகுபாடு

அருக்கனுந் திங்களுந் தன்னிலத்துத் தாது
முருக்கும் பிறநிலத்து மூலம் - திருத்தக்க
மந்தன் படர்மூல மாயிருக்கும் தன்னிலத்தில்
புந்தியும் தாதுவாய்ப் பூட்டு. 3

எ-து : கோள்களில் தாது, மூல சீவன் வகை பெறுவன.

இ-ள் : ஆதித்தன் சிங்கத்திலும் கற்கடகத்திலும் நின்றால் தாதுவென்றும், ஒழிந்த ராசிகளில் நின்றால் மூலம் என்றும், சனி மகரம், கும்பமாகிய தன்னிலத்தில் நின்றால் படர்மூலம் என்றும், ஒழிந்த இராசிகளில் நின்றால் தாது என்றும், புதனுக்கும் இவ்வாறே அமையும் என்றும், வியாழம் (முதலிய பிற கோள்க)ளெல்லாம். எல்லா நிலத்திலும் சீவனென்றும் எல்லா நிலத்தும் மூலமென்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : தாது மூல சீவ கோள்களின் இராசியிடப் பாகுபாடு உணர்த்திற்றாம்.

உரை விளக்கம் : சூரியன், சந்திரன் இவை ஆட்சி இடங்களில் தாதுக்கோள்கள். பிற ராசிகளில் மூலக்கோள்கள் ஆகும்.

சனி-ஆட்சி இராசிகளில் மூலக்கோளும், மற்றைய இராசிகளிலே தாதுக் கோளுமாகும்.

புதன்-ஆட்சி இராசிகளிலே தாதுக்கோளும் மற்றைய இராசிகளிலே மூலக்கோளுமாகும்.

மற்றைய கோள்கள் எல்லா இராசிகளிலும் தாது மூல வேறுபாடின்றி இயங்குவனவாகும் என்றறிக.

கோள்களின் தாது உலோகம்

செம்பொன்சேய் புந்திதரா வெள்ளிபுக ராசானாம்
நம்புசீர் வெங்கலமாம் நாண்மதியம் - வெம்புங்
கதிரோனோ பித்தளையாம் காரிபாம் பாதி
முதிரா திரும்பென் றுரை. **4**

எ-து : கோள்களின் தாதுலோகம் கூறியது.

இ-ள் : உதயாரூட கவிப்பின் நட்பு ஆட்சி உச்சத்தோடு வலிபெற்று நின்றது, நோக்குதல் செய்யின், செவ்வாய் செம்பென்றும், புதன் திராவகம் என்றும், வியாழம் பொன்னென்றும், சுக்கிரன் வெள்ளி என்றும், சந்திரன் வெங்கலம் என்றும், சூரியன் பித்தளை என்றும், சனி பாம்பு இரும்பு என்றும் அறிகவென்றவாறு.

கருத்து : கிரகங்களின் வலிநோக்கில் அவ்வவற்றின் உலோக தாது அறியலாகும்.

அ-உரை : செம்பொன்-செம்பு; திரா-தரா; ஆசான்-குரு; முதிரா திரும்பு- வலிய இரும்பு.

குறிப்பு : சூரியனுக்குக் கலப்பு உலோகம் ஆதலின் பஞ்சலோகமும், சந்திரனுக்கு வெண்கலம் ஆதலின் அதன் இனம் ஈயமும், பாம்பாகும் ராகுவிற்கு இரும்பு ஆதலின் பெயர்க்குறிப்பால் நாகமு கொள்ளப்படும் என்க.

கோள்களின் கல்வி நிலை

ஆழ்வான்சேய் காரியணிசுங்க னென்றிணைத்தும்
வாழ்வா ரொருவாயின் வான்கருவி - தாழ்விலா
நாடறிவான் பொன்புந்தி நன்கிருவ ராட்சிகளி
னீடுவடி வென்றே நினை. 5

எ-து : கோள்களுக்கமைந்தக் கருவி வாய்ப்பக்கம் கூறியது.

இ-ள் : ஆயுத விகாரமாய் வந்துவிட்டது. ஆதித்தன் செவ்வாய், சனி, சுக்கிரன் இவர்கள் நட்பாட்சியால் ஒரு வாய்க்கருவியென்றும், சந்திரனும், வியாழமும் புதனும் ஆகிய இவர்கள் நட்பாட்சியால் இருவாய்க் கருவியென்றும் திரிசக்கரத்துக் கோள்களின் கலையும் நோக்கும் கொண்டறிக என்றவாறு.

கருத்து : கோள்களுக்குரிய கருவி வடிவுநிலை உணர்த்திற்றாம்.

அ-உரை : ஆழ்வான்-சூரியன்; வான் கருவி-சிறந்த ஆயுதம்; இது வாண்கருவி என்றிருப்பின் வாளாகும் கருவி என்றுரைக்கப்படும்; நாடறிவான்-மதி.

குறிப்பு :- கிரகங்கட்குரிய ஆயுதங்களின் நிலை, அவ்வவற்றின் நட்பாட்சியினால் அறியப்பெறும் என்பதும், இராசிகள் வடிவினாலும், கோள்களின் வடிவினாலும் அறியப்பெறும் என்பதும் நினை- என்ற ஞாபகத்தாலுணர்த்தியதாம்.

கோள்களின் பூமித்தாது வகை

வெங்கதிரோன் கற்களாம் மேதைக்கு மண்துகளாம்
திங்களுவர் நீலன் திகழிரும்பாம் - கங்கன்
பளிங்கொடு முத்து பவழம்சேய் பாம்பு
தெளிந்தமனோ சீலைப்பொன் பொன். 6

எ-து : கோள்களின் தாதுப்பிறப்பு வகை கூறிற்று.

இ-ள் : ஆதித்தன் மாணிக்கம் என்றும், புதன் மண் துகளாகும் என்றும், சந்திரன் உவர்மண் என்றும், சுக்கிரன் பளிங்கு என்றும், செவ்வாய் பவழம் என்றும், சனி இரும்பு என்றும், வியாழன் மனோசீலை என்றும் இவ்வாறு கிரகங்களின் விகற்பங்களறிக என்றவாறு.

கருத்து : கிரகங்களின் தாது வகையால் அவ்வவற்றின் இரத்தினம் முதலாயின வகை பொருத்திற்றாம்.

அ-உரை : கற்கள்-செங்கல், கருங்கல் முதலாயின; மேதை-அறிஞன், புதன்; உவர்-உவர்மண், நீலன்-சனி; பளிங்கு-பளிங்கு, வைரம், பொன்; பொன்-பொன்னெனும் குருவிற்குப் பொன்.

குறிப்பு :- ''சுங்கன் பளிங்குகொடு முத்து'' என்பது கொண்டு, சுக்கிரனுக்குப் படிகக்கல்லும் முத்தும் பொருந்தியதாகும். தெளிந்த மனோசீலை-தெளிவான மனோசீலைக் கற்கள் செவ்வரக்கு நிறக்கற்கள் எனினுமாம்.

கோள்களின் கற்களுயர்வு

அஞ்சனங் காரி வயிடூரி யம்புகராம்
வஞ்சமில் புந்தி மரகதமா - மெஞ்சிய
சூரியற்குச் சூரிய காந்தமாம் தூமதிக்கு
நீரியலும் காந்தம் நிலை. 7

எ-து : கோள்களின் இரத்தினவகை கூறிற்று.

இ-ள் : சனி - நீலம் என்றும், சுக்கிரன் - வைடூரியம் என்றும், புதன் - மரகதம் என்றும், சூரியன் - சூரியகாந்தம் என்றும், சந்திரன் - சந்திரகாந்தம் என்றும் கூறினர் என்றவாறு.

கருத்து : கோள்களுக்கமைந்த ஒளிநிலை இரத்தினங்கள் கூறியதாம்.

அ-உரை : அஞ்சனம்-நீலம்; புகர்-சுக்கிரன்; நீரியலும்-நீரினைப் பொருந்திய; நிலை-அமைந்த இயற்கை.

உரை விளக்கம் : சூரியகாந்தக்கல் - சூரியக்கதிர் பட்ட அளவில் தீயைப் பிறப்பிக்கும் கல். சந்திரக்காந்தக்கல் - சந்திரனின் தண்கதிர் பட்ட அளவில் நீரைப் பொழிகின்ற கல்.

சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், சனி ஆகிய கிரகங்கட்குரிய மணிகள் கூறி செவ்வாய், குரு, இராகு, கேது ஆகியவற்றிற்கு உரிய மணிகள் உய்த்துணர வைத்தாராதலின் கூறாதொழிந்தனவற்றுக்கு, மணிகளாம் இரத்தினங்களின் பாங்குடைய கற்கள் பொருந்தியதெனக் காண்பதாம்.

கேள்களின் உலோகத்தோற்றம்

இந்துவிரண்டாகும் இகல்வெள்ளி வெள்ளியாஞ்
சிந்து கதிர்சேரிற் செம்பாகு - மிந்துவொடு
புந்திதார்க் காரி யிரும்பு புதன்கதிரோன்
பைந்தொடியாய் வெண்கலமா பொன். 8

எ-து : கோள்களின் உலோகக் கூட்டுநிலை காட்டிற்று.

இ-ள் : சந்திரன் இரண்டு விகற்பம் என்றும், சுக்கிரன் சேரில் வெள்ளி என்றும், சந்திரனுடன் சூரியன் சேரில் செம்பு என்றும், சந்திரனுடன் புதன் சேரில் தரால் என்றும், சந்தினுடன் சனி சேரில் இரும்பு என்றும், சந்திரனுடன் புதன் ஆதித்தன் சேரில் வெண்கலம் என்றும் அறிக என்றவாறு.

கருத்து : கோள் உலோகக் கூட்டுநிலை உலோகம் கூறிற்றாம்.

அ-உரை : இந்துவிரண்டாகும்-சந்திரன் இரண்டுநிலையில் பொருந்தும், (சந்திரனொடு சந்திரன், சந்திரனொடு பிற); வெள்ளி-வெள்ளி உலோகம்; கதிர்-சூரியன்.

உரை விளக்கம் : மதியை இருத்தி அதனுடன் முறையே சுக்கிரன், சூரியன், புதன், சனி, புதன்+ஆதித்தன் ஆகிய கிரகங்கள் கூடி நிற்பதறிந்து உலோக வகைகளுள் ஒன்று காண்பது நட்டமுட்டி சிந்தனைக்குக் கூறும் கவிப்பாகும்.

கோள்கட்கு - அணிகலன்கள்

மக்களி ராசியும் கோளும் மதித்துடனே
ஒக்க வெழுதரும்போ துத்தமமாம் - மக்கட்
கணிகல மாய்த்தோன்று மேவியக் கோணிறத்த
வணிகலமா மென்ப தறி. 9

எ-து : ஆபரணம் விகற்பம் வந்தவிடத்து, மானுட ராசியாகிய மிதுனம், துலாம், கும்பம் இவற்றில் மானுட கிரகங்களாகிய புதன், வியாழன், சுக்கிரன் இவர்கள் கூடி உதயமாதல், வலிபெற்று நோக்குதல் ஆகியவற்றால் உதயம் பெற்ற கோள் நிறத்தனவாகும் அணிகலமே மக்கட்காபரணம் என்றறிக என்றவாறு.

கருத்து : உதயராசியில் கூடிய கோள் நிறத்த ஆபரணம் கண்டறிதல் கூறிற்றாம்.

அ-உரை : மக்களிராசி-இருகாலிராசி; மதித்து-சீர்தூக்கி; எழுதரும் போது-உதய இராசிகள் அறியும்போது; கோணிறந்த-கோள் நிறத்தனவாம், கோள்களின் நிறம்.

குரு-பொன்னிறம்; சூரியன், செவ்வாய், கேது-செம்மை நிறம்; சந்திரன், சுக்கிரன்-வெண்மை; புதன்-பச்சை; சனி, ராகு-கருமை என்பனவாம்.

குறிப்பு :- இருகால் ராசிகள் உதயத்தில் இருகால் கோள்கள் நிற்கில், கோள்களின் நிறத்திலாகும் மக்கள் அணிகலன் இன்னதென்று அறிந்து கூறுக.

காண்டம் உ-க்கு வெண்பா-88

தாது காண்டம் முற்றும்.

மூல காண்டம்

இராசி கோள்களின் தாவரவகை

முதுணர்ந்தோர் நூலின் முறைதெரிந்து மூலங்க
ளேதகவே யானு மெடுத்துரைக்கின் - ஓதிய
செவ்வாய் சிறுபயிராஞ் சீர்சால் புதன்வெள்ளி
யவ்வாய் விளைவயல் தாம்.

எ-து : கோள்களுக்குரிய பூமி மூலமாகும் தாவரங்கள் கூறிற்று.

இ-ள் : சான்றோரால் சொல்லப்பட்ட நூலினது மூல விகற்பங்கள் சொல்லுமிடத்து, மூல இராசிகள் என்று சொல்லப்பட்டவையுள், செவ்வாய் சிறுபயிர் என்றும், சுக்கிரன் விளைவயலுமாம் என்றவாறு.

கருத்து : இராசிகட்குரிய நிலம் பயிர் கூறிற்றாம்.

அ-உரை : நூல்-முன்னோர் எழுதிய சோதிட நூல் மூலங்கள்-பூமியின் இயற்கை, அதில் தோன்றும் தாவரங்கள்; சிறுபயிர்-குறுகிய காலப்பயிர் (புன்செய்); விளைவயல்-நெல் விளையும் வயல் (நன்செய்).

கோள்வழி - தாவர வகை

தூறாகு மேதை சுடரோன் பெருமரமாம்
மாறா மதிகொடியாம் வான்பொன்னேற் - சீராகத்
தீங்கரும் பாம்வெள்ளி திகழ்காரி பாம்பிரண்
டோங்குகின்ற முண்மூல மோது. 2

எ-து : கோள்களால் வான்பயிர், புன்பயிர், மரங்கள் கூறிற்று.

இ-ள் : புதன் தூறென்றும், ஆதித்தன் பெருமாமென்றும் சந்திரன் கொடி முதலாயினவென்றும், வியாழம் நெல் முதலாயினவென்றும், சுக்கிரன் கரும்பு முதலாயினவென்றும், சனி பாம்பு கீழ்நோக்கிய முள் மரம் என்றும், இவர்கள் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நயப்பின் நின்றார் பயன்படத் தக்கன ஆகியவை அறிந்து சொல்லுக என்றவாறு.

கருத்து : கோள்களுக்குரியதாமென நூலோர் வகுத்த படியே பயிர்வகை கூறிற்றாம்.

அ-உரை : மேதை-புதன்; பெருமரம்-அளவில் பருத்த மரம்; கொடி-கொடி வகைப்பயிர்கள்; வான்-வான் பயிர் (புன்செய்ப் பயிர்) முண்மூல-முள்ளுள்ள மரங்கள்; மூலம்-பூமி, செடி, கொடி, மர வகைகள்.

குறிப்பு :- செவ்வாய்க்குப் புன்செய்ப் பயிர்களும், குருவுக்குக் கரும்பு, நாணல் வகைகளும், புதனுக்கு முள்ளின்றிய குத்துச் செடிகளும், சூரியனுக்கு-வானோங்கி உயர்ந்த மரங்களும் பொருத்தியறிவதாகும்.

இதுவுமது

ஆடுதேள் புன்பயிரா மாய்ந்த கோலேறலவ
னீடு கொடியாம் நெடுவல்லி - தேடுந்
திருமடந்தை யாழ்புத ராந்திண் சிலைசீயம்
பெருமரங்க ளாமென்றே பேசு. 3

எ-து : புன்பயிர், கொடி, மரம் ஆகியவை கூறிற்று.

இ-ள் : மேடம், விருச்சிகம்-நெற் பயிரென முதற் கண்ணுண்ணுப்படும், துலாம், இடபம், மகரம், கடகம்-நெடிய கொடியாய் அமையும், பாடுபட்டுப் பயன்காணும் நெடுங்கால குத்துச்செடி வகைகள் காண் மூலமாகும். கன்னி, மிதுனம்-சிறு தூறு, புதலாகும். தனுசு, சிங்கம் பெருமரங்கள் என்றவாறு.

கருத்து : கோள்கள் கண்டவழி பயிர் வகையறியும் முறைமை கூறிற்றாம்.

அ-உரை : புன்பயிர்-மேட்டு நிலப்பயிர்; கோலேறவன்-கோல் ஏறு அலவன்-தனுசு, இடபம், கடகம்; நீடுகொடி-நீண்டு வளரும் கொடி, வல்லி-கிழங்குக்கொடி; திருமடந்தை-இங்கு குறிப்பால் கன்னி.

குறிப்பு :- பாபக் கோள்களுக்கு எட்டி பேய்ச்சுரை போன்ற வற்றையும், சுபக்கோள்களுக்கு மா, பலா, வாழை போன்றவற்றையும் முள்ளின்றியனவும் பொருந்தும்

இன்ன மரங்கள் என்றறிதல்

சிங்கம் தனுமீனம் சேர்ந்து குருமருகி
வங்கம் பெருத்தமா மாயிழையாய் ! தங்க,
வருமெனவே சொன்ன அவையறிந்து வந்தால்
தரமெனவே யிப்பெருமை சாற்று. 4

எ-து : மரங்களின் வகைநிலை அறிவித்தது.

இ-ள் : சிங்கம், தனுசு, மீனத்தில் வியாழம் நின்றால் பெரிய மரங்கள் என்று அறியவும். இவை இவ்வாறு வருமெனவே சொன்னது அவை அறிந்துகொண்டு, அதில் பயன்தரும் என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : கோள்வழி குறித்த மரங்களை, குருவின் கூட்டுறவின் வழி சிறப்பாக அறிதற்காகும்.

அ-உரை : மருகில்-சேர்ந்தால்; அங்கம்-உடல், நடுமரம்; ஆயிழையாய்-சிறந்த அணிகலன்களை அணிந்த பெண்ணே! மகடூஉ-முன்னிலை); தங்க-சேர; அவை-முன்சொன்ன மரவகை; தரும்-கருத்தினைத் தரும்.

குறிப்பு :- உதய இராசிக்கமைந்த கோடுகளொடு குரு கூடி நிற்கு, காலமாயின் அதற்கமைந்த பலன் கண்டு கூறவேண்டுமென்பது.

நச்சுமரம் முள்மரம் காணல்

மூழி மகரங்கண் முள்ளுடைய மூலமாம்
வாழு கரும்பாகும் வாணுதலே - தாழுங்
கருங்கோட்கு முள்ளொடுநஞ் சாகுமரம் நற்கோ
ளொடுங்கவது முள்ளிலதென் றோது. 5

எ-து : நச்சு மரம், முள் மரம், முள்ளில்லாத மரம் கூறிற்று.

இ-ள் : கும்பம், மகரம், முள்ளுடைய மரமாம் என்றும், மீனம் கரும்பு என்றும், ஆதித்தன், செவ்வாய், சனி, ராகு இவை நஞ்சுடைய மரங்கள் என்றும், சந்திரன், புதன், வியாழன், வெள்ளி இவை முள்ளில்லாத மரம் என்றும் கூறியவாறு.

கருத்து : முள்மரம், முள் இல்லாத மரம் இவற்றைப் பிரித்தறியும் வகை முகை கூறிற்றாம்.

அ-உரை : மூழி-முதிர்ந்தது, வலியது; மூலம்-மரம்; வாணுதல்-சிறந்தநெற்றியை உடைய பெண்; மகடூஉ-முன்னிலை.

குறிப்பு :- சூரியன் முதலிய பாபக்கோள்கள் நான்கிற்கும் முள் மரங்களும், நஞ்சுள்ள மரங்களும் கொள்ளப்படும். சந்திரன் முதலிய சுபக்கோள்கள் நான்கிற்கும் முள் இல்லாத மரங்களும், பயனளிக்கும் மரங்களும் கொள்ளப்படும் என்றறிக.

முட்களின் வகையறிதல்

காரியா வங்கவிந்த முட்காய் கதிரோனும்
தேரில் விலங்குமுள் சேய்முதுமுள் - தேரிற்
சொரிசால் சுறாமறிதேள் துன்னருபொன் சீயம்
தெரிவார்க்கு முண்மரமா செப்பு. 6

எ-து : மரங்களின் முள் வடிவுவகை கூறிற்று.

இ-ள் : சனி, ராகு-கவிழ்ந்த முள், ஆதித்தன்-விலங்கு முள், செவ்வாய்-முதுகின் முள், சொரிவான மகரம், மேடம், விருச்சிகம், சிங்கம் இவை நேர்முள் மரம் என்று சொல்லுக என்றவாறு.

கருத்து : முள் வகையால் இன்ன மூலம் என்றறிதற் காகும்.

அ-உரை : கவிந்தமுள்-கீழ்நோக்கி வளைந்த முள்; தேரில்-ஆய்ந்தது பார்க்கின்; விலங்குமுள்-குறுக்கான முள்; துன்னரும்-சிந்தனைக்கரிய, முண்மரம்-முள்மரம்; மூலம்-மரம்.

குறிப்பு :- பாடல் மூன்றாமடியில், சொரிசால் என்பது அமுதம் பொழிகின்ற கும்ப ராசி என்பதாம். கும்ப ராசி உதயமாகில் அற்பமான சுனைமுள் மரம் என்று அருகிக் காணவே உரையில் குறித்திலர் என்க. பொன் எனும் உரு குறித்தது மூலங்களுள் பயனும் சிறப்பும் பொருந்தியது அறிதற்காகும்.

பயன் மரவகையறிதல்

புகைதூறாம் புந்திபுகர் மாமரங்க ளாகும்
வகையால் மதியெழுந்தால் வாழை - தகையார்
மலைமரங்கள் வெய்யோன் மதித்துணரும் செம்பொன்
குலைநெருங்கு தெங்கென் றியம்பு. 7

எ-து : கோள்கொண்டு பயன் மரங்கள் சுட்டிற்று.

இ-ள் : புதன்-சேர்ந்து கிளைக்கும் தூறுள்ள மரம், வெள்ளி-மாமரம், சந்திரன்-வாழை, (மதிப்புடைய) மலைமரங்கள் சூரியனுக்காகும், வியாழன்-தென்னை மரம் என்றறிக. இக்கோள்கள் வைரி ராசிகளில் நின்றாலும் அவ்வுருவா மென்றறிக என்றவாறு.

கருத்து : இன்னவகை மரம் என்று கண்டறிதற்காகும். கோள் நிலை கூறியதாகும்.

அ-உரை : புகை-வெளிறியதாய் மண்டிச்சூழும்; தூறு-அடிமூலத்தூறு; மலைமரம்-மதிப்பமைந்தத் தேக்கு, பலா, சந்தனம் முதலியன; தெங்கு-தென்னை.

குறிப்பு :- வகையால்-என்றதினால் சந்திரனுக்கு வண்ணப் பூக்களுள்ள மரங்களும், புதனுக்கு-கவர்ச்சித் தோற்றமுள்ள செடி, கொடி, மரங்களும், குருவுக்கு-மணமுள்ள செண்பகம், கொன்றை மரங்களும், சுக்கிரனுக்கு மணமுள்ள தழையுடைய வில்வம், விலா மரங்களும், சனிக்கு-இஞ்சி, மஞ்சள் ஆகியவைகளும் கொள்ளலாகும்.

பருவகாலப் பயிர்களறிதல்

சினங்கூறு வாளாவுந் திண்சனியுங் காணிற்
பனங்காடா மென்று பகர்க - மனங்கூறும்
உட்காழ் புறங்காழ்ப்பென் றேர்ந்ததிர ராசிகட்கும்
திட்காத கோட்குளவா செப்பு. 8

எ-து : மரங்களின் திண்மை மெண்மை வலிமை கூறியது.

இ-ள் : கணித்துக்கண்ட உதயத்தில், பாம்பும், சனியும் வலிபெற்று நின்றால் மேற்சொன்ன மூலத்தில் பனைக்காடாம் என்று கூறுக. மனத்தால் ஆராய்ந்து கூறும், மற்றைய ராசிகளில் கோள்கள் வந்தால் அவரவர் ஆட்சி, உச்சங்களைக் கொண்டு மரங்களின் உள்வலிமை, வெளிவலிமை பார்த்து உள்காழ்மரம் என்றும், புறக்காழ் மரம் என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : இன்னவகை மரம் இன்ன தன்மையுடையது என்பது காண்பதற்குக் கோள்நிலை கூறியதாம்.

அ-உரை : வாளவரம்-கொடிய பாம்பு; திண்சனி-வலிய சனி; உட்காழ்-உள்வயிரம்; புறக்காழ்-வெளிவயிரம்; திரராசி-கோள் வலிமை பெற்ற ராசி; திட்காத-வலிமைபெறாத; உளவா-பொருந்துமென்று; செப்பு-சொல்.

இதுவமது

சந்திரன் வெய்யோன் மரங்காழ்ப் பில்லையாம்
மந்திரியும் வெள்ளியு முட்காழ்ப்பாம் - தந்த
நிறத்தார்க் குரியசேய் நீணாகம் புந்தி
புறக்காழ்ப்பா மாட்சிகளும் பூட்டு. **9**

எ-து : மரங்களின் உள்வலிமை வெளிவலிமை கூறியது.

இ-ள் : சந்திரனும், ஆதித்தனும் காழ்ப்பில்லாத மரம். வியாழமும், வெள்ளியும் உள்காழ்ப்புள்ள மரம். கரிய சனி, ராகு, செவ்வாய், புதன் புறக்காழ்ப்புடைய மரம். கோள்கள் தத்தமது ஆட்சிகளில் உள்காழ்ப்புடையது என்றும், புறக்காழ்ப்புடையது என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : மரங்களுக்குரிய உள்காழ், புறக்காழ், முழுக்காழ் ஆகிய வயிரமாகும் மரவலிமை வகை அறிவித்ததாம்.

அ-உரை : வெய்யோன்-சூரியன்; மரங்காழ்-மரங்களுக்குரிய திண்மை, வயிரம்; இல்லை-இருக்காது; மந்திரி-குரு, உட்காழ்-உள்வயிரம்; நீணாகம்-நீண்டிருக்கும் ராகு.

குறிப்பு :- "ஆட்சிகளும் பூட்டு" என்றதினால் மற்றைய கோள்கள் இராசிகளில் வலிமை பெற்றபோது, உதயம் அதுவாக அமையின் இவ்வாறே கொள்க.

பூ, காய், பழம் வகையறிதல்

தோல்கிழங்கு பூவிலை நற்றூய் பழங்காய்கள்
வாலிய வேர்கொடிதன் வாகறிந்து - நூலின்
இலங்கு கதிராதி யாடவெண் கோளுமாளு
நிலங்களு மிவ்வகையில் நேர். *10*

எ-து : தாவர வகைக்கமைந்த பயன் கூறியது.

இ-ள் : உதய ராசியில் மூலமாய் வந்தவிடத்து, ஆதித்தன்-தோல், சந்திரன்-கிழங்கு, செவ்வாய்-பூ, புதன்-இலை, வியாழம்-பழம், வெள்ளி-காய், சனி-வேர், பாம்பு-கொடி இவ்வாறு சொல்லப்படும். கொடிகளுடைய ராசிகளுக்கும் அரவ ராசிகளுக்கும் அவரவர்க்கும் சொன்ன தோல், கிழங்கு, பூ, இலை, பழம், காய், வேர், கொடி என்று சொல்லுக என்றவாறு.

கருத்து : இராசி கோள் நிலை உதயத்தால் கோளின் இடவலிமைகண்டு தாவரப் பயன் காண்பதாம்.

அ-உரை : தோல்-தோலுடைய பழம், வாழை, பலா முதலியன. இலை-வாழை, முருங்கை முதலிய இலையுடையன. வாலிய நீண்ட; வாகு-வடிவ நிலை; கதிராதி-சூரியன் முதலாக எண்ணப்படும் கோள்கள்; ஆளும்-ஆட்சிபெறும்; நிலம்-இராசி; இவ்வகையில்-இம்முறையாகவே; நேர்-கணித்துப் பொருத்திக் காண்க.

இதுவுமது

ஆடுதேள்பூ வாகு மிடபங்கோல்காய் மங்கையாழ்
நீடிலையாம் மீன்வில்லு நீள்பழமாம் - கூடுங்
குடம்மகரம் வேர்சீயம் தோலாம் குளிரு
படுகிழங்கா மென்று பகர். 11

எ-து : மேற்கூறியதன் மேல் காணும் வகை கூறிற்று.

இ-ள் : மேடம், விருச்சிகம் - பூ; இடபம், துலாம் - காய்; கன்னி, மிதுனம் - இலை; மீனம், தனுசி-பழம்; கும்பம், மகரம் - வேர். சிங்கம் - தோல்; கற்கடம் - பெருமை பொருந்திய கிழங்கு. இவை ராசிகளின் மூலக்கோள் நின்றால் உருவாகும் என்று சொல்லுக.

கருத்து : இராசிகளின் மூலக்கோள் நிற்கின் காணும் தாவரப் பகுதிகள் கூறிற்றாம்.

அ-உரை : மங்கை-கன்னி; நீள்பழகாம்-நீட்சியான பழமாகும்; குளிருபடுகிழங்கு-குளிர்ச்சியமை கிழங்கு; குளிறு-நண்டு.

உரை விளக்கம் : மேடம், விருச்சிகம் - பூவாகும். இடபம், துலாம் - காயாகும். கன்னி, மிதுனம் - நீண்ட இலையாகும். மீனம்-தனுசு நீண்ட பழமாகும். கும்பம், மகரம் - வேராகும். சிங்கம் - தோலாகும். கடகம் - கிழங்காகும் என்று கண்டு கூறு.

இன்ன பயிர் என்பது

சேய்க்குத் திணைவரகாந் திண்மதிக்கு வெண்ணெல்லாம்
வாய்ந்தபுகர் பொன்புந்தி வான்சனிக்கு - சாய்ந்தமைந்த
தன்னிறத்த வள்முதிரை தள்ளார் கதிர்க்கு
மன்னிறத்த தானியமே யாம். 12

எ-து : கோள்களாலறியும் பயிர்வகை இன்னது என்பது.

இ-ள் : ஆதாரமன்னிய விகற்பம் வந்தவிடத்து, செவ்வாய்க்குத் தினையாம் என்றும், சந்திரனுக்கு வெண்ணெல் என்றும், சுக்கிரன், வியாழன், புதன், சனி, ஆதித்தன் ஆகியோர்க்கு அவரவரின் நிறத்தை ஒத்த தானியமாகும் என்று அறிகவென்றவாறு.

கருத்து : கோள்களின் நிறமொத்தது பயிர்ப் பலன் என்பது கூறியதாம்.

அ-உரை : வான்சனி-உயர்ந்த சனி; வள்-வளமான; முதிரை-அவரை, துவரை முதலியன. மன்னிறத்த-அவ்வவற்றின் நிறத்தை ஒத்தவை.

உரை விளக்கம் : இப்பாடலில் ஆசிரியர் அர்த்தசந்திர ஞாயமாகக் கோள்களும், அவற்றிற்குரிய பயிர்களும் குறித்ததினால், சந்திரனுக்கு வெண்ணெல் என்று குறித்த வழியே வெண் எள் காணுமென்றும், சுக்கிரன் முதலான கோள் ஐந்திற்கும் கூறிய முதிரையின் வகையான அவரை, துவரை,

கொள் என்பன காணும் என்றும், செவ்வாய்க்குத் திணை என்ற நெறியே வரகு, கேழ்வரகு, சாமை, சோளம், கம்பு ஆகிய தானியவகையறியக் காணும் என்றும் கொள்ளற்காகும்.

இதுவுமது

சிறுபயறு புந்தி செழும்புகர்க்குத் தோரை
மறுகடலை சேய்மதியம் வெள்ளெள் - குறையில்
அவரை யழல்கதி ரோர்க்கு துவரை
தவிர்சனிபாம் பெள்ளுளுந்து சாற்று. 13

எ-து : இன்னபயிர் என்று கூறியது.

இ-ள் : புதன்-சிறுபயறு. வெள்ளி-வெள்ளைத் துவரை, கோதுமை என்றும் சொல்லுவது. செவ்வாய் - கொள்ளு, கடலை. சந்திரன் - வெள்ளெள். ஆதித்தன் - அவரை. வியாழம் - செந்துவரை. சனி - கருப்பெள். பாம்பு - உளுந்து என்றறிக. நின்றன வினவில், மூல இராசிகளில் நிற்கும் கோள்கள் வந்தால் இவற்றிற்குச் சொன்னவாறே முதிரைவகை கண்டு கூறுக என்றவாறு.

கருத்து : மேற்பாடலின் தொடர்விளக்கம் கூறியதாகும்.

அ-உரை : சிறுபயிறு-பசும்பயிறு; போரை-துவரை; மறுகடலை-தோலுள்ள கடலை; தவிர்-கூறாது விட்ட குரு; சாற்று-எடுத்துக்கூறுக.

குறிப்பு :- கோளுக்குரிய பயிர் இன்னது என்று சுட்டிய தெறியே அவ்வவற்றின் இனத்தினையும் மூல இராசிகளில் நின்ற கோள்கள் வழிகண்டுரைக்க.

நிலவகை நீர் அறிதல்

சேய்கதிர் மேடாகும் தீநாகம் புற்றாகும்
ஆய்ந்த மதிபுகரேல் தூய்நீராம் - வாய்ந்தநன்
மந்திரிமால் கல்லாம் சனியேற் களரமைந்து
வந்தநிலம் தானறிந்த வாறு 14

எ-து : கோள்களால் நிலவகைக் கூறியது.

இ-ள் : ஒரு நிலத்தைக் குறித்து நீருண்டோவென்னில், செவ்வாய், ஆதித்தன் அவ்விடத்தில் வலிபெறின் மேட்டு நிலமாம். கேதுவுக்குப் புற்றாகும். சந்திரன், வெள்ளி வலிபெறின் தூயநீராம். குரு, புதன் வலிபெறின் கற்பாறையாம். சனியெனில் களர் நிலமாம் என்று உதயத்தால் கண்டறிந்த நிலம், நீர் அறிந்து கொண்டதென்றவாறு.

கருத்து : நிலத்தகத்து நிலையும் வகையும் நீர் நிலையும் காணும் முறைக் கூறியதாம்.

அ-உரை : சேய்-செவ்வாய்; மேடு-உயர்ந்த பூமி, தீநாகம்-கேது; புற்று-கரையான் புற்று; தூய்-தூய வெண்மையான; மந்திரி-குரு; மால்-புதன்; வத்தநிலம்-ஆரூட உதயத்திற்கமைந்த இராசி, கோள் வழி கண்டறிந்த நிலம்.

குறிப்பு :- மேடு, புற்று, கற்பாறை, களர் அடிப்பூமியிலும் இவற்றைச் சார்ந்த பகுதியிலும் தூய நீர்ஊற்று உண்டென்று அறிதல் நுட்பமாகும்.

மூலங்கள் - பொது

வண்ணஞ் சுவைகுலங்கள் வாய்ந்த நிலங்கருவி
எண்ணரிய மூல மியங்குவன - நண்ணும்
இலைகாய் பழந்தோல் வேர்பூமூலம் மற்றும்
மலையா தவையவையே ஆய்ந்து. 15

எ-து : மூலங்களின் பொதுநிலை புகன்றது.

இ-ள் : கிரகங்களின் சுவை, குலம், நிலம், கருவி, தாது காண்டத்துள் கூறிய வர்க்கங்கள், மரங்கள், நிலங்கள், மரங்களின் இலை முதலாய தோற்றங்கள் இவற்றுடன் பூமி இயற்கை, நீர்நிலை ஆகியவற்றையும், அவ்வவற்றை உதய ராசி கோள்களின் நிலைகளை ஆராய்ந்து மலைப்பில்லாமல் காண்க என்றவாறு.

கருத்து : தாது காண்டத்துக் கண்டவகை முறையோடு மூல காண்டத்து முறைகளையும் தெளியக் காண்க என்பதாம்.

அ-உரை : வண்ணம்-நிறம் (கோள்களின் நிறம்); சுவை-கோள்களுக்கு அமைந்த அறுசுவை, சாதி வகை; நிலம்-கண்ட நிலம்; கருவி-செய்கருவி (அணி); மலையா-மலைப்பில்லாமல் கூறுக.

ஆக காண்டம் 3-க்கு வெண்பா-103

மூல காண்டம் முற்றும்.

சீவ காண்டம்

பறவை - விதி

சந்திரன் தாயாகத் தாழ்கதிரோன் தந்தையாய்
வந்துதித்த பொன்வெள்ளி சேய்மாது - மந்தனும்
மண் நீர்தீ கால்வான்மெய் வாய்கண்மூக் கென்பதுடன்
எண்ணும் செவியென்றும் காண்.

எ-து : கோள்களுக்குரிய முறைப்பெயர். பொறிபுலன் கூறியது.

இ-ள் : சந்திரன் - தாயாகவும், சூரியன் - தந்தையாகவும், நிலம்-நீர்-தீ-காற்று-ஆகாசம் ஆகிய பஞ்சபூதத்தால் விளையத் தக்க சீவவிகற்பம் அறியுமிடத்து; நிலம்-வியாழமாகவும், நீர்-சுக்கிரனாகவும், தீ-செவ்வாயாகவும், காற்று-புதனாகவும், ஆகாயம்-சனியாகவும்; சுவை-ஒளி-ஊறு-ஓசை-நாற்றமாகிய ஐம்புலவறிவும்; மெய்-வாய்-கண்-மூக்கு-செவி ஆகிய ஐம்பொறியறிவும் ஐவகையாலும் அறியப்படுவன என்றவாறு.

இவ்வாறு வருகின்ற இவை சீவராசியின் உதயாரூடக் கவிப்பு. இவை மூன்றினாலும், கோள்களைந்தின் வலியினாலும் பார்த்துப் பலாபலன் அறிந்து சொல்லுக என்றவாறு.

கருத்து : கோள்களுக்குரிய முறைப்பெயர்களுடன், பொறிபுலன்களின் சேர்க்கையும் கூறியதாம்.

கோள்களின் - உயிரறிவு

சங்கலகு இப்பிமுதற் றன்புத னீறறிவா
மிங்கெறும்பு பேன்முசு டீச்சிதலுந் - தங்கிய
மூன்றறிவாம் செவ்வாய் முரல்வண்டு தும்பிமுதல்
நான்கறிவு சுங்கனென நாட்டு. 2

எ-து : கோள்களின் அறிவுநிலை வகைக் கூறியது.

இ-ள் : சங்கு, அலகு, இப்பி இவை மெய், சுவை ஆகிய ஈரறிவுடையனவாய் புதனாகும் என்றும்; எறும்பு, பேன், முசுடு, ஈ, கறையான் இவை மெய், சுவை, நாற்றம் ஆகிய மூவறிவுடையனவாய் செவ்வாயாகும் என்றும்; வண்டு, தும்பி இவை நான்கறிவுடையனவாய் சுக்கிரன் ஆகுமென்றும் அறிக என்றவாறு.

கருத்து : கோள்களின் சீவன் வகையறிவு நிலைக் காட்டியதாம்.

அ-உரை : அலகு-அட்டை; முகடு-செவ்வெறும்பு, சிதல்-கறையான்; முரல் வண்டு-ஒலி செய்யும் வண்டு; தும்பி-தட்டாரப்பூச்சி; சுங்கன்-சுக்கிரன்.

குறிப்பு :- கோள்களில் ஓரறிவு உயிர் கூறாதது. ஏனெனில், ஆரூடக் கோள்களில் இரண்டறிவு முதல் ஐந்தறிவுவரை சீவன் பொருந்திய கோள்களே ஏற்புடையன என்பதாம். இதனால் சனி மெய்யறிவாகிய ஓரறிவு உடையதாய் மரம், கொடி, மூலம் இவைகட்குப் பொருந்தியதாய் முன் காண்டத்துள் காட்டப்பெற்றதென்க.

ஐந்தறிவு -சீவன்

தேவரே மக்கள் திருத்தகநாற் காலாம்
ஏவியசீவன் மீன்புள் ளெவையு - மேவிய
ஐயறி வான்குருவின் அங்கிச மாகவே
மெய்யறிவு கண்டுரைக்க மேல். 3

எ-து : வியாழத்தின் சீவவர்க்கம் கூறியது.

இ-ள் : தேவர்களும், மானிடரும், நாற்கால் விலங்கு சாதிகளும், பாம்பு, மிருகம், பட்சிகளுமாகிய சீவன்கள் எல்லாம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னத்தக்க ஐயறிவு உடையதாகிய வியாழத்தின் வர்க்கமாம் என்றவாறு.

கருத்து : வியாழன் ஐயறிவுயிர் பெற்ற சீவனாகும் என்பதாம். அங்கிசம்-இணைவு. மெய்யறிவு - மெய் முதலான ஐந்தறிவு.

உரை விளக்கம் : குரு-மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தறிவு உடைத்தலால் குருவுக்குப் புலன்களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தும் பொருந்திய சீவன்களாய்ப் பொருந்தியதாகும் என்பது குறிக்கப்பட்டது.

ஐயறிவு - தெளிவு

ஆங்காரி யோரறிவு மாலிரண்டு சேய்மூன்றாம்
ஓங்குபுகர் நான்குபொன் னைந்தாகும் - பாங்காம்
செவிமூக்கு கண்வாய் சிறந்த வுறுப்பைந்தும்
கவிகைக்குக் காண்டல் கடன். *4*

எ-து : கோள்களின் அறிவளவு குறித்தது.

இ-ள் : மரங்களது ஓரறிவு ஆகும் சனிக்கு என்றும், புதனுக்கு ஈரறிவு என்றும், செவ்வாய்க்கு மூன்றறிவு என்றும், வெள்ளிக்கு நான்கறிவு என்றும், வியாழத்துக்கு ஐந்தறிவு என்றும், செவி-மூக்கு-கண்-வாய்-மெய்யாகிய ஐந்தினாலும் நன்றாகக் காணல் கடன்.

கருத்து : சனி, புதன், செவ்வாய், வெள்ளி, குரு இவைகளின் அறிவளவு கூறியதாம்.

அ-உரை : ஆம்-மரங்களைப்போன்று ஆகும் அறிவு; மால்-புதன்; ஓங்குபுகர்-வித்தையில் சிறந்த வெள்ளி; கவிகை-ஆரூட பலன்; காண்டல்-காணல்.

உரை விளக்கம் : சனிக்கு மெய் (உடல்), அறிவு-புதனுக்கு மெய்யுடன் வாய்-அறிவு. செவ்வாய்க்கு மெய்-வாய்-கண்-அறிவு. சுக்கிரனுக்கு மெய்-வாய்-கண்- மூக்கு-செவி ஆகிய நான்கறிவு. குருவுக்கு மெய்-வாய் (சுவை)-கண்-மூக்கு-செவி ஆகிய ஐந்தறிவு என்ற முறையில் காணல்.

உயிர்களின் அறிவு

மானத்து வன்மீகம் வண்டொடு மக்களா
மீனமிலா வீறறி வாதியா - வெண்முறையே
மெய்யொடு நாலுக்குக் கண்செவி யென்றிவற்றை
ஐயறி வென்றொன் றியம்பு. 5

எ-து : உயிர்களின் அறிவுவகைக் கூறியது.

இ-ள் : சங்கு அலகு-மெய்யும், நாவுமாகிய ஈரறிவு என்றும், கரையானுக்கு-மெய், வாய், கண், மூக்கு ஆகிய நாலறிவு என்றும், மனுவிற்கு-மெய்யும் வாயும் மூக்கும் கண்ணும் செவியும் ஆகிய ஐயறிவு என்றும் அறிக என்பதாம்.

கருத்து : உயிர்களுடன் மானுடத்துக்கும் அறிவளவு கூறிற்றாம்.

அ-உரை : மால்-சிறந்த; நத்து-நத்தை இனச்சங்கு; வன்மீகம்-புற்றாகும் கறையான்; வண்டொடு-வண்டு, தும்பி ஆகியவை; ஆதியா-ஓரறிவு முதலாக; எண் முறையே-எண்ணிக் காண்கின்ற முறையாக; ஒன்று-ஒப்பற்ற மானுடப் பிறப்பு.

குறிப்பு :- மனிதருக்கும் தேவருக்கும் ஐயறிவு என்றே ஆரூட நூற்கணிப்புக் காண்பது. மனிதன் தேவனாகும் தன்மை ஒப்புமைக் கருதி என்க.

நான்குவகை சீவன்

நால்வகையாஞ் சீவன்க ளெல்லா மெடுத்துரைக்கி
னேல்வகையு மோரிரண்டு மோர்நான்காம் - நான்கைப்
பலகால் பறப்ப தவழ்வ நடப்பநீ
ரொல்காது வாழ்வவென் றோர். 6

எ-து : நான்குவகை சீவராசிகள் கூறிற்று.

இ-ள் : சங்கு, கறையான், வண்டு, மானிடர் முதலான நான்குவகைச் சீவன்களும் இருகாலுடையனவும், காலில்லாத பலகாலுடையனவுமாகிய நிலையில் நால்வகையாய் பறப்பன, தவழ்வன, ஊர்வன, நடப்பன என்றாகும் என்றவாறு.

கருத்து : கால்களினளவாலும், பொறியறிவாலும் நால்வகை சீவபேதங்கள் காட்டியதாம்.

அ-உரை : ஏல்வகை-பொருந்தியவகை; பலகால் பறப்ப-பல கால்களை உடையனவற்றுள் பறப்பன (வண்டு); நீரொல்காது-நீரைவிட்டு நீங்காது; வாழ்வ-நீந்துவன.

உரை விளக்கம் : உலகில் சீவன்களாக 84 இலட்சம் என்பதால், அவற்றைப் பாகுபடுத்திக் காணும் வகையில் நடப்பன, பறப்பன, தவழ்வன, நீர்வாழ்வன என்று நான்கு வகைச்சீவன்களாக அறிதற்காகும். பலகால்-என்ற சொல்லை நான்கு வகைக்கும் கூட்டிக்காண, பலகால்-பலமுறையும் என்ற பொருட் சிறப்பால் இருகாலால் நடப்பனவாகிய மானுடமே பல்காலும் நடப்பன என்று அறிதலாகின்றது. மற்றவை-நடப்பினும் சிறப்பின்மை கருதியே இவ்வாறு கூறினார் என்க.

தவழ்வன வகை

அரவலகு இப்பிக் கிலைக்கா லூர்வ
வுறவெறும்பு வெண்முசுட்டை யுண்ணி - விரவிய
பாதம் பலவாகும் பார்மேல் தவழ்வனவா
மோதும்கா லாமை யுடும்பு. 7

எ-து : தவழ்வன சீவன்கள் கூறியது.

இ-ள் : பாம்பும் அலகும் சிப்பியும் சங்கும் காலின்றியே ஊர்வன என்றும், எறும்பு, பேன், முசுட்டை, உண்ணி இவை பலகாலுடையன என்றும், ஆமையும் உடும்பும் தவழ்வன

என்றும், ஒழிந்த சீவன்களெல்லாம் நடப்பன என்றும் அறிக. இவை சீவகாண்டத்துக் குடலாகும் பஞ்சபூதப் படலம் என்றறிக என்றவாறு.

கருத்து : சீவகாண்டத்திற்கு ஆதாரமாகும் பஞ்சபூத விகற்பம் இதுவரையில் கூறிற்றாம்.

அ-உரை : அலகு-அட்டை; இலை-இல்லை; ஊர்வ-ஊர்வனவாம்; உறவெறும்பு-எறும்பின் வகை, விரவிய-பலவவாகிய; பாதம்-கால்கள்; ஓதுங்கால்-சொல்லுவோமானால்.

குறிப்பு :- தவழ்வனவற்றிற்கு ஆமையும், உடும்பும் காட்டினாரேனும் அவ்வினத்தனவும் கொள்ளப்பெறும் என்பதனைக் குறிக்கவே ஓதுங்கால் என்று சுட்டினாரென்க.

கோழி, அன்னம், கிளி, மயில்

மீனம் மகரம் பறப்பனவா மீங்கிவற்றை
ஈனமில் சேய்சனியும் காணுங்கால் - ஊனமிலா
கான்கோழி யாகும் புகரன்னம் மால்கிளியாம்
வான்தோகை யாகும் மதி. 8

எ-து : இராசிகளில் கோள்பார்வைக்குரிய சீவன்கள் குறித்தது.

இ-ள் : மீனமும் மகரமும் பறவையிராசி. ஆதலால் சீவவிகற்பங்களில் பறவையாய் வந்தவிடத்து, இவ்விராசி மீனம் மகரத்தை செவ்வாயாதல் சனியாதல் வலிபெற்று, நிற்றல் நோக்குதல் செய்யின், கான்கோழியென்றும் சுக்கிரன் நோக்கில் அன்னம் என்றும், புதன் நோக்கில் கிளி என்றும், சந்திரன் நோக்கின் மயில் என்றும் அறிக என்றவாறு.

கருத்து : மீன, மகரத்தை வலிபெற்று செவ்வாய், சனி, சுங்கன், புதன், சந்திரன் நோக்க வரும் சீவன் கூற்றாம்.

அ-உரை : பறப்பனவாம்-பறப்பன விராசிகளாம்; ஈனமில்-குறை இல்லாத; கான்கோழி-காட்டுக்கோழி; வான்தோகை-நீண்ட தோகையை உடைய மயில்.

குறிப்பு :- கான்கோழி என்றமையான் கோழியினப் பொதுமையும் பொருந்தும்.

கருடன், குருகு, காக்கை

அங்கட் கருடன் அருக்கர்க்கா கும்பொன்னேற்
செங்கட் குருகாகுஞ் சேய்நோக்கில் - பொங்கு
பொருகோழி நாகம் புகல்காரி காகம்
உருவாகு மென்றே யுணர். 9

எ-து : கோள் நோக்கிற் குறிக்கும் சீவன் கூறியது.

இ-ள் : ஆதித்தன் மீனம், மகரத்தை நோக்குதல் செய்யின் கருடன் என்றும், வியாழம் நிற்றல் நோக்குதல் செய்யின் குருகாம் என்றும், செவ்வாய் நோக்கின் பொருகோழி என்றும், பாம்பும்-சனியும் நிற்றல் நோக்குதல் செய்யின் காகம் என்றும் அறிக என்றவாறு.

கருத்து : கோள்கள் வலியுடன் நிற்றல் நோக்குதல் செய்யின் காணும் சீவன்கள் உணர்த்திற்றாம்.

அ-உரை : அங்கண்-அழகிய கண்; அருக்கர்-சூரியன்; நாகம்-ராகு; காகம்-காக்கை; உருவாகும்-உதயமாகும்.

குறிப்பு :- குறிப்பிட்ட கோள்கள் வலியுடன் இருந்து மீனம், மகரத்தில் நிற்பதாயின் குறித்த பறவைகள் என்றும், நோக்குதல் செய்யின் அவ்வினத்தன என்றும் காண்க.

கவிப்புக்கு சீவனறிதல்

இச்சொன்ன கோள்களெழு கோள்வலியும் தன்னிலத்து
மெச்சி யுடனாய் விரவினதாய் - உச்சம்
அவரவர் சிந்தையிற் பேறு கெடுதிதனக்
கவையவை கண்டுரைப்ப தாம். 10

எ-து : நட்டமுட்டி சிந்தனைக்கு இராசி கோள் நிலைகளறிந்து கவிப்பு உரைப்பது.

இ-ள் : இவ்வாறு சொல்லப்பட்ட சீவயோனிகளின் கோள் எழும் தம்முடைய நிலத்திலாதல், வலியிலாதல், நிற்கினும், உதிக்கினும், தன்னுடைய உதயத்தைக் காண்கினும், தன்னுடைய வலியாலுதயத்தைக் காண்கினும், நட்டமுட்டி சிந்தனையுடன் வந்து வினவினவற்கு, நன்மை தீமை நட்டாமிட்டி சிந்தனை தப்பாமல் கிரகங்களுடைய பலாபலன் அறிந்து சொல்லுக என்றவாறு.

கருத்து : சீவயோனிகள் பற்றிய நட்டமுட்டி சிந்தனைக்கு இராசி கோள்வழி, உதயமுதல், வலி நோக்கு அங்கிசமறிந்து பலன் தப்பாமல் கூறுகவென்பதாம்.

அ-உரை : தன் நிலம்-தனது இராசி; விரவின-கலந்து சேர்ந்தன; சித்தை-மனம்; பேறு-பெறுகின்ற நன்மை; கெடுதி-பெற்ற பெறும் கெடுதி; நட்டம்-சேர்ந்த இழப்பு, நட்டம்; முட்டி-உண்டான தடை, முட்டுப்பாடு; நட்டமுட்டி சிந்தனை-நட்டம் முட்டுப்பாட்டினால் வாழ்க்கையில் வந்த சந்தேகம் ஆகியவற்றைத் திட்டமாகக் கண்டு கூறுக.

பறவைக்கு நிலமறிதல்

அல்லா விராசியவை யற்றையல் லாக்கோள்
புல்லுமெல் லாமவையே போலுரைக்க - அல்லனவும்,
நல்லனவும் தீயனவும் நன்னீரூர் காடாறு
புல்லினவும் நாடிப் புகல். //

எ-து : சொன்னவையல்லாத இராசிகட்கும் பறவை கட்கும் நிலமறிந்து கூறியது.

இ-ள் : மீனம், மகரம் ஒழிந்த இராசிகளில் கோள்கள் நிற்றல் நோக்குதல் செய்யின், அவ்வண்ணத்த பறவையும் அவைகட்குக் கூறப்பட்ட நிலங்களில் புள்ளாமென்றும் நல்லன தீயனவற்றுடன் நீர், ஊர், காடு, ஆறு, மலை இவற்றான் இன்னபறவை என்றறிதல், இராசிகளில் சொல்லப்பட்ட நிலம் ஒன்றறிந்து, அந்தந்த நிலங்களுக்கே அறிந்த பறவையை அறிந்து, நற்கோள் தீக்கோள்களால்

நற்பறவை, தீய பறவையும் அவையவை சேரும் இடமும், கோள்களின் நட்பு, ஆட்சி, உச்சம், நீச்சம் ஆகியவற்றால் கண்ட வலியும் தாழ்வும் பார்த்துச் சொல்லுக என்றவாறு.

கருத்து : சொன்னவற்றுடன் மேலே சொன்ன வற்றையும் கொண்டு நூன்முறை பிழையாமல் பறவை விதியினைக் காண்க.

பறவை வீதி முற்றும்

மானுடர் விதி

மானுடர் வகை

அரசர் படைத்தலைவ ராங்கவரைச் சார்ந்தோ
ருரைசா லருக்கற்கு யோனி - உரைசெய்யின்
கன்னார் குயவர் கனவணிகர் சிற்பர்
இந்நால்வ ரிவ்வகையார் தேர்ந்து *12*

எ-து : சீவபேதங்களில் மானுட விதி கூறியது.

இ-ள் : மானிட விதியாய் மிதுனம், கன்னி, துலாமாக வந்தவிடத்து ஆதித்தன் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நின்ற நயப்பறிந்து, உச்சத்தில் நின்றது அரசர் என்றும், ஆட்சியில் நின்றால் படைத்தலைவர் என்றும், நட்பில் நின்றால் அவர்களைச் சேர்ந்தவர்கள் என்றும், செவ்வாய் வலிபெற்று நோக்கில் கன்னார், குயவர், வெங்கல, வணிகர் ஆகியோர் சிறப்பர் என்றும், ஆசாரம் கெட்ட பிராமணர் என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : ஆதித்தன், செவ்வாய் வலியறிந்து மானிட விதியின் பகுதி கூறியதாம்.

அ-உரை : அவரைச் சார்ந்தோர்-அரசன், சேனைத்தலைவன் ஆகியோரைச் சார்ந்த அதிகாரிகள்; உரைசார்-பேசுதற்குப் பொருந்திய, யோனி-மானுட யோனிகள்; கன்னார்-உலோகத் தொழில் செய்வார்; கனவணிகர்-கன்னவணிகர்; இவ்வகையார்-பிராமணரில் தாழ்ந்தோர்; யோனிகள் மானிட இனபேதங்கள்.

உரை விளக்கம் : விதி-விதிப்பு, திட்டமான கணிப்பு, இதுதான் என்றறிவது. இராசி கோள்களை, ஆரூட சக்கரத்தில் உதயராசி வழி விதித்து நிறுத்திப் பலன் காண்பது திட்டம்.

மேலோர், வணிகர்

அந்தணர் பேரமைச்சர் ஆட்சிபெறு பொன்னுக்காம்
புந்திநடம் பாட்டுப் புணர்தவத்தோர் - முந்திய
வெள்ளியே வேளாளன் மிக்குசனி யாமாகி
லொள்ளியகீழ் மக்களென வோது. /3

எ-து : சீவர்களுல் மானிட வகைப்பாடு கூறிற்று.

இ-ள் : வியாழம் வலிபெற்று நிற்றல் நோக்குதல் செய்யின் பிராமணர், கணக்கர், மந்திரிகள் என்றும், புதன் வலிபெற்று நிற்றல், நோக்குதல் செய்யின் பாடுவார், ஆடுவார், தபோதனர் என்றும், சுக்கிரன் வலிபெற்று நிற்கில் வெள்ளாளரென்றும், சனி, பாம்பு நிற்றல், நோக்குதல் செய்யின் கடையார் சேவாளிகர் என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : வியாழம், புதன், சுக்கிரன், சனி, ராகு ஆகியவற்றால் மானுடவகை அறிவித்ததாம்.

அ-உரை : பேரமைச்சர்-முதல்மந்திரி; நடம்-நடனமாடுவார்; பாட்டு-இசைவாணர்; கடையர்-கீழ்மக்கள், சேவாளிகள்-ஊழியம் செய்வார்.

குறிப்பு :- கோள்கள் இராசிகளில் நிற்பதும், நோக்குவதும் ஆகிய இருவேறு செயல்களுக்கு ஏற்ப, மானுட வகையில் உரையில் ஆசிரியர் கூறியுள்ள இனத்தைச்சார்ந்த இனங்களும் அறிதற்காகும்

இதுவுமது

சுமையோ ரிலங்கியதாழ் தொண்டர் கரியன்
அமைமதி வாணிபர் பாகர் - இமையாத
வேசியரெண் ணர் விளம்பு நஞ்சாட்டர் வேய்முழலார்
பேசியவர் கள்ளருமாம் பேசு. /4

எ-து : மானுட வகையில் தொண்டர் தொழிலர் கூறியது.

இ-ள் : சனி வலிபெற்று நின்றதாகில் சுமடர் என்றும், மிலங்கிதரத் தொண்டர் என்றும், சந்திரன் வலிபெற்று நிற்கில் மருந்து வாணிகர், கள்ளானைப்பாகர், வேசியர் என்றும், சொல்ரசிகர் என்றும், பாம்பு வலிபெற்றதாகில் விடதாரிகள் என்றும், முழலை செய்பவர் என்றும், கெடுதி வினவின காலத்து இவ்வகைப்பட்ட சாதியிலுள்ள தாசர்கள் என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : கோள் வலிகண்டு மானுட சாதி வகையில் தொழிலர் வகைக் கூறியதாம்.

அ-உரை : சுமடர்-அறிவிலிகள்; இலங்கிதர-பார்வைதர; பாகர்-யானைப்பாகர்; எண்ணர்-சொல்வளமுடையார்; நஞ்சாட்டர்-பிடாரர்; முழலர்-மத்தளம் கொட்டுவார்; வேய்-வார்க்கட்டுள்ள; பேசியவர்-வழக்காடுபவர்; விடதாரி-பாம்புப் பிடிப்பவர்; முழலை-மத்தளம்.

தொழிலாளர்

மறவர்தச் சர்மா வலிகாரி பாம்பாம்
சுறவுகொள் வாராட் டிடையர் - இரவொளிக்கு
வண்ணரள வர்நுளைய ராம்புகர்க்குச் சுண்ணரொடு
எண்ணுமூ வாணியரென் றோது. *15*

எ-து : மானுட சாதியுள் தொழில்வழிச் சாதிகள் கூறியது.

இ-ள் : சீவன் கீழ் சாதியாயறிந்தவிடத்து, சனி வலிமை பெற்று நின்றதாகில், மறவர், தச்சர் உளரென்றும், ராகு வலிபெறின் செம்படவர் என்றும் (ஆட்டிடையர் என்றும்) பாம்பாட்டியர் என்றும், சந்திர வலிபெற்றதாகில் வண்ணார், அளவர், நுழையர் என்றும், சுக்கிரனுக்குச் சுண்ணாம்பு வாணியர் என்றும், மூவகை வாணிகர் என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : சீவர்களுள் சீவனத்தால் சாதியுடையார் காண்பதற்குக் கோள்முறை குறித்ததாம்.

அ-உரை : காரி-சனி; பாம்பாம்-ராகுவாகும்; சுறவுகொள்வார்-செம்படவர்; இரவொளி-இரவில் ஒளிதரும் சந்திரன்; வண்ணர்-வண்ணார்; அளவர்-உப்பெடுப்பவர்; நுளையர்-வலைஞர், மூவாணியர்-உப்பு வணியர், மீன் விற்பவர், சுண்ணாம்புக் கிளிஞ்சல் விற்பார் ஆகிய மூன்று வணிகர்.

குறிப்பு :- பாடலில் இரண்டாம் அடிக்கு - "சுறவு கொள்வார் பாம்பாட்டியராம்" - என்ற பாடமும் உண்டு. முன்னர் பிடாரர் கூறியதால், ஆட்டிடையரே பொருந்துவதாம்.

மானுட விதி - தொடர் நோக்கு

அவ்வத் திசைமே லவரவர் சாதியு
மவ்வத் திசைமேல வர்மனையு - மவ்வவர்,
திசைநல மேற்கெடுதி சிந்தை யெவர்க்கு
மசையாது கூற லறிந்து. 16

எ-து : மேற்கூறியவற்றை முறையாகக் காண்பது குறித்தது.

இ-ள் : மானிட விதியென்று சொல்லப்பட்ட ராசிகள் சீவக்கோள் நிற்க, நோக்குதல் செய்யின், இராசிக்கு வலிபெற்று, கோளுக்கடைத்த திசை என்றும், அடைத்த சாதியென்றும், அத்திசை மேலவர்கள் மனை என்றும், அத்திசையே கெடுதி சேருமென்றும், யாவர் சிலர் சிந்தனைக்கு மற்ற கோள்களுக்கடைத்தவை அறிந்து தப்பாமல் சொல்லுக என்றவாறு.

கருத்து : மானிட விதிக்கமைந்த இராசி கோள் வலிமை நட்பு, ஆட்சி, உச்சங்கள் ஆகியவற்றுடன் திசை நோக்கு இருப்பு ஆகியவைகளையும் அறிந்து, சீவனுக்குரிய வகைகளைக் கண்டு, பலாபலன்கள் கூறுக என்பதாம்.

மானுட விதி முற்றும்.

நாற்கால் விதி

பிராணிகள் - விலங்குகள்

ஆட்டிற்சேய் ஆடா மருக்கன் புலிபுத
னோட்டுமுசு வான்புகர்பால் பசுவாம் - மாட்டுள்,
எருது மதியும் குதிரை யெழும்பொன்
னெருமை சனிபாம் பெனல். 17

எ-து : பிராணிகள், விலங்குகள் நெறிக்கு நன்மை, கெடுதி அறிவது.

இ-ள் : நாற்கால் விதியாய் வந்தவிடத்து, மேட ராசியில் செவ்வாய் நிற்கில் ஆடென்றும், ஆதித்தன் நிற்கில் புலி என்றும், புதனிற்கில் குரங்கு என்றும், சுக்கிரன் நிற்கில் பசு என்றும், சந்திரன் நிற்கில் எருது என்றும், வியாழம் நிற்கில் குதிரை என்றும், சனி பாம்பு நிற்கில் எருமை என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : நாற்கால் சீவனறிந்து அவை அவைக்கு நன்மை கெடுதியறிந்து சொல்லுக என்றவாறாம்.

அ-உரை : ஆட்டிற்சேய்-மேடத்தில் செவ்வாய்; அருக்கண்-சூரியன்; முசு-குரங்கு; பொன் குதிரை யெழும் என்று சேர்க்க.

குறிப்பு :- நாற்கால் சீவன்களுள் ஆடு, பசு, எருது, குதிரை, எருமை ஆகியவற்றுடன் குரங்கும், விலங்குகளில் புலியும் காணும் வகை அறிவித்ததாம்.

இதுவுமது

எருதிற் புகர்பசுவா மின்சேய் கலையா
முருவிற் புதன்குரங்கா மொண்பொன் - வீருப்பீற்
பரியாகும் திங்கள் பசுமரையாம் வெய்யோன்
கரியன் எருமையாம் காண். /8

எ-து : நாற்கால் சீவன் விதிகாண்பதில் பிறிதொரு விதி.

இ-ள் : இடபத்திலும் இதற்குப் பத்தாமிடத்திலும் சுக்கிரன் நிற்கில் பசுவென்றும், செவ்வாய் நிற்கில் கிளை மானும், கலையுமென்றும், புதனிற்கில் குரங்கென்றும், வியாழம் நிற்கில் குதிரை என்றும், சந்திரன் நிற்கில் பசு என்றும், ஆதித்தன் நிற்கில் மரைப்பசு என்றும், சனி பாம்பு நிற்கில் எருமை என்றும் அறிக என்றவாறு.

கருத்து : இடபம் உதய ராசியாக அதனாலும், அதற்குப் பத்தாமிடத்தாலும் நாற்காலியறிதல் உபாயம் கூறியதாம்.

அ-உரை : கலை-மான்வகை; ஒண்பொன்-சிறந்தகுரு; பரி-குதிரை; மரை-மரைப்பசு (காட்டுப்பசு); வெய்யோன்-சூரியன்.

குறிப்பு :- வந்தவன் வந்த உதயராசி இடபமாயின் அதனைக் கொண்டு நாற்கால் சீவனறிதலுடன், அவ்விராசிக்குப் பத்தாம் இராசி கொண்டும் அதன் நுட்பம் அறிந்து இனமானவற்றையும் கூறுதற்குரிய முறையினைக் காண்க.

இதுவுமது

கடகத்தில் சேய்கழுதை யாங்கலையின் மேதி
இடபத்தி லாகில் விலங்கா - முடனொத்த,
யாழ்கன்னி கீரிநரி நாய்யூன் பறவை
சூழ்வகையிற் சேர்வறிந்து சொல். /9

எ-து : பிற நாற்கால் சீவன்களில் சில கூறியது.

இ-ள் : கடகத்தில் செவ்வாய் நிற்கில் கழுதை என்றும், மகரத்தில் நிற்கில் எருமை என்றும், இடபத்தில் நிற்கலதன் வண்ணத்தில் விலங்கு என்றும், மிதுனத்திலாவது, கன்னியிலாவது நிற்கில் கீரி, நரியோடித் தன்மையவை என்றும் விசாரித்துக் கெடுதி அறிந்துசொல்லுக என்றவாறு.

கருத்து : மேற்கண்டதன் தொடர்நிலை காணும் வகை அறிவித்ததாம்.

அ-உரை : சேய்-செவ்வாய்; கலையின் மேதி-வளைந்த கொம்புடைய எருமை; விலங்கு-காட்டெருமை; ஊன்பறவை-ஊண் தின்னும் பறவை; சேர்வறிந்து-இராசிகளில் கோள்களின் சேர்ப்பு அறிந்து; சொல்-கவிப்பு கூறுவாயாக.

இதுவுமது

சீயத்திற் சேய்புலியாந் தேரோன் மதிசீயம்
வாயொத்த நாய்புகர்மால் வானரமாம் - ஆயத்
தொழிந்தகோட் சேய்க்காகு மோரைந்து கோட்கு
மொழிந்தவையே போன்று மொழி. 20

எ-து : சிம்மம், புலி, குரங்கு முதலியன கூறியது.

இ-ள் : சிங்கத்தில் செவ்வாய் நிற்கில் புலி என்றும், ஆதித்தனுடன் சந்திரன் நிற்கில் சிங்கம் என்றும், சுக்கிரன் நிற்கில் நாய் என்றும், புதன் நிற்கில் குரங்கு என்றும், வியாழம் நிற்கில் குதிரை என்றும், சனி-பாம்பு நிற்கில் எருமை என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : சிம்மம் உதயமாதல் கொண்டு அங்கிசக்கோள் வழி சீவனறிந்ததாம்.

அ-உரை : சீயத்தில்-சிம்ம இராசியில்; தேரோன்-சூரியன்; சீயம்-சிங்கம்; வானரம்-குரங்கு; ஆயத்தொழித்த-கோள்கள் ஒன்பதாம் கூட்டத்தில் ஆதித்தன் நீங்க; சேய்க்காகும்-செவ்வாய்க்குக் கூறிய பலாபலன்; ஓரைந்து கோட்கு-முன்னர் கூறிய ஐந்து கோள்கள்

குறிப்பு :- சிம்ம ராசி உதய ராசியாகியதன் மேல் அவ்விராசியில் அங்கிசமாகும் கோள்களைக் கொண்டும் நாற்கால் சீவனறிய உரையில் காட்டியுள்ளார்.

இதுவுமது

கோலிற் புகரும் குழக்கன்றிற் றிங்களும்
மேலைப் பசுவென்று மீட்டுரைக்க -மேலோத்
தனைத்துக்கோ ணோக்கும தன்படியே யுண்மை
நினைத்துத்தான் கட்டுரைக்க நேர். 21

எ-து : கூறிய நெறிப்படியே கண்டு தெளிவு செய் என்பது.

இ-ள் : துலாத்தில் சுக்கிரன் நிற்கிலும், இடபத்தில் சந்திரன் நிற்கிலும் பசு என்றும், ஒழிந்த கோள் நிற்கில் நோக்குதல் செய்யில் முதலிற்கண்ட கோளுக்குச் சொன்ன படியே உண்மை அறிந்து சொல்லுக என்றவாறு.

கருத்து : பசு என்பது காணும் வகையிலொன்று குறித்ததாம்.

அ-உரை : கோல்-துலாம்; குழக்கன்று-இடபம்; நினைத்து, முன்னர் சொன்ன முறைகளை நினைத்து, கட்டுரைக்க-நட்டமுட்டி சிந்தனைக்குப் பலாபலன் கூறுக.

இதுவுமது

வில்லிற்சேய் வேந்தன் விளங்கு மதிகுதிரை
வல்லிற் சனியருக்க னானையாம் - நல்ல
கடாவா மரவம் கிளர்புகர் புந்தி
விடாதுகுரங் கென்றே விளம்பு. 22

எ-து : தனுசு உதய ராசியாகில் - சீவவகை காண்பது.

இ-ள் : தனுசில் செவ்வாயும் வியாழமும் சந்திரனும் நிற்கில் குதிரை என்றும், சனியும் ஆதித்தனும் நிற்கில் யானை என்றும், பாம்பு நிற்கில் கடா என்றும், சுக்கிரனும் புதனும் நிற்கில் குரங்கு என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : தனுசு உதய ராசியாக அதில் அங்கிசமாகும் கோள்களைக் கொண்டு நாற்கால் சீவவகை அறிவது கூறியதாகும்.

அ-உரை : வில்-தனுசுராசி; வேந்தன்-வியாழன்; வல்லிற்சனி-வலிபெற்ற சனி; ஆனை-யானை; கடா-ஆடு; மாடு-எருமை கடாக்கள்; அரவம்-ராகு, விளம்பு-விளக்கமாகக்கூறு.

குறிப்பு :- ஓர் இராசி உதயராசியாக, அதற்கமைந்த நாற்கால் சீவ பலன் அறிவதோடு, அந்த ராசியில் அப்பொழுது நின்ற கோள் அல்லது கோள்களின் நிலையறிந்து நட்பு, ஆட்சி, உச்சம் அறிந்து நூல் உணர்த்தியதனை நினைவில் கொண்டு, இன்ன நாற்கால் சீவன், ஆ, பெண் என்பது உணர்ந்துத் தெளிவாகப் பலன் கூறவேண்டும் என்பது பாடல்வழி காணும் கருத்தாகும்.

இதுவுமது

பொன்னே குடத்தெழுந்த பொன்னேழைந் தொன்பானேற்
றுன்னியகோ ணோக்குத் தொடருமே - லுண்ணிய
வானையாம் பின்னை யதனைமதி நோக்குங்கால்
வானவ ரென்றே மதி. *23*

எ-து : கும்ப ராசி உதயமாகின் அதன்வழி கணிப்புக் கூறியது.

இ-ள் : வியாழம் கும்பத்தில் உதயமாதல், கும்பத்திற்கு ஏழாமிடத்ததாதல், ஐந்தாமிடத்ததாதல், ஒன்பதாமிடத்தது ஆதல், (கோள்) நின்று நோக்குதல் செய்யில் யாவனொருவன் சிந்தித்தானை-யானையாம் என்றும், கும்பத்தைச் சந்திரன் நோக்கில் தேவர்கள் என்றும் தேர்க என்றவாறு.

கருத்து : கும்பம் உதயமாக வந்தானை இன்ன சீவன் என்று காணும் வகை கூறியதாம்.

அ-உரை : பொன்னே-வியாழனே; குடம்-கும்பராசி; துண்ணிய-கூடிய; தொடரும்-முன்னர் கூறியதுபோல் காணப்படும்; உண்ணிய-சிந்தனையான (சிந்தித்த); பின்னை-அதன் பின்னர்; வானவர்-தேவர், உயர்ந்தோர்; மதி-மதித்து அறிவாயாக.

சீவராசிகண்டு, நினைத்தது காணல்

நீலன் பகையறியும் நாநிறை வாணிபமாம்
கோல விடையிற் கொழுமேதி - சால,
விழவா மொரிதேள் நீள்கோறியமை மாடு
மிழிவாவ தெல்லாம் இயம்பு. 24

எ-து : நாற்கால் சீவனறிந்த வழி நன்மை - தீமை காண்பது.

இ-ள் : சிங்கத்தில் சனி நிற்கில் பகைத்திறமும், துலாத்தில் நிற்கில் வாணிபமும், இடபத்தில் நிற்கில் எருமையும், விருச்சிகத்தில் நிற்க நன்மையும், மேடத்தில் நிற்கில் மிழிவானவையெல்லாம் நினைத்தாயென்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : சிங்க ராசியில் சனி நிற்பது முதலாகப் பிற ராசியில் நிற்பதற்கும் பலனறிதல் உணர்த்தியதாம்.

அ-உரை : நீலன்-சனி; நாநிறை-முள் நாவுடைய தராசு (துலாம்); கோல-ஒப்பனையான, மேதி-எருமை; சால-மிகவும்; மிழவு-நற்செயல்கள்; கோறி-ஆடு, அமை-அமைந்த, மாடு-இடபம், மிழிவு-கீழான சிந்தனை, வருத்தமானது.

குறிப்பு :- சனி இராசிகளில் நிற்கும் பலன் கூறியது காண்க.

பசு, எருமை – விருத்தியறிதல்

புகர்மா மதிபால் பசுநாகு வாகும்
பகர்சனி பாம்பு மலடாம் - நிகரில்,
குருசுடரோன் சூலாம் கொழும்புகை யாகி
லுரைத்தனவே போல வுரை. 25

எ-து : பசு, எருமை - விருத்தி, குறை, நிறை கூறியது.

இ-ள் : சுக்கிரனும், சந்திரனும் உதயத்தில் வலிபெறின் பாற்பசு என்றும், புதன் வலிபெறின் கன்று என்றும், சனியும்-

பாம்பும் வலிபெறின் மலடென்றும், வியாழமும் ஆதித்தனும் வலிமைபெறின் சினையாவது என்றும், செவ்வாய் வலிபெறின் வியாதிகொண்டு இளைத்தது என்றும் இப்படி கிரக உதயங்களால் விகற்பமறிந்து சொல்லுக என்றவாறு.

கருத்து : உதய ராசியில் வரும் கிரக விகற்பங்களறிந்து பலன் காண்க என்பதாம்.

அ-உரை : பால்பசு-கன்றையுடைய பசு; நாகு-இளங்கன்று; சூல்-கருவடைதல்; புகை-செவ்வாய்.

குறிப்பு :- உரையில் ஆசிரியர் வலிபெறின் என்பதனை ஆட்சி, உச்ச வலிமைபெறின் என்று காண்க. பசுவுக்குச் சொன்ன விகற்ப பலன்களையே ஆடு, எருமை ஆகிய பிற நாற்கால் சீவன்களுக்கும் சொல்லுக என்பதனைப் "போல உரை" என்பதனால் அறியப்பெறும்.

இதுவுமது

ஆனைசனி ஆடுசேய் ஆம்புலவ னாடும்பால்
மானனையாய் கேள்வியாழ மாமதியம் - ஏனை
புகராடை வாணிகராம் பொன்னர்சேர் லெய்யோன்
பகர்பரிசீ யம்என்றே பார். 26

எ-து : சீவன் நாற்காலியாய் வந்தவிடத்து கவிப்பு காண்பது.

இ-ள் : சீவன் நாற்காலியாய் வந்தவிடத்து, சனி யானை என்றும், செவ்வாய் ஆடு என்றும், இருகால் சீவனாய் வந்தவிடத்து, புதன் ஆடுவார், பாடுவார் என்றும், சந்திரனாகில் புடவை விற்பார் என்றும், வியாழமாகில் குதிரை என்றும், ஆதித்தனாகில் சிங்கம் என்றும் சொல்லுக என்றவாறு.

கருத்து : நாற்கால் சீவன் கூறிய வழி இருகால் சீவர்களின் சீவிதமும் காட்டியதாம்.

அ-உரை : ஆனை-யானை; ஆடும் பால்- ஆடல் மகளிர்; புலவன்-பாடும் புலவன்; மானைனையாய்-மானை போன்ற பெண்ணே; மகடூ-முன்னிலை; ஏனை-மற்றைய; பகர்பரி-குருவுக்குக்கூறும் குதிரை, சீயம்-சிங்கம்; பார்-ஆராய்ந்து பார்த்துக்கொள்.

குறிப்பு :- இப்பாடலில், நாற்கால் சீவ விதி குறிக்கும் நோக்கில் பொருந்த இருகால் சீவனான மானுட சீவிதத்தினையும் காணும் விதி குறித்தறிக.

சிந்தனையறிதல்

இச்சொன்ன யோனியேழு கோளும்தாம் தன்னிலத்து
மெச்சி யுடனே விரைந்தெழும் - நிச்சம்
வினவுவார் சிந்தைமிகு பேறுடன் கேடு
நினைவார்க் கவையவையே நேர். 27

எ-து : நாற்கால் சீவன் ஏழுகோள்வழி கண்டு நினைவார் நினைவு காண்பது.

இ-ள் : இப்படி சொல்லத்தக்க யோனிகளெல்லாம் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சத்தாலும், உதயாரூட சக்கரத்தாலும், நிலமவ்வலிபெற்று நிற்கில் கிரகங்களுக் கடைத்த யோனிகளில் அறிந்தவையே சிந்தனையாகவும், அவையவையே பொருள் பேறாகவும், அவையவையே கெடுதியாகவும் நினைத்து வினவின கருமமறிந்து யாராயினும் சொல்லுக என்றவாறு.

கருத்து : உதயகால ஆரூட சக்கர வழியே இராசி, கோள் வலி-மெலி அறிந்து ஆரூடம் கூறுக என்பதாம்.

அ-உரை : யோனி-சீவன்; யேழுகோள்-உயர்வன ஏழு கோள் (பாம்புகள் நீங்க); விரைந்தெழும்- நாள் கால சக்கரமாக விரைந்து செல்லும் தரந்தன; நிச்சம்-நாள்தோறும்; வினவுவார்-ஆரூடம் கேட்பார்; நினைவார்-நினைத்துவந்தவர்; அவையவையே-வந்தவர் நினைத்த காரியங்களே; நேர்-கண்டறிந்து கொண்டு சொல்.

குறிப்பு :- ஆரூடம் கேட்க வந்தவர் நினைப்பதனை, சீவகாண்ட விதிப்படி ஆரூட சக்கரத்தால் கணித்தறிந்து திட்டமாகச் சொல்லுக.

காண்டம் காண்பது – பொது

வண்ணஞ் சுவைகல னாம்வாய்ந்த மாண்கருவி
எண்ணிய மூல மியங்குமே - திண்ண
மிலைகாய் பழமுடன்தோல் வேரெனவே கோளின்
துலையா னவையவையே சொல். 28

எ-து : சீவகாண்டத்தில் எட்டு கோள்களின் இயக்கம் அறிந்து பலன் காண்க என்பது.

இ-ள் : நிறமும், சுவையும், ஆபரணமும் அமைந்த சிறந்த ஆயுதங்களும், மரங்களும், மூலங்களும், சீவன்களும், இலை, காய், பழம், தோல், முதலானவையும், கிரகங்களாகும் எட்டு கோள்களுக்கும் சொல்லத்தக்க நாவின் வலியுமறிந்து யாவனொருவன் வினவின காலத்து பலம்பெற்ற கிரகங்களுக்குச் சொல்லப்பட்டன ஆய்ந்துணர்ந்து அவையவையே சிந்தனை சொல்லுக என்றவாறு.

கருத்து : முற்பட்ட காண்ட வழிமுறையுடன் சீவ காண்டத்துக் கோள் முறைகளையும், ஆரூட சக்கர உதயராசி வழிகண்டு நிச்சயித்து வந்தவன் சிந்தனை இது என்று அறிந்து கூறுக.

அ-உரை : வண்ணம்-நிறம் சாதியுமாகும், கலன்-அணிகலன் இரத்தின பொன்னாபரணங்கள்; மாண்-சிறந்த; கருவி-ஆயுதம்; எண்ணிய மூலம்-வந்தவன் கருதிய சிந்தனை; திண்ணம்-உறுதி; துலையான்-கோள்களின் உச்ச-நீச்சமாதிய வலியளவையால்.

எட்டுக்கோள்களென்றது ராகு-கேதுக்களை ஒரே மதிப்பில் வைத்துக் காண்பதென்பதாம்.

குறிப்பு : உரையில் ஆசிரியர், நாவின் வலியுமறிந்து என்று குறிப்பது, சொல்லுவானுக்குரிய வாக்கு ராசி வலிமை அறிந்து ஆரூடம் சொல்லத்தக்கது என்று கருதலாகும்.

சீவகாண்டம் முற்றும்.

நட்டாமுட்டி சிந்தனைக் காண்டம்

தாதுமூல சீவக் கலப்பு

தாது விராசியைத் தாதுக்கோ ணோக்கினுந்
தாதுவைத் தாது கவிப்பினுந் - தாதுவே
யாகுமா மூலமருஞ் சீவன் அவையவையே
யாகுமா மென்ப தறி. 1

எ-து : தாதுவைக்கொண்டு மூலசீவன் நிச்சயிப்புக் கூறியது.

இ-ள் : தாது இராசியான மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய நான்கு ராசியும், தாது கோள்களாகிய ராகு, சந்திரன், செவ்வாய், சனி ஆகிய நான்கு கோள்கள் நோக்கினும் கவிப்பினும் ஆரூடமுந்தாது வாய் கவிக்கிற கிரகமும் தாதுவாகின்ற தாதுவாம் என்று மூல இராசியாகின்ற விருச்சிகம், ரிஷபம், சிங்கம், கும்பம் நான்கும் ஆரூட மூலமாகிய இரவி வெள்ளியாகில் மூலமென்க.

சீவ ராசியாகின்ற மிதுனம், மீனம், கன்னியாரூடமும் கவிப்பும் நோக்கும் சீவனாகிய வியாழமும், புதனும் சீவனென கவிகோளுதயத்தை வலியனாவும், நீர்க்கிழாகின்ற நாலாமிடத்து வலியனவும் பார்வையாகின்ற ஏழாமிடத்து வலியனவும், உச்சமாகின்ற பத்தாமிடத்து வலியனவும், பகை நீச்சத்து வலியனவும் அறிந்து சொல்லுக என்றது. இப்படி ஆரூடத்தாலும் கல்வியாலும் நோக்காலும், தாது மூல சீவன் நிச்சயித்தறிக என்றவாறு.

கருத்து : தாது மூதம் சீவனிச்சயித்தறிய கூறியது.

அ-உரை : தாது-ஆரூடக்கரு (அடிப்படை); தாதுவைத்தாது கவிப்பினும்-தாதுவைத் தாது கவிப்பினும், (தாது வழிக்கண்ட தாதுவைக் கொண்டு ஆரூடக்கவிப்பு அமையினும்) அறி-அறிவாயாக.

"நட்டமுட்டி சிந்தனை" என்பது என்ன ?

ஆரூடப் புலவனை நாடி ஒருவன் வந்தானெனில், வந்தவனுக்குரிய உடைமைகளுல் ஒன்றோ பலவோ கைவிட்டுப் போயிருக்கலாம். சண்டை சச்சரவுகள் நேர்ந்திருக்கலாம். மேன்மேலும் நட்டமும் துன்பமும் தொடர்ந்திருக்கலாம். இவையன்றிப் பகையாலும் பொறாமையாலும் கொண்ட கொடிய திட்டத்தினை செயலாற்றப் பலனறியவும் வரலாகும்.

இவ்வாறு பொருள் நட்டம், மனத்துன்பம் சதித்திட்டம் நேரிட்டபோது அவன் மனமும் சிந்தனையும் குழப்பமடைந்து, இழந்த பொருள் காணுமா ? துன்பங்கள் தீரும் ? திட்டம் நன்மை தருமா ? என்பன போன்ற வருங்காலப் பலாபனைப்பற்றி அறிந்துகொள்வதற்கு ஆர்வம் கொண்டு நட்டம் முட்டுப்பட்டால் சிந்தனைத் தெளிவுபடாத நிலையில் அறிந்துகொள்வதற்கு வந்தானாதலின் "**அதனையே நட்டமுட்டி சிந்தனை**" என்று ஆரூட நூல் குறிப்பிடுகின்றது.

காண்டம் : இன்ன காரணத்துடன் வந்துள்ளான் என்பதனை, ஆரூடன் கணிப்பாலறிந்து கருத்துடன் கவிப்பாகக் (பலாபலனாக) கூறும் சாத்திர முறைகளை முறைமையாகக் காட்டி விளக்கும் பெரும் பிரிவுக்குரிய கலைச்சொல்லே - காண்டம் என்பதாகும்.

தாது அங்கிசமறிதல்

தாதுமூலங் கூடிற் சீவனா மச்சீவன்
தாதுவோ டாகிற் றருமூலந் - தாது,
மேல்மூலஞ் சீவனும் மூன்று முடனாகிற்
சாலவ னாயறிந்து சாற்று. 2

எ-து : தாதுவும் தாதுவும் கூடிற்காணும் மூல சீவனறி உபாயக் கவிப்புக் காட்டியதாம்.

இ-ள் : தாது இராசியைச் சீவன் கவித்திடில் மூலம் என்றும், மூல இராசியைச் சீவன் கவித்திடில் தாது என்றும், சீவ இராசியை மூலங்கவித்திடில் தாது என்றும், சீவ இராசியைத் தாது கவித்திடில் மூலம் என்றும், ஆரூடத் தாதுவாய் வலிபெற்று நோக்கின் கிரகமும் மூலமாகின்ற சீவ தாது என்றும், ஆரூடத் தாதுவாக வலிபெற்று நோக்கில் கிரகம் சீவனாகில் மூலதாது என்றும், ஆரூடம் மூலமாய் வலிபெற்று நோக்கில் கிரகம் சீவனாகில் மூலதாது என்றும், ஆரூடம் சீவனாய் வலிபெற்று நோக்கின் கிரகமும் மூலமாகில் சீவதாது என்றும், ஆரூடம் சீவனாய் நோக்கின் கிரகமும் தாதுவாயின் சீவமூலம் என்றும் ஆகுமென்க.

இவ்வாறு வந்த தாது - மூல - சீவன் ஆகியவற்றை அறிந்து வலிபெற்று நோக்கிய கிரகமும் அறிந்து சொல்லுக என்றவாறு.

நட்டமுட்டி சிந்தனைக்கான இடங்கள்

தான்தன் குடிதன் னுடன்பிறந்தார் தாய்தந்தை
வான்பகை தன்பெண்டிர் தன்மரணம் - வான்குரவர்
தன்கருமம் தன்னாக்கம் தன்விரையம் ஆமிவற்றை
இன்புடன் சிந்தனையாற் காண்.

எ-து : ஆரூடன் வந்தானுக்குரிய சிந்தனையை அறிந்து கூறுவது என்பது.

இ-ள் : யாவனொருவன் நட்டமுட்டி சிந்தனையாக வந்துநின்ற இடம் பொழுதறிந்து, உதயாரூடக் கவிப்பினாலும், தாது-மூல-சீவ-இராசி-கோள் நிலைகளினாலும் பன்னிரண்டு இராசிக்கும் பொருந்திய பொதுப் பலாபலன்களாகும். தான், தனக்குரிய குடி, உடன்பிறப்பு, தாய்பேறு, நோய், பகை,

பெண்டிர், மரணம், ஆசான், தன் கருமம், ஆக்கம், செலவினம் என்பவற்றுள் ஒன்றியது கொண்டு நட்டமுட்டி சிந்தனையறிந்து இன்பமுடன் கணிப்புச் சிந்தனையாற் திட்டமுடன் கண்டு சொல்லுக என்றவாறு.

கருத்து : வந்தானுக்குரிய சிந்தனையினை ஆரூடத்தால் கண்டு அன்புடன் உரைப்பதாம்.

அ-உரை : தான்-தனக்குரியவைதான்; குடி-குடும்பம்; உடன்பிறந்தார்-சகோதரர், தாயுடன் பிறந்தார்; பெண்டிர்-மனைவி; தன்கருமம்- தனது தொழில், பணி, பதவி, முயற்சி; ஆக்கம்-செல்வம், பொருட்பேறு.

மதியைக்கொண்டு மதித்தறிதல்

மதியதனைக் கண்டகோள் யாவை அவையே
வீதியா லவைநினைத் தாயே - மதியா
லிருகாலே நாற்கால் பலகால் பறவை
யருகாது வாழ்வனவு மாய்ந்து.

எ-து : சந்திரன் ஆரூடக் கோளாவது கொண்டறிவது கூறியது.

இ-ள் : மதியென்பது ஆரூடமூலம், அவ்வாரூடத்தைக் கண்ட கோளும், கவிக்கின்ற ராசியும், யாவையும் அவற்றிற்குக் கட்டடைந்தனவை சிந்தை என்றறிந்து, அவ்வாரூடத்தை தாது மூலம் தெரிந்து, இருகால், பலகால் உள்ளனவும் பறவையாகிய சீவ விகற்பங்களையும் தெரிந்து ஆரூடம் சொல்லுக.

மதி சோதி என்றும், முன்சொன்ன பகுதியும், மரம், ஆறு, நிலம், தலம் இவைகளில் சீவனாக வந்தவிடத்து ஆரூட ராசியைக் கவிக்கிற ராசியில் யாதொரு கோளின் நடுவந்த கோள் கொண்டு, இருகால், நாற்கால், பலகால், பறவை என்பவற்றில் தேர்ந்து சொல்லுவது, கவிப்பில் கோள் இல்லையாகில் இராசியைக்கொண்டு சொல்லுக என்றவாறு.

உரை விளக்கம் : சந்திரன் உதயத்தையும், சந்திரன் அங்கிசத்தையும், நட்பு-ஆட்சி-உச்சங்களிலும், மேலே சொன்ன நாற்காண்டங்களிலும், சொன்னவற்றில் தேர்ந்து தெளிந்து நோக்கினமையறிந்து, இருகால், நாற்கால், சிறகுகால், பலகால், பலகாலில் நீர்வாழ்வன ஆகிய இவைகளையும், இவைகள் யாவற்றையும் கொண்டு கவித்தறியும் நன்மை தீமைகளயையும் சொல்லுக.

அ-உரை : அங்கிசம் - ஒரே ராசியில் கோள்கள் இணைந்து அல்லது சேர்ந்து நிற்கும் செயல்.

சிந்தனை காண முதலிடம்

ஏறிய தெழுச்சி யிருங்குடை மூன்றினைத்
தேரிய கோணோக்கந் தெரிந்துணர்ந்து - மாறாது
சிந்தித்துக் கெட்ட பிடித்தன தேர்ந்துரைக்க
முந்தித்தானஞ் சொன்ன முறை. 5

எ-து : ஆரூட அடிப்படை மூன்றின்மேல் சிந்தனை கூறியது.

இ-ள் : ஆரூடம், உதயம், ஆரூட திரிசக்கரம் ஆகிய மூன்றினையும், நின்ற கோள்களுள் வலிபெற்று நோக்கித்தக்க கோளின் குறிப்பறிந்து, கோளுக்கடைத்த தாது, மூலம், சீவன் ஆகியவற்றைச் சொல்லுமிடத்து, ஆரூடத்தைக் கொண்டு சிந்தனையும், உதயத்தைக் கொண்டு நட்டமும், கவிப்பைக் கொண்டு முட்டியும் சொல்லுக.

முன்சொல்லப்பட்ட அடைவுகள் தப்பாது என்றவாறு.

அ-உரை : கவிப்பு-ஆரூட சக்கரத்தானறிந்த திட்பக் குறிப்பு; நட்டம்-ஒருவன் அடைந்த பொருள் நட்டம், முட்டி-கடைகள், துன்பங்கள், குழப்பங்களாகின்ற முட்டுப்பாடுகள், கவிப்பு-முடிவான கருத்து.

உரை விளக்கம் : ஆருடம், உதயம், சக்கரம் ஆகியவற்றில், ஆருடவலியாற் சிந்தனையும், உதய வலியால் நட்டமும், சக்கரக்கவிப்பு வலிமையால் முட்டியும், தாது மூல சீவனறிந்து சொல்லுவதாம்.

பாடலில், ஏறியதாவது - ஆருடம், எழுச்சியாவது - உதயம், இருங்குடையாவது - ஆருட சக்கரக்கவிப்பு.

சிந்தையறிந்து கூறல்

நாற்கண்டத் தொன்றினைநட்ப் பாட்சியுச் சங்கண்டு
மேற்கொண்ட நோக்கின் வலியறிந்து - ஏற்க
பிடித்த கெடுத்த பொருந்தக்கோள் சிந்தை
முடிந்தவற்றால் கூறல் முறை. 6

எ-து : இடவலியறிந்து, கோள் நிலையறிந்து, நட்டமும் சிந்தனையும் கூறியது.

இ-ள் : உதயம், நீர்க்கீழ்ப்பாடு, உச்சிதம் என்கின்ற காண்டங்களினாலின்று நட்பாட்சி உச்சத்தோடு நின்று வலிபெற்று நோக்கத்தக்க கோளின் பார்வையினது குறிப்பறிந்து, தாது, மூலம், சீவன் தெரிந்து நட்புக்கோளாள் முட்டியும், ஆட்சிக்கோளால் நட்டமும், உச்சக்கோளால் சிந்தனையும், முழு நோக்கு, அரை நோக்கு, கால் நோக்கு, அரைக்கால் நோக்கு முறை அறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : நாற்கண்டம்-மேலே சொன்ன நான்கு காண்டம்; பிடித்த-கண்டுபிடித்த; பொருந்தக்கோள்-பொருந்தியக்கோள்

உரை விளக்கம் : உதயம், நீர்க்கீழ்ப்பாடு, உச்சிதம் என்கிற வலியறிந்து, நோக்கின் அளவறிந்து, அவற்றுள் நட்புக்கோளால் முட்டியும், ஆட்சிக்கோளால் நட்டமும், உச்சக்கோளால் சிந்தனையும் கூறல் ஆருடமுறைமையாகும்.

வினவிய காரியம் காணல்

நினைத்தவுரை யுச்சியா நீர்க்கீழ்க் கனவா
முனைத்து வருங்கவிப்பான் முட்டி - யனைத்தாய
பாட்டா லிறந்த தெதிருத யம்கெடுதி
நாட்டாரு டத்தால் நயந்து. 7

எ-து : வந்தவன் வினவின காரியம் கண்டு நாட்டியது.

இ-ள் : உதயத்துக்குப் பத்தாம் ராசியாகிற சிந்தனையும், உதயத்துக்கு நாலாம் ராசியாகிற நாவும், கவிப்பால் முட்டியும், உதயத்துக்கு ஏழாம் ராசியால் இழந்தனவும் (இறந்தனவும்), உதயத்தில் வினவுமாரூடத்தால் நட்டமும் சொல்லுக என்றவாறு. ஆரூடத்திற்கு எதிர் உதயமாகச் சொல்லுக.

அ-உரை : முனைத்து-மேலோங்கி; முட்டி-முட்டுப்பாடு; இறந்தது-இறந்த காலத்தில் நடந்தது; எதிர்-எதிர்காலத்தில் நடப்பது; கெடுதி-தீமை; நாட்டு-திட்டமாக்கு; நயந்து-சிராகப் பார்த்து, பாட்டால்-நோக்கும் செயலால், பாடு-செயல்.

உரை விளக்கம் : உச்சத்தால் சிந்தனையும், நீர்க்கீழால் கனாவும், கவிப்பால் முட்டுப்பாடும், நோக்கும் செயலால் இறந்தகால நிகழ்ச்சியும், உதயத்தால் எதிர்கால நிகழ்வுகளும், ஆரூடத்தால் நட்டமும் சொல்லுக.

சிந்தனைப் பொது அறிதல்

விதிசா லருக்கன் விறற்புந்தீ பொன்னன்
மதிசுங்கன் மக்களுண் மக்கள் - கதிசால்
கரியோனிலவிருத்தி காணுங்காற் சேய்பாம்
புரிதாம் களவொடுகே டாம். 8

எ-து : சிந்தனை அறிதற்குப் பொதுவிதி காட்டியது.

இ-ள் : ஆதித்தன், புதன், வியாழன், சந்திரன், சுக்கிரன் இவர்கள் மானுட ராசியாகிய மிதுனம், கன்னி, துலாம், கும்பத்தில் வலிபெற்று நிற்கினும், நோக்கினும் மக்களைப் பற்றிய சிந்தனை என்றும், சனி இராசிகளில் நிற்க நோக்க வினவினது பூமியைப் பற்றிய சிந்தனை என்றும், செவ்வாய் வலிராசிகளில் நிற்க நோக்க வினவினது களவு கெடுதி நினைத்தாய் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : விதி-உதய விதிப்பு; அருக்கன்-சூரியன், விறல்-வெற்றி, திறமை; நிலவிருத்தி-நிலத்தைப் பற்றியது அதில் விளையும் பயிரைப் பற்றியது.

உரை விளக்கம் : மக்கள் ராசிகளில் சூரியன், சந்திரன், புதன், குரு, சுக்கிரன் இவர்கள் நிற்கினும், நோக்கினும் நட்டமுட்டி சிந்தனை மக்களைப் பற்றியதாம். இவற்றுடனே சனி நிற்கில் களவு போனது, காணாமற்போனவர் ஆகியவை பற்றியதாம். ராகு இவற்றுடன் நிற்கில் நேக்கில் கெடுதியாவது, கெடுதி நினைப்பது ஆகியவை பற்றியதாம் என்க.

இதுவுமது

தூயதாது வானமூன்றில் தோன்றுகோள் சீவன்கள்
யாதானு மாட்சிமே லாங்கயிற்றால் - ஆயதாய்,
அன்னவையே சிந்தை யவையே யிவையிவையென்
றுன்னியவர்க் கெல்லா முரை.

எ-து : தாது இராசியில் நினைத்தது காணல் கூறியது.

இ-ள் : உதயாரூடத்திற்கு ஒத்ததாய் மூன்றாம் இராசியில் நின்று வலிபெற்று நோக்கின், நோக்கின கோளுக்கமைந்த தாது மூலம் சீவன் நிச்சயித்து, நினைத்ததைப் பிடித்தல், கெடுத்தல் ஆகியவற்றை யாவருக்கும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : *தூய-குறையில்லாத; மூன்றில்-மூன்றாம் இராசியில்; தோன்றுகோள்-உதயாரூடக்கோள்; மேலாம்-வலிமேலாம்; கயிற்றால்-நோக்குக்கவிப்பால்; ஆயதாய்-அதனால் அமைந்ததாய்; உண்ணுதல்-நினைத்தல்*

உரை விளக்கம் : உதயாரூடக் கவிப்பிற்கு ஏற்புடைய மூன்றாம் இராசியாலும், அதில் நின்ற கோள்களின் வலி, நோக்கு ஆகியவற்றாலும், நட்டம் முட்டி சிந்தனைகளை இன்னவையென்று பாகுபடுத்தி அறிந்துகொண்டு, நினைத்து வந்தவர்க்குக் குறைவில்லாமல் நன்மை-தீமைகளை நன்கு உரைப்பாயாக.

தாது, மூல, சீவன், கவிப்பு முற்றும்.

ஆக காண்டம் ரு-க்கு வெண்பா - *129*

பொருள் பேறு, அழிவு - காண்டம்

நன்மை - தீமை காண்பது

உடம்பெழுங்காற் கோட்களா லுற்றநோய் தீரும்
மடங்கா முகத்ததுவே வர்க்கம் - கடந்தபுன்வேர்
வேடகலா தாகில் இழந்தபொருள் கைகூடும்
பாடதுவேல் கைப்பொருளும் பாடு. 1

இ-ள் : உதய ராசியே உடம்பென்ற ஆரூடம், அவ்வாரூட ராசியே உதயமாக வந்து கெடுதி வினவிற் காணலாம் என்றும், வினவினது காணும் என்றும், உதயத்திற்குப் பத்தாம் ராசி ஆரூடமாக வந்து வினவில் ஆக்கம் என்றும், கெடுதி செயம் ஒழிவது வினவின எல்லாம் நன்றென்றும், உதயத்திற்கு நாலாம் இராசி ஆரூடமாக வந்து கெடுதி வினவின ஊறு போகாது என்றும், காணாத பொருளைக் காணலாம் என்றும்,உதயத்துக்கு ஏழாம் ராசி ஆருடமாக வந்து கெடுதி வினவின் காணாது என்றும், கையில் இருந்த பொருளும் போகும் என்றும் இப்படி ஆரூடத்தாலும், உதயத்தாலும் நாற்கண்டங்களில் வலிபெற்று நட்பு ஆட்சி, உச்சத்தோடு நிற்கின்ற கோளவை நன்றென்றும், தீய கோளாகில் தீதென்றும், பகை பகை நீச்சமாகின்றது.

அ-உரை : உடம்பு-உதயராசி; கோள்களால்-இராசியில் நின்ற, அங்கிசமான கோள்களால்; மடங்கா-மீண்டும் வராது; முகத்துவே-தோன்றிய உதய முகத்துவாகவே, வர்க்கம்-அதனதன் நட்பு, ஆட்சி, உச்சமாகிய பெருக்கம், அதன்வேர்-அக்கோளின் மூலம்; வேடகலா-இயல்புத்தன்மை நீங்கா, கைகூடும்-பாடதுவேல், உண்டானது அதுவானால்; பாடு-படுதல் (உண்டாதல், செயல்); பாடு-தீதாதல், கேடு.

வந்தவன் நின்ற இராசி பலன்

இருமூன் றிருநான்கீ ராறிரண்டின் நெறியின்
வருவான் மகிழ்ந்திருக்கு மேனும் - வருவான்
கருதியது முற்றவாம் கைப்பொருளும் போமாம்
செருவிற் பகைவருக்கே செப்பு. 2

ஏ-து : உதயத்தால் உறுபயன் காண்பது கூறியது.

இ-ள் : உதயத்துக்கு ஆறும், எட்டும், பனிரெண்டும், இரண்டுமாகிய இராசிகளில் ஒன்று ஆருடமாக வந்த நெறியில், யாவனொருவன் வினவின காரியமவை முடியாது என்றும், பொருள்திறம் வினவினதிலுள்ள பொருளும் போமென்றும், வெற்றிபற்றி வினவின் பகைவருக்கே வெற்றி என்றும் சொல்லுக.

அ-உரை : வருவான்-நட்டமுட்டி சிந்தனையுடன் வருவான்; முற்றாவாம்-முற்றுப்பெறாதாம், செருவில்-பகையிடத்தில், பகைவருக்கே வெற்றி; செப்பு-திட்டமாக எடுத்துச்சொல்.

உரை விளக்கம் : உதயராசி 2, 6, 8, 12 ஆகிய இடங்கள் ஆரூடமாகவரின் நினைத்த காரியம் முடிவுபெறாது, கையில் இருக்கிற பொருளும் நட்டமாம். எதிரியே வெல்லுவான் என்று கூறுக.

குறிப்பு :- மேற்கூறிய இராசியிடங்கள் நீங்கிய 5, 9, 11ஆம் இடங்களைச் சொல்லவில்லையாயினும், ஆரூடக்கவிப்பால் கண்டு சொல்லலாகும்.

இராசிகளில் நின்ற, பார்த்த கோள்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை ஆகியவற்றுடன் அங்கிசமான இடம், கோள் ஆகியவற்றின் வலி-மெலி அறிந்து நட்டமுட்டி சிந்தனைக்கு ஆருடம் காண்பது திட்பமாகும்.

உற்றது காணல் - பொது

தன்சரும மாமனை யுற்றாளோ டானமுதல்
தன்பகை மாற்றான்நோய் தன்நாவு - மின்னவகைத்
தன்னிழப்பு மாண்குரவர் ஆம்கரும மேபத்தும்
நன்குதயத் தான்மதித்து நாட்டு. 3

எ-து : உதயம் முதலாகக் காணும் சுழல்நெறி கூறியது.

இ-ள் : உதயராசியே ஆரூட ராசியாகத் தன் கருமம் என்றும், இரண்டாம் ராசி ஆரூடமாகிவரின் தன் குடிக்கு என்றும், மூன்றாம் ராசி ஆரூடமாகிவரின் தன்னுடன் பிறந்தார்க்கு என்றும், நான்காம் ராசி ஆரூடமாகிவரின் முதலாகி பொருள் என்றும், ஐந்தாம் ராசி ஆரூடமாகிவரின் தன்னாலான பகை என்றும், ஆறாம் ராசி ஆரூடமாகிவரின் ஆரூடமாகவரின் தன்னைப் பகைத்தவர் என்றும், ஏழாம் ராசி ஆரூடமாகவரின் தன்நாவால் வந்ததென்றும் (சொல்) நோய் பற்றியதென்றும், எட்டாம் ராசி ஆரூடமாகவரின் தன் மரணம் என்றும், ஒன்பதாம் ஆரூடமாகவரின் தன் தந்தை முந்தையோர் குரு என்றும், பத்தாம் ராசி (இடம்) ஆரூடமாக வரின் தன் செயல் அழிவென்றும், ராசிகண்ட இடங்களில் நின்ற கோள்களின் நோக்கும் வலியுமறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : தன்கருமம்-தான்செய்துவரும் அல்லது செயல் புரியவிருக்கும் காரியம்; மனை-வீடு, குடும்பம், மனைவி, மக்கள், உடன் பிறந்தார் சுற்றம்; ஆனமுதல்-சேர்த்த திரவியம்; மாற்றான்-பங்காளி, பொறாமைக்காரன், எதிரி; நோய்-தன்நோய்; நாவு-தன் பேச்சு; இன்னவகை-இன்னவாறமைந்த வகையினுடன்; தன்னிழப்பு-தன்னால் இழக்கப்பட்ட பொருள், உயிர் வகை; மாண்குரவர்-சிறந்த பெற்றோர், ஆசான்; மதித்து-சீர்தூக்கிப் பார்த்து; நாட்டு-நிலைப்பாகக் கூறு.

திரிசக்கரக் கயிற்றில் காண்பலன்

கலகனிலஞ் சேய்சேரிற் காண்கயிறாங் காரி
நலமில்சீர் நாள்கெடுதி யாகும் - மலரும்,
கதிரோன் மன்னனொடு புந்திபுகர் பொன்னன்
மதிநன் றாகவென் றோது. ***4***

எ-து : ஆரூடச்சக்கரக் கயிற்றான் அறியும் திறன் கூறியது.

இ-ள் : செவ்வாய் உதயமாகில் கலகமாய்த் தன் கருமம் நிகழுமாயினும் சித்தித்தாயென்பது கயிறாகும். இதுவே உதயமாகில் வியாதி, பிணி, நஞ்சு போன்று கொடுமையாகும். சனி உதயமாகில் கெடுதி வினவியதென்க. கோளரவில் செவ்வாய் கூடிநின்றால் விளையாட்டாக மரண ஆபத்து வந்து துன்பப்படும் என்க. நஞ்சுடன் (இராகு), சனி கூடிநிற்கில் மிகக்கெடுதி என்க. ஆதித்தனாகில் ஆசையால் நடக்காததை நினைத்தாய் என்க. புதன், வியாழன், வெள்ளி, சனியுடன் நின்றால் கலகக் காரியம் நினைத்தாய் என்க. இவ்வாறு பலாபலன் காண்க என்றவாறு.

அ-உரை : கலகநிலம்-கலக இராசி; சேய்-செவ்வாய்; கயிறு-ஆரூட திரிசக்கர ராசிக்கயிறு; காரி-சனி, சீர் நலமில்-செய்த சிறப்பு நன்மை தராது; சீர்-சிறப்பான செயல், நல்மில் நாள்-நாள் நன்மை தராது. மலரும்-காலையில் தோன்றி ஒளிரும்; மன்னன்-சூரியன்; பொன்னன்-குரு; புந்தி-புதன்; புகர்-வெள்ளி.

குறிப்பு :- " புதன், வியாழன், வெள்ளி, சந்திரன் உதய ராசியில் நின்றால் நன்மை நிகழும்" என்ற பாடபேதம் உள்ளது.

கவிப்புக்கு - காண்பலன்

வெய்யோ னெழவேந்தன் தேவார லாமச்சம்
பைய்யவே பொன்புதன் வேந்துமதி - உய்யவே
பகைபிணிதீ ரும்பாவை யான்பொருளுங் கூடும்
இவையாம் கவிப்பா னியம்பு. 5

எ-து : கயிற்றான்பெறும் கவிப்புக்குப் பலன் கூறியது.

இ-ள் : ஆதித்தன் உதயமாகில் அரசுவழி நிமித்தமாகப் பயந்து வந்தாய் என்றும், தெய்வத்தால் பயந்தாய் என்றும் சொல்லுக. கவிப்பில் வியாழன், வெள்ளி, புதன், சந்திரன் உதயமாகவந்து வலிபெற்று நின்றால், நோக்குதல் செய்தால் வந்தவர்க்கு நற்கருமம் சொல்லுக என்றவாறு.

அ-உரை: வேந்தன்-அரசன்; உய்யவே-வலிபெறவே; பாவை-பெண்

குறிப்பு : பாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட கோள்கள் குறிக்குங்கால், அவற்றுள் ஒன்று உதயமாக வலிபெற்று நோக்கில் என்று கொள்ளலாம். உரையில் ஆசிரியர் நற்கருமம் சொல்லுக என்று காட்டியது கொண்டு, பாடலில் கண்ட பகைபிணி தீரும், பெண்ணால் பெரும் பொருள் சேரும் என்பனவற்றிற்கு நன்பொருள் சுருக்கம் கூறினார் என்க.

இதுவுமது

இரண்டினோ டீரிரண்டா மோரையி லொன்று
திரண்டவனைச் சென்று கவிக்கின் - முரண்டு,
தகைத்தோ ரானாலும் தான்பொன்னங் குண்டேற்
பகைத்தோரை வெல்வர் பரிந்து. 6

எ-து : கவிப்பின் இருப்புக்குக் குருவானாகும் பகைப் பயன் கூறியது.

இ-ள் : யாவனொருவன் பகைத்திறம் வினவினபோது உதயத்துக்கு இரண்டாம் ராசியாதல், பனிரெண்டாம் ராசியாதல் ஆரூடராசியைக் கவிக்கின் வந்தபகை தீராது என்றும், குரு அவ்விராசிகளில் காரகனாகி நிற்கினும் நோக்கினும் பகை தீரும் என்றும், வெல்வர் என்றும் கூறுக என்றவாறு.

அ-உரை : ஓரை-இரண்டரை நாழிகை கொண்ட காலமாயினும், இங்கு ஓரை இனமாக ராசியாகிய இடத்தைக் குறித்தது; திரண்டவனை-ஆட்களுடன் சேர்த்து வந்தவனை; திரண்டவனை-அங்கிசமான கோள் களுடனும் பார்வையான கோள்வலியுடன் உதயமாக இரண்டு, பனிரெண்டில் வந்தவனாகிய கோளினை; முரண்டு-முரண்பாடு; தகைத்தோர்-விடாது கொண்டோர்; பொன்தான் அங்கு உண்டேல்-குருவானவன் அவ்வுதய ராசியில் இருப்பானாகில்; பரிந்து-விரைவாக.

இதுவுமது

மூன்று பதினொன்று மூடிநலந் தீமையா
லான்றவையே யல்லவையா வந்தடையும் - தோன்றிய
நற்கோ ளவையெய்தின் நன்குரைக்க தீக்கோளே
எக்காலுந் தீமை யியம்பு. 7

எ-து : உதய ராசிக்கு மூன்று, பதினொன்றின் கவிப்புக் கூறியது.

இ-ள் : உதய ராசிக்கு மூன்றாம் இராசியாதல், பதினோராம் இராசியாதல் ஆரூட ராசியைக் கவிக்கில், யாவனொருவன் வினவின காரியம் நன்மை என்றும், களவினால் கொள்ளப்பட்ட பொன், பொருள்களும் விரைந்துவரும் என்றும், வலிபெற்ற இராசியில் நற்கோள் நட்பு, ஆட்சி, மருவுதல், நோக்குதல் செய்யின் நன்மையாம் என்றும்; தீக்கோள்கள் நின்று பகை, நீச்சமாகில் தீதாம் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : மூடி-(மூடில்) கவிக்கில்; ஆன்றவையே-நன்மையானவையே; வந்தடையும்-மாறி வந்தடையும்; தீக்கோள்-பகை, நீச்சமான கோள்.

குறிப்பு :- உதய ராசிக்கு 3, 11-ஆம் ராசிகளில் நட்பு, ஆட்சி, உச்சம்பெற்ற நற்கோள்களமையின் நற்பலன் காண்பதென்றும், அந்த ராசிகளில் பகை, நீச்சக்கோள்கள் இருப்பின் தீயபலன்களாக மாற்றம் அடையும் என்றும் கவிப்புப்பலன் காண்க.

இதுவுமது

ஐந்தொன்பான் மூடின் அகன்றார் வருவார்
சிந்தித் தனகருமம் சேருமே - முந்தை
நலஞ்சிறக்கும் நாடுபகை நட்புதனம் கூடும்
தலஞ்சிறக்கும் நற்கவிப்பின் தான். ***8***

எ-து : உதயத்திற்கு ஐந்து, ஒன்பதாம் இராசிகட்கமைந்த கவிப்பு கூறியது.

இ-ள் : உதய ராசிக்கு ஐந்து, ஒன்பதாம் இராசிகள் ஆரூட ராசியைக் கவிக்கின், அகன்று பொன் பெறவருவாய் என்றும், சிந்தித்த செயலும், பொருளும் கைகூடும் என்றும், மனத்தில் நினைத்த காரியங்கள் எல்லாம் நல்லதாகும் என்றும், வலிமை பெற்ற இராசியாகிய நற்கோள் நிற்குதல், நோக்குதல் செய்யின் மிகவும் நன்றென்றும், தீய கோள் நிற்குதல், நோக்குதல் செய்யின் சிறிது நினைத்தது கைகூடும் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : மூடின்-கோள்கள் அமையின்; அகன்றார்-பொருளை நாடிச் சென்றவர்; கருமம்-நற்காரியங்கள்; முந்தை-முன்புள்ளதுபோல்; தலம்-குடியிருக்கும் இல்லம்; சிறக்கும்-வாழ்வு நலம்பெற்றுச் சிறக்கும்.

குறிப்பு :- பாடலில் நாடு நலஞ்சிறக்கும், பகை தீரும், நட்பு மிகும், தனம் கூடும் என்று பொருள் காண்க.

அமைந்த கவிப்புக்குப் பலன்

எட்டு மிரண்டும் இருமூன்று மீறாறுங்
கட்டி யவனைக் கவிக்குமேல் - நட்டங்கள்
வாரா பிணிதீரா வான்பொருள் கைகூடா
சீராருங் கோணயத்தாற் செப்பு. 9

எ-து : வந்தவனுக்கமைந்த கவிப்பு தரும் பலாபலன் கூறியது.

இ-ள் : உதய ராசிக்கு எட்டு, இரண்டு, ஆறு, பனிரெண்டு ஆகிய ராசிகள் ஆரூட ராசியைக் கவிக்குமாயின், கெடுதி வினவின் காணாதென்றும், பிணி வினவின் தீராது என்றும், நல்ல கருமம் வகைகூடாது என்றும், நட்பு, ஆட்சி, உச்சத்தோடு கோள்கள் நின்ற நயமறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : கட்டி-சேர்ந்து; அவனை-நட்டமுட்டிச் சிந்தனையுடன் வந்தவனை; கவிக்குமேல்-ஆரூடமுகத்தான் வந்ததுகொண்டு தீர்மானித்து குறிக்குமாயின்; வான்பொருள்-பொன், பூமியாகிய சிறந்த பொருள்.

உரை விளக்கம் : உதய ராசிக்கு எழுந்த ஆரூட ராசிகளே 2, 6, 8, 12 என்பன பாடலில் குறிக்கப்பட்டுள்ளன. அவைகட்கு அமைந்த கவிப்புப் பலனாக முறையே 2 -நட்டம் வாரா, 6-பிணி தீரா, 8-பொருள் வாரா, 12-நன்மை கூடாது இழப்பு நேரும் என்று கொண்டு கூட்டிக் காண்க.

கவிப்பில்-குரு, சந்திரன் வலிபெறின் நற்பலன்கள் என்றும், இராகு, சனி வலிபெறின் தீய பலன்கள் என்றும்,

பிறகோள் வலிபெறின் மத்திம பலன்கள் என்றும் நோக்கினால் சிறிது நன்மை, சிறிது தீமை என்றும் கவிப்பு ராசியின் தன்மையறிந்து கூறுக.

உதயாரூடக் கவிப்பில் - குருபலன்

செம்பொன் னெழுங்கால் சிறந்த பொருட்பேறாம்
அப்பொருட்குச் சென்றாகும் வந்தடைவார் - தம்பாற்
பிணிதீரு மொன்னார் பெரும்பகையுந் தீரும்
கணிப்புக் கவிப்பினாற் காண் 10

எ-து : ஆருடக் கவிப்பு ராசியில் குரு எழுந்த பலன் கூறியது.

இ-ள் : உதயத்திற்குமைந்த கவிப்பில் பிரகஸ்பதி எனும் குருபகவான் உதயமாயின், சிறப்பான பொருள் வந்துசேரும் என்றும், பெரும் பொருளைச் சேர்க்கச் சென்றவர்களும் சிறந்த பொருள்களுடன் திரும்பி வருவார்கள் என்றும், பிணி வினவினது தீரும் என்றும், மிக்க பகையும் நட்பாகும் என்றும், ஆரூடக் கவிப்பில் இவ்வாறு நற்கோள் நிற்கினும் இத்தன்மையனவாமென்று வினவினவர்களுக்குச் சொல்லுக என்றவாறு.

அ-உரை : செம்பொன்-குரு; பேரு-நற்பயன்; சென்றார்-கடல்கடந்தும், நாடுகளாகின்ற நிலங்கடந்தும் பொருள் ஈட்டச் சென்றார். வந்தடைந்தவர்-சிறப்புடன் திரும்ப வருவார், தம்பால்-தன்னிடம், ஒன்னார்-கூடாத பகைவர்; கணிப்பு-ஆரூட உதயக் கணிப்பு.

குறிப்பு :- உதயாரூடக் கவிப்பில் 5-மிடம், 9-மிடம் இவைகள் வரின் யாத்திரை, வணிகம், பொருளீட்டல் ஆகிய முயற்சிகளில் சென்றார் நன்மை நலமுடன் வருவார் என்றும், நினைத்தது கைகூடும் என்றும், பெரும்பகை வலியவந்து நட்பாகும் என்றும், வழக்கு வெல்லும் என்றும், மக்கள் மனை, தனம் பெருகும் என்றும் காண்க.

உதயாரூடக் கவிப்பிடங்களில் குருநின்றமையும், வலியும் கண்டு பயன் கணிக்கவேண்டும் என்பது குறிப்பாகும்.

(உதயகுரு, ஆரூடகுரு, கவிப்பில் குரு = பலன் காண்க.)

உதயாரூடக் கவிப்பில் - சுக்கிரன் பலன்

வெள்ளி யெழும்பொது மிக்கப் பெருஞ்சிறப்பாம்
ஒள்ளிய வான்பொருளும் வந்தடையும் - தெள்ளிய
பகைபிணியுந் தீரும் பணிமொழியார் சேர்வர்
தகைபொருட்க ளெல்லாந் தரும். //

எ-து : கவிப்பில் சுக்கிரன் வந்தக்கால் அறியும் பலன் கூறியது.

இ-ள் : சுக்கிரன் உதயமாகில் மிக்க சிறப்புண்டாகும் என்றும், களவுபோன பொருள் வந்துசேரும் என்றும், சொல்லுதற்கரிய மேலோங்கிய பகைவர்களும் உறவாம் என்றும், வந்தபிணி தீரும் என்றும், பெண்டிரும் அன்புடன் கூடும் என்றும், மதிக்கத்தக்கதாகிய பொருள்கள் வரும் என்றும், ஆரூடக்கவிப்பில் நிற்கினும் இத்தன்மையாகிய நற்பலன்களுளவாம் என்று, வினவினவர்களுக்குச் சொல்லுக என்றவாறு.

அ-உரை : வெள்ளி-சுக்கிரன்; எழும்போது-உதய ராசியில் எழும்போது; ஒள்ளிய-சிறந்த; வான்பொருள்-பெரும்பொருள்; தெள்ளிய-தெளிவான; பணிமொழி-மங்கை, தகைபொருள்-மதிப்பமைந்த பொருள்.

குறிப்பு :- உரையின் பொருள் விளக்கத்தினால், வெள்ளி உதயத்தில் நிற்பின் முதலிடமாகவும், ஆரூடத்தில் நிற்பின் இரண்டாமிடமாகவும், கவிப்பில் நிற்கில் மூன்றாமிடமாகவும் வலிமையறிந்து பலன் காண்க.

உரை விளக்கம் : உதயாரூடக் கவிப்புகளில் சுக்கிரன் நிற்கில் பொருள்பேறு உண்டாகும். பகை, பிணி தீரும். பெண் சுகமுண்டாகும், போன பொருள் வந்துசேரும். எல்லா நலமும் வரும் என்பதாம்.

உதய வெள்ள, ஆரூடத்தில் வெள்ளி, கவிப்பில் வெள்ளி = பலன் காண்க.)

உதயாரூடக் கவிப்பில் - புதன் பலன்

புந்தி யெழுங்கால் பொருதா ரெடுத்தவினை
சிந்தும் பகைபிணி தீருமால் - சிந்தை
முனிவ ருவப்பராம் முன்வழக்கு வெல்லும்
இனிதாம் கவிப்புக் கெளிது.

எ-து : புதன் கவிப்புக்கு இராசிபலன் கூறியது.

இ-ள் : புதன் உதயமாகில் படைத்திறம் வினவின்-பகை கெடும் என்றும், வெற்றி வினவின்-வெற்றியாம் என்றும், பகை வினவின்-உறவாகும் என்றும், பிணி வினிவின்-தீரும் என்றும், உறவுச் சச்சரவு வினவின்-வெறுத்தவர்கள் உறவு ஆவார் என்றும், வழக்கு வினவின்-வெல்லும் என்றும், புதன் ஆரூடத்தில் நிற்கில் கவிப்பில் நிற்கில் இத்தன்மைத்தானே பலனே ஆகும் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : புந்தி-புதன்; பொருதார்-சண்டையிட்டவர்; எடுத்த வினை-மேற்கொண்ட தீவினை; சிந்தும்-பயனற்றுப் போகும், (ஆல்-அசைச் சொல்); சிந்தை-மனம்; முனிவர்-கோபப்பட்டவர்; உவப்பர்-கூடி மகிழ்வர்; முன்வழக்கு-முன்னர்த் தொடங்கித் தொடரும் வழக்கு; வெல்லும்-வெற்றிபெறும்.

குறிப்பு : உதயாரூடக் **கவிப்புகளில் புதன்** நிற்கில், பகையின் தீங்குகள் மாறுபடும், அழிந்துபோகும், நட்பாகும், பிணி தீரும், நெடுநாள் பகைமாறும், வழக்கு வெல்லும் என்பதாம்.

உதயாரூடக் கவிப்பில் - மதி நின்ற பலன்

உதயத்து மாமதியா லொண்பொரு ளுண்டாக்கஞ்
சிதையாப் பெருஞ்சிறப்புஞ் சேரும் - பதையாது
சிந்தித்து முற்றும் செழுங்கவிப்புத் திண்திறத்தால்
சந்திக்கும் சார்வகையே தான். 13

எ-து : உதயாரூடக் கவிப்பில் மதியெழுந்த நற்பலன்கள் கூறியது.

இ-ள் : சந்திரன் உதயமாகில் பொருட்பேறு உண்டாகும் என்றும், கேடல்லாத சிறப்புடைத்துவென்றும், நினைத்த காரியமல்லாம் தவறாமல் கைகூடும் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : உதயத்து-உதய ராசியிடத்து; ஒண்பொருள்-சிறந்த திரவியம்; சிதையா-குறைவுபடாத; பெருஞ்சிறப்புப்பட்டம், பதவி, புகழாகிய பெருஞ்சிறப்பு; பதையாது-அவசரப்படாது; சிந்தித்து-உதய ஆரூடக் கவிப்பு ஆகிய இடங்களை நன்கு சிந்தித்து; முற்றும்-முழுமையான தெளிவுடன்; திண்திறம்-கவிப்புத்திறன்.

உரை விளக்கம் : உதயாரூடக் கவிப்பில் சந்திரன் நிற்கில், பொருள் பெருக்கம், லாபம் உண்டாகும். வெளிநாட்டில் இருந்து உயர்ந்த பொருள்களும், பொன்னும் வரும். நினைத்த காரியங்கள் தடையில்லாமல் நன்மையாகவே நிகழும் என்பதாம்.

சூரியன் - செவ்வாய் - சனி நின்ற பலன்

கொம்பி யருக்கன் குசன்சேய் மூன்றத்தி
லாம்காண் கவிப்புதைய வாரூடந் - தாம்பயிலக்
கண்டால் பொருளிழப்பு காய்தலுறு நோய்மரண
முண்டாகு மென்றே யுரை. ***14***

எ-து : உதயாரூடக் கவிப்பில் கதிர், சேய், காரி வரின் பலன் கூறியது.

இ-ள் : சனி உதயமாகில் பொருள்பேறு வினவின் இழிவாம் என்றும், ஆதித்தன் உதயமாகில் நட்பு வினவினது தீயநட்பாம் என்றும், செவ்வாய் உதயமாகில் பிணித்திறம் வினவின் மரணம் என்றும், ஆரூடங் கவிப்பில் (கோள்) நிற்கினும், நோக்கினும் இத்தன்மையே ஆகும் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : கொம்பி-வட்டமான; குசன்-சனி; சேய்-செவ்வாய்; பயில-பலன்காண, காய்தல்-கொடுமை செய்தல், கொம்மை என்பதன் திரிபுச் சொல்லே கொம்பி என்றாகி, வட்டமாகத் திரண்ட என்ற பொருளில் சூரியனுக்குரிய வடிவினை உணர்த்திற்று.

குறிப்பு :- சூரியன், செவ்வாய், சனி ஆகிய கோள்கள் உதயாரூடக் கவிப்பில் இடம்பெறின் நற்பயன் அமையாது என்பதும், வினவினது தீயவை என்றும் காணலாகும்.

கவிப்பில் - தீயகோட்பலன்

பாம்பு கொலைகளவு நஞ்சொடு சாக்காடு
சோம்பான வற்றைத் துணிந்துரைக்க - ஆமுதய
மாரூடத் தின்கவிப்பா மென்றிவற்றை ஆடரவு
நேருற்று நிற்கு மெனின். 15

எ-து : இராகு-கேது உதயமாகக் காணும் பலன் கூறியது.

இ-ள் : இராகு-கேது உதயமாக வந்தவன் கொலைத் திறம் வினவின்-கொலையுண்டு என்றும், களவு வினவின்-களவு போனதென்றும், நஞ்சு வினவின்-சொல்லின் விஷம் உண்டு என்றும், மரணம் வினவின்-மரணம் உண்டு என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : பாம்பு-இராகு, கேது; சோம்பானவை-தீயவை (கீழானவை); ஆம் உதயம்-ஆரூடச்சக்கரத்தில் ஆகிய உதய ராசி; நேருற்று-தொடர்புற்று.

விளக்கக் குறிப்பு:-உதயாரூடக் கவிப்பில் இராகு-கேது நிற்கில் கொலை, மரணம் முதலான கொடிய தீங்குகள் விளையும் என்பதும்; நேருற்று நிற்கும் என்றதனால் பாம்பு நோக்கினும் இவ்வாறான தீயபலன்களே வருவதாக அமையும் என்பதும் காண்பதாகும்.

ஓரையில் கோள் - பலன்

ஓரையிற் றீக்கோ ளுயிர்க்கே டுடம்பினைச்
சாரிற் பிணியென்று சாற்றுக - வோரைக்
கிரண்டின்கண் தீக்கோ ளிவன்தன் குடிக்கு
முரண்டாகக் கேடு மொழி. 16

எ-து : உதயராசி இரண்டாமிடம் ஆகியவற்றில் தீய கோள்கள் இடம்பெற்றதால் ஆனபயன் கூறியது.

இ-ள் : உதயத்தில் தீக்கோள் நிற்க, பிணி வினவின் உயிர்க்கேடென்றும், ஆரூடமாகிய உடம்பில் பாபக் கிரகங்கள் நிற்கின் வந்தபிணி விடாதென்றும், தாபம் உண்டாம் என்றும், உதயத்திற்கு இரண்டாமிடத்தில் பாபக்கிரகமே நிற்கில் குடிகெடும் என்றும், இவற்றோடு நின்ற கிரகம் சுபக்கிரகமாக உச்சத்தோடு நிற்கினும், நோக்கினும் பிணி, தீமை தீரும் என்றும், அவை பகை, நீச்சத்து நின்ற நோக்கின் தீராது என்றும், கிரகங்களின் குணவிசேடம் அறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : ஓரை-உதயகால இராசி (இரண்டரை நாழிகை கொண்ட காலம்), உயிர்க்கேடு-உயிருக்குக்கேடு தரும் பிணி; உடம்பு-ஆருட இடம்; குடி-குடும்பம் (சுற்றம்); முரண்டாக-நினைத்தத் தன்மைக்கு மாறா; மொழி- சொல்; "இல்லு மோரையும் பவனமுமிராசி" -பிங்கல நிகண்டு.

தீக்கோள் எழுந்த பலன்

எட்டிலிரு மூன்றிரண்டீ றாறதனில் தீக்கோள்க
லிட்டதிடை யூறுசாவுமாம் - ஒட்டின்
முறையில்லா மானபயம் முன்னவை நற்கோ
ளுறையா யவைதீர்த லாங்கு. 17

எ-து : தீக்கோள்கள் நின்ற இடங்களால் தோன்றும் தீமைகள் கூறியது.

இ-ள் : உதயத்துக்கு எட்டு, ஆறு, இரண்டு, பனிரெண்டு ஆகிய ராசிகளில் பாபக்கிரகங்கள் நிற்பினும், நோக்கினும் அதனால் மானக்குறைவு, இடையூறு, சாவு, அச்சம் உண்டாகும் என்றும், முன்னர் சொல்லப்பட்ட ராசிகளில் சுபக்கிரகங்கள் நிற்பினும், நோக்கினும் அவை உண்டாகாது என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : இடையூறு-மிகுதுன்பம்; ஒட்டின்-சேர்ந்தால்; மான பயம்-மானக்குறைவு, மரணபயம்; முன்னனை-முன்சொல்லப்பட்ட ராசிகள் (8, 6, 2, 12) அறையா-இராசியாகிய அறையிலிருப்பின்; தீர்தல்-முன்சொன்ன தீமைகள் தோன்றினும் நீங்குதல்.

குறிப்பு :- 8, 6, 12-ஆம் இராசிகள் உதய ராசிகளாயின் பொதுவாகவே முறையே மரணபயம், பிணிக்கொடுமை, பொருள், மானம் இழப்பு இவைகளாகிய பலன்களுக்கே உரியதென்று ஆயினும், சுபக்கோள்கள் கூடினும், வலிபெற்று நோக்கினும் வரும் தீமைகள் நோக்கின் வலியளவாய்க் குறைந்து காணப்படும் என்றும் காண்க.

உதயவகையிடக் கோள்களின் - பலன்

நிரையெழுங் காலாடாம் பாடெழுங்கா லாட்டை
நிரையெழுந்து காணாது, நீச்சம் - குறையில்
எருதெழுங்காற் றேள்காணா தேளெழுங்காற் காணும்
வரிசிலையா ழாங்கதுபோ லாம். /8

எ-து : சிரோதய, பிருட்டோதய ராசியிடத்து கோள்களின் வேற்று நிலைப்பலன் கூறிற்று. துலாம்-மேடம், இடபம்-துலாம், இடபம்-விருச்சிகம், தனுசு-மிதுனம் இவை ஒன்றிற்கொன்று பாடாகும் இராசிகள் என்பது குறிக்கப் பட்டுள்ளது.

இ-ள் : துலாராசி சிரோதயமானதற்குப் பாடாகிய மேடம் பிருட்டோயதயமாக ஒன்றுக்கொன்று காட்சியாம் என்றும், இடபம் உதயமாகத் துலாம் பாடாகிய ஒன்றுக்கொன்று காட்சியின் நீச்சமாம் என்றும், இடபம்

பிருட்டோதயமாக அதற்குப் பாடாகிய விருச்சிகம் உதயமாக இடபம் பாடாகிய ஒன்றுக்கொன்று காட்சியாம் என்றும், விருச்சிகம் சிரோதயமாக ஒன்றுக்கொன்று காட்சியின்றி நீச்சமாகும் என்றும், தனுசு பிருட்டோதயமாக அதற்குப் பாடாகிய மிதுனம் சிரோதயமாம் என்றும் கூடிய காட்சிகளறிக என்றவாறு.

அ-உரை : நிரை-ஆநிரை-இனத்தால் எருதைச்சுட்டி இடப ராசியாகியது; ஆடு-மேடம், பாடு-தோற்றம்; பாடெழுங்கால்-பார்வைத் தோற்றமாக எழுந்தபோது, எழுதல்-நேர்காட்சிக்கு உரியதாதல்; சிரோதயம்-தலையான இடத்தோற்றம்; பிருட்டோதயம்-பின்பக்கம், புறக்காட்சி.

இதுவுமது

கலையெழுங் கால்மருவு ஞெண்டெழுங்கால் ஞெண்டைக்
கலையெழுந்து காணாது நீச்சம் - துலையா
லரியெழுங்கால் சால்மருவும் சாலரியும் காணா
தெரிவைமீ னாங்கதுபோற் செப்பு. 19

எ-து : மகரம்-கடகம், சிம்மம்-கும்பம், மீனம்-கன்னி இவைகள் ஒன்றுக்கொன்று பாடாகும் பலன் கூறியது.

இ-ள் : மகரம் பிருட்டோதயமாகையால் மகரத்து உதயங்காணும் . . . . . கடகம் உதயமாக அதற்குப் பாடாகிய மகரம் கற்கடகத்தைக் காணும் (மகரம் உதயமாக அதற்குப் பாடாகிய கற்கடகம் காணாது நீச்சம்) சிங்கம் உதயமாக அதற்குப் பாடாகிய கும்பம் (கும்பமும்-சிங்கமும் சிரோதய மாகையால்) கும்பம் காணாதென்றும், கும்பம் உதயமாக அதற்குப் பாடாகிய சிங்கம் காணாமற் கும்பம் காணும் என்றும், கன்னி சிரோதயமாக அதற்குப்பாடாகிய மிதுனம் காணாது கன்னி காணும் என்றும், மீனம் உதயமாக அதற்குப் பாடாகிய கன்னி காணாது மீனம் காணும் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : கலை-மகரம்; மருவும்-பொருந்தக்காணும்; சால்-கும்பம்; தெரிவை-கன்னி; மீன்-மீனம்.

காட்சிக்கோள்களால் பயன்

காணாத போது கெடுதிகள் காணாவாம்
பேணாதார் வந்தடைவர் பேச்சில்லை - நாடாது
தன்னா லிருபாலும் காணுமேல் கேடின்றி
குன்றாமல் வந்தடைதல் கூறு. **20**

எ-து : உதயம், அதனால் பெரும்பாடு, அவற்றால் வரும் பயன் கூறியது.

இ-ள் : உதயமும், பாடும் ஒன்றையொன்று காணாத போது கேட்டவை, காணாது என்றும், சத்துருக்கள் ஒன்றாவதற்கு இசைவாகச்சந்து வினாவினால், சந்தாகார் என்றும், உதயமும் பாடும் ஒன்றற்கொன்று காட்சியாகிற போது, கேட்டவை அழிவின்றியே வந்துகூடும், சத்துருக்கள் உறவாவார்கள் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : நாடாது-உறவுகொள்ளல் நடக்காது; பேச்சில்லை-ஆகுமென்ற பேச்சில்லை; இருபால்-உதயமும் பாடும்; குன்றாமல்-குறையாமல்.

குறிப்பு :- சிரோதய இராசி உதிக்க பிருட்டோதய இராசி ஆரூடமாக வினவினது நட்டங்காணும். பிருட்டோதய இராசி உதயமாக சிரோதய இராசி ஆரூடமாக, வினவினது நட்டங்காணாது என்றும், உதயத்திலும் ஆரூடத்திலும் சுபக்கோள்கள் (வலிபெற்று) நிற்கில் நட்டம் விரைந்து வருமென்றும் கூறுவதறிக.

உதயத்தால் - முக்காலமறிதல்

ஈராறு மூன்றுமிரு மூன்றொன் பானிறப்பு
மோரேழு பத்துதயம் நான்கெண்ணு - பேராய
வெட்டுப் பதினொன் றிரண்டைந் தெதிர்வான்மென்
றொட்டி யுதயாதி வோர். **21**

எ-து : உதய ராசிகொண்டு நேர்காணும் ராசியால் காலமறிதல் கூறியது.

இ-ள் : உதயராசிக்குப் பன்னிரண்டு மூன்று, ஆறு, ஒன்பதுமாகிய ராசிகளால் சென்ற காலத்திலுள்ளனவும், உதய ராசிக்கு ஏழாம் ராசியும், பத்தாம் ராசியும், உதய ராசியும், நாலாம் ராசியும் நிகழ்காலத்தனவென்றும், உதயத்துக்கு எட்டாம் ராசியும், பதினோராம் ராசியும், இரண்டாம் ராசியும், ஐந்தாம் ராசியும் மேல்வருங்காலமென்றும், இப்படி நிலங்களின் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நின்ற நயப்பறிந்து நற்கருமங்கள் தேர்க.

பாபக்கிரகங்களும் பகை, நீச்சத்து நின்றனவு மறிந்து தீக்கருமங்களாகிய இத்தன்மையவெல்லாம்-யாவனொருவன் வினவினக் காலமறிந்து.

உதயம் நீர்க்கீழ்ப்பாடு உச்சம் ஆகியவற்றுடன், நாற்காண்டத்தில் திரிசக்கரத்தில் சுழலவனால், சிரோதயம், பிருட்டோதயம் ஆகிய இராசிகளின் உதயம் அத்தமனம் இரண்டினாலும் அறிந்து, ராசியும் ஒத்த பார்வையும் ஓரிரு ராசியும் காணும் அத்தும் அறிந்து, தாதுமூலம் நிச்சயித்து நட்டாமுட்டிச் சிந்தனை முதலாயினவெல்லாம் தப்பாமற் சொல்லுக என்றவாறு.

அ-உரை : ஈராறு-பன்னிரண்டாம் இராசி; இறப்பு-இறந்தகாலம்; உதயம்-நிகழ்காலம்; எதிர்வு-வருங்காலம்; அத்து-ஆதரவு, பற்றுக்கோடு.

உரை விளக்கம் : "கட்டிக் காட்டினாலன்றிக் கெட்டிக் காரனுக்கும் வராது" என்ற பழமொழிக்கு இப்பாடலுக்கு ஆசிரியர் தந்துள்ள உரையே சான்றாகும்.

3, 6, 9, 12 ஆகிய இராசிகள் ஆரூடமாகவரின் சென்ற காலம் என்றும்; 4, 7, 10 ஆகிய இராசியிடங்கள் நிகழ்காலத்தையும்; 2, 5, 8, 11 ஆகிய இராசியிடங்கள் வருங்காலத்தையும் உணர்த்தும் என்பதே பாடல் தரும் வாசகமாயினும்,

நாற்காண்டத்துக் கண்ட ஆரூட அடிப்படை முறைகளையும், இராசிகளின் நிலைகளையும், இராசிகளில் கோள்களின் நிலைகளையும், உதய-அத்தமனங்களையும், வலிநிலை களையும், நோக்கின் தரத்தினையும் திரிசக்கரச் சுழல் நிலையிலமைந்த இராசி கோள்களையும் கவனமாகவும் முறையாகவும் அறிந்து சிந்தித்து, வந்தவனின் நட்டாமுட்டி சிந்தனைக் காலத்தினைத் தப்பாமல் கண்டுகூறு என்பது அறியத்தக்கதாகும்.

உதயாரூட பலன்

நிற்பன நான்கும் நிறைந்தெழுங்கால் நட்டங்கள்
அற்பம் அழியா தகத்தனவாம் - மற்றும்
படைவரவு சாவுகே டில்லைநோய் தீரா
கொடைபெறும்பே ருண்மையெனக் கூறு. 22

எ-து : உதயாரூடத்தாற் காணும் இராசிகள் கூறியது.

இ-ள் : திரவி ராசியாகிய இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் இவை உதயமாகக் கெடுதி வினவின், போக்கில்லை வருமென்றும், படை வரவு, சாவு, கேடு இல்லை என்றும் பிணி தீராது என்றும், கொடுத்தவை வாங்குவதாவது கூடாது என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : நிற்பன-நிலையான திரராசிகள் (ஸ்திரம்); அற்பம் அழியா-சிறிதும் அழியாது; படை வரவு-படைவரவினால்; கேடில்லை-சிறிதும் கெடுதல் இல்லை; கொடைபெறும்-கொடுத்தவை கொடுத்தவைதான் மீண்டுப் பெறவியலாமை பெறும்; பேருண்மை- இது பெரிய உண்மயாகும்.

உபய ராசியின் பலன்

இருமாண் பிராசி யெழுதருங் காணட்டம்
வருமாண் பிலைவழியு மேகா - வருநோய்,
தணியா பெரும்பகையுஞ் சந்தாகும் கல்வி
துணிவார்க் கவைசுருங்கச் சொல். 23

எ-து : உபயராசி உதயமாகில் காணும் பலன் கூறியது.

இ-ள் : உபய ராசியாகிய மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இவை உதயமாக வினவில், கெட்ட பொருள் வாராது என்றும், யாத்திரை போகலாகாது என்றும், போனவர்கள் திரும்ப நாட்செல்லும் என்றும், பிணி தணியாது என்றும், பகையாகி வருகின்றவன் யாவனொருவன் வினவின் காலத்தில் தன்மையாவார் என்றும், கல்வி, வித்தை ஆரம்பம் செய்யின் அற்பம் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : இருமாணிபிராசி-உபயராசி, சந்தாகும்-ஒற்றுமையாகும் (சமாதானமாகும்); துணிவார்-முற்பட்டவர்; தன்மையாவார்- சமாதானம் அடைவர்.

குறிப்பு :- உபயராசியாகிய மிதுனம் முதல் நான்கும் உதயமாக பொருள், யாத்திரை, யாத்திரை போனவர், பிணி, பகை, நட்பாதல், கல்வி ஆகியவைபற்றிய பலாபலன்கள் அறிந்து கூறுதற்காகும். தொகையாகக் கூறிய ராசிகளும் உதயமான ராசி ஒன்றைக் கொண்டும் கூறுதற்காகும்.

சரராசியால் காணும் பலன்

சுழலவன் தோன்றுங்கால் தோன்றும் கெடுதி
யழியுமவன் நோய்தணியு மாமற் - றழிவின்றி
நண்ணும் பெரும்பொருள்கை கூடும், கடுங்கோளால்
திண்ணம் கெடும் பொருட்குச் செப்பு. *24*

எ-து : சர ராசி உதயமாகிற் காணும் நற்பயன் கூறியது.

இ-ள் : சர ராசியாகிய மேடம், கற்கடகம், துலாம், மகரமாகிய இவை உதயமாக (உதிக்கின்ற கோளும் சிரோதயமாகின்ற கோளாலும் கெட்டபொருள் காணாது என்று அறிக.) இனிமையானவை ஆகுமென்றும், கொடுத்த பொருள் இழப்பின்றியே வருமென்றும், யாத்திரை போனார்

வருமென்றும், படைவரவு உண்டென்றும், இத்திறத்தன வினவின காலத்தில் இராசிகளில் நின்ற கோள்கள் ஒன்றிற்கொன்று நன்னயத்தோடு நோக்கிலவன் வினவின நன்மைகள் வருமெனவும், தீயகோள் நின்று நோக்குதல் செய்யின் தீயன வருமென்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : சுழமுவன்-சரராசி; கடுங்கோல்-தீயகோள்; சர ராசிகள்-மேடம், கடகம், துலாம், மகரம் ஆகிய நான்கு ராசிகள் பொருள் திண்ணம் கெடும் என்று கூட்டுக.

தீக்கோள்கள் பார்வைக்குப் பலன்

ஊர்தி குடையுதய மூன்றிற் கடுங்கோள்கள்
சேர அவற்றிற்குச் சென்றேழின் - நேராகக்
காணுமேற் கேடொருவன் கைப்படுமாம் நற்கோற்கள்
பேணுமேற் பேருண்மைப் பேசு. 25

இ-ள் : ஆரூடக் கவிப்புதையமாகியபோது, மூன்றாம் இராசியில் கொடிய கோள்கள் நிற்க, அவற்றிற்கு ஏழாம் இராசியை நேராகக்காண்-தீங்குகள் வினவினவனிடத்து அவை தோன்றி நிற்கும். நற்கோள்கள் நிற்பினும் நோக்கினும் நன்மையாகவே ஆகுமென்று கூறுகவென்றவாறு.

அ-உரை : ஊர்தி-பரிவேடக்கோள்; குடை-கவிப்பு; சேர-கூடிநிற்க; நேராகக் காணுமேல்-ஏழாம் பார்வையாக நேர்க்காணுமானால்; பேணுதல்-அமைதல்; பேருண்மை-பெரிய உண்மை.

உரை விளக்கம் : உதயாரூடக் கவிப்புகட்கு மூன்றாம் இடத்தில் பாபக் கோள்கள் நிற்கவும், அவற்றைத் தீயகோள்கள் ஏழாம் பார்வையாகப் பார்க்கவும் வினவினவனுக்கு நட்டம் தானே வரும், தீமைகள் நேரிடும். சுபக்கோள்கள் ஏழாம் பார்வையாகப் பார்க்கத் தீமைகள் மாறி நட்டமும் தீமையும் தணிந்து போகும்.

நன்மையும் தீமையும் காணல்

ஒன்பானைந் தேழென் ருரைத்தவிம் மூன்றிடத்தும்
அன்பான்ற நற்கோ ளணைந்துமே - இன்பமாகக்
காணும், கெடுதி கடுங்கோட்க ளன்னிலத்தைப்
பேணுமேற் பேரின்மைப் பேசு. *26*

எ-து : உதயத்துக்கு ஒன்பானைந்தேழு இடங்களில் கோள்கள் நின்ற பலாபலன் கூறியது.

இ-ள் : ஆருடக் கவிப்புதயத்திற்கு ஒன்பது, ஐந்து, ஏழு என்று சொல்லத்தக்க நிலங்களில் நற்கோள்கள் நிற்றல், நோக்குதல் செய்யின் மகிழ்வாகக் கெட்டனவாகிய பொருள் திரும்பக் காணுமென்றும், தீயகோள்கள் நிற்பினும் நோக்கினும் கெட்டன காணாது என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : அன்பான்ற-நட்பமைந்த; அணைதல்-சேர்தல்; இன்பமாக-மகிழ்வடையும்படியாக; கடுங்கோள்கள் இம்மூன்று நிலத்தினையும் சேர்ந்திருக்குமாயின் கெடுதியும், நற்பெயரில்லாமையும் வரும்-என்று பொருள்காண்க; நிலங்கள்-ராசிகள்; கெட்டன-கைவிட்டுப் போனபொருள்கள்.

உரை விளக்கம் : ஆருட உதயத்தில் 5, 7, 9ஆம் இடங்களில் சுபக்கோள்கள் நிற்கில் நல்லன என்றும், தீயகோள்கள் நிற்கின், நோக்கின் நட்டம், தீமை காணுமென்றும் காண்க.

தீங்கின் வலிமையறிதல்

நேர்வதற்கும் ஏற்பதற்கும் நின்றமூன் றைந்தொன்பான்
சீருடைநற் கோள்சேரின் காணுமாம் - தூர
நடக்குங்கோ ணின்றிடின் நட்டங்க ளெல்லாம்
கிடக்குமக் கோள்திசையே கேடு. *27*

எ-து : உதயத்திற்கு நான்கும், நின்ற மூன்று, ஐந்து, ஒன்பது ஆகிய இராசிகளிலும் கோள்கள் நிற்பதற்குரிய கெடுதி வலிமை கூறியது.

இ-ள் : உதயம் பார்த்து, அதற்கு நான்காமிடத்தில் சுபக்கிரகங்கள் நின்றதற்கு மூன்று, ஐந்து, ஒன்பது ஆகிய நிலங்களை நோக்கின், சீவனாய் நடந்து போகினும் தக்க கெடுதியானவை காணும். தூரம் போக்கினும் வந்தடையும் என்றும், தீய கிரகங்களாய் உள்ளவை அப்பொழுது வலி பெற்று நோக்கின், அக்கோளின் திசையிலே நட்டங்கள் யாவையும் தொடர்ந்து கிடக்கும் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : நேர்வது-உதயராசி; ஏற்பது-அதற்கு எதிர் நான்காம் ராசி; சீருடை-சிறப்பமைந்த; தூர-தொலைவாக; கிடத்தல்-நிலைப்பாக இருத்தல்.

குறிப்பு :- பாடலில் *சீருடை நற்கோள் சேரின் காணுமாம்* என்பதற்கு உரையில் கெடுதி கூறியுள்ளார். எனினும், உதயத்திற்கும், 3, 5, 9ஆம் இராசிகள் நல்லிடங்கள் என்பதும், அதில் நற்கோள்கள் சேரின் நற்பயன்களே காணும் என்பதும் முன்னைய பாடற்பகுதிகளால் அறியமுடிகின்றது.

போன பொருள் தானேவரும்

மூன்றிற் கடுங்கோளாய் மூன்றிரண் டீரிரண்டில்
தோன்றிய நற்கோள்கள் தோன்றுமேல் - ஏன்ற
வறியாமை யாலிரிந்த வான்பொருளை நேர்வான்
தறியான் கொணர்ந்து தரும். ***28***

எ-து : கைவிட்டுப்போன பொருள் தானே வந்தடையும் என்பதற்கு ஆரூட இடங்கள் கூறியது.

இ-ள் : உதயத்துக்கு மூன்றாமிடத்தில் தீக்கோள் நிற்க, அதற்கு இரண்டாமிடத்தில் நற்கோள் நிற்பது - போன பொருள் கெடாது என்றும், அப்பொருள் கெட்டன என்று நினைக்கும்

போது, ஒருவன் அப்பொருளை அடைந்தவனாகி, தானே பற்றிக்கொள்ளாமல் கொண்டுவந்து தருவான் என்று கூறுக என்றவாறு.

அ-உரை : கடுங்கோள்-கொடிய கிரகம்; ஏன்ற-பொருந்திய; அறியாமை-உண்மையறியாமை; இரிந்த-கைவிட்டுப்போன; வான் பொருள்-மதிப்புடைய செல்வம்; நேர்வான்-ஒப்புக்கொண்டவன்; தறியான்-காலதாமதம் செய்யாதவனாய்; தரும்-உரியவனிடம் தருவான்.

உரை விளக்கம் : உதயாரூடங்கட்கு மூன்றாமிடத்தில் பாபக்கோள்கள் நிற்க, அதற்கு ஐந்து, ஏழாமிடங்களில் சுபக் கோள்கள் நிற்கில் நட்டம் என்று நினைத்த பொருளை ஒருவன் தானே கொண்டுவந்து தருவன் என்று கூறுக என்பதாம். (இதனை நான்காமிடம், ஐந்தாமிடம் என்று காணவும் பாடலில் சொற்பொருள் உளது காண்க.)

கெட்ட பொருள் விட்ட இடம்

வட்டஞ் சிலைநுட்பம் வன்தூமம் வானகத்
திட்டங் கிலங்கி யிருக்குமேல் - நட்டங்க
ளேகா தவைசிதையு மெத்திசையோ வத்திசையிற்
போகா கிடக்கும் பொருள். 29

எ-து : நட்டமான பொருள் சிதைவும் இடமும் கூறியது.

இ-ள் : பரிவேடம், இந்திரதனு, நுட்பம், தூமமாகிய இவற்றிலொன்று, கெடுதி வினவினகாலத்தில் உதய ராசியில் தோன்றில், கெட்டதாகியவை போகாது அழியும் என்றும், கோள்கள் நின்றதெத்திசையோ அத்திசையில் சேருமென்றும் கூறுக என்றவாறு.

அ-உரை : வட்டம்-பரிவேடம்; சிலை-தனுசு; தூமம்-தூமக்கோள் (கேது); இலங்கி-வலிபெற்று, போகா-போகாமல், கிடக்கும் காணாமற்குடக்கும்.

உரை விளக்கம் : உதயாரூடங்களில், இந்திரதனு, பரிவேடம், தூமம், நுட்பம் ஆகிய சாயற்கோள்கள் நிற்பின் வினவினது நட்டங்காணும் என்பதும், நட்டம் உண்டான திசை, சாயற்கோள்களுக்கடைத்த திசையாகும் என்றும் கூறுக என்பதாம்.

கெட்டன காணுதல்

பின்னெழுவ தம்மைப் பிறையனார் நோக்குதயந்
தன்னிற் கெடுதிகள் சோர்விலலை - துன்னி,
நடைமெலிவான் காணுமேல் காணா, சேய் பத்தில்
அடைதருமேல் காணலா மாங்கு. 30

எ-து : பிருட்டோதய ராசியில் மதி நிற்கில் நட்டம் காணும் வகை கூறியது.

இ-ள் : பிருட்டோதய ராசி உதயமாக, அதில் சந்திரனுக்குதையனோக்குதல் செய்யின், கெட்டன சோர்வின்றியேவரும் என்றும், அவ்விராசியில் சனி நிற்கும்மேல் கெட்டன காணாதென்றும், அதற்குப் பத்தாம் இராசியில் செவ்வாய் நிற்கில் கெட்டன காணலாம் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : பின்னெழுவ-பிருட்டோதய ராசி; பிறையனார்-சந்திரன்; துன்னி-மேலும் அணுகி; நடைமெலிவான்-முடவன் (சனி); சேய்-செவ்வாய்.

உரை விளக்கம் : பிருட்டோதய ராசிகளில் சந்திரன் நிற்கினும், நோக்கினும் வினவினது நட்டங்காணாது. அந்தச் சந்திரனுக்குப் பத்தாமிடத்தில் செவ்வாய் நிற்கில் நட்டம் தோன்றும் என்பதாம். (நட்டம் - சீவன், பொருள் நட்டங்கள்).

நட்டத்திற்குத் திட்ட இடங்கள்

அரவுசனி செவ்வா யாதித்தன் நால்வர்
பரவுதய மாறைந்து பாங்காய் - விரவுமிடம்
மூன்றினாலும் நட்டங்கள் போகாது முன்வலியு
மூன்றும் முறையிதுவே ஆம். 31

எ-து : தீயகோள்கள் உதயாரூடமாகவும், இராசி இடங்களிலும் நிற்க, நோக்க நட்டங்கள் ஆகும் என்பது.

இ-ள் : உதயத்தில் ராகு, சனி நிற்பானாகில், உதயத்துக்கு ஆறாமிடத்தில் செவ்வாய் நிற்பானாகினும், ஐந்தாமிடத்தில் சூரியன் நிற்பானாகினும், மூன்றாமிடத்தில் ராகு, கேது நிற்பதாயினும் கெடுதி காணும் என்க. இதன் வலியும் பார்த்துச் சொல்லுக என்றவாறு.

அ-உரை : அரவு-ராகு, கேது; முன்வலி-கோள்களின் ஆட்சி, உச்சம்; பரவுதயம்-உதயாரூடத்தில் மாறி வருகின்ற உதயராசி.

குறிப்பு : *பரவு உதயம் ஆறு ஐந்து* என்றதனால் வந்தவனுக்கான உதயாரூடக் கணிப்பில், வந்த உதய ராசிக்கு ஆறாமிடத்தில் செவ்வாயும், ஐந்தாமிடத்தில் சூரியனும் நிற்கின் என்பது காண்க. ஆறாமிடத்தை முற்கூறி, ஐந்தாமிடத்தினைப் பின்கூறியது-ஆறு திட்டமானதும், ஐந்து சற்றுக் குறைந்ததுமான தன்மையிடங்களாதலின் என்க.

குரு, புதன் ஏழில் - நற்பலன்

பகலோன் மதியுடனாய்ப் பாட்டி லுறையி
னகலாக் கெடுதி யவையென்க - அகலாக்
குருபுந்தி யேழிற் குறித்தன வெல்லாம்
வருத்த மில்லாமல் வரும். 32

எ-து : உதயாரூடத்திற்கு ஏழில் குரு, புதன் நிற்க நற்பயன் கூறியது.

இ-ள் : ஆரூடக் கவிப்புதையத்துக்கு ஏழாம் இராசியில் சந்திரனுடன் ஆதித்தன் நிற்கில் கெட்டன தூரப்போகாது என்றும், குருவும்-புதனும் கூடி நிற்கின் சிந்தித்தது எல்லாம் வருத்தமின்றியே வரும் என்றும் கூறுக என்றவாறு.

அ-உரை : பகலோன்-சூரியன்; பாட்டில்-ஒரே நேர் இணைப்பில்; பாடு-படுதல் (அமைதல்); உரையின்-சேர்ந்து இருப்பின்; குறித்தன-வந்தவன் குறித்த வினாவிற்கு உரியதெல்லாம்.

உரை விளக்கம் : உதயாரூடத்திற்கு ஏழாமிடத்தில் சந்திரனும்-சூரியனும் கூடிநின்றால் கெடுதி நட்டம் காணும். அவ்விராசியில் குருவும்-புதனும் கூடி நின்றால் நன்மைகள் காணும் என்பதாம்.

தூய உலோக வகை காணல்

ஓரின மூவனேகில் பொன்னாகும் நாலிடத்தில்
நீரினவன் வெள்ளியுறும் காரியெனில் - தேரின
பாடா லிரும்புகெடா, பார்க்குங்கால் பத்தில்சேய்
தேடாது செப்பென்று சேர். 33

எ-து : பொன், வெள்ளி, செம்பு, இரும்பு ஆகிய உலோகங்களை ஆரூடத்தில் காணுவது கூறியது.

இ-ள் : உதய ராசியில் குருநிற்க, பொன்வகை கெடாது என்றும், உதயத்திற்கு நான்காமிடத்தில் சுக்கிரன் நிற்க வெள்ளி கெடாது என்றும், உதயத்திற்கு சனி பாடாகி நிற்கில் இரும்பு கெடாது என்றும், செவ்வாய் பத்தாமிடத்தில் நிற்கில் செம்பு கெடாது என்றும் நிச்சயமாகக் கூறுக என்றவாறு.

அ-உரை : ஓரினம்-உதயராசி (ஒன்றாகும் ராசி); மூவன்-குரு; நீரினவன்-நீர்க்கோளாகிய சுக்கிரன் (வெள்ளி); காரி-சனி; பாடால்-தோன்றுதலால்; தேடாது-மேலும் ஆராயாமல்; செப்பு-செம்பு; சேர்-சேர்த்துச் சொல்.

குறிப்பு :- சேர் என்ற குறிப்பால் பொன்னும், அதன் இனமானதும் (அணிகலன்கள்-இரத்தினங்கள்) வெள்ளி-அதன் இனமான ஈயம் முதலாயின என்று இவ்வாறு காண்க என்பதாம்.

கலப்பு உலோகம் - காண்பது

புந்தீ யுதையம் புகழ்தராப் போக்கில்லை
இந்துதய நான்காகில் வெண்கலமாம் - முந்தரவு
பட்டேழில் ஈயம் பருதிமேற் பத்திடத்தில்
கெட்டகலாப் பித்தளையாம் பேசு. 34

எ-து : உதயாரூடகோள் எழுச்சி வகையால் காணும் கலப்பு உலோகவகைக் கூறியது.

இ-ள் : புதன் உதயத்தில் நிற்கில் தராவாலானவைக் கெடாதென்றும், சந்திரன் நாலாமிடத்தில் நிற்கில் வெண்கலத்தாலானவை கெடாது என்றும், ராகு ஏழாமிடத்தில் நிற்கில் ஈயத்தாலானவை கெடாதென்றும், ஆதித்தன் பத்தாமிடத்தில் நிற்கில் பித்தளையாலானவை கெடாதென்றும், இப்படி நாற்கண்டங்களின் வலிமையறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : உதயம்-உதயராசி; தரா-கலப்பு உலோகம்; போக்கில்லை-கெட்டுப்போகாது; இந்து-சந்திரன்; அரவு-ராகு; பருதி-சூரியன், கெட்டகலா-கேட்டுப்போதல் இல்லை.

குறிப்பு :- தராவாலானவை, வெண்கலத்தாலானவை என்பது இவ்வுலோகங்களினால் செய்யப்பட்ட பண்ட பாத்திரங்கள் பொருள்கள் என்பதாம்.

உதயராசிக்கு-நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் என்று காண்க.

நாற்கால் சீவன்பற்றிய ஆரூடம்

காரி யிரவி கடுஞ்சே யிவைமூன்றுஞ்
சீரிய வுச்சிக்கண் சேருமேல் - தேரும்,
விலங்கான் நட்டமாகா மேய்ந்துதம் மூர்க்கே
விலங்கா விரைந்து வரும்.

எ-து : காணாமற்போன நாற்கால் சீவன் - திரும்பிவரும் என்பது காணும் ஆரூடமுறைக் கூறியது.

இ-ள் : சனி, சூரியன், செவ்வாய் இவை மூன்றும் உதயத்துக்குப் பத்தாமிடத்தில் நிற்கில், நாற்கால் சீவன் கெடுதியானவை போகாது என்றும், தானே திரும்பிவரும் என்றும் கிரகங்களின் வலியறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : காரி-சனி; இரவி-சூரியன்; சீரியவுச்சி-சிறந்ததும் உச்சிதமானதுமான பத்தாமிடம்; விலங்கா-விலகாமல் (தடையில்லாமல்) கெடுதியானவை-காணாமற் போனவை.

உரை விளக்கம் : "சீரிய உச்சிக்கண்" என்று ஆசிரியர் சுட்டிக் காட்டியதனால், உதயத்திற்குப் பத்தாமிடத்தில் சனி, சூரியன், செவ்வாய் ஆகிய கிரகங்களில் ஒன்றோ அங்கிசமாகியே நிற்பதுடன் நட்பு, ஆட்சி, உச்சம் என்ற வலிநிலைகளில் இருப்பதறிந்து, கெட்டதாக வினவின சீவனது நிலைகளை நுட்பமாக அறிந்து, உச்சமாகில் விரைந்து திரும்பித் தானேவரும் என்பதைக் கொண்டு கணித்து அறிதற்காகும்.

காணாத நாற்கால் சீவன் அறிய

நாற்கா லவற்றொடு நாகம் படுங்காலம்
நாற்காற் கெடுதி நயந்துரைக்க - நாற்கால்
விடத்தா னரவெழிற்கட் டாகுமிருகால்
படத்தா னெதிர்கெடப் பார். 36

எ-து : காணாமற்போன நாற்கால் சீவன் பற்றிய ஆரூடம் கூறியது.

இ-ள் : உதயத்துக்கு ஏழாம் ராசி நாற்காலாய், அதனிற் பாம்பு (இராகு) நிற்கில், கெட்டன நாற்காலானது என்றும், உதயராசி நாற்காலாய் அதனிற் பாம்பு நிற்கில், கெட்டன

வரப்பட்டு நின்றன என்றும், உதயராசி இருகாலாய் அதனில் பாம்பு நிற்கில் கெட்டன காணாது என்றும் செல்லுக என்றவாறு.

அ-உரை : நாற்கால்-நாற்கால் இராசி; நாகம்-ராகு; படுங்கால்-தோன்றி நின்றகாலம்; கட்டுப்படும்-போன இடத்தில் கட்டப் பட்டிருக்கும்; இருகால்பட-இரண்டுகால் ராசி தோன்ற; எதிர்கெடப்பார்-திரும்பிவாராது, பிறர் வயப்பட்டது என்பதைப் பார்த்துக்கொள்.

உரை விளக்கம் : "மிருகால் படத்தானெதிர் கெடும்" என்பதற்கு இருகால் ராசி பாடாக, ராகு உதயத்தில் நின்றதாகில், மனிதரால் தளைப்பட்டன என்றும் பொருள் கொள்ளலாம்.

குறிப்பு :- பொதுவாக, உதயத்திலோ, அதற்குப் பாடான இராசிகளிலோ ராகு நிற்கில், நாற்கால் சீவன் காணாமல் போனது என்பது அறிதற்காகும்.

காணாமற்போனது வீட்டில் சேர்விடம் காணல்

அலவனுந் தேளு மனையகத்து ளாகும்
உலவு கயல்மகர மொட்டின் - நிலவிய
விட்டத்தோ டேணை யிறப்பாகும் கெட்டன
இட்டதனாற் சேரு மிடம். 37

எ-து : மனையிற் காணாதுபோன பொருள் உள்ள இடம் காணும் ஆரூடம் குறித்து.

இ-ள் : உதயராசி கடகம், விருச்சிகமாயின், மனைக்குள்ளே கெட்டன என்றும், மீனம், மகரம் உதயமாகில் விட்டத்திலும் இறப்பெனும் வளைமரத்திலும் கெட்டது என்றும், கெடுதி சேருமிடமறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : அலவன்-நண்டு (கடகம்); மனையகம்-வீட்டிற்குள்; ஒட்டின்-ஒட்டிடங்கள்; விட்டம்-உத்திரவிட்டம்; இறப்பு-உள்சார்புவளை பலகை மரங்கள்; இட்டதனால்-எடுத்துவைத்ததனால்; சேருமிடம்-அபபொருள் சேர்ந்திருக்கும் இடங்களாகும்.

உரை விளக்கம் : கடகம், விருச்சிகம் இவை உதயமாகில், காணாமற்போன பொருள், மனை எல்லைக்குள் அல்லது வீட்டிற்குள் இருப்பதாகும். மகரம், மீனம் இவை உதயமாகில் சுவர்கால், சுவர், அருகுகால் ஒட்டிடம் ஆகியவற்றில், மற்றை இராசிகள் உதயமாகில் துலாத்தில், துலாத்தில் இறப்பில், கூரைவளை மரத்தில் என்று இப்படியாகக் காணாமற்போன இடமும், கோள்களில் வலிமையறிந்து கூறுக என்பதாம்.

வீட்டுப் பொருள்களுள் காணல்

செறிதூதை கூன்செங் குடங்கரகம் சால்மேல்
உறியெறிவா யுற்றகலம் காடி - குறியாக,
நன்கலங்க ளிவ்வகையி லாம்கெடுதி கோளெட்டின்
பின்கலங்கள் சோதியா யென் ! 38

எ-து : காணாமற்போன பொருள் உள்ள கலங்களின் வகைமை காணுதல் சுட்டியது.

இ-ள் : நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நாற்கண்டங்களில் வலிபெற்றுச் சக்கர ராசியில் செவ்வாய் நிற்கில் - சிறிய கலயம் என்றும், புதன் நிற்கில் - கூன் என்றும், குரு நிற்கில்-சிவந்த நிறக்குடம் என்றும் (பானை), சுக்கிரன் நிற்கில் - கரகம் (சொம்பு) என்றும், சனி நிற்கில் - கருகின நிறச்சால் என்றும், ஆதித்தன் நிற்கில் - உறியென்றும், பாம்பு நிற்கில்-சிரட்டைக் கலம் என்றும், சந்திர நிற்கில் - சாடிப்பானை என்றும், இப்படியாகக் கெடுதியிருக்கும் பாத்திரங்கள் அறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : செறிதூதை - சிறுமரப்பானை (மரக்குடுவை); கூன்-தானியப்பெரும்பானை; தாழி-தொம்பை; செங்குடம்-சிவந்த நிறமுடைய மண்பானை; கரகம்-சொம்பு; சால்-தாழிப்பானை; மேல் உறி-மேலே தொங்கும் உறி; எறிவாயுற்ற கலம்-மேல்மூடிவைத்தஉலோகப்பானை;

காடி - மண்சாடி; கோளெட்டின் - கோளெட்டினைக் கொண்டும்; இவ்வகையில் - இந்த முறைப்படியே, கெடுதி - கெட்டது, காணாமற் போனது, காணாமற்போனது; கலங்கள் சோதியா - குறித்த பாத்திரத்தினைச் சோதித்துப்பார்; என் - என்று கூறுக; சிரட்டைக்கலம் - தேங்காய் ஓடு.

களவாடியது ஆண், பெண் அறிதல்

நின்ற கயறோ டெழுவதென் றீரிடத்தி
லொன்றிலான கோளுதயத் துண்டாகிற் - குன்றாத
ஆண்மகனே கொண்டான், கெடுதி சமனாகிற்
பெண்டுகளே கொண்டதெனப் பேசு. 39

எ-து : உதயாரூட ஆண் - பெண் ராசிகள் கண்டு, களவாடியவர் அறிதல் கூறியது.

இ-ள் : ஆருடம், உதயம் ஆகிய ராசிகளில், உதயராசி, ஆண் ராசியாய் அதில் ஆண் கோளும் நிற்கில் - ஆண் எடுத்தது என்றும், ஆரூட ராசி பெண் ராசியாய் பெண்கோள் அதில் உதயமாகி நிற்கில் பெண்ணெடுத்தது என்றும், ஒழிந்ததில் - உபயராசியாகில் ஆண் என்றும், சமன் இராசியாகில் பெண் என்றும், நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நின்ற கோள்களின் வலிபார்த்துக் கள்ளரானவர் ஆண் - பெண் என்று நிச்சயித்துச் சொல்லுக என்றவாறு.

அ-உரை : மயிறு - ஆரூட ராசி; எழுவது - உதயராசி, குன்றாத - தவறில்லாமல்; கெடுதி - கெட்டுப்போனது காணும் இடம், பெண்டுகள் - பெண்கள்.

குறிப்பு :- உரையாசிரியர், மூலப்பாடல்களில் இலைமறைக்காயாக நூலாசிரியரால் சொல்லப்பட்ட ஆரூட ரகசியங்களை பாடலின் நுட்பம் அறிந்தும், அனுபவத்தினைக் கொண்டும் விளக்கமாக உரை எழுதி இருப்பதனை இப்பாடல் உரை நன்கு புலப்படுத்துவது அறியத்தக்கதாகும்.

நட்டத்திற்குச் சிறப்பு விதி

மறிகடகம் மங்கை வரின்கெடுதி வாரா
நிறைகுடம் சேவொடுவில் சேரும் - குறியாகப்
பொன்னொழிய வெக்கோளும் பாட்டிற் புகுமாகில்
தன்னுழைக்கு வாராமைச் சாற்று. **40**

எ-து : கெடுதி காணாமைக்கும் காணுதற்கும் உதயாருட இராசி நிலைக் கணிப்புக் கூறியது.

இ-ள் : மேடம், கடகம், கன்னியில் ராசி உதயமாக, அதில் நற்கோள் நிற்கினும், நோக்கினும் கெடுதி வாராது என்றும்,

கும்பம், தனுசு, இடபம் உதய ராசியாகி அதில் நற்கோள் நன்னயத்தோடு நிற்கினும், நோக்கினும் கெடுதி காணும் என்றும்,

வியாழன் ஏழாமிடத்தே நின்றால் காணும் என்றும், மற்றைய கோள்கள் ஏழாமிடத்தே நின்றால் கெடுதி காணாது என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : மறி-ஆடு (மேடம்); மங்கை-பெண் (கன்னி); குடம்-கும்பம்; சே-எருது (இடபம்); வில்-தனுசு குறியாய்-குறிப்பாக, பாட்டில்-நேர் பாடாகும் ஏழாமிடத்தில், புகுமாயில், சேர்ந்திருக்குமாயின்; தன்னுழைக்கு-தன் பக்கத்திற்கு (ஏற்புடைய நன்மை); சாற்று-எடுத்துக் கூறுக.

குறிப்பு :- குரு ஏழாமிடத்தே நின்றால் காணும் என்பது, குருவின் ஆட்சியானறிதலாகும். நட்பு, உச்சமாகில் நாட்பட்டுக் காணும் என்றும், முயற்சியால் காணும் என்றும் அறியலாகும்.

பிறகோள்கள் என்பது சனி, செவ்வாய், ராகு என்றறிக. இவைகள் தோன்றில் கெட்டது காணாது என்றறிதற்காம்.

மகரராசி உதயராசியாகி அதில் நற்கோள் நிற்கின் கெட்டது கெடாது-காணுதற்குக் காலம் நீட்டிக்கும் என்றறிக.

கெட்டன சென்ற திசையறிதல்

எப்பா லவர்க்கும் திசையினோ டெக்கோளு
மப்பாற்கே கேடென் றறிந்துரைக்கத் - தப்பாது,
தன்னிறமே கேட்டவற்றின் தன்மைகளும் கொண்டாரு
மென்னிற்முன் தோதுரைக்க மிக்கு. 41

எ-து : கெட்டவனாகிய பொருள் சென்ற திசையும், குறியும் அறிதல் கூறியது.

இ-ள் : ஆரூடத்தில் நின்று வலிபெற்று நோக்கின் கோளுக்கடைத்த திசையே கெடுதியானவை போயிற்று என்றும், கோளின் நிறத்தனவே கெடுதியான தன் நிறம் என்றும், கோளுக்குரிய குணம் எல்லாம் அவர்களிடத்து உண்டென்றும் அறிந்துசொல்லுக என்றவாறு.

அ-உரை : எப்பாலவர்க்கும்-ஆரூட ராசியில் நின்ற எத்தகைய கோளானதற்கும்; திசை-கோளுக்குரிய, கோள்களுக்குரிய, கோள் நோக்கிய திசை; கேட்டவற்றின்-ஆரூடங்கேட்பான் கேட்ட கெட்டனவாகிய பொருளின், கொண்டார்-களவாடிக்கொண்டவர்; என்னில்-எத்தகையினர் என்று கேட்பின்; தோது-அதற்கான செய்தி; மிக்கு-கோளின் வலியறிந்து மிகுதியாகச் சொல்.

உரை விளக்கம் : ஆரூட ராசியில் வலிமைபெற்ற கோள் எதுவோ, அது நோக்கிய திசையே களவுபோன பொருள் போன திசை என்றும், அக்கோள் என்ன நிறமோ அல்லது அக்கோள் நோக்கின இடத்துக்கோள் என்ன நிறமோ அதுவே அப்பொருளின் நிறம் என்றும், அக்கோளுக்குரிய நிலம், குணம் முதலியவற்றோடு மரு, வடு முதலியவைகளோடு கூடியவர்களே அக்களவு செய்தவர் என்றும் தப்பாமல் பார்த்துக் கூறவும் என்பதாம்.

நட்டம் சேர் திசை, பொருளளவு காணல்

ஆரூட மானபோ தெத்திசையோ அத்திசையே
சேருமேற் கெடுதி சேருமாம் - சீருடைக்கோள்
கண்டனவும் கண்ட விராசிக் கெதிருதயங்
கொண்டபொரு ருள்ளளவுங் கூறு. 42

எ-து : களவுபோன பொருள் சேர்ந்த இடமும், அளவும் கூறியது.

இ-ள் : யாவனொருவன் வந்தேறின ஆரூடராசி அப்போதைக்கு எதுவோ அத்திசை நோக்கினது என்றறிந்து களவு போனவை அத்திசையே போனது என்றும், ஆரூடத்தை நட்பு, ஆட்சி, உச்சத்தோடும் நின்று நோக்குதற்கமைந்த கோளுக்கடைத்ததில் நான்காம் ராசிக்கும் அதற்கெதிர் நான்காம் ராசிக்கும் பொருந்தியது கொண்டு கெடுதியானவை இத்தனைப் பொருளென்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : கெடுதி-களவுபோன பொருள்; கண்டன-நோக்கின கோள்; கொண்ட பொருள்-களவில் கொண்டுபோன பொருள்; அளவு-இத்தனை என்ற அளவு.

உரை விளக்கம் : ஆருடத்தைக் கணித்தபோதமைந்த திசை எதுவோ, அதுவே களவுபோன பொருள் போன திசை என்றும், ஆருடத்தை நோக்கும் இராசி எத்திசையோ அத்திசையே நட்டம் சேர்ந்த திசை என்றும், நோக்கிய கோளுக்குரிய கதிர் எத்தனையோ களவுபோன பொருளின் அளவும் அதுவாகும் என்றும், இராசிகளின் அளவுகொண்டு தொகையளவும் கண்டு கூறுக என்பதாம்.

அளவு-எண்ணளவு, கூடிய தொகுப்பளவு, தொகை அளவு.

களவுபோன பொருள் வைக்கப்பட்டுள்ள தடம் காணல்

அட்டின்மேற் பொன்னாம், அடுப்பின் முடவன்,சே
யோட்டில், புகர்மதிநீர், பாம்புமுறை - ஒட்டில்
தூதுவன் பானாச் சுவர்மேடு சொன்னநிலம்
ஓது முறையே யுணர்ந்து. 43

எ-து : களவுபோன பொருளுள்ள இடம்காணல் கூறியது.

இ-ள் : உதயத்தில் குரு நிற்கினும், நோக்கினும் - யாகசாலை என்றும், தேவஸ்தானம் என்றும், ஏழாமிடத்தில் சனி நிற்கில் - நெருப்புள்ள இடமென்றும், பத்தாமிடத்தில் செவ்வாய் நிற்கில் வெந்தவோடுள்ள இடம் என்றும், நான்காமிடத்தில் சுக்கிரனும், சந்திரனும் நிற்கில் - நீர் சேர்ந்துள்ள இடம் என்றும், ஏழாமிடத்தில் பாம்பு நிற்கில் - முழையுள்ள இடம் என்றும், புதன் உதயத்தில் நிற்கில் சுவர் பொதும்புள்ள இடம் என்றும், மற்றவை பத்தாமிடத்தில் நிற்கில் - உயர்ந்த நிலம் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : அட்டின்மேல்-அடுப்பின்மேல் (பரண்); அடுப்பில்-அடுப்பிடத்தில்; ஓட்டில்-கூரை ஓட்டினுள்; நீர்-தண்ணீருள்ள இடத்தில், நீர்நிலைகள்; முழை-சாளரம் சந்து பொந்து; ஓட்டில்-சுவரொட்டில்; சுவர்-சுவரில்; மேடு-மேடான இடத்தில்; நிலம்-வைக்கப்பட்டுள்ள இடம்.

குறிப்பு :- உரையாசிரியர் பாடல்தரும் குறிப்புக்கு விளக்கமாக உதயராசி, 7, 10, 4-ஆம் இராசிகள் ஆகியவற்றினை நோக்கிப் பயன்காணும் முறைமையினை அனுபவமாகக் கூறியிருப்பது அறியத்தக்கதாகும்.

இதுவுமது

கதிரா லயம்சுனை கால்கனல் சேரிடஞ்சேய்
புதனாடல் பாடல்பொன் வேதம் - தொடர்சிறை
மன்றுபுகர் காரி மருவுகின்ற பாழ்தேயம்
நின்றவை சேரிடமாக நேர். 44

எ-து : களவுபோன பொருள் பொதிந்த இடங்கள் மேலும் கூறியது.

இ-ள் : சூரியனுதயமாகில்-ஆலயம், சுனை என்றும், செவ்வாய் உதயமாகில்-அக்னி சேரிடம் என்றும், புதன் உதயமாகில்-ஆடல்பாடலுள்ள இடம் என்றும், வியாழன் உதயமாகில்-வேதசாத்திரமுள்ள இடம் என்றும், சுக்கிரன் உதயமாகில்-சிறைச்சாலை என்றும், சனி உதயமாகில்-பாழடைந்த கோயில் என்றும், கெடுதி சேரிடம் சொல்லுக என்றவாறு.

அ-உரை : கதிர்-சூரியன்; ஆலயம் சுனை-கோயில் கிணறு; சுனை-நீர் ஊறும் கிணறு; கால் கனல்-கொழுந்துவிடும் தீ (தட்டான் உலை, கொல்லன் உலை); ஆடல் பாடல்-ஆடல்பாடல் நிகழும் இடங்கள், வேதம்-வேதம், சாத்திரம் பயிலுமிடம், சிறைமன்று-சிறைச்சாலையில் உள்ள மேட்டிடம்; பாழ்தேயம்-பாழடைந்த இடம்-கோயில் மனை, நின்றவை-களவு போனவை; நேர்-உறுதிப்படுத்து.

குறிப்பு :- யாவனொருவன் வந்தபோது ஆரூடக் கணிப்பில் உதயமாகியதோ, அந்த ராசியே உதயராசியாகக் கொண்டு அதில் உதயமான கோள்நிலை வலியறிந்து களவுபோன பொருளுள்ள இடத்தினைச் சிந்தித்துத் திட்டமாக அறிந்து கூறுக என்பதாம்.

அசுவினி முதலாய உடுக்கல் வழி - காணல்

ஊரும் நகருமுயர் காடுங்கா டிச்சாலும்
சேர்தரு காட்டிற்கீழ் தேவரிடம் - தேரில்
சொரிநெல் விடமாளிகை சூழ்குப்பை யென்பான்
பருதிமுதல் பாம்பீறாப் பார்! 45

எ-து : அசுவினி முதலாய நட்சத்திரங்களுக்கமைந்த உதயராசி வழி கெடுதி காணல் கூறியது.

இ-ள் : யாவனொருவன் கெடுதி வினவின காலத்தில் உதயராசியால் உதித்த நட்சத்திரம் அசுவினியாகிற் கெடுதி ஊரில் என்றும், பரணியாகில் -நகரிடத்தென்றும், பேருடைய இடமென்றும், கார்த்திகையாகில்-காடென்டும், ரோகிணி

யாகில்-காடிச் சாலென்றும், மிருகசீரிடமாகில்-கட்டில்கீழ் என்றும், திருவாதிரையாகில்-தேராயம் என்றும், புனர்பூச மாகில்-கொட்டில் நெற்களஞ்சியம் என்றும், பூசமாகில்-மாளிகை என்றும், ஆயில்யமாகில்-குப்பையிடம் என்றும், கெடுதியிருக்குமிடம் அறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : உயர்காடு-பெரியகாடு; காடிச்சால்-கள்சால் முதலியன; தேவரிடம்-தெய்வத்தலம், கூடம், அறை முதலியன, தேரில்-ஆராயின்; சொரி நெல்லிடம்-நெல் சொரிகின்ற களஞ்சியம் கட்டடம், பருதி முதல் பாம்பீறாக-சூரியன் முதல் ராகு-கேது அளவாக.

குறிப்பு :- உதய ராசிக்குரிய நட்சத்திரங்கள் இவை என்பதறிந்து, அந்நட்சத்திரங்களின் இயல்புக்கமைந்த பொருள்களை அறிந்து, அவ்விடத்தில் களவுபோன பொருள் உள்ளதென்று ஆராய்ந்து கூறுக என்பதாம்.

மகம் முதல் கேட்டை வரையில்

நெற்குதிர் பாழ்வீடு நீர்க்கயம் நீர்த்துறை
நற்செய் பருத்தி விளைநிலம் - பற்றைப்பாழ்
காட்டுட னொன்பான் மகமுதலாம் கேட்டையாம்
நீடுமிவைக் காணும் நிலை. **46.**

எ-து : மகம் முதலாகக் கேட்டை வரையாம் ஒன்பது உடுக்களுக்காம் கெடுதி சேர்விடம் கூறியது.

இ-ள் : மகம் உதிக்கில்-நெற்குதிரை என்றும், பூரம் உதிக்கில்-சேட்டப்பாழ் என்றும், உத்திரம் உதிக்கில்-பாழ் மனை என்றும், அஸ்தம் உதிக்கில் - கசம் என்றும், குளக்கரை என்றும், சித்திரை உதிக்கில்-பருத்தி விளையும் நிலம் என்றும், சுவாதி உதிக்கில்-நஞ்செய் நிலம் என்றும், விசாகம் உதிக்கில்-பாழ்நிலம் என்றும், அனுஷம் உதிக்கில்-விளைவு நிலம் என்றும், கேட்டை உதிக்கில்-காடு என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : கயம்-ஆழமான நீர்த்தடம்; நீள்துறை-குளக்கரைத்துறை, ஆற்றங்கரைத்துறை போன்ற இடம்; நற்செய்-நன்செய் நிலம்; பற்றை-புதரும் பாறையுமான நிலம்; சேட்டைப்பாழ்-அழிவினால் பாழான இடம்.

உரை விளக்கம் : மகம்-நெல் களஞ்சியம், பூரம்-பாழிடம், உத்திரம்-பாழ்வீதி, அஸ்தம்-நீர்க்காயம், சித்திரை-நீர்க்கரை, சுவாதி-நெல் வயல், விசாகம்-பருத்தி நிலம், அனுஷம்-கறம்பு நிலம், கேட்டை-பாழ்பட்ட நிலம், காடு என்று இவ்வாறு களவு போனது உள்ள இடம் கண்டு கூறுக என்பதாம்.

மூலம் முதல் ரேவதி வரை

குதிரைநிலை வார்கூரை வண்ணான் துறையாம்
கருதில் நிலையாலை மன்செக்கு - முதிர்வீடு
தென்கிழ் வனைசெரு பூந்தோட்டம் மூலமுத
லொன்பானா ளுற்ற விடம். 47

எ-து : மூலம் முதல் ரேவதி ஈறான ஒன்பது நட்சத்திரங்களால் கெடுதி சென்று சேர்விடங்கள் கூறியது.

இ-ள் : மூலம் உதயமாகில்-குதிரை லாயம் என்றும், பூராடம் உதயமாகில்-கூரை வீட்டின் இறக்கச் சார்பு என்றும், உத்திராடம் உதயமாகில்-வண்ணான் துறையிடம் என்றும், திருவோணம் உதயமாகில்-செக்காடுமிடம் என்றும், சதயம் உதயமாகில்-பழைய சாலை என்றும், பூரட்டாதி உதயமாகில்- ஊரின் தென்கீழ் வனையாம் பறைச்சேரி என்றும், உத்திரட்டாதி உதயமாகில்-செரு விளைவு இடம் என்றும், ரேவதி உதயமாகில்-பூந்தோட்டம் என்றும் இந்த நாளில் சொல்லப்பட்ட நிலங்களிலே கெடுதியானவை சேரும் நிலமறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : குதிரை நிலை-குதிரைக்கட்டுமிடம்; வார்-நீண்ட தாழ்வாரம்; நிலை ஆலை-கரும்பு ஆலை போன்ற யந்திரங்கள் நிலையாக

உள்ள இடம்; மன்-நிலைப்பான; முதிர்வீதி-பழைய வீதி; தென்கீழ்-தென்கீழ்திசை; வனை-கீழ்வனை (தாழ்ந்த மக்கள்); செரு-திருத்திய விளைவு செய்த பூமி.

குறிப்பு :- 45, 46, 47 எண்ணுள்ள பாடல்களில் அசுவினி முதல் ரேவதி ஈரான 27 நட்சத்திரங்களையும் (9 X 3 = 27) மூன்றுவகையாகப் பிரித்து, அவற்றாலறியும் கெட்டது, சேர்விடங்கள் கூறினார்.

களவுபோனது சேர் திசையறிதல்

ஏழுமோரை யாகி யிடபத்துள் வைத்து
வழுவா வலமுறையே யெண்ணில் - எழுமோரை
யாளுங்கோ ளெவ்விடத்து வவ்விடத்து வைப்பென்று
கோளின் குணமறிந்து கூறு. 48

எ-து : ஓரை ராசிவழி களவுபோனது செல் திசைக் கூறியது.

இ-ள் : யாவனொருவன் கெடுதி வினவின காலத்தில் உதியா நின்ற ராசியை இடபத்தில் வைத்து, வலமாக எண்ணி வந்தால் வரும் உதய ராசியில் காட்சியானகோள் எத்திசையை நோக்கினதோ அத்திசையிலே கெடுதி சேரும் என்று அறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : எழும் ஓரை-ஆருட உதயராசி; வைப்பு-சேர்த்து வைத்துள்ள இடம்; கோளின் குணம்-கோளின் திசை, காலம், நிறம், நட்பு, ஆட்சி, உச்சம் ஆகியவை.

உரை விளக்கம் : ஆருட உதயத்தை ரிஷப ராசியாக வைத்து வலமுறையே எண்ணிக்கண்ட ராசிக்கதிபதியாகிய கோள் எந்த திசையில் நின்றதோ, அந்த திசையில் கெட்டது, களவுபோனது இருக்கும் இடம் என்றறிந்து கூறுக என்பதாம்.

குறிப்பு :- ரிஷப ராசி முதலாக என்பது ரிஷப ராசியாகக் கொண்டு உதயராசி வரையில் எண்ணிக்காண்பது.

கெடுதி காணும் நாள் கணிப்பு

நாழிகை நாட்டிங்க ளாண்டொன்று ஆம்பருவ
பாழிமையாற் கோள்கொடுக்கும் பண்புணர்ந்து - சூழும்
கதிராதிக் கட்டுரைத்த காலமா மென்றே
அதிரா தறிந்துரைக்க ஆய்ந்து. **49**

எ-து : கெடுதிகாணும் காலமறிதற்காம் கோள்நிலை கூறியது.

இ-ள் : உதய ராசியை நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நோக்கின கோளின் வலியறிந்து, சந்திரன் வலியனுகில் இரண்டு நாழிகையில் என்றும், செவ்வாய் வலியனாகில் ஒரு நாளென்றும், இராசா வலியனாகில் ஒரு மாதத்தில் என்றும், புதன் வலியனாகில் இரண்டு மாதத்தில் (ஒரு பருவம்) என்றும், சுக்கிரன் வலியனாகில் ஒரு பட்சத்தில் என்றும், ஆதித்தன் வலியனாகில் ஒரு மாதத்தில் என்றும், சனி வலியனாகில் ஒரு வருஷத்தில் என்றும் இப்படி யாவனொருவன் வினவின காரியம் வந்துகூடும் நாட்களும், கதிராதியேழரை நாழிகையாகிய பொழுது, மூன்றே முக்கால் நாழிகை வருகிற காலம் இவையறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : பருவம்-இரண்டு மாதம் கொண்டது; பாழிமை-சூரியன் தெற்கும் வடக்கும் நகரும் அயன காலம்; கதிராதி-சூரிய உதயாதி; அதிராமல்-அவசரப்படாமல்.

இதுவுமது

உச்சிக்கோள் நாழிகையா மாட்சிக்கோள் நாளாகும்
மெச்சிய நட்பாகிற் றிங்களாம் - மெச்சிப்
பகைநீச மாண்டென்று பாங்குடையோர் சொன்ன
வகைமையாற் கூறல் வழக்கு. **50**

எ-து : கெடுதி காணும் கால அளவறிதற்குப் பிறிதொரு சார்பு கூறியது.

இ-ள் : யாவனொருவன் வினவின காலத்து உதியானின்ற ராசியில் உச்சக்கோள் நின்றதாகில் ஒரு நாழிகையில் என்றும், ஆட்சிக்கோள் நின்றதாகில் ஒரு நாளில் என்றும், நட்புக்கோள் நின்றதாகில் ஒரு மாதத்தில் என்றும், பகை, நீச்சக்கோளாகில் ஒரு வருஷத்தில் என்றும் இப்படி நட்பு, ஆட்சி, உச்சத்தோடு பகை, நீச்சத்தால் பல பொருளும் வந்தடையும் காலமறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : உச்சிக்கோள்-உச்சக்கோள்; வகைமை-கோள்களின் வலிநிலை வேறுபாடு.

உரை விளக்கம் : உதயத்தில் நின்ற உச்சக்கோளின் கதிர்கள் எத்தனையோ அத்தனை நாழிகை, ஆட்சிக் கோளாயின் அத்தனை நாட்களாம், நட்புக்கோளாயின் அத்தனை மாதங்களாம், பகை, நீச்சக்கோளாயின் அத்தனை வருடங்களாம் என்று இவ்வகையாக, ராசிகளில் நின்ற கோள்களின் வலிநிலையறிந்து கெடுதிகாணும் காலவகை கூறுக என்பதாம்.

மதியால் மதித்துக் காலம் காணல்

அன்று மதிநின்ற நாளினுக்குப் போதுடன்
சென்றுதயஞ் செய்யுநா ளெத்தனையோ - அந்நாளே
நாளால் வருமென்று நாமுரைத்த பல்பொருட்குக்
கோளாலுங் கொள்ளற் குறித்து. 51

எ-து : மதிநின்ற நாள் முதல் உதயம் வரையில் எண்ணிக் காலம் உணர்தல் கூறியது.

இ-ள் : யாதொரு காரியம் யாதொருவன் வினவின காலத்து, அன்று சந்திரன் நின்ற ராசியின் நட்சத்திரத்திற்கு எத்தனை நாளென்றறிந்து, அந்நாளில் கெடுதியானவை வரக்கூடும் என்றும், வினவின கருமங்கள் கூடுமென்றும், கிரகங்களுக்குச் சொல்லத்தக்க நாழிகை நாள் உண்டென்றும், வகுத்த காலங்களில் வந்து கூடுமென்றும், உதயங்களுக்குச் சந்திரன் நின்ற நாளுக்கு நடுவே கிரகம் நிற்கின் காத்ததாகும் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : அன்று-ஆரூடம் கேட்பாதயமன அன்று; போது-பொழுது; நாமுரைத்த-முன்னர் நாமுரைத்த; கோளாலும்-மற்றைய கோள்களாலும்.

குறிப்பு :- "கோளாலும் கொள்ளக் குறித்து" - என்பதனால் சந்திரன் நீங்கிய மற்றைய கோள்களாலும், அவ்வவற்றிகமைந்ததாகச் சொல்லத்தக்க நாழிகை, நாள் முதலான காலங்களையும் அறிந்துகொள்ளத் தக்கதாகும் என்பது குறிப்பாகும் என்பதாம்.

களவு போன பொருள் கேட்டறிதல்

கொட்போ டிருமாண்பு கூர்ந்தெழுங்கால் நற்கோள்கள்
நட்போ டுயராட்சி யுச்சமாம் - உட்காது
நண்ணும் பொருளதுவே, தீக்கோள்கள் நாடிடின்
திண்ணம் கெடப்பொருட்குச் செப்பு. 52

எ-து : கெடுதிபோன பொருள் திரும்ப வருமா, கெடுமா என்பது காணக்கூறியது.

இ-ள் : சரராசி நான்கும் உதயமாகவும், நாற்கோள் என்று சொல்லப்பட்ட புதன், வியாழன், வெள்ளி, பூர்வபட்சத்து சந்திரன் ஆகியவை நட்பு, ஆட்சி, உச்சத்தோடுகூடி உதிப்பதாயினும், கெடுதி வினவிற் காணலாம். செவ்வாய், சனி, சூரியன், அமரபட்சத்து சந்திரன் உதயாதியில் நிற்பவனாகில் கெடுதி காணாதென்று சொல்லு என்றவாறு.

அ-உரை : கொட்பு-சரராசி; இருமாண்பு-சரம், உபயம் என்ற இரண்டுவகை ராசிகள்; உட்காது-குறையாது; நண்ணும்-வந்துசேரும்; தீக்கோள்கள்-சனி, சூரியன், தேய்பிறைச்சந்திரன் ஆகியவை.

உரை விளக்கம் : சர ராசிகள் உதயமாகவரினும், உபய ராசிகள் உதயமாகவரினும், அவற்றில் சுபக்கோள்கள் வலிபெற்று நிற்கில் வருமென்ற தீங்குகள் வராது என்றும், சனி முதலிய பாபக் கோள்கள் வலிபெற்று நிற்கில் வரும் என்ற தீங்கு மேன்மேலும் வரும் என்றும் கூறியதாம்.

நட்டமுட்டி சிந்தனைக்குத் தெளிவு

ஏற்பதற்கு நிற்குங்கோ ளொன்றுமுன் றைந்தொன்பான்
சீர்தனக் கானக்கோள் சேருமேல் - சாரா
நடக்குங்கோ ளெல்லாம் காண் நட்டங்கள் வாரா
கிடக்குங் கோள் திசைமேற் கேடு. *53*

எ-து : உதயம், ஆருடம், கவிப்பு ஆகியவற்றில் உதயமாகும் கோள்களால் நன்மை-தீமை கெடுதியறிதல் கூறியது.

இ-ள் : உதய ஆரூடக்கவிப்பினும், உதயத்தினும், மூன்று, ஐந்து, ஒன்பது ஆகிய ராசிகளில் நற்கோள்கள் வலிபெற்று நின்றால் கெடுதி வாராதென்றும் சொல்லுவது நோக்கின் கோளுக்கு உண்டான திசை மேலாக, கெடுதி சேரும் என்று சொல்லுக என்றவாறு.

அ-உரை : ஏற்பதற்கு நிற்குங்கோள்-உதயாரூட கவிப்பினை ஏற்பதற்கு நிற்கும் கோள்கள்; சீர்-சிறப்பு; தனக்கான-நட்பு, ஆட்சி, உச்சத்தினைத் தனக்குப்பெற்ற, சாரா-தீமை வராது; நடக்குங்கோள்- உதய ராசியினைக் காணும் கோள்; வாராது-வராது.

குறிப்பு :- நட்டமுட்டி சிந்தனைக்குப் பல்வேறு நிலைகளில் ஆருடக் கணிப்புக் காட்டிய ஆசிரியர், கோள்களின் நிலைகளையும், நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சம் ஆகியவற்றையும், சேரும் அல்லது சேர்ந்த இடங்களையும், குணங்களையும், அவற்றிற்குரிய திசைகளையும், காலவரையறையினையும் கொண்டு திட்டமாகக் கூறும் ஆருடக் கவிப்பினுக்கு இப்பாடலில் ஞாபகம் என்ற நோக்கிற்குப் பொதுமை காட்டினார் என்றறியலாகும்.

பொருள் பேரிழப்புக் காண்டம் முற்றும்.

ஆகக் காண்டம் - 6க்கு வெண்பா 192

சல்லிய காண்டம்

மனையிடத்தும் நிலத்தகத்தும் புதையுண்டு கிடக்கும் நல்லன தீயனவாகிய பொருள்கள் சல்லியம் எனப்பெறும்.

சல்லியம் காண் கணிப்பு

அப்போ தளந்தவடி யோடிரு பத்தெட்டுந்
தப்பாமற் கூட்டித் தகராதி - தப்பாமல்
பன்னிப் பதினாறுக் கீய்ந்துப் பெரும்பயனைத்
துன்னியவர்க் கெல்லாம் உரை.

எ-து : மனையளந்து உடுத்தொகை கூட்டி, ராசிகளும் சேர்த்து பதினாறால் பாகித்துச் சல்லியம் காண்பது கூறியது.

இ-ள் : யாவனொருவன் பூமிச்சல்லியம் வினவின போது, அடியளந்து பாதச்சாயை களைந்து நின்ற அடியுடனே, நட்சத்திரம் இருபத்தெட்டுங் கூட்டி மேடமாதி மீனந்தமான பனிரெண்டு ராசியும் கூட்டி, கூட்டின தொகை எண்ணைச் சல்லியம் பதினாறுக் கீய்ந்து, சேடத்தை அறிந்து, சல்லியம் உரைத்த முறையே எண்ணி உற்ற சல்லியம் ஈதென்றறிக என்றவாறு.

அ-உரை : அப்போது-வினவினபோது; தகராதி-மேடம் முதலான பன்னிரு ராசிகள்; தப்பாமல்-பிழைபடாமல்; பன்னி-சேர்த்து, பெருக்கி; பன்னுதல் பின்னுதல், பெருக்குதல்; பதினாறு-சல்லியவகைப் பதினாறு; ஈய்ந்து-பாகித்து, வகுத்துக்கொடுத்து; துன்னியவர்-வந்தடைந்தவர்.

குறிப்பு :- மனை அடியளந்து கூட்டின எண்ணுடன், நட்சத்திரம் 28-யும் கூட்டி, மேல் ராசிகள் 12-யும் சேர்த்துக் கூட்டிச் சல்லியம் 16-ஆல் வகுத்துக்கண்ட மிச்சத்தால் சல்லியம் வரிசையில் காண்க என்பதாம்.

சல்லியம் 16 வகை

உள்ளு முதையம் தலையோடென் பிட்டிகையும்
வள்ளோடு சுள்ளி மகிழ்தெய்வம் - தெள்ளிய
சாம்பல் கரிசலம் தானியம்பொன் கல்தவளை
ஆன்கோடு நாய்சாடி யாம். 2

எ-து : சல்லியம் பதினாறினையும் முறைப்படுத்திக் காட்டியது.

இ-ள் : சல்லியம் பதினாறு என்பது - தலையோடு, எலும்பு, இட்டிகை, ஓடு, சுள்ளி, தெய்வம், சாம்பல், கரி, சலம், தானியம், பொன், கல், தவளை, பசுவின்கொம்பு, நாய்என்பு, சாடி என்று எண்ணத்தக்கவை பதினாறும் பூமி சல்லியம் என்றறிக.

அ-உரை : உள்ளுமுதையம்-பூமியினுள் காணுவது; இட்டிகை-கல் மேடை, யாக குண்டம்; வள்ளோடு-மண்சட்டி ஓடு; சுள்ளி-மரச்சுள்ளி, தெய்வம்-விக்கிரகம்; சலம்-நீர்த்தாரை; தானியம்-மடிந்ததானியம்; கல்-கருங்கல்; தவளை-தேரை.

உரை விளக்கம் : சல்லியம் பதினாறானவை : 1. தலை ஓடு, 2. எலும்பு, 3. இட்டிகை, 4. பானை ஓடு; 5. சுள்ளி, மடித்தவிறகு, 8. கரி, 9. சலதாரை, புதிரான பொருள், 10. தானியம், 11. பொன், பொன்னாலானவை, 12. கல், கருங்கல், ஈமக்கல், 13. தவளை, தேரை, 14. பசுவின் கொம்பு, 15. நாய் எலும்பு, 16. மண் சாடி, முதுமக்கள் தாழி என்பன வகுத்த முறப்படி எண்ணிக் காணும் பூமிச்சல்லியமாம்.

சல்லியம் 16-ல், நல்லன தீயன காணல்

ஆய்ந்தவை ஒன்றா தீயவாம் பதினாறும்
ஏயு முறையை இனிதென்னி - ஆய்வுடைய
தானியம்பொன் கோடு தவளையவை நல்லனவா
மானபிற தீயவென மாறு. 3

எ-து : சல்லியம் பதினாறுனுள் நல்லவை, தீயவை கூறியது.

இ-ள் : சல்லியம் என்பது பதினாறும் எண்ணி வந்ததில் நெல்லும், பொன்னும், பசுவின் கொம்பும், தவளையும் இவை நாலில் ஒன்று உதித்தால் நாற்காலச் சல்லியம் உண்டு என்றும், நின்ற பனிரெண்டிலோதினது உதித்தக்கால் சல்லியம் இல்லை என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : ஆய்ந்தவை-மனை அடியளந்து முறையே ஆய்ந்தவை; ஆனபிற-எஞ்சியவை.

உரை விளக்கம் : சல்லியம் இதுவென்று வகுத்துக் கூறிய 16-னுள், முறைப்படி கணக்கிட்டு வகுத்துக் கண்ட எச்ச எண்ணளவில் நெல், பொன், கொம்பு, தவளை (தேரை) இவற்றுள் ஒன்றாகில் நல்லனவாம். இந்நான்கும் நீங்கிய பனிரெண்டினுள் ஒன்றாயின் தீயனவாம் என்றறிக என்றவாறாம்.

தீயன பனிரெண்டாவன : 1. மண்டை ஓடு, 2. எலும்பு, 3. செங்கல், 4. பானை ஓடு, 5. விறகு, 6. விக்கிரம், 7. சாம்பல், 8. கரி, 9. தீமைக்கல், 10. ஈமக்கள், 11. நாய் எலும்பு, 12. மண் சாடி.

பிறை நாளால் - சல்லியமறிதல்

என்றுமீ றாய்முதலாய் எண்ணிய சக்கரத்துள்
அன்று மதிநின்ற நாளரையுள் - ஒன்று
முதையத்து லுற்றநா ளோர்ந்து முறையெண்ணி
மத்தியத்தைக் கண்டு மதி. 4

எ-து : கார்த்திகை முதலாக நட்சத்திரங்கள் இருபத்து எட்டையும், நோமூத்திரிய சக்கர நியாயத்திலே எண்ணும் காலத்தில், யாவனொருவன் சல்லியம் வினவினபோது, உதியா நின்ற இராசியிலும், கார்த்திகை நின்ற நாளரையிலே வைத்துயடையவே அன்று சந்திரன் நின்ற நாளரையளவும் எண்ணிச் சந்திரன் நின்றவறையிலே சல்லியம் என்று சொல்லுக என்றவாறு.

அ-உரை: சக்கரம்-கோமூத்திரிய சக்கரம் (நண்டியலங்காரம்-சித்திரக் கவியுள் காண்க); மதிநின்ற நாளரை-சந்திரன் ராசிகளில் 2¼ நாள் சாரங்கொள்வதால் அதற்கமைந்துவரும் நட்சத்திரங்கள் அமைந்தநாள் அரை நாளாகவும் அமைந்துவருதல்.

குறிப்பு :- உரையாசிரியர் நட்சத்திரங்களை 28 ஆகக் காண்பதால் அம்முறையில் கோமுத்திரி சக்கரப்பாங்கில் வரிசைக்கு 7 நட்சத்திரங்களாய் நான்கு வரிசை காண்பதால், அதில் சந்திரன் நின்ற நாள் வரையில் சல்லியம் இருப்பன தெரிந்துகொள்ளப்படும் எனலாம்.

இராசியுதயமாகி - சல்லியமறிதல்

உரைத்தெழு மோரையி லுற்றநாள் தன்னை
நிரைத்தல றையில்நேர் நிறுத்து - குறைத்த
முறையவை யெண்ணி யுணர்மதிநாள் நின்ற
வரையவையே சல்லியங்க ளாம். 5

எ-து : இராசி உதய நாட்களைக் கொண்டும் சல்லியம் அறியலாகும் என்பது கூறியது.

இ-ள் : யாவனொருவன் சல்லியம் வினவின காலத்து உதியானின்ற இராசியின் நாள்தன்னை கார்த்திகை நின்ற அறையிலே நிறுத்தி அடையவே எண்ணிச் சந்திரன் நின்ற நாளறையிலே சல்லியம் உண்டு என்று சொல்லுக என்றவாறு.

அ-உரை : ஓரை-இராசி; நிரைத்த-ஒன்றாகச் சேர்த்த; அறை-இராசியிடம்; மதிநாள்-சந்திரன் நின்ற நாள்.

உரை விளக்கம் : இராசி ஒன்றினுக்குச் சந்திரன் நின்ற நாள் 2 ¼ என்பதாக, 27 நட்சத்திரங்களையும் அடைத்து, யாவனொருவன் வினவின காலத்து உதயமான இராசியினையும், அப்பொழுது மதிநின்ற நட்சத்திரத் தினையும் அறிந்து சல்லியம் அறிந்து கூறுக என்றவாறு.

குறிப்பு :- இப்பாடல் பொருளுக்கு முன்னைய நான்காம் பாடலின் பொருளறிந்து அவற்றுடன் முறைப்படுத்திக் காணலாகும்.

சல்லியமிருக்கும் ஆழ்நிலை அறிதல்

ஆய்ந்த மனையகலம் நீள மளந்ததனை
வாய்ந்தவை தன்னோடு தான்மாறி - ஏய்ந்த
இருபத்தெட் டுக்கீய்ந்த தேமுழமா மீயா
வருவதனை யாறிரண்டாற் பார். 6

எ-து : மனையளவடியால் சல்லியயிருக்கும் ஆழ்நிலை அளவு கூறியது.

இ-ள் : யாவனொருவன் யாதொரு தேசத்துச் சல்லியம் வினவினால், மனையிட அகலம்-நீளமும் அளந்து, அதனைத் தனித்துப் பெருக்கி, இருபத்தெட்டுக் கீய்ந்தது முழம் என்றும், மீயாவந்த சேடத்தைப் பனிரெண்டால் பெருக்கியும் காண்க என்றவாறு.

அ-உரை : மாறி-பெருக்கி; இருபத்தெட்டு-நட்சத்திரம் 28; மீயா-மீதத்தினை (மிச்சமானதை).

உரை விளக்கம் : சல்லியம் வினவின மனையின் அகல-நீளங்களை (அடியளவாகக் கொண்டு) பெருக்கி, 28-க்கு ஈந்த ஈவுவட்டம் சல்லியம் பூமியினுள் உள்ள ஆழ்நிலை அடி அளவாகும். மிகுந்த எச்ச எண்ணைப் 12ஆல் பெருக்கி, 28ஆல் வகுத்து வந்த ஈவு அங்குலமாம். இவ்வகையைக் கொண்டு, இத்தனை அடி-இத்தனை அங்குல ஆழத்தில் சல்லியம் இருப்பதனைக் குறித்துக் கூறுக.

இதுவுமது

மாறியத னாலேயாம் மற்றெழு சாண்மீயா
தாறினால் மாறின் வகங்குலமாம் - தேரின்,
அனைத்தா முழஞ்சாணோ டங்குங் கொண்டாழ்
இனைத்தாய தென்றே யியம்பு. 7

எ-து : சல்லியமுள்ள ஆழத்தினை முழம், சாண், அங்குலமாகக் காண்பது கூறியது.

இ-ள் : முன்பு பனிரெண்டாற் பெருக்கின தொகையை இருபத்தெட்டுக் கீந்த அதன் ஈவு சாண் என்றும், மீயான சேடத்தை ஆறில் பெருக்கி முன்போலவே ஈய்ந்து, ஈய்ந்த ஈவு அங்குலம் என்றும் இத்தனை முழம், சாண், அங்குலம் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : மாறியதனாவே-முன்பு கண்டு பெருக்கி, பாகித்த முறையினாலே; மீயா-மீந்தது (எச்சமான எண்); ஆழ்-ஆழம், அங்குலம்-சாணளவு.

உரை விளக்கம் : சல்லியம் கேட்ட மனையின் அகல-நீளங்களை முழமாக அளந்து, பெருக்கி (அகலம் x நீளம்) 28-க்கு ஈந்த வட்டம் (ஈவு) முழமாம். மீந்த எண்ணை 12ஆல் பெருக்கி, 28-க்கு ஈந்த வட்டம் அங்குலமாம். ஆறினால் பெருக்கி 28-க்கு ஈந்த வட்டம் சாணாகும். இவ்வாறு இத்தனை முழம், இத்தனைச் சாண், இத்தனை அங்குல ஆழத்தில் சல்லியம் உளதென்று கண்டறிந்து கூறுக என்பதாம்.

சல்லியம் உண்டு, இல்லை என்பதறிதல்

இயம்பியநூற் கண்டறிந்து யாதானு மொன்றால்
பயந்தரும்சேய் பாம்பருக்க னீலன் - நயந்தனவேற்
றீமையதாம், நற்கோள்கள் நன்மையதாம், தேர்ந்துணர்ந்த
மேன்மதியோர் கண்ட விதி. 8

எ-து : நாற்கண்டத்துக்கூறிய முறைமைகளையும் கொண்டு பூமியில் சல்லியம் பற்றியறிதல் கூறியது.

இ-ள் : உதயமுதற்காலாகச் சொல்லத்தக்க கண்டங்கள் நாலில் ஒன்றில் செவ்வாய், பாம்பு, ஆதித்தன், சனி ஆகிய இவர்களில் ஒருவர் நிற்குதல், நோக்குதல் செய்யிற் தீயனவாம் என்றும் அவ்விடத்திற் சல்லியமில்லை என்றும் நற்கோள் நின்று நோக்கின் சல்லியம் உண்டு என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : இயம்பிய-மேலே சொல்லிய; யாதானுமொன்றால்-யாதானுமொரு காண்டத்திலுள்ள விதிகளுடன்; சேய்-செவ்வாய்; பாம்பு-ராகு; நீலன்-சனி; மேன்மதியோர்-சோதிட நூற்புலமையில் தேர்ந்த அறிவுடையவர்; விதி-முறைமை; கண்டம்-28 இராசிகட்கும் வகுத்துக் காட்டிய அறைச்சக்கரம்.

குறிப்பு :- மேன்மதியோர் கண்டவிதி என்பதனால், சல்லியம் அறிதற்கான இவ்விதி அனுபவ உண்மை நெறியாகும் என்பது உணர்த்தப் பட்டதாம்.

கல், எலும்பு - சல்லியம் காணல்

ஓரைக்கு நான்காகும் கண்டத்து நற்கோளைத்
தீயகோள் பார்க்கவுண் டாமென்ப - மாறிலா
திங்கள்சேய் சேரின்கல் லாமெலும்பாம் காணுமென்
றங்குநிலம் பார்த்து அறி. *9*

எ-து : பூமியின் கீழ் கல்லும், எலும்பும் சல்லியம் காணும் விதி கூறியது.

இ-ள் : உதயத்துக்கு நாலாகிய கண்டத்து, நற்கோள் நிற்கில், அதனைத் தீக்கோள்கள் நோக்கிற் சல்லியம் உண்டு என்றும், சந்திரனும்-செவ்வாயும் உடனிற்கில் கல்லும், எலும்பும் உண்டு என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : *ஓரை-ராசி; கல்லாம்-கல்லாகவும்; நிலம்-சல்லியம் காணும் மனை; பார்த்து-சல்லிய ஆரூடவிதி பார்த்து; கண்டம்-நான்கு பிரிவான சல்லிய கண்டங்களுள் ஒன்று.*

உரை விளக்கம் : *சல்லிய கண்டவறைக்கு நான்காம் இடத்தில் நற்கோள் நிற்க, அதனைத் தீய கோள்கள் நோக்கின் மனையில் சல்லியம் உண்டாம் என்க. உதய ராசிக் கோளுடன் சந்திரன் நிற்கில் கல்லும், செவ்வாயாய்ச் சேரின் எலும்பும் சல்லியமாக உள்ளது என்பதனை அறிந்து கூறுக என்பதாம்.*

புற்று, அரவு - சல்லியம் காணல்

விளம்பு மதியரவு கண்டத்து மேவில்
விளம்பு மரவமுறை ஞாலும் - விளம்பிய
நச்சரவும் புற்று மதனெலும்பும் நன்னுமாம்
மெச்சவிவை தப்பிலாத மெய். 10

எ-து : சல்லியத்துன் புற்றும், அரவும் ஆழத்தில் காணும்விதி கூறியது.

இ-ள் : சந்திரனும் பாம்பும் நாற்கண்டங்களில் நிற்க பாம்பு, நின்றனாளறையிடத்துப் பாம்பும், சந்திரன் நின்றவறையிடத்துப் புற்றும் அதன் எலும்பும் உண்டென்று சொல்லுக என்றவாறு.

அ-உரை : விளம்பு-சொல்லும்; மேவில்-பொருந்தியிருப்பின்; உறைஞாலும்-வாழ்கின்ற கட்டிடமாகிய புற்றிருக்கும்; நன்னும்-சேர்ந்திருக்கும்; மெச்சவிவை-பாராட்டும்படியாக இவற்றை; தப்பிலாத-பிழையில்லாத; மெய்-மெய்யென்று கண்டு கூறு.

உரை விளக்கம் : கண்டங்கள் நாலினுள் சந்திரன், ராகு ஆகிய கோள்கள் நின்ற அறைகளில் சந்திரன் நின்ற அறையிடத்து பாம்பு சல்லியமாக உண்டென்றும், ராகு நின்ற அறையிடத்துப் பாம்புப் புற்று உண்டென்றும், இருகோளும் கூடிநிற்கில், புற்றும் பாம்பு எலும்பும் கூடிக்கிடக்கும் என்றும் பிழைபடாத மெய்மையாகிய இவ்வாரூடத்தால் சல்லியம் கண்டு கூறுக என்பதாம்.

பார்ப்பாரென்பு பசுவெலும்பு, கல், பொன் காணல்

பகரின் மதியமொடு பைம்பொன் நிலவி
நிகரிலா கண்டத்து நிற்கின் - புகரிலா,
பன்னியநூற் பார்ப்பார்கல் முத்து பசுவென்பு
பொன்னுமாம் போக்கிப் புகல். 11

எ-து : சல்லியமாக பார்ப்பார் எலும்பு, கருங்கல், முத்து, பசு எலும்பு, பொன் இவை காணுதல் கூறியது.

இ-ள் : சந்திரனும், குருவும் நாற்கண்டத்தொன்றில் நிற்கில் பிராமணர் எலும்பும், பசுவின் எலும்பும், கல்லும், முத்தும், பொன்னும் ஆகியவற்றில் ஒன்றும் பலவும் சல்லியமாகும். குரு நின்ற நாளறையில் கண்டு சொல்லுக என்றவாறு.

அ-உரை : பகரின்-ஆராய்ந்து கூறின்; மதியம்-சந்திரன்; பைம்பொன்-குரு; நிலவில்-கூடிநிற்கில்; முத்து-வெண்முத்து; போக்கிப் புகல்-சந்தேகம் நீக்கிச்சொல்.

உரை விளக்கம் : நாற்கண்டம் 28 அறைகளிலே உதயமான அறையில் நின்ற சந்திரனைக் குரு கூடிநிற்கில், நோக்கில் குரு நின்ற அறையில் பார்பாரெலும்பு, பசு எலும்பு, செங்கல், கருங்கல், முத்து, பொன் இவற்றுள் ஏதேனும் ஒன்று உண்டு என்று திட்டமாகக் குறித்துச் சொல் என்பதாம்.

குறிப்பு :- போக்கிப் புகலுதலாவது - இது, அது என்று குழப்பமாகக் கூறாமல், ஐயம்போக்கி, இதுதான் என்று கருதிக் கூறலாம்.

நாய் எலும்பு, வெள்ளி – சல்லியம் காணல்

புந்தி மதியுடனாய் நிற்குமேல் நாயென்பு
புந்தியுறை நாளறையில் போதருமா - முந்திய
வெள்ளி மதியுடனாய் நிற்குமேல் வெண்தாது
வெள்ளி யுறையுள் விளம்பு. /2

எ-து : சல்லியம் நாய் எலும்பு, வெள்ளி உலோகம் இருப்பதனை, சந்திரன்-புதன்-சுக்கிரன் சேர்ந்தால் காணுதல் கூறியது.

இ-ள் : புதனும், சந்திரனும் நாற்கண்டத்து ஒன்றில் நிற்கின் புதனின்ற நாளறையில் நாய் எலும்பு உண்டு என்றும்,

சுக்கிரன்-சந்திரனுடன் நாற்கண்டத்து ஒன்றில் நிற்கினும், நோக்கினும் சுக்கிரன் நின்ற அறையிடத்து வெள்ளி முதலான வெள்ளை நிறத்தாதுக்கள் உண்டு என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : புந்தி-புதன்; நாயென்பு-நாயின் எலும்பு; போதரும்-புதைந்து இருக்கும்; வெள்ளி-சுக்கிரன்; வெண்தாது-வெண்மையான உலோகம்; வெள்ளி-மதிப்புடைய வெள்ளி உலோகம்; உறையுள்-சுக்கிரன் உறைகின்ற அறையின்.

உரை விளக்கம் : நாற்கண்டங்களிலே, சந்திரனை, புதன் கூடிநிற்கின், நோக்கின் - புதன் நின்ற அறையிடத்து ஆழத்தில் நாயெலும்பு கிடப்பது என்றும், சுக்கிரன் கூடி நிற்கின், நோக்கின், சுக்கிரன் நின்ற அறையிடத்து ஆழத்தில் வெள்ளி அல்லது வெண்மை உலோகம் ஆகியவற்றுள் ஒன்று உண்டு என்றும் கூறுக என்பதாம்.

குறிப்பு :- வெள்ளிக்கட்டி, வெள்ளியாலான நகைகள், பாத்திரங்கள் என்று காண்க.

சனி - ராகு உறையறைக்குச் சல்லியம்

கண்டத்துப் பாம்பு கரையுற்ற னாளத்தத்
துண்டென் றரவாலே யுரைக்க - கண்டத்துள்,
நீல னறைதனில் நிற்குமேல் அத்தரையில்
சாலவே யில்லாமைச் சாற்று. *13*

எ-து : சனி - ராகு உறைவிடத்தால் சல்லியம் உண்டு இல்லை என்பதறிவது கூறியது.

இ-ள் : உதயத்து நாற்கண்டத்து ஒன்றில் பாம்பு நிற்கில் குறித்தவிடத்தே சல்லியம் உண்டென்றும், சனி நிற்கில் சல்லியம் அவ்விடத்தில் இல்லை என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : கண்டம்-சல்லிய சக்கரத்துக் கண்டம் (பகுதி); பாம்பு-ராகு நாளக்கத்து நாளில் கூடி நட்சத்திரத்துக்கும், இடத்திற்கும்; நீலன்-சனி; சாலவே-மிகவே; சாற்று-எடுத்துச்சொல்.

உரை விளக்கம் : "நிற்குமேல்" - என்ற ஐயவினாக் குறிப்பினால் நிற்கினும், ராகுவுடன் கூடினும், நோக்கினும் என்று காண்க. சாலவே இல்லாமை - என்பதனால் அறவே அவ்வறைப்பகுதி தரையிடத்து சல்லியம் இல்லாமை என்றுரைக்க.

சல்லியத்தால் நன்மை - தீமையறிதல்

என்றுமோர் கண்டத்து நற்கோளைத் தீக்கோள்கள்
சென்றுற நோக்குமேற் தீயனவாம் - நன்றாக
ஆயுங் கருமங்கள் ஆகா, சிலநாளில்
சாயுமாம் நல்கூர்ந்து தான். *14*

இ-ள் : சல்லிய சக்கரக்கண்டத்தில், நற்கோள், தீயகோளுடன் கூடிநிற்பினும், தீயகோள்களின் நோக்கில் இருப்பினும், சல்லியம் வினவின மனையை உடையானுக்கு நினைத்த கருமங்கள் முடியாது. சிலநாளில் வறுமையுற்றவனாய்த் துன்பப்படுவான் என்றவாறு.

அ-உரை : நற்கோள்-குரு, புதன், சந்திரன், சுக்கிரன் ஆகிய நற்கோள்கள்; ஆயும்-ஆராய்ந்து செய்யும்; கருமங்கள்-எத்தகைய முயற்சிகளும்; சாயும்-தாழ்ச்சி வரும்; நல்கூர்தல்-வறுமையடைதல்.

உரை விளக்கம் : மேல் சல்லியம் காணும் சக்கரத்தின் நான்கு காண்டம் இருபத்தெட்டு அறைகளைக் கொண்டு, நாள் உதய நட்சத்திர உதயகால அளவில் கணித்தறிந்த அறையில் அப்பொழுது நிற்கும் கோள்களின் நிலையறிந்து பூமியில் சல்லியம் காணும் முறைகளையும், காணும் சல்லியப் பொருள்களையும் இன்னதற்கு இதுவென்று கூறிய ஆசிரியர், இப்பாடலால் மனையிடத்திற்குரிய பூமியின் ஆழத்தில் உள்ள சல்லியங்களுக்கமைந்த கோள்களில் நற்கோளைத்

தீயகோள்கள் கூடினிற்பினும், நோக்கினும் மனைக்கு உரியானுக்குத் தீமைகளே உண்டாகும் என்ற பலனைப் பொதுவாகத் தெரிவிப்பாராயினர் என்று அறிதற்காகும்.

மனையின் மேன்மையும் - நன்மையும் அறிதல்

தானமதி வெள்ளி தகவாம் குருபுந்தி
ஊனமில் கண்டத் துறவாகில் - மானே
வளந்தருஞ் செல்வம் மகிழ்ந்து நிலனாளும்
துளங்குநல் நோக்காலுஞ் சொல். 15

எ-து : நற்கோள்கள் கண்டத்து நிற்பினும், நிற்கும் நற்கோளைப் பார்ப்பினும் நலமெலாம் வரும் என்பது கூறியது.

இ-ள் : சல்லியம் - உதயாரூட கண்டங்களில் சந்திரன், வெள்ளி, வியாழம், புதன் இவர்கள் நிற்கில் மிகுந்த செல்வத்துடனே பூமியுமாளும், நோக்குண்டாயினும் செல்வமும், பூமியும் ஆளும் என்றவாறு.

அ-உரை : தானமதி-நன்மைதரும் சந்திரன்; தகவாம்-தகுதி வாய்ந்த; புந்தி-புதன்; ஊனமில் கண்டம்-சல்லியங்களில் தீயன தோன்றாத கண்டம்; மானைப் போன்ற பெண்ணே (மகடூஉ முன்னிலை); வளந்தரும்-வாழ்வு வளமாகும்; துளங்கு-விளங்குகின்ற.

குறிப்பு :- பாடலில் - "நோக்கானுஞ் சொல்" என்ற உம்மையால், நோக்கின் பாங்காகிய நேர் நோக்கு, சார்பு நோக்கு என்ற வகையால், உயர்வும், மத்திய உயர்வும் காண்க. இவ்வாறு நோக்கு என்ற பொது விதிக்குக் குறிப்புரையாக எங்கும் கொள்ளுதல் பொருத்தமான பலனைத் தரும் என்பதும் அறியத்தக்கதாகும்.

குறிப்பு :- ஆரூடக்கணிப்பில் அசுவினி முதலான நட்சத்திரங்கள் 28-ஆதலுக்கு விபரம். நட்சத்திரம் 27, இதனுடன் உத்திராடத்திற்கும்-திருவோணத்திற்கும் இடையாய அபிசித் நட்சத்திரத்தைச் சேர்க்கக்கூடிய தொகை 28-ஆதலறிக.

மனை நன்மை - தீமை அறிதலின்வகை

சொல்லிய வுச்சிக்கண் நற்கோளேற் சோர்விலை
சொல்லிய பூமி தொடர்ந்தாளும் - சொல்லிய,
தீயக்கோ ளேற்கொடிய தெய்வமுடன் பேயரக்கர்
தேயத்தே நிற்குமெனத் தேர். 16

எ-து : மனையின்கண் வரும் நன்மைகளும், தெய்வம் முதலாய தீமைகளும் கூறியது.

இ-ள் : உதயத்துக்குப் பத்தாமிடத்தில் நற்கோள்கள் நட்பு நயத்தோடு நிற்கில், அந்த பூமி நல்லது என்றும், தீயக்கோள் நிற்கில் தெய்வம், பிசாசு உண்டென்றும் கிரகங்களின் நோக்கறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : உச்சி-பத்தாமிடம்; சோர்வில்லை-குறைவு இல்லை; பூமி-மனை, பூமி சம்பத்து, தேயம்-வாழும் மனை, தேர்-ஆராய்ந்து தெளிந்துகொள்.

உரை விளக்கம் : சல்லிய கண்டத்தில் -பத்தாமிடத்தில் சுபக்கோள்கள் நிற்கினும், நோக்கினும் அம்மனை பூமி, சம்பத்துக்களைத் தானே நலமுடன் அனுபவிப்பான் என்றும், பத்தாமிடத்தில் பாபக்கோள்கள் நிற்கினும், நோக்கினும் பிறர் அம்மனையைப் அனுபவிப்பர் என்பதும், தீயதெய்வங்கள், பைசாசம் ஆகியவைகள் அனுபவித்து நிற்கும் என்பதும் தேர்ந்து அறியத்தக்கதாகும்.

குறிப்பு :- இப்பாடற்கருத்து - மனைச்சல்லிய பலனுக்குச் சிறப்பு விதியாகும். மேற்கூறியவை பொதுவிதி என்க.

மனையில் சல்லியம் இருக்கும் ஆழம் அறிதல்

எண்ணிய சல்லியங்க ளாழ மறியுங்கால்,
கண்ணிய கோளின் கதிரத்தை - எண்ணுங்கா,
லெத்தனையா மத்தனையே சாண்முழமென் றாய்ந்துரைக்க
வத்தனையே யாழ்ந்திருப்ப தாம். 17

எ-து : பூமியில் சல்லியம் கிடக்கும் ஆழம் காணக் கூறியது.

இ-ள் : பூமியில் சல்லியம் கிடக்கும் ஆழம் அறியுமிடத்து, அப்போது நோக்கின கோளின் கதிர் அறிந்து சாண், முழம் காணச் சொல்லுமிடத்து நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சம் அறிந்து இவையாதியன கிரகங்களறியுமிடத்து, ஆதித்தன் கதிர்-5, சந்திரன் கதிர்-1, கதிர்-9, செவ்வாய் கதிர்-8, புதன் கதிர்-5, வியாழத்துக்குக் கதிர்-(10), சுக்கிரனுக்குக் கதிர்-10, சனிக்குக் கதிர்-4, பாம்புக்குக் கதிர்-2, ஆக இப்படியான கதிர்களால் கிரகங்களின் கதிர் அறிந்து ஆழஞ்சொல்லுக என்றவாறு.

அ-உரை : கண்ணிய-கருதிய; கதிரத்தை-கதிர் எண்ணிக்கை; ஆழ்ந்திருப்பது-சல்லியம் ஆழ்ந்துள்ள இடம்.

குறிப்பு :- உச்சக்கோள்களின் கதிரளவை-சாணாகவும், ஆட்சிக் கோள்களின் கதிரளவை-முழமாகவும், நட்புக் கோள்களின் கதிரளவை-நான்கு முழமாகவும், பகை நீசக்கோள்களின் கதிரளவை-ஆள்மட்ட அளவிற்கு அதிகமாகவும் கணக்கிட்டுரைக்க.

★ கோள்களுக்குரிய கதிரளவையில், சல்லியம் காண்பதற்குரிய அளவைகள் மாறுபட்டிருப்பதறிக.

சல்லிய சக்கரத்தில் சல்லிய இருப்பிடம் அறிதல்

அறையிலங்கு நான்காக வாயமே லேழ்தெற்
குறவரைந்த நான்கே ழறையுள் - பிறையுணர்ந்து,
நின்றவறைச் சல்லியம் நேரிய தென்றறிய
வொன்றிய சக்கரத்தை யோர். /8

எ-து : சல்லிய சக்கரம் வரைதலும், சல்லியம் அறிதலும் வகை கூறியது.

இ-ள் : சல்லிய சக்கரத்தின் விளக்கம் அறியுமிடத்து, தென்வடவை ஐந்து ரேகையும், கீழ்மேல் எட்டு ரேகையும் கீற, இருபத்தெட்டறையாம். நிற்க, கீழ்ப்பத்திப்பிலிருந்து

திட்டமாய் வடக்கிலறையிலே, கார்த்திகையை வைத்து, கதிர் நின்ற நாளறையளவும் எண்ணி அவ்வறையிலே சல்லியம் என்று சொல்லுக என்றவாறு.

அ-உரை : அறையிலங்கு-(நான்காக-நான்காக) அறைகள் அமைய; பிறை-கார்த்திகை நட்சத்திரம்; நேரியது-பொருந்தியது.

உரை விளக்கம் : கிழக்கு மேற்காக நான்கு அறைகள் அமைவதாகவும், வடக்குத் தெற்காக வரிசைக்கு ஏழு அறைகள் அமைவதாகவும் வரையப்பட்ட சல்லிய சக்கரத்தில் அமைந்த 28 அறைகளில், சந்திரன் நின்ற நாளுக்குரிய அறையிலே சல்லியம் இருப்பதாகக் கணிப்பதால், அச்சந்திரன் நின்ற நாளறையை அறிதற்குக் கார்த்திகை நட்சத்திரத்தை முதலாகக் கொண்டு அடைத்து வழங்கி அறிந்துகொள்ளவே, அவ்வறையிடத்திலேயே சல்லியம் ஆழ்ந்துள்ளது என்பதை அறியலாகும்.

சல்லிய சக்கரத்தில் - நாள், நட்சத்திர அடைப்புமுறை அறிதல்

கார்த்திகைநா ளந்தியாக கண்டநா ளேழறையுட்
சீர்த்தங் கிரண்டுவிட்டு மூன்றெண்ணிப் - பேர்த்துமேல்,
நான்கைந்து மீண்டெண்ணி நண்ணுமதன் கீழிரண்டு
தான்பின் வலமாகச் சாத்து. /9

எ-து : சல்லிய சக்கரத்திற்குரிய 28 அறைகளில் நட்சத்திரப் பாகுபாடு வரையறை கூறியது.

இ-ள் : இருபத்தெட்டறையாய்க் கீறின அறையுள் கீழ்பத்தியில் இரண்டு அறைவிட்டு, மூன்றாம் அறைமுதல் கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் என்று, தெற்கே செல்ல மூன்றை எண்ணியதற்கு மேலறை தொடங்கித் திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம் என்று வடக்கே செல்ல நாலறை

எண்ணி மேலறை தொடங்கி மகம், பூரம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை அஞ்சறை தெற்கே செல்லவெண்ணியதற்குக் கீழிரண்டறை, சோதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், அபிசித்து, திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, அசுவதி, பரணி என்று பதினாலறையுமடையவே வலஞ்சுழல் எண்ணி இருபத்தெட்டறையும் அறிக என்றவாறு.

அ-உரை : கார்த்திகை நாள்-கார்த்திகை தொடக்கமான நாள்; பேர்த்துமேல்-மீண்டும் மேலாக; வலமாக-வலமுறையாகச் சொல்லுக.

சல்லிய சக்கரத்தில் திசையறிதல்

ஒன்றிய முன்பின் பகலிரா வெண்கதிரோன்
சென்று வலஞ்சேர் திசைவழியே - நின்ற
மகமுட னாங்கவிட்ட நாள்முதலா வெண்ணல்
தகவிரண் டேயரைக்கா லுற்று. 20

எ-து : சல்லிய சக்கரத்தில் நாழிகை - திசையறிதல் கூறியது.

இ-ள் : முற்பகலுக்குக் கார்த்திகை நாளாதியாக எண்ணியும், பிற்பகலுக்கு . . . . ஒரு சல்லியம் வினவினால், கிழக்கு நோக்கி மக முதலாக எண்ணவும், இராத்திரி பதினைஞ்சு நாழிகைக்கு, மேற்கு நோக்கி உதயாதி பதினைஞ்சு நாழிகைக்குள்ளும் சல்லியம் வினவில் ஆதித்தனை வலமாக மேற்கு நோக்கி அனுஷ முதலாக எண்ணவும். இராத்திரி பிற்பதினைஞ்சுக்கு அவிட்ட முதலாக எண்ணவும். ஒரு நட்சத்திரத்துக்கு இரண்டே அரைக்கால் நாழிகையாகக் கொண்டு எண்ணி, சல்லியமறிந்து சொல்லுக என்றவாறு.

அ-உரை : ஒன்றிய-சேர்ந்த, எண்ணல்-எண்ணிக்காணல்.

உரை விளக்கம் : பிற்பகலுக்கு மகமும், முன்னிரவிற்கு அனுஷமும், பின்னிரவுக்கு அவிட்டமும் முதலாய்க் கொண்டு அடைப்பது என்றும், ஒவ்வொரு நாளுக்கும் இரண்டே அரைக்கால் என்றும் சூரியன் வலமுற்றிருப்பதே இருந்து பார்க்கும் திசை என்றும் அறியப்படும் என்பதாம்.

சல்லிய காண்டம் முற்றும்.

காண்டம் எ-க்கு வெண்பா-212

கீழ் நீர் காண்டம்

ஆழ்நீர் காண்பதற்கும், கிணறு வெட்டுவதற்கும் உரிய கணிப்புப் பகுதி

கிணறு அகழ்வதற்குரிய மாதங்கள்

சித்திரை வைய்காசி சேர்தரு ஆனியிவை
யுத்தமமாம், ஆடியொடு ஆவணியும் - மத்திமமாம்
ஆடியொடு ஆவணியு மல்லா வதமமாம்
நாடியுரை கீழ்நீர் நயந்து. 21

எ-து : கிணறு என்னும் கூவம் அகழ்வதற்குரிய மாதங்கள் இவை எனக்கூறியது

இ-ள் : கூவம் வெட்டுவதற்குச் சித்திரை, வைய்காசி, ஆனி இவை உத்தமமாகும், ஆடியும், ஆவணியும் மத்திபமாகும். இவையல்லாத மாதங்கள் ஆகாதனவாம் என்றவாறு.

அ-உரை : வைய்காசி-வைகாசி; சேர்தரு-சேர்ந்து வருகின்ற; உத்தமம்-உயர்ந்தது; மத்திமம்-தேவைக்குச் செய்யலாம் என்பது; அதம்-பயனில்லாதது; கீழ்நீர்- பூமி அடிநீர்.

குறிப்பு :- கிணறு அகழ்வதற்கு உயர்ந்த மாதங்கள் சித்திரையும், வைகாசியும் ஆணியுமாகிய மூன்று மாதங்களேயாகும். ஆடி, ஆவணி மாதங்களில் செய்யலாம் என்ற அனுமதி உடையதாகும். மற்றைய ஏழு மாதங்களும் கிணறு அகழ்வதற்கு ஆகாத மாதங்களாகும் என்பதாம்.

உத்தமம்-நீர்பெருகும், மத்திமம்-ஊற்றுண்டு, அதமம்-நீர் சுரந்துவற்றும்.

வினவினவனால் நிலங்கீறுதல் செய்து பயன் கூறுதல்

கூறுஞ் சிறுவிரலிற் கோதையர் தாம்பெருகும்
சீறு மணிவிரலிற் செல்வமாக தேறின்
ஒருவர லாற்கீறி லுத்தமமாம் கொம்பால்
தெரியச் சிலைநன்மை செப்பு. 22

எ-து : கூவம் வெட்ட வினவினவனால் நிலத்தை கீறச்செய்து, அதன்பின் கணிப்பில் பலன் கண்டுகூறுதல் கூறியது.

இ-ள் : யாவனொருவன் நின்று கிணறு வெட்ட வேண்டும் என்று கேட்க, அவனை நிலத்தை கீறிக் காட்டு என்க. சிறுவிரலால் கீறில் பெண்களுடன் தாயத்தார் பலருண்டாமென்றும், பெருவிரலாற் கீறில் நன்மை உண்டாம் என்றும்; பலவிரலாற் கீறில் பாதை சம்பவிக்கும் என்றும்; பச்சிலையாலும், பசுங்கொடியாலும் நல்ல அவித்துக்களாலும் கீறில் நீர் பொங்கிவராது என்றும்; உலர்ந்த கொம்பாற் கீறில் பொல்லாதென்றும், அந்நிலத்தில் நீரினம் வாழும் செந்துக்களும் மீன்குஞ்சும் நலு நலுவென்று பலுகும் என்றும், மாசியுடன் மருவுமுள்ளதாக நீருண்டாமென்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : கோதையர்-பெண்கள் வழி உறவினர்; மணிவிரல்-சுண்டு விரல்; ஒருவிரல்-கட்டை விரல்; கொம்பு-கொம்பு முதலியவற்றால்; தெரிய-ஆராய்ந்துகாண; சிலை நன்மை-வலிந்து நன்மை; அவித்து-பச்சைக் கொம்பு, மாசி-கலக்கமான நீர்; மறுவும்-உளைச்சேறு முதலியனவும் உள்ளமை; நன்மை-சிறிதாகிய பயன்.

குறிப்பு :- உரையில் ஆசிரியர், தெரியச்-செப்பு என்ற குறிப்பினால் அனுபவமான அடையாளங்களாற் பயன் கூறியுள்ளார் என்று அறியமுடிகிறது.

கீழ்நீர் இன்னதன்மையது என்பது காணல்

குடமீன் மகரம் குளிரேறு கோற்றே
ளுடனேழ் சலத்தின் வடிவாம் - மடவாய்,
பிறைசுங்க ணாயிற் பெருநீர்பொன் புந்தி
யுறைகீழ்நீ ராமென் றறி. 23

எ-து : கோள் நிலைக்கணிப்பால், அடிநீர் இன்ன தன்மையது என்பது கண்டுகூறுதல் கூறியது.

இ-ள் : யாவனொருவன் சொல் பிரச்சனம் வினவின காலத்து கும்பம், மீனம், மகரம், கற்கடகம், இடபம், துலாம், விருச்சிகமாகிய இராசிகள் உதயாரூடமாகிறபோது, குறித்த இடத்தில் நீருண்டு என்றும், அவ்விடத்தில் சந்திரனும், சுக்கிரனும் நிற்கில் வெகுசலம் என்றும், சந்திரன் கடகத்திலும், சுக்கிரன் துலாத்திலும் நின்று நோக்கில் நல்ல சலம் என்றும், பிரகஸ்பதி புதன் நிற்கில் அற்ப சலம் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : குளிரி-நண்டு; கோற்றேள்-கோல்; தேள்-துலாம், விருச்சிகம், சலத்தின் வடிவாம்-பூமியினுள் நீர்நிறைந்திருக்கும்; பெருநீர்-பெருகிவரும் நீர்; உறைநீர்-அற்பமான நீர்.

கீழூற்று, மேலூற்று நீரறிதல்

காரி யிரவிசேய் காணுங்கால் நீரில்லை
தேரில் அரவால் நெடுநீர்தாம் - சீருடைக்கோள்,
நான்காகில் கீழ்நீராம், மேலாகின் மேனீராம்
தாழா நிலவலிதாற் சாற்று. 23

எ-து : கோள் நிலையறிந்து நீரூற்றுநிலை காண்பதற்கு வகை கூறியது.

இ-ள் : முன்சொல்லப்பட்ட இராசிகளில் சனியும், ஆதிதத்தனும், செவ்வாயும் நிற்கினும்-நோக்கினும் நீரில்லை என்றும், இராகு உதயமாகில் கீழாகப் பெருகும் நீரூண்டாகும் என்றும், நீருடைக் கோள்களாகிய சந்திரனும், சுக்கிரனும், பிரகஸ்பதியும், புதனும் உதயத்துக்கு நான்காம் இடத்தில் நிற்கின் கீழ் நீர் என்றும், பத்தாமிடத்தில் நிற்கின் மேல் நீர் என்றும் இவர்களின் வலியாலுஞ் சொல்லுக என்றவாறு.

அ-உரை : காரி-சனி; தேரில்-ஆராயின்; அரவால்-இராகுவால்; நெடுநீர்-ஆழத்தில் பெருகும் நீர்; நான் காகில்-நான்காமிடத்தில் நிற்கில்; கீழ்நீர்-கீழூற்றாகப்பெருகும் நீர்; மேலாகின்-பத்தாமிடமாயின்; தாழா-தாழாமல்.

குறிப்பு :- நிலவலிதாற் சாற்று என்றதனால் ஊற்றுக்களின் தன்மையினை நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சங்களின் பலனாகச் சொல்ல வேண்டும் என்பதும், கீழ்நீர், மேல்நீர் என்பது சொற்ப ஆழத்திலேயே மேல் நீராகும் என்றும், அதிக ஆழத்தில் கீழூற்றுக் காணும் என்றும் முறைப்படுத்தி அறிதற்காம். மேல்நீர் என்பது அற்பமான நீரூற்று என்றும் கூறலாகும்.

கோள் மாற்றம்பெற, ஊற்று நிலை மாறும்

சாற்றிய நீரில்கோள் கீழாகி நீருடைக்கோ
ளேற்றதற்கு மேல்வந் தெழுமாயின் - ஆற்றரவு
மேனீரங் கில்லையெனில் வெண்குடையிற் றீயனவாம்
நீரங்கு இல்லாமைச் சாற்று. 24

எ-து : உதயத்திற்கு நான்கில் இராகு நிற்கின் ஊற்றுநிலை மாறும் என்பது கூறியது.

இ-ள் : உதயாரூடத்திற்கு நாலாமிடத்தில் தீக்கோள் நிற்கின், கீழ்நீருண்டு என்றும், கவிப்பிற் காணிற் கீழ்நீரில்லை என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : சாற்றிய-சொல்லிய; நீரில்கோள்-இராகு; நீருடைக்கோள்-நீர்காண்பதற்குரிய நற்கோள்கள்; எழுமாயின்-தோன்றுமாயின்.

உரை விளக்கம் : இராகு உதயத்தில் நின்றவிடத்து நீர்க்கோள்கள் ஆருடத்தில் நின்று, நீரல்லாத கோள்கள் கவிப்பில் நிற்கில் மேலூற்று என்றும், நீர்க்கோள்கள் கவிப்பில் நின்று நீரல்லாத கோள்கள் ஆருடத்தில் நிற்கில் கீழூற்று என்றும், இங்ஙனம் மாற்றமாகக் கீழ்நீர் அறியப்பெறும். இதனால் கோள்நிலை மாறின் ஊற்று நிலை மாறும் என்பது அறிதற்காகும்.

குறிப்பு : உதயராசி, ஆரூடராசி ஆகிய இடங்களில் நற்கோள்கள் இருக்கவேண்டிய இடத்தில், தீக்கோள்கள் உதயமாயின் சிறப்பாக உதயத்தில் ராகு நிற்கின், கீழூற்று மேலூற்றாகவும், மேலூற்று கீழூற்றாகவும் மாறுபடும் என்பது அமையும்.

மலையிடத்து கீழ்நீரறிதல்

பொன்னும் மதியும் புணர்ந்தொரு கண்டத்தில்
துன்னிற் கிணறு நெடுநீராய் - மன்னும்,
மதிவெள்ளி யுண்டேல் மலைமேலுங் கீழ்நீர்
விதிவகையா னாதல் விளம்பு. 25

எ-து : கோள் நிலையால் மலைமேலும் கீழ்நீர் காணும் விதி கூறியது.

இ-ள் : உதயாதி கண்டத்தில் பிரகஸ்பதியும் சந்திரனும் கூடிநிற்கில் தரையில் அமைத்த கிணற்றில் வற்றாத நீர் சுரக்கும். சந்திரனும் சுக்கிரனும்கூடி நிற்கில் மலையுச்சி யினும் நீருண்டாம் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : பொன்-குரு; புணர்தல்-கூடுதல்; கண்டத்தில்-உதய ஆரூட ராசியிடத்தில்; துன்னில்-சேர்ந்திருந்தால்; மன்னும்-நிலையான; விதி- நூல் விதித்த முறைமை.

உரை விளக்கம் : ஆரூட கண்டங்களிலே உதயத்தில் நின்ற சந்திரனைக் குருகூடி நிற்கில் குறையாத நீர் உண்டு என்றும், சந்திரனைச் சுக்கிரன்கூடி நிற்கில் மலை உச்சியிலும், நீர் ஊற்று உண்டென்றும் சொல்லப்படும். விதிவகை என்றதனால், உதயராசியைத் தவிர மற்றைய இராசிகளில், நான்கு பத்தாம் இடங்களில் சந்திரனுடன் குரு கூடி நிற்கினும் சுக்கிரன் கூடி நிற்கினும் ஊற்று நிலை சமனாகவும், நிலைப்பானதாகவும் இருக்கும் என்பதனை அறிவித்தார் என்க.

அகழ்ந்த இடத்தில் பழங்கிணறு காணல்

சாரதியும் பீதகனும் தாமுடனாய்க் கண்டத்து
ளூரிற் பழங்கிணறு உண்டாகும் - தேரில்
பரிவேடம் பான்மதியோ டுள்ளூறை யாக்காம
லூரியதா கூவல் உரை. 26

எ-து : புதனும் குருவும் கூடிய உதயத்தால் பழங்கிணறு காணல் கூறியது.

இ-ள் : புதனும், குருவும் உதயாரூட கண்டத்தில் நிற்கில் பூமி வினவினவிடத்து, தூர்ந்த கிணறுண்டென்றும் பரிவேடமும் சந்திரனும் கூடி நிற்கில் அவ்விட்டத்தில் அரிதான நீருடன் உள்ளூறையிடாத கிணறு உண்டென்றும் கூறுக என்றவாறு.

அ-உரை : சாரதி-புதன்; பீதகன்-குரு; கண்டத்துள் ஊரில்-இராசியில் சஞ்சரிக்கில்; உள்ளூறையாக்காமலூரியதா-உள்ளூறை அமைக்காமல், அகழ்ந்த அளவில் நீர்ஊற்றுடன் உள்ளதாய்; கூவல்-கிணறு.

குறிப்பு :- உதயாரூட ராசிகளில் குரு நிற்கில் குறையாக நீருண்டு என்று முற்கூறியதுடன், இப்பாடலில் புதனும், குருவும் கூடி நிற்கின் அகழந்த இடத்தில் பழங்கிணறு காணும் என்பதனால், ஆழ்நீருடன் பழைய கட்டிடம் காணப்பெறுதற்கான நுட்பம் காட்டினார் என்பது அறியப் பெறுவதாகும்.

பூமிப்பிளப்பு கரையழிவு காணல்

வெள்ளுவரி சேய்க்கு மிகவும் கரையழிவாம்
ஒள்ளிய மேதை யுறவாமே - தெள்ளிய,
கோதையரி நண்டு கூடிலிடை யூற்றே
யாதலுங் கீழ்மோழை யறி. 27

எ-து : கோள்களின் இடமறிந்து, பூமியின் தன்மை வேறுபாடுகளை உணர்ந்து கூறுதல் கூறியது.

இ-ள் : உதயாரூடத்தில் செவ்வாய் உதயமாகில் வெள்ளுவரினும் வெளிறிய புழுதிப் பூமியாகும். கரை அழிவும் உண்டாகும். புதனாகில் நல்ல நீரார்ந்த பூமியும்,

கன்னி, சிங்கம், கற்கடகம் கூடிய இடமாயின் இடையிலூற்று உடையதாகவும், கோழைநீர் ஊறுஞ்சேறாகவும் இருக்கும் என்று சொல்லுக என்றவாறு.

அ-உரை : வெள்ளுவரி-வெண்மையான உவர்ப்பு நிலம், ஒள்ளிய-சிறந்த (நீர்); கோதை-கன்னி ராசி; அரி-சிங்க இராசி; நண்டு-கடக இராசி; கீழ் மோழை-கீழ்நீர் சேறுகலந்த கோழை நீர்.

குறிப்பு :- உதயாரூட ராசிகளில் கோள்கள் தனித்து நிற்பது கொண்டு காணும், கூவக சாத்திர பூமி நுட்பம் இப்பாடலால் கூறினார் என்பதும், இதனால் செவ்வாய், புதன் ஆகிய கோள்களன்றி, இராகு-சனி ஆகிய கோள்கள் நிற்கினும் நோக்கினும் கோள்களின் சுவைகளுக்கேற்ப நிலம் காணப்படும் என்பதும் உய்த்துணர வைத்தார் என்பதறிதற்காம்.

உவர்நீர், நன்னீர், கரைவலிமை, தெளிவு காணல்

உப்புவரி யாங்கதிருக் குள்ளுரை வட்டமேல்
செப்புகின்ற கூவம் சிதையாது - தப்பின
மதிபுகர் தெண்ணீர் வரையிடத்தும் தோன்றும்
விதியாற்கீழ் நீர்க்கு விளம்பு. *28*

எ-து : கிணறுகாண் இடத்துதிக்கும் நீரின் தன்மையும் வேறுபாடும் கூறியது.

இ-ள் : உதயாரூடத்தானத்தில் சூரியனாகில் - உவர் நீராகும் என்றும், பரிவேடமாகில் - கரையழியாது என்றும், சந்திரனும், சுக்கிரனும் நிற்கில் - வெகுசெவ்வமாகவும் நல்ல நீராகவும் இருக்கும் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : உப்புவரி-உவர்ப்படிமம்; உள்ளுறை-கிணற்றின் உள்ளுறைக்கட்டு; வட்டமேல்-மேல்வட்டக் கட்டுக்கோப்பு; தென்னீர்-தெளிந்த நீர்; வரையிடத்தும்-கற்பாறை நிலத்தும்; விதியால்- ஆரூட சாத்திர முறைமையால்.

குறிப்பு :- விதியால் என்று கூறியதனால், சந்திரன், சுக்கிரன் அல்லாத மற்றைய கோட்கள் நிற்கினும், நோக்கினும் மத்திபமும், அதமமுமான பூமியும் நீருற்றுமாக அமையும் என்ற நுட்பம் அறியப்பெறுவதாகும்.

★ குரு நிற்கினும், நோக்கினும் கிணறு அகழும் பூமி தன்மையானது என்பதும், நீர் சுரந்து பெருகும் நன்னீராம் என்பதும், மேலேகண்ட பாடல்களின் பொதுமையால் அறியப்பெறும்.

அகழிடத்தில் கல், எலும்பு சல்லியம் காணல்

கரியவனும் பாம்பும் கலந்துடனே காணில்
உரியநீர் கோழை யுளதாகும் - மாறியே
பொன்காணிற் கல்லாம் புறக்கோள்க ணோக்குமேல்
என்பாகு மென்ப தியம்பு. 29

எ-து : கிணறு அகழும் பூமியிடத்தாழத்தில் உள்ள கல், எலும்பு முதலியன காணும் திறன் கூறியது.

இ-ள் : உதயாரூட ராசிகளில், சனியும்-பாம்பும் சேர நின்று நோக்குமேல், பெருநீராய்க் கோழை நீராக இருக்கும் என்றும், பிரகஸ்பதி நோக்குற கல்லுண்டாம் என்றும், பிருட்டோதய கிரகங்கள் உதிப்பினும் சேரினும் நோக்கினும் எலும்பு உண்டாகும் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : கரியவன்-சனி; பாம்பு-ராகு; உரியநீர்-அகழ்ந்தவிடத்தில் உண்டான நீர்; கோழை-குழம்பிய நீர், பசைப்புள்ள நீர்; புறக்கோள்கள்-பிருட்டோயதக்கோள்கள்; என்பாகும்-தோண்டுமிடத்தில் எலும்புகள் காணும்.

குறிப்பு :- குரு நிற்பினும் காணினும் கல்காணு என்பது-கற்பாறை காணும் என்றும், அதனிடையே நீர் ஊற்று உண்டாகும் என்றும் இணை நிலை நோக்கொடு பலனறிதல் ஆரூட நுட்பமாகும்.

பழங்குழி தூர்ந்த ஓடை நிலமறிதல்

வில்லொடு வட்டம் வியன்றூம நுட்பங்களு
வொல்கிற் பழங்குழிக ளோடையஞ் - சொல்லிய
சுங்கன் மதியாகிற் சோர்வின்றி நீருடைமை
சங்கையி லாவகையாற் சாற்று. 30

எ-து : பூமியினடியில் பழையதாய தூர்வுப்படிமம் காணுதல் கூறியது.

இ-ள் : உதயாரூடக் கவிப்பில் இந்திரதனு, பரிவேடம், தூமகேது ஆகிய இவர்கள் நிற்கினும், நோக்கினும் பழங்கிணறு தூர்ந்துள்ளது என்பதும், சுக்கிரன், சந்திரன் நிற்கின் பாழ்நீருண்டு என்பதும் கூறுக என்றவாறு.

அ-உரை : வில்-இந்திரதனு; வட்டம்-பரிவேடம்; நுட்பங்கள்-கோளின் நுட்பங்கள்; ஓள்கின்-கூடிநிற்கின்; பழங்குழி-தூர்ந்த குழி; சங்கை-சந்தேகம்.

உரை விளக்கம் : உதயாரூடக் கவிப்பில் இந்திரதனு, பரிவேடம், தூமம், நுட்பம் இவைகள் நிற்கினும், நோக்கினும் அகழ்ந்த இடத்தில் பழங்கிழிகளாதல், ஓடையாதல் உண்டென்றும், கண்டங்களில் சந்திரன், சுக்கிரன் இவர்களில் ஒருவர் நிற்கினும், அவற்றை நோக்கினும் சோர்வில்லாத நீர் உண்டென்றும் சந்தேகம் இல்லாத வகையால் சொல்லுக என்பதாம்.

பூமி உரிமையாதலும் - போதலும் அறிதல்

நல்லக்கோ ணன்னயத் தானோக்கின் பூமியுஞ்
சொல்லிற் றனதேயாம், சோர்வின்றி - பொல்லாக்
கடுங்கோள் கடைநிலனாய்க் காணி னிலனே
விடுங்கா ணவனை விரைந்து. 31

எ-து : கீழ்நீர் காணும் நெறியே, கிணறு அகழ்வதால் வரும் பூமியுரிமைப் பலாபலன் கூறியது.

இ-ள் : உதயவாரூடக்கவிப்பை நற்கோள் நன்னயத்தோடு நோக்கின் நல்ல பூமி என்றும், தன்னுடையதாக இருக்கும் என்றும், நன்றாகத் தண்ணீர் உண்டாகி இருக்கும் என்றும், தீக்கோள்கள் நிற்கினும், நோக்கினும் பொல்லாத நிலம் என்றும், தண்ணீர் இல்லை என்றும், கிணறு வெட்ட வேண்டாம் என்றும் சொல்லுக என்றவாறு.

அ-உரை : நன்னயம்-நட்பு, ஆட்சி, உச்சம்; தனது-தனக்கு உரிமை உடையது; கடுங்கோள்-இராகு, சனி முதலியன; கடைநிலம்-நீச்சம், பகை ராசிகள்; விடும்-கைவிட்டுப்போகும்.

உரை விளக்கம் : சுபக்கோள்கள் வலிமைபெற்று நிற்கினும், நோக்கினும் கிணற்றையுடையவன் பூமியை அனுபவிப்பன், பாபக் கோள்கள் நிற்பினும், நோக்கினும் கிணற்றுடன் பூமியைப் பிறர் அனுபவிப்பர் விரைந்து என்பதாம்.

கீழ் நீருள்ள இடத்தையறியும் அடையாளங்கள்

செங்கதிரோன் காடாகும் தீக்கோட்கு முள்மரமாம்
தெங்கு பனைபூகம் தேமாபொன் -திங்கட்கு,
வாழை, புகர்க்கு மாபலா, மாலுக்கு
தாழையாம் பாம்பு சனி. *32*

எ-து : கீழ்நீர் வினவின இடத்திற்கமைந்த இயற்கைச் சான்றுகள் கூறியது.

இ-ள் : ஆதித்தன் நோக்கின் காடாம் என்றும், செவ்வாய் நோக்கின் முள்மரமாம், குரு நோக்கின் தென்னை, பனை, பாக்கு, தேமா ஆகிய மரங்களாகும். சந்திரன் நோக்கின் வாழையாகும். புதனுக்கு மா, பலாவாகும், சுக்கிரனுக்கு தாழையாகும், இராகுவிற்கும் சனிக்கும் முட்புதர்களாகும் என்றவாறு.

அ-உரை : தீக்கோள்-செவ்வாய்; தெங்கு-தென்னை; புகம்-பாக்கு மரம்; பொன்-குரு; மால்-புதன்; பாம்பு-சனி; ஆம்-ராகு, சனி இவர்கட்கு முட்புதர்களாகும்.

உரை விளக்கம் : உதயாரூடக் கவிப்பில் நின்ற சூரியனுக்குக் காடாகும், அங்காரகன், சனி இவர்கட்கு முள் மரமாம், குருவுக்கு தென்னை, பனை, பாக்கு, மா இவைகளாம், சந்திரனுக்கு வாழையாம், புதனுக்கு மா, பலாவாம், சுக்கிரனுக்குத் தாழையாம், ராகுவிற்குச் சனியின் சாரமேயாம் என்பதாம்.

குறிப்பு :- தீக்கோளுக்கு முள்மரமாம் என்ற குறிப்பால், பிரித்துக் கூறிய பாம்பிற்கும் (ராகு) சனிக்குரியதே ஆகும் என்பதறிவித்ததாம். இதனைக்கொண்டு கூட்டுதலாக பாம்பும், சனியாம் என்பதனால் அறியப்பெறும்.

கீழ் நீருள்ள பூமித்தடத்தியற்கையறிதல்

தூதன் சனிகிடைநீ ராய்மதிக்கு முன்பாகும்
ஏதில் பகலவனுக் கெண்முழமாம் - ஓதுங்கால்,
கன்னிநாகம் புற்றாம்வில் கற்காண்பொன் செந்தீய்ச்சே
யென்னிலொரு மேடாகு மென். 33

எ-து : பூமியின் இயற்கையினையும் நீர்காண் அளவினையும் கூறியது.

இ-ள் : உதயாரூடத்தில் புதனும், சனியும் நிற்கில் கடைநீர் என்க. சந்திரன் நிற்கில் முன்காணும் நீரென்க. சூரியன் நிற்கில் எட்டு முழத்தில் நீர் என்க. கன்னியில் ராகு நிற்கில் புற்றான நிலம் என்க. தனுசில் குரு நிற்கில் கல் தரையாம் என்க. செவ்வாயாகில் மேடாம் என்க. இவ்வாறு நிலத்து அடையாளம் காண்க என்றவாறு.

அ-உரை : தூதன்-புதன்; கிடைநீர்-தங்குதலாகிய நீர்; முன்பாகும்-முன்பாகவே ஊறும் நீர்; ஏதில்-குற்றமற்ற; எண்குளமாம்-கலப்பு நீராம்; கன்னிநாகம்-கன்னி ராசியில் ராகு; வில்கற்காண் பொன்-தனுர் ராசியில் குரு நிற்கில் கல்காணும்; செந்தீய்ச்சேய்-செவ்வாய்; மேடாம்-மேட்டுப் பகுதியாகும்.

உரை விளக்கம் : உதயாரூடத்தில் புதனும், சனியும் நிற்கில் - ஆழத்தில் நீர், சூரியனுக்கு - எட்டு முழத்தில் நீர், கன்னியில் நின்ற ராகுவிற்கு - புற்றடியில் நீர், தனுசில் நின்ற குருவிற்கு - பாறை, கற்பொறுக்கு இவற்றினடியில் நீர், செவ்வாய்க்கு - மேடான இடத்தில் நீர் என்று இவ்வாறு கண்டறிந்து கூறுக என்பதாம்.

வெட்டும் கிணற்றால் விளையும் பலன் அறிதல்

கோட்பொருள் மாண்பதனாற் கூடுவதாம் தீக்கோளு
முட்காத பூமி பிறர்க்குரித்தாம் - திட்பாக,
நன்றாக நற்கோள்கள் நின்றதனை நோக்குமேல்
குன்றாப் பயன்தருதல் கூறு. 34

எ-து : கோள்களின் உதயாரூட நிலைகளைக் கொண்டும், வலி-மெலி-பகை நிலைகளைக் கொண்டும் கிணறு வெட்டுபவன் பெறும் பயனை அறிதல் கூறியது.

இ-ள் : சரராசி உதயமாகி, தீக்கோள்கள் நிற்கில், அந்த பூமி இவனைவிட்டுப் பிறர்க்குரியதாகும், மத்திம ராசி உதயமாகி அதனை நற்கிரகங்கள் பார்க்கில் அந்த பூமி அவனுடையதாகி மிக்க பலனைத்தரும் என்றும், உதயாரூட நிச்சயத்தில் நின்ற கோள்களின் நட்பு, ஆட்சி, உச்சத்தினையும் நாற்கண்டங்களின் முறைகளையும் பார்க்கத்தக்க ராசி கோள்களையும் கொண்டு பலன் சொல்லுக என்றவாறு.

அ-உரை : உட்காத-குன்றாத; திட்பாக-திட்டமாக; குன்றாப்பயன்-என்றும் குறையாத நற்பயன்.

உரை விளக்கம் : மேல் உணர்த்திய இடங்களில் சர ராசிகளும், உபய ராசிகளும் நேரிடின் அவற்றை நட்பு, ஆட்சி, உச்சம் பெற்ற நற்கோள்கள் நோக்கின் கிணற்றை உடையவன் நன்மை அடைவான் என்பதும், கிணற்றைத் தானே அனுபவிப்பன் என்பதும் பெறப்படும். நற்கோள்களின் நோக்கம் இல்லாதவிடத்து, தீமைகளை அடைபவனாவான் என்பதும் சொல்லப்படும். திர ராசிகளாயின் நன்மை மிகுதியாகும் என்பது இதனால் அறியப்பெறுவதாகும்.

அகழும் கிணற்றின் ஆழம் காண்பது

கூவலி னாழங் குறிக்குங்காற் கோட்கதிர்
மேவு மிராசி வியன்கதிர் - மேவியது,
எத்தனையோ அத்தனை சாண்முழமென் றேயுரைக்க
வைத்தனராம் கோட்கதிரான் வைத்து.

எ-து : கோள், இராசி இவற்றின் மிக்க கதிர்கொண்டு கிணற்றின் ஆழம் காண்பது.

இ-ள் : கிணற்றின் ஆழம் சொல்லுமிடத்து, உதயாரூடச் சக்கரத்தும் நாற்கண்டத்தும் திரிகோணத்தும் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நின்றகோளின் கதிராலும், இராசிக் கதிராலும், சென்றகதிர் நிற்கில், நின்ற கதிருக்குள்ள அளவினைச் சொல்லுக என்றவாறு.

அ-உரை : கூவல்-கிணறு; கோள்கதிர்-கோள்களுக்குரிய கதிரளவு; வியன்-மிகுதி, வேறுபாடு.

உரை விளக்கம் : கிணறு வெட்டுங்கால், கீழ் நீருள்ள ஆழத்தை எவ்வாறு அறிதல் என்பது, கீழ்நீரை எவ்வெக்கோள் களால் நியமிக்கப்பட்டதோ அவ்வக்கோள்களின் கதிர் களையும், அக்கோள்கள் நின்ற இராசிகளின் கதிர்கள் எத்தனையோ அவைகளையும் சாண்களாகக் கொண்டு முழம், சாண் அளவிட்டு, கிணற்றில் கீழ்நீர் காணும் ஆழம் குறிக்கப்படும் என்பது சோதிட நூற்புலவர் வைத்தக் கணிப்பாகும்.

குறிப்பு :- மேவியது - என்ற குறிப்பால் மண் திறமும், சல்லியத்தின் இயல்பும், பூமியின் மீதுள்ள அடையாளங்களும் இதற்குத் துணையாகும் என்று உணர்த்தினார் என்க.

கிணறு, துரவு இருக்கும் திசையால் வரும் பயன்

அருக்கனெரி மக்க ளுயிரகற்று மாங்கே
தருக்கினமன் செல்வர்கள் சாமென்க - நெருக்கு,
நிருதிபகை யார்வாழ்வு நேர்வருணன் திக்காம்
மருவுபயிர் நோயாகும் வந்து. 36

எ-து : கிணறு (துரவு) அமைந்த திசையினால் வரும் நன்மை-தீமை கூறியது.

இ-ள் : கிணறு, துரவு இருக்கின்ற அந்த நிலத்துக்குத் தென்கிழக்கு - மக்கள் உயிரிழப்பர் என்க. தெற்கு - நிலமுடைய எசமான் சாவுமென்க. தென்மேற்கு - சத்துருக்கள் அடைவார்கள் என்க. மேற்கு - வாழ்வு உண்டென்க. வடமேற்கு - உண்டான பயிர் நோயாகும் என்க என்றவாறு.

அ-உரை : அருக்கனெரி-சூரியனோடு சார்ந்த அக்கினி திசை; நமன்-தென்மேற்கு திசை; வருணன்-மேற்கு திசை; திக்கு-வடமேற்கு; மருவு பயிர்-பலவகைப்பயிர்.

உரை விளக்கம் : உடையவன் இருக்கும் ஊர்க்கும் மனைக்கும் கிணறு அகழ்ந்த இடம் கிழக்கு தென்கிழக்காயின் மக்கள் அழிவாம். தெற்கு, தென்கிழக்காயின் நிலமுடையானுக்குக் கெடுதி என்க. சத்துருக்கள் இடையூறடைவார் என்க. மேற்கு - வாழ்வுண்டு என்க. வடமேற்கு - பயிரழிவு என்க என்பதாம்.

குறிப்பு :- பாடலின் மூன்றாமடியில் *நிருதியடி யாரடைவர்* என்ற பாடபேதமும் காண்பதனால், அடிமைப்பணியாளர் உண்டாகும் என்றும், அடிமையாளர் தீமை அடைவார்கள் என்றும், கருதுதற்காகும். சத்துருக்களால் இடையூறு அடைவார் என்றும் பொருள் தருவது, நிருதி பகையார் நெருக்கு என்பதாம்.

வடக்கு, வடகிழக்கு - பலனறிதல்

வந்தமுறை யேமனை வாழ்வர் மிகுதியு
மந்தமிலா தானியமும் பொன்னாகும் - முந்தி,
பிரமன்மேற் கூவம் பெருஞ்சிறப்புச் செய்யும்
துரவுங் கிணறுமெனச் சொல். 37

எ-து : கிணறும் - துரவும் வடக்கு-வடகிழக்கு திசையாயின் அவற்றின் பலனறிதல் கூறியது

இ-ள் : வடக்கு வாழ்வெங்க, வடகிழக்கு நவமணியும் பொன்னும் அடைவாரெங்க, நடுமத்தியாகிய பிரமஸ்தான மாகில் மகாதனமும் விருத்தியும் அடைவாரெங்க. இந்தப் படிக்குத் திக்குகளுக்குப் பலாபலன் பார்த்துச் சொல்லுவது, துரவும் கிணறும் உள்ள நிலத்தினால் சொல்வது என்றவாறு.

அ-உரை : வந்த முறை-மேற்பாடலில் சொல்லி வந்த திக்கு திசை முறையால்; மனைவாழ்வு-வடக்கு மனை வாழ்வு; மிகுதியுமந்தமிலா தானியமும்; பொன்னாகும்-வடகிழக்கு மிகுதியும் குறைவில்லாததுமான தானியங்களும் பொன்னு மணியுமாகிய செல்வவளமும் ஆகும்.

உரை விளக்கம் : வடக்காயின் மனை வாழ்க்கைச் செழிக்கும். வடகிழக்காயின் செல்வவளமும் தானிய வளமும் மிகும். பிரமஸ்தானம் என்னும் நடுநிலமாகில் எல்லா வளமும் நலமும் தரும் என்பதாம்.

குறிப்பு :- மேற்பாடலும் இப்பாடலும் கிணறு, துரவு ஆகிய நீர் நிலைகள் அமைந்த திக்கு திசையினைக் கொண்டு, ஊருக்கும் உடையானுக்கும் உரியதான பலாபலன் கூறியதென்பது அறியத்தக்கதாகும்

கீழ்நீர் காண்டம் முற்றும்

ஆக காண்டம் அ-க்கு வெண்பா 230.

சினேந்திர மாலை

(வேறு)

உரைவிளக்கத் தொகுப்பு

பாயிரம்

நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சம் ஆகிய ஐந்தினையும், இவ்வைந்து நிலத்து வலியினையும், ஆருடத்தினையும், கவிப்பினையும், உதயத்தினையும், கண்டங்களின் காலினையும், அந்நிலத்து நோக்கின கோளின் குறிப்பினையும் அறிபவன் உலகத்தார்க்கு ஆதரவாகும் என்றவாறு. 1

இந்நிலத்து இன்ன ராசி, நோக்கம், ஆண், பெண், இரட்டை குலம், நிறம், மிருகம், மனிதர், இவர்களின் ரூபமும் பிறப்பும் அளவும் தூரமும், வயதும், சுவைகளும் மூப்பும், இளமையும் சொல்லுவ என்றவாறு. 2

வயதும், மறுவும், வடுவும், உண்டவன் சுவையும், பூலோகத்தில் உள்ள மனிதர் அறியும் வகையும் உரைப்பேன் என்றவாறு. 3

கோளின் நிலை, கோளின் பிரமாணம், நிலம், சேரிடம், இரவு, பகல், காலம், பொழுது ஆகியவற்றை அறிந்து உரைப்பேன் என்றவாறு. 4

தாது, மூலம், சீவன், நட்டாமுட்டி, சிந்தனை, பொருள் காணும் - காணாது, சத்துரு, உறவு, வியாதி, மரணம் இந்த வகையெல்லாம் உரைப்பன் என்றவாறு. 5

உண்டனவும், கண்டனவும், சகுனமும், விவாகமும், பிள்ளைப்பேறும், கரிகையும், சல்லியமும், கீழ்நீரும் சொல்லுக என்றவாறு. 6

படைவெட்டும், பல்பொருள்கள் வரும் நாளும், யாத்திரையும், ஆற்று நீர் வரத்து, மழை பெய்தல், தானிய விலை, சம்பத்தான வரத்தும், காணும் நிமித்தமும் இவை அனைத்தும் இந்நூலின் வழியே சொல்லுக என்றவாறு. 7

பாயிரம் முற்றும்.

நட்பு

கோள் - இராசிகளின் நட்பு

செவ்வாய்க்கு - வெள்ளியும், புதனும் உறவு. வெள்ளிக்குச் செவ்வாயும், சனியும், புதனும், வியாழமும் உறவு. சனிக்கு - புதனும், வெள்ளியும், வியாழமும் உறவு, சந்திரனுக்கு - புதனும், வியாழமும் உறவு என்றவாறு, 8

புதனுக்கு உறவு திங்கள், செவ்வாய், வியாழம். சனி வியாழத்துக்கு உறவு - புதன், வெள்ளி, சனி, திங்கள், ஆதித்தன் என்றவாறு. 9

சனிக்கு நட்பு - தனுசு, மிதுனம், கன்னி, மீனம், இடபம். சூரியனுக்கு நட்பு - தனுசு, மீனம். செவ்வாய்க்கு நட்பு - துலாம், மிதுனம், கன்னி. சந்திரனுக்கு நட்பு - கன்னி, தனுசு, மிதுனம் என்றவாறு.

புதனுக்கு உறவு - மேஷம், தனுசு, விருச்சிகம், மகரம், துலாம், இடபம், கற்கடகம். சுக்கிரனுக்கு உறவு - மேஷம், தனுசு, மிதுனம், கும்பம், விருச்சிகம், மகரம். வியாழத்துக்கு உறவு - இடபம், துலாம், மிதுனம், கன்னி, கும்பம், சிங்கம் என்றவாறு.

நட்பு முற்றும்.

கோள்களின் வலிமை, மென்மை, மெலிவு இடங்கள்

செவ்வாய்க்கு ஆட்சி - மேடம், விருச்சிகம். சுக்கிரனுக்கு ஆட்சி - இடபம், துலாம். புதனுக்கு ஆட்சி - மிதுனம், கன்னி. சனிக்கு ஆட்சி - மகரம், கும்பம்.குருவுக்கு ஆட்சி - மீனம், தனுசு. சூரியனுக்கு ஆட்சி - சிங்கம். சந்திரனுக்கு ஆட்சி - கற்கடகம். இவை ஆட்சி ராசிகள் என்றவாறு. 12

உச்சத்தானங்கள்

ஆதித்தனுக்கு மேடமும், சந்திரனுக்கு இடபமும், பரிவேடத்திற்கு மிதுனமும், வியாழத்துக்குக் கற்கடகமும், தூமத்துக்குச் சிங்கமும், புதனுக்குக் கன்னியும், சனிக்குத் துலாமும், செவ்வாய்க்கு மகரமும், நுட்பத்திற்குக் கும்பமும், சுக்கிரனுக்கு மீனமும் உச்சத்தானமான ராசிகள் என்றவாறு.

பரிவேடம் - சந்திரனையும், சூரியனையும் சூழ்ந்து இயங்கும் கதிர்வட்டம்.

அதி உச்சம் - அதி நீச்சம்

ஆதித்தனுக்கு மேடத்தில் பத்தாம் பாகமும், சந்திரனுக்கு இடபத்தில் மூன்றாம் பாகமும், செவ்வாய்க்கு மகரத்தில் இருபத்தெட்டாம் பாகமும், புதனுக்குக் கன்னியில் பதினைந்தாம் பாகமும், வியாழத்துக்குக் கடகத்தில் ஐந்தாம் பாகமும், சுக்கிரனுக்கு மீனத்தில் இருபத்தேழாம் பாகமும், சனிக்குத் துலாத்தில் இருபதாம் பாகமும் அதியுச்சம் என்பது. அவரவர் உச்சத்திற்கு ஏழாம் ஸ்தானம் நீசம் என்று அறிக. அந்த நீசத்தானத்தில் முன்பு சொன்ன அதியுச்சப் பாகப்படிக்கு அதிக நீசம் என்றறிக என்றவாறு. 14

பகை இடங்கள்

புதனுக்கு ஆதித்தனும்; சுக்கிரனுக்கு ஆதித்தனும், செவ்வாயும்; வியாழத்துக்குச் செவ்வாயும்; சனிக்கு

ஆதித்தனும், செவ்வாயும், சந்திரனும் இத்தன்மையே பகை ஆவார்கள். இவர்கள் நிலங்களும் இத்தன்மையே பகையாகும் என்றவாறு. 15

நீச்சத்தானம்

ஆதித்தனுக்குத் துலாம், சந்திரனுக்கு விருச்சிகம், செவ்வாய்க்குக் கடகம், புதனுக்கு மீனம், வியாழத்துக்கு மகரம், சுக்கிரனுக்கு கன்னி, சனிக்கு மேடம் இவை நீச்சத்தானம் என்றறிக. 16

வலிமை இடங்கள்

இராகுவுக்கு இடபமும், இந்திரதனுவுக்கு மிதுனமும், நுட்பத்துக்குச் சிங்கமும், முடக்கோளுக்குத் தனுவும், தூமத்துக்குக் கும்பமும் நீசத்தானம் என்பதாம். இத்தன்மைத் தாகிய கிரகங்கள் நீச்சத்தில் நின்றால் கால்பலன்; பகைத் தானத்தில் நின்றால் அரைப்பலன்; நட்பு நிலத்தில் நின்றால் முழுப்பலன்; ஆட்சி நிலத்தில் நின்றால் இருமடங்கு பலன், உச்ச நிலத்தில் நின்றால் பதின்மடங்கு பலன் உடையார் என்றவாறு. 17

பலன் - பலம் - வலிமை என்று அறிவதாகும்.

இராகு , கேது - நட்பு, ஆட்சி இடங்கள்

இராகு, கேதுவுக்கு - துலாம், மகரம், கன்னி, மிதுனம், தனுசு, மீனம் இவ்விராசிகள் நட்பு என்றும், கும்பம் ஆட்சி என்றும், விருச்சிகம் உச்சம் என்றும், கடகம், சிங்கம், மேடம் பகை நிலம் என்றும், இடபம் நீச்சம் என்றும் அறிக என்றவாறு.

இராசிகளின் வடிவங்கள்

கும்பம் - குடங்கொண்டு நிற்பான் ஒரு புருடன். துலாம்- துலாங்கொண்டு நிற்பான் ஒருபுருடன். மிதுனம் பெண்ணும்- ஆணுமாய்ப் புருடன் கையில் தடியும், பெண்ணின் கையில் தண்டிகையும் பிடித்துக்கொண்டு ஒரு கட்டிலிலே இருப்பார்கள். கன்னி - ஒரு கையிலே விளக்குப் பிடித்துக்

கொண்டு, ஒரு தலத்திலே இருக்கும். தனுசு - விற்பிடித்துக் கொண்டு நிற்பான் ஒரு புருடன். அரைக்கீழெல்லாம் குதிரை வடிவாயிருப்பான். மகரம் - முன்புறம் மான் தலையாயும் பின்புறம் சுறாமீன் வடிவமாயிருப்பான். மீனம் - மீனாகத் தோற்றம். மாற்றாக எழுவதுமாக இருக்கும். அல்லாதன தத்தமது பெயருக்குத் தக்கதாக இருக்கும் என்றவாறு. *19*

குறிப்பு - அல்லாதவை என்ற ராசிகள் - மேடம், இடபம், கடகம், சிம்மம், விருச்சிகம் ஆகிய ஐந்து ராசிகளாகும். இவற்றிற்கு முறையே மேடம் - நிற்கும் ஆடு. இடபம் - நிற்கும் காளை. கடகம் - நண்டு. விருச்சிகம் - தேள் ஆகிய வடிவங்கள் பொருந்தியதாகும். துலாம் - தராசு, தண்டிகை - விருதுக்கோல். முளைப்பாலிகை - தானிய முளைப்பாலிகை.

ஆருடச்சக்கரம்

முன்சொல்லப்பட்ட ஆருடச்சக்கரம் எவ்வாறு அமையுமெனில், பூமியிலே வட்டமாகக் கீறி, ஆறென்று சொல்லத்தக்க ரேகைகளைக் கீழ்-மேல் இரண்டு ரேகையும், தென்வடல் இரண்டு ரேகையும் கீறி, கோணங்கள் நான்கிலும் ஒவ்வொரு ரேகையும் கீறிப்பார்க்கப் பன்னிரெண்டு அறையாம். அந்த அறைகளுக்குக் கிழக்கு முதலாக இடபம், மிதுனம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம் ஆகிய ராசிகள் பன்னிரண்டையும் இவ்வடைவே வலம் சுழலாக இடபம் முதலாக நிறுத்துவது. பூச்சக்கரமான ஆருடச்சக்கரம் என்றறிக என்றவாறு. *20*

ஆறு-இரேகைக்கோடு, பூச்சக்கரம்-பன்னிரண்டு இதழ்களுடன் கூடிய பூப்போன்ற வட்டவடிவமான சக்கரம்.

சக்கரத்தில் கோள்களின் அமைப்பிடங்கள்

முன்சொல்லப்பட்ட ஆருட சக்கரத்தின் மேலே குரு பகவானும் கீறி, அதிலே இடபாதி ராசிகளும், கிருத்திகாதி நட்சத்திரங்களும் அமைத்து, மூர்த்தத்திலே சனி பகவானும், அதற்குக்கீழே அங்காரக பகவானும், அதன்கீழே ஆதித்த பகவானும், அதன்கீழே சுக்கிர பகவானும், அதன் கீழே

புதபகவானும்; இப்படி ராசி - நட்சத்திரங்களும், கிரகங்களும் கோப்புண்டு நிற்க, அத்தன்மைத்தாகிய சக்கரத்தைத் தக்ஷணமானதாலும், கவத்திகமான திரிசக்கர தக்ஷண பாரிசமான கவத்திகத்திற்கு நடுவே ஒரு துருவனும் இருந்து, உத்தரபாரிசமான கவத்திகத்து நடுவே ஒரு துவனும் இருந்து, சல்லியந்தரம்போல வியந்தரிக்க பூறுவ பாகமாகிய அதனையறியும் தவமென்னத் தக்க சந்திகள் நாலு கண்டமாகப் பூச்சக்கரத்துள்ளே, ஆகாயத்துக்கு நடுவே நின்று சுழலா நிற்கும். 21

அத்தன்மைத்தாகிய சக்கரத்தின் நடுவே ஆதித்த பகவானே புருட பகவானாய்த் திரிபூமியுமாய்ப் பெண்ணுமாய் ஆரூட சக்கரத்துக்கு உடலுமாய் நிற்கும் என்றும் சொல்லுக என்றவாறு.

இப்படியே உதயாரூடமாகிய சக்கரத்தை அறிந்து, பூதவர்த்தமான பவிஷியம் சொல்லுக என்றவாறு. வர்த்தமானம்-நடைமுறைகள், பவிஷ்யம்-எதிர்காலம்.

எதிர்க்கயிறு கோள்கள்

இடபத்துக்கு விருச்சிகமும், மிதுனத்திற்குத் தனுசும், கடகத்துக்கு மகரமும், சிங்கத்துக்குக் கும்பமும், கன்னிக்கு மீனமும், துலாத்துக்கு மேடமும் இவ்வாறு சக்கரத்தின் ராசிகள் ஒன்றுக்கொன்று எதிர்க்கயிறாக நிற்கும் என்றும் சொல்லுக என்றவாறு. 22

ஆரூட சக்கரத்தில் கோள்களின் வரிசை

ஆதித்தனுக்குச் சுக்கிரனும், செவ்வாய்க்குச் சனியும், புதனுக்கு ராகுவும், வியாழத்துக்கு சந்திரனும் இப்படி ஒருவர்க்கொருவர் கிழக்கு முதலாக, ஆரூடச்சக்கரமாக நிற்பார்கள் என்றவாறு.

ஆரூடச்சக்கரம் முற்றும்

கிரகங்களுக்குரிய கதிர் வீதி

சிங்கம், கடகம், மிதுனம், இடபம் இவை நான்கும் மேடவீதி என்றும், தனுசு, விருச்சிகம், மகரம், கும்பம் இவை நான்கும் மிதுனவீதி என்றும், மேடம், மீனம், துலாம், கன்னி இந்நான்கும் இடபவீதி என்றும் சொல்லுக என்றவாறு. *24*

நட்சத்திர சக்கரம்

யாவனொருவன் வருகின்ற கயிராகிய ஆரூடராசியை ஆதித்தன் நின்ற இராசியிலிருந்து (பிடித்து) எண்ணிவந்த தொகை இத்தனை என்று அறிந்து, அப்போது இருக்கின்ற ராசியிலிருந்து தொகையளவும் எண்ணிக்கண்ட இராசியை ஆரூடத்திற்கு உச்சத்திறமாம் என்றவாறு. *25*

கவிப்பு ராசி உதயம்

மேடம் உதயமாகில் இடபம் கவிக்கும். இடபம் உதயமாகில் மேடங்கவிக்கும், மிதுனம் உதயமாகில் மேடம் கவிக்கும், கடகம் உதயமாகில் மேடங்கவிக்கும், சிங்கம் உதயமாகில் மேடங்கவிக்கும், கன்னி உதயமாகில் இடபம் கவிக்கும், துலாம் உதயமாகில் இடபம் கவிக்கும், விருச்சிகம் உதயமாகில் மிதுனம் கவிக்கும், தனுசு உதயமாகில் மிதுனம் கவிக்கும், கும்பம் உதயமாகில் மிதுனம் கவிக்கும், மீனம் உதயமாகில் இடபம் கவிக்கும். இந்தப்படிக்கு உதயராசியை கவிக்கும் என்றவாறு. *26*

கவிப்பு முற்றும்.

கிரகோதய ராசிகள்

முன்னர் சொல்லப்பட்ட திரிசக்கரத்தில் பூர்வாதியாகக் கன்னி, விருச்சிகம், கும்பம், சிங்கம், மிதுனம், துலாம் என்ற ஆறு ராசியும் - சிரோதயமாக உதிக்கும் என்றும், மீனம்

வாலும் தலையுமாகக்கூடி உதிக்கும் என்றும், மேடம், இடபம், தனுசு, மகரம், கடகமாகிய ஐந்து ராசியும் பிருட்டோதயமாக உதிக்கும் என்றும் அறிக என்றவாறு. 27

கிரக உதயம்

ஆதித்தனும் செவ்வாயும் சனியுமாகிய கிரகங்கள் பிருட்டோதயமாகவும், சுக்கிரனும், புதனும், வியாழமும் இராகுவுமாகிய கிரகங்கள் சிரோதயமாகவும், சந்திரனும் கேதுவும் வாலுந் தலையுமாகவும் உதிப்பாரென்றும் இப்படி கிரக உதயங்கண்டறிக என்றவாறு. 28

இராசிகளின் சீவன்

மேடம், தனுசு, சிங்கம் இடபமாகிய ராசிகள் நாற்காலாவன என்றும், கும்பம், மிதுனம், துலாம் கன்னியாகிய ராசிகள் இருகாலாவன என்றும், கடகம், விருச்சிகமாகிய ராசிகள் பலகாலாவன என்றும், மகரம் மீனமாகிய ராசிகள் பறவையாம் என்றும் சொல்லுக என்றவாறு. 29

கிரகங்களின் சீவன்

சனியும் ஆதித்தனும் செவ்வாயுமாகிய கிரகங்கள் நாற்காலுடையன என்றும், புதனும், சுக்கிரனும், வியாழமுமாகிய கிரகங்கள் இருகாலுடையன என்றும், சந்திரன் பாம்புமாகிய கிரககங்கள் பல காலுடையன என்றும் நூலணர்ந்தவர்களால் விதிக்கப்பட்டன என்றவாறு. 30

நாற்கண்டங்கள்

லக்கினம் உதயகண்டம் என்றும், அதனுக்கு நான்காம் இராசி நீர்க்கீழ்க்கண்டம் என்றும், ஏழாம் இராசி பாடுகண்டம் என்றும், பத்தாம் ராசி உச்சிக்கண்டம் என்றும், முன்பு சக்கரத்தில் சொல்லப்பட்ட சந்திகள் நான்காகிய கண்டங்களின் பெயராகும் என்றவாறு. 31

கண்டத்தின் பலன்

இருகால் ராசி உதயத்தில் வலியவென்றும், நாற்கால் இராசி பத்தாமிடத்தில் வலியவென்றும், பலகால் இராசிகள் ஏழாமிடத்தில் வலியவென்றும், பறவை ராசி நாலாமிட்த்தில் வலியவென்றும் இப்படி இராசிகளில் வலியறிந்து சொல்லுக என்றவாறு. 32

இதுவுமது

புதனும், வியாழமும் உதயத்துப் பலமுடையர் என்றும்; ஆதித்தனும், செவ்வாயும் பத்தாமிடத்தில் பலமுடையவர் என்றும்; சனியும், பாம்பும் ஏழாமிடத்தில் பலமுடையர் என்றும்; சுக்கிரனும், சந்திரனும் நான்காமிடத்தில் பலமுடையவர் என்றும், இப்படி கிரகங்கள் பலமுடைய வலியறிந்து சொல்லுக என்றவாறு. 33

கண்டங்களில் கோள் நின்ற பலன்

உதயராசியும், அதற்கு ஏழாம் ராசியும் முழுநோக்கு உடையன என்றும், உதயத்திற்கு ஐந்தாம் ராசி அரை நோக்குடையன என்றும், உதயத்துக்கு ஒன்பதாம் ராசி முக்கால் நோக்குடையன என்றும், உதயத்துக்குப் பத்தாம் இராசி கால்நோக்குடையன என்றும், உதயத்துக்குப் பதினோராம் ராசியும், மூன்றாம் ராசியும் அரைக்கால் நோக்குடையன என்றும் அறிக என்றவாறு.

நோக்கின் வலிமை நிலை

ஆதித்தனும், சந்திரனும், வெள்ளியும், புதனும் முழு நோக்கில் வலியன். செவ்வாய் முக்கால் நோக்கில் வலியன். சனி கால்நோக்கில் வலியன். வியாழம் அரைநோக்கில் வலியன் என்றவாறு. 35

இராசி நோக்கு

விலங்கு ராசியாகிய மேடம், இடபம், சிங்கம், தனுசு இவை நாற்கால் இராசிகளாதலின் விலங்கிப் பார்க்கும் என்றும், மானிட ராசியாகிய மிதுனம், கன்னி, துலாம், கும்பம் இவை செவ்வையாக நோக்கும் என்றும், பறவை ராசியாகிய மகரம், மீனம் இவை தூரப்பார்க்கும் என்றும் தவழ் ராசியாகிய விருச்சிகம், கடகம் இவை பூமியைப் பார்க்கும் என்றும் அறிக என்றவாறு. *36*

செவ்வை நோக்கு - நேர் பார்வை; எதிர்பார்வை - நல்ல பார்வை.

கோள்களின் நோக்கிலக்கணம்

சந்திரனும், வியாழமும் நேரே நோக்குவார்கள் என்றும், ஆதித்தன் மேனோக்கிப் பார்ப்பார் என்றும்; செவ்வாய் கடைக்கண்ணால் பார்ப்பார் என்றும்; புதனும், சுக்கிரனும் கவிழ்ந்து பார்ப்பவர் என்றும்; பாம்பும், சனியும் ஒரு கண்ணாலே பார்ப்பவர் என்றும் இப்படிப் பார்வை வேறுபாடறிந்து சொல்லுக என்றவாறு. *37*

இராசிகள் நோக்கும் திசை

மேடத்துக்குப் பார்வை கிழக்கு என்றும், சிங்கத்திற்கும் தனுசுக்கும் பார்வை தென்கிழக்கு என்றும், இடபத்திற்குப் பார்வை தெற்கு என்றும், கன்னிக்கும் மகரத்திற்கும் பார்வை தென்மேற்கு என்றும், மிதுனத்திற்குப் பார்வை மேற்கு என்றும், துலாத்திற்கும் கும்பத்திற்கும் பார்வை வடமேற்கு என்றும், கடகத்திற்குப் பார்வை வடக்கு என்றும், விருச்சிகத்திற்கும் மீனத்திற்கும் பார்வை வடகிழக்கு என்றும், இவ்வாறு இராசிகளின் பார்வைத் திசையறிக என்றவாறு. *38*

கிரகங்கள் நோக்கும் திசை

ஆதித்தனுக்கு நோக்குக் கிழக்கு என்றும், சுக்கிரனுக்கு நோக்குத் தென்கிழக்கு என்றும், செவ்வாய்க்கு நோக்குத் தெற்கு என்றும், பாம்புக்கு நோக்குத் தென்மேற்கு என்றும், சனிக்கு நோக்கு மேற்கு என்றும், புதனுக்கு நோக்கு வடமேற்கு என்றும், சந்திரனுக்கு நோக்கு வடக்கு என்றும், வியாழத்துக்கு நோக்கு வடகிழக்கு என்றும் இப்படி கிழக்கு முதலாக உதயாதியாகக் கிரகங்கள் எட்டும் நோக்குந் திசைகள் எட்டும் அறிக என்றவாறு. 39

இராசி - ஆண், பெண்

துலாம், சிங்கம், மிதுனம், தனுசு, கும்பம், மேடம் இவ்விராசிகள் ஆண் என்றும், இடபம், மீனம், மகரம், கன்னி, விருச்சிகம், கடகம் இவ்விராசிகள் பெண் என்றும் அறிக என்றவாறு. 40

கிரகம் - ஆண், பெண்

சுக்கிரன், சந்திரன், ராகு மூன்றும் பெண் கிரகங்கள். கேது, புதன், சனி மூன்றும் அலி கிரகங்கள். செவ்வாய், ஆதித்தன், வியாழன் மூன்றும் ஆண் கிரகங்கள் என்றும் அறிக என்றவாறு. 41

இராசி ஒற்றை - இரட்டை

மிதுனம், கும்பம், துலாம், தனுசு இவை ஆண் இரட்டை; சிங்கம், மேடம் இவை ஆண் ஒற்றை; இடபம், கன்னி, விருச்சிகம், கடகம் இவை பெண் ஒற்றை; மகரம், மீனம் இவை பெண் இரட்டை என்றவாறு. 42

கோள் ஒற்றை இரட்டை

செவ்வாயும், ஆதித்தனும், சந்திரனும் ஒற்றை எனக் கொள்க. வெள்ளி, புதன், வியாழம், சனி, ராகு, கேது ஆகியவை இரட்டை எனக்கொள்க என்றவாறு. 43

கோள்களின் குலம்

ஆதித்தனும், செவ்வாயும் சத்திரியன்; சந்திரனும், வியாழமும் பிராமணன்; புதன் செட்டி; வெள்ளி வேளான்; சனியும், ராகுவும் கீழ்ச்சாதி என்றவாறு. *44*

இராசிகளின் குலம்

சிங்கம், மேடம் சத்திரியன்; மீனம், கடகம், விருச்சிகம் பிராமணன்; துலாம், மிதுனம், கும்பம் இவை செட்டி; மகரம், இடபம், கன்னி இவை கீழ்ச்சாதி என்றவாறு. *45*

இராசிகளின் நிறம்

தனுசு, சிங்கம், மேடம் இவை சிகப்பு நிறம். இடபம், துலாம், கடகம் இவை வெள்ளை நிறம். மீனம், கும்பம், விருச்சிகம் இவை பச்சை நிறம். மிதுனம், கன்னி, மகரம் இவை கறுப்பு நிறம் என்றவாறு. *46*

கோள்களின் நிறம்

வெள்ளி - வெள்ளி, செவ்வாய் - சிகப்பு; வியாழம் - பொன்னிறம், புதன் - பச்சை, சந்திரன் - வெண்மை, ஆதித்தனும் கேதுவும் - செம்பசுமை, சனியும் ராகுவும் - கறுப்பு என்றவாறு. *47*

இராசி - கோள் இயக்கவகை

விருச்சிகம், கடகம் தவழும் ராசிகள். மீனம், மகரம் பறக்கும் ராசிகள். மேடம், இடபம், மிதுனம், சிங்கம், கன்னி, துலாம், தனுசு, கும்பம் இவை நடக்கும் ராசிகள். சந்திரன்-ராகு தவழும் கோள். புதன் பறக்கும் கோள். சனி ஒருகாலால் நடக்கும் கோள். ஆதித்தன், செவ்வாய், வியாழம், வெள்ளி இவை நடக்கும் இராசிகள் என்றவாறு. *48*

கோள்களின் வடிவம்

ஆதித்தனின் வடிவம் நாற்சதுரம், சந்திரனின் வடிவம் வட்டம், செவ்வாயின் வடிவம் துடிவடிவம், புதன் வடிவம் முக்கோணம், வியாழம் வடிவம் நீண்ட வட்டம், வெள்ளி வடிவம் எண்கோணம், சனி வடிவம் நெடுநாற்சதுர வட்டம், பாம்பு வடிவம் நீண்டிருக்கும், ஒருவன் கெடுத்தனவும் நினைத்தனவும் இந்தப்படி வடிவுகண்டு அளவிட்டுச் சொல்லுக என்றவாறு. *49*

கோள்களின் அளவு

கோள்களில் சனியும் செவ்வாயும் சந்திரனும் குறுகியது என்றும், பாம்பும் புதனும் வியாழமும் நெடியது என்றும், வெள்ளியும் ஆதித்தனும் சமன் என்றும், இவ்வாறு கோள்களின் அளவை அறிந்து, இதில் வலிபெற்ற கோள்களின் வடிவறிந்து சொல்வது என்றவாறு. *50*

கிரகங்களின் கதிரளவு

கிரகங்களின் கதிரளவு : ஆதித்தன் கதிர்-5, சந்திரன் கதிர்-21, செவ்வாய் கதிர்-7, புதன் கதிர்-9, வியாழம் கதிர்-10, வெள்ளி கதிர்-19, சனி கதிர்-4, ராகு கதிர்-4. இவ்வாறு கோள்களுக்குக் கதிர் அளவு அறிக என்றவாறு.

இராசிக் கதிரளவு

மேடம் கதிர்-8, கடகம் கதிர்-8, துலாம் கதிர்-8, கும்பம் கதிர்-8, இடபம் கதிர்-9, மகரம் கதிர்-9, மிதுனம் கதிர்-9, சிங்கம் கதிர்-7, கன்னி கதிர்-11, தனுசு கதிர்-11, விருச்சிகம் கதிர்-4, மீனம் கதிர்-27 இவ்வாறு இராசிகளுக்குக் கதிர் அறிக என்றவாறு.

கதிரளவு மற்றொரு நிலை

மேடம்-7, இடபம்-8, மிதுனம்-5, கடகம்-3, சிங்கம்-7, கன்னி-11, துலாம்12, விருச்சிகம்-4, தனுசு-9, மகரம்-8, கும்பம்-21, மீனம்-7. இவ்வாறு மேடம் முதல் மீனம் ஈறாகக் கதிரளவு ஒட்டிக்கொள்க என்றவாறு. *53*

கிரகங்களின் காதம்

சனி ராகுவுக்குக் காதம்-20, சந்திரனுக்குக் காதம்-1, குருவுக்குக் காதம்-1, செவ்வாய்க்குக் காதம்-7, சுக்கிரனுக்குக் காதம்-19, சூரியனுக்குக் காதம்-8, புதனுக்குக் காதம்-8. இவ்வாறு கோள்களுக்குக் காதம் சொல்லுக என்றவாறு. 54

காதம் - பத்துமைல் தொலைவு என்பர்.

கிரகங்களின் வயதளவு

கிரகங்களுக்குரிய வயதளவு யாதெனின் - செவ்வாய்க்கு வயது-16, வெள்ளிக்கு வயது-7, புதனுக்கு வயது-20, வியாழத்துக்கு வயது-34, சந்திரனுக்கு வயது-71, ஆதித்தனுக்கு வயது-50, பாம்புக்கும் சனிக்கும் வயது-100. இவ்வாறு கோள்களின் வயதளவு சொல்லுக என்றவாறு. 55

கிரகங்களின் அறுசுவை

சனிக்கும், ராகுவுக்கும் சுவை-கைப்பு; வியாழத்துக்குச் சுவை-தித்திப்பு (இனிப்பு); வெள்ளிக்குச் சுவை-புளிப்பு; சந்திரனுக்குச் சுவை-துவர்ப்பு; செவ்வாய்க்குச் சுவை-உறைப்பு; புதனுக்குச் சுவை-துவர்ப்பு; ஆதித்தனுக்குச் சுவை-காறல். இவ்வாறு கிரகங்களுக்குரிய சுவையறிக என்றவாறு.

கோள்களின் வடு, மறு, மச்சம்

புதன், செவ்வாய், ஆதித்தன், வியாழம் இவர்கட்கு வலப்புறத்தில் மறுவாதல், வடுவாதல் உண்டு. ராகு, சந்திரன், சனி, வெள்ளி இவர்கட்கு இடப்புறத்தில் மறுவாதல், வடுவாதல் உண்டு என்று சொல்லுக என்றவாறு. 57

இதுவுமது

வெள்ளிக்கு முகத்திலும், செவ்வாய்க்கு முதுகிலும், வியாழத்துக்குத் தோளிலும், புதனுக்குக் கைக்கீழும்,

சந்திரனுக்குத் தலையிலும், ஆதித்தனுக்கு இடுப்பிலும், சனிக்குத் தொடையிலும், ராகுவிற்குக் கணைக்காலிலும் இவ்வாறு கோள்களுக்குக் குறித்த அங்கங்களில் மறுவாகிலும் வடுவாகிலும், மச்சமாகிலும் ஒன்றும் பலவும் உண்டென்று அறிக என்றவாறு. *58*

மறு-அங்கத்தில் உண்டான குற்றச்சுவடு; வடு-நோயாலும், ஆயுதப் புண்ணாலும் உண்டான அடையாளம்; மச்சம்-உடலில் இயல்பாகத் தோன்றி நிலைப்பாக இருக்கும் கருமை, செம்மை நிறங்களில் இருக்கும் புள்ளிகள்.

இராசிகளின் நிலை - பலன்

இடபம், விருச்சிகம், கும்பம், சிங்கம் இவை நாலும் திரராசியாக நிற்பனவாம். இவை உதயமாக வினவினவன் பொருள் ஒன்றும் அழிந்தனவில்லை (அழியவில்லை) கெடுதி அகலப்போனதுமில்லை. கெடுதி கொஞ்சம் அகத்தில் உள்ளன என்றும், படை வரவு வாராதென்றும் காண்க. சாவு உண்டெனில் சாவில்லை, கேடில்லை, பிணி தீரும் என்க. கொடுத்த பொருள் வருமென்க. கடகம், துலாம், மகரம், மேடம் இவை நான்கும் சரராசி. இவை உதயமாகக் கெடுதி காணாது என்க. பிணி தீராதென்க; படை வருமென்க. போனார் வருவாரென்க; வித்தை மிக உண்டென்க. மீனம், மிதுனம், கன்னி, தனுசு இவை நான்கும் உபய ராசிகள். இவை உதயமாகக் கெடுதிகாணும். இவையிற் குரு நிற்கப் பிணிதீரும், பகை சந்தாகும் (நட்பாகும்), வித்தை கொஞ்சம் உண்டு. யாத்திரை போனார் வாரார் என்க; விர்ணம் மாறும் (துன்பம்) என்க என்றவாறு. *59*

கிரகங்களின் - கொம்புவகை

விலங்கு சாதியாய் வந்தவிடத்துப் புதனுக்கும், ஆதித்தனுக்கும் கொம்பு வளைந்திருக்கும். சந்திரனுக்கு

மட்டைக்கொம்பு. செவ்வாய்க்குக் கொம்பு குறுகியது. வியாழம், வெள்ளிக்குக் கொம்பு நெடியது. சனி, ராகுவிற்குக் கொம்பு முறிந்திருக்கும். இவ்வாறு விலங்கு கெடுதி வினவின இடத்துக் கோள்களின் கொம்பறிந்து கூறுக என்றவாறு. 60

கெடுதி சேரும் இடம் குறிக்கும் இராசிகள்

மேடம் - காடு; தனுசு - தோட்டக்காடு; மிதுனமும், கன்னியும் - ஊர்; சிங்கத்திற்கு - மலை; துலாத்திற்கு - ஆற்றங் கரை; மீனம், மகரத்திற்கு - ஆறு; கடகத்திற்கு - வாய்க்கால்; இடபத்திற்கு-வயல், விளைநிலம்; விருச்சிகத்திற்கு- கிணறு; கும்பத்திற்கு - நீர்ச்சால். இவ்வகையால் வினவினவன் கேட்டக் கெடுதி சேர்ந்துள்ள நிலத்திடம் அறிந்து சொல்லுக என்றவாறு. 61

கெடுதி சேரிடம் குறிக்கும் கோள்கள்

உதயாரூடத்தில்-செவ்வாய், சனி, ஆதித்தன் தோன்றில் கெட்டின காட்டிடத்தனவென்றும்; சந்திரனும், சுக்கிரனும் நீரிடத்தனவென்றும்; புதனும், வியாழனும் ஊரிடத்தன வென்றும் கெடுதி சேருநிலமறிந்து சொல்லுக என்றவாறு. 62

கெடுதி சேரும் நிலம்-கெட்டுப்போன, களவுபோன, கைவிட்டுப்போன பொருள் அல்லது சீவன் சேர்ந்துள்ள இடம் என்றறிக.

இதுவுமது

கும்பம், மிதுனம், துலாம், கன்னிக்குக் கெடுதி ஊர் சேரும் என்றும்; மேடம், விருச்சிகம், தனுசு, சிங்கத்திற்குக் கெடுதி சேருமிடம் காடென்றும்; புதன், வியாழம் ஆயின் கெடுதி ஊரினுள் உளவென்றும்; ராகு, கேதுவானால் கெடுதி துவாரம் பொந்துகளிற் கிடக்கின்றது என்றும்; ஆதித்தனுக்கு

உயரத்தூக்கியிருக்கின்றது என்றும்; சனிக்குக் கெடுதி வெந்த நிலத்திற் கிடக்கின்றது என்றும் சொல்லுக என்றவாறு.

பூமியில்-பூமியில் புதைக்கப்பட்டதாய்; நீரில்-கிணறு, வாய்க்கால் முதலிய நீர்நிலைகளில்; உயரத்தூக்கல்-உயரத்தில் பொதிக்கப்பட்டமை; வெந்த நிலம்-காளவாய், அடுப்புக்கட்டு, அடுப்பின் கீழ் நிலம்.

முக்காலம், சாமம், சந்தி, பொழுது அறிதல்

யாதானுமொரு காலங்குறித்தபோது, திர ராசியில் வந்து வினவினால் - பகல் என்றறிக. சர ராசியில் வந்து வினவினால் சந்தியம் பொழுது என்றறிக என்றவாறு. 65

யாவனொருவன் வந்து நின்ற ராசிக்கு - கெடுதி உண்டான கால ஆரூடமறிதல்.

காலமறிதலின் நுட்பம்

செல்காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய மூன்று காலமும் நாள்தோறும் உதயாதி முதலாக மூன்றேமுக்கால் நாழிகைக்கு ஒரு காலமாக, செல்லாநின்ற காலம் ஏட்டில் உதயமானது யாதொரு காலமோ அதனையே அன்று வாரமாகக் கொண்டு, சென்ற காலத்தில் நின்ற கோளால் பூதமானதும், நிகழ்காலத்தில் பொசிக்கிறகோளால் வர்த்தமானமும், வருகின்ற காலத்தில் பொசிக்கின்றகோளால் பவிஷ்யமும், இரவு-பகலற்ற காலத்தில் கிரகங்களின் குணங்களையும் கண்டுகொண்டு சொல்லுக என்றவாறு. 66

மூன்றே முக்கால் நாழிகை-ஒரு முகூர்த்தகாலம் 1½ மணி கால அளவு. காலம் எட்டு-பகல் 30 நாழிகைக்குரிய நாழிகைக் காலம் எட்டாகும் ($3\frac{3}{4} \times 8 = 30$ நாழிகை) பவிஷம்-நடக்க இருப்பது.

கிரக சக்கர நாழிகைக் கோள்கள்

நாள் - உதயாதியாக, ஏழரை நாழிகை ஒரு பொழுதாக முதற்சாமம்-ஆதித்தனாகவும் (சூரியன்), இரண்டாம் சாமம்-செவ்வாயாகவும், மூன்றாம் சாமம்-வியாழமாகவும், நான்காம் சாமம்-புதனாகவும், ஐந்தாம் சாமம் சுக்கிரனாகவும், ஆறாம் சாமம்-சனியாகவும், ஏழாம் சாமம்- சந்திரனாகவும், எட்டாம் சாமம்-ராகுவாகவும் இவ்வாறு கிரகச் சக்கரம் ஏழரை நாழிகைக் கொண்டது ஒரு பொழுதாகத் திரித்தறிக என்றவாறு.

நாள் கிரகச் சக்கரத்திற்கு 7½ நாழிகைக் கொண்டது ஒரு பொழுதாக (சாமம்) பகல் *4* - பொழுது; இரவு *4* - பொழுது என்றறிக.

கோள்கள் பலன்தரும் காலவரையறை அறிதல்

ஆரூடச் சக்கரத்தில் கிரகங்களுக்கடைத்த நிலங்களாகத் தந்த நிலங்களில், நட்பு-ஆட்சி-உச்சத்தோடு வலிபெற்று நின்றால் சனிபகவான் ஓராண்டில் பலன் தருவானென்றும், ராகுபகவான் வலிபெற்று நின்றால் ஆறு மாதத்தில் பலன் தருமென்றும், ஆதித்தபகவானும் - புதபகவானும் வலிபெற்று நின்றால் இரண்டு மாதத்தில் பலன் தருமென்றும், வியாழபகவான் வலிபெற்று நின்றால் ஒரு மாதத்தில் பலன் தருமென்றும், சுக்கிரபகவான் வலிபெற்று நின்றால் பதினைந்து நாட்களில் பலன் தருமென்றும், அங்காரக பகவான் வலிபெற்று நின்றால் ஒரு நாளில் பலன் தருமென்றும், சந்திரபகவான் வலிபெற்று நின்றால் இரண்டு நாழிகையில் பலன் தருமென்றும், இவ்வாறு கிரக பலமறிந்து வினவின கருமங்கள் வந்து கூடுங்காலங்கள் சொல்லுக என்றவாறு. *68*

வலி-வலிமை, கிரக பலம்.

பகல் - இராப்பலன் அறிதல்

உதயத்தை முதலாக வைத்து நோக்கிப்பலன் தருவதாக நின்ற கிரகங்கள் யாதொரு கிரகமாயினும், அக்கிரகத்திற்குச் சொல்லத்தக்க பொழுதிலே நட்டமுட்டி சிந்தனையும் தப்பாமல் வந்துகூடும் என்றறிக என்றவாறு. 69

பொழுதிலே என்ற குறிப்பால்-உதயாதி ஏழரை நாழிகை கொண்டது ஒரு பொழுதாக வைத்துக்கொண்டு, நட்டமுட்டி சிந்தனை யாவனொருவன் வந்து வினவின பொழுதைக் கணக்கிட்டால், அதற்கான ஆரூடபலன் தப்பாமல் வந்துகூடும் என்ற நுட்பம் அறிதற்காகும்.

நட்டமுட்டி சிந்தனைக்குத் தப்பாமல் பலன்கூறும் முறைமை

மேலே முறையாகச் சொல்லிய இத்தன்மையனவாகிய உச்சகிரகங்கள் ஆதித்தன் (சூரியன்), தூமம், ராகு, சந்திரன், சனி, நுட்பம், வெள்ளி, சாபன், புதன், வியாழம், செவ்வாய், பரிவேடம் ஆக பன்னிரண்டையும் இராசிச் சக்கரமான பன்னிரண்டறையிலும் இவ்வாறு வலமாக நிறுத்தி, உதய முதல் பாதி முதலிடமாக, முறையே சூரியன், தூமம், ராகு, சந்திரன், சனி, நுட்பமாகிய பரிவேடமாகிய கிரகங்கள் ஆறும், ஐந்து நாழிகைக்கு ஒரு கிரகமாக வலமாகச் சுழல உதிக்கும் என்றும்,

அஸ்தமனமானது முதல் விருச்சிகாதி ராசியாகச் சுக்கிரன், இந்திரசாபன், புதன், வியாழம், செவ்வாய், பரிவேடமாகிய கிரகங்கள் (தூமம், நுட்பம், பரிவேடம்) ஆக ஆறும் இடமாகச் சுழல உதிக்கும் என்றும்,

இவ்வாறு ஆரூடச்சக்கரத்தை வலமிடமாகத் திரித்து, யாவனொருவன் யாதொன்று வினவின காலத்து உதயமான கிரகத்திற்கு- நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சம், அவை

வழிவந்த பலாபலனும், ஆரூடசக்கர உதயமும், கண்டங்கள் நான்கின் வலிமையும், கிரகங்களின் நோக்கு வேறுபாடும், ஆண்-பெண்-அலி என்ற கிரக இயல்பும், இரட்டை-ஒற்றை என்ற அளவும், கிரகங்களின் சாதி, நிறம், விலங்கு, மக்கள், பறவை, கதிர், நெடுமை, குறுமை, தூரம், காதம், வயது, சுவை, மறுவடு, மச்சம், சாமம், திரம், சரம், உபயம், சேரும்நிலம், பகல்-இரவு, திரிசந்திகள், காலங்கள், பொழுதுகள், பலதரத்த நாழிகை, நாள், திங்கள் ஆகிய இவற்றுடன் நான்கு கண்டத்தின் வகையினையும் நன்கறிந்து, நட்டமுட்டி சிந்தனை எல்லாம் உதயாரூடக் கவிப்புக் கணிப்பால் உறுதிசெய்து தப்பாமல் சொல்லுக என்றவாறு.

இதனால், சினேந்திரமாலையைக் கற்றுத்தேர்ந்தான். ஆரூடம் காணும் அமைப்பிலக்கணம் முறையாக நினைவு செய்யப்பட்டுள்ள சிறப்பு அறிதற்காகும்.

உதயகாண்டமாகிய பொதுக்காண்டம் முற்றும்.

தாது காண்டம்

தாது, மூலம், சீவன் - ராசிகள்

பன்னிரு ராசிகளில் மேடம், கடகம், துலாம், மகரம் சர ராசியாகிய இவை நான்கும் தாது. இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் திர ராசியாகிய இவை நான்கும் மூலம் என்பதாகும். மிதுனம், கன்னி, தனுசு, மீனம் உபய ராசியாகிய இவை நான்கும் சீவன் என்பதாகும். இவ்வாறு சொல்வது கருத்தாகும்.

தாது, மூலம், சீவன் - கோள்கள்

இராகு, சந்திரன், செவ்வாய், சனி இவை நான்கும் தாது என்ப. ஆதித்தன், வெள்ளி இவ்விரண்டும் மூலம் என்ப. வியாழம், புதன் இவை இரண்டும் சீவன் என்ப. 72

தாது, மூலம், சீவன் - கோள் நின்ற ராசிகள்

ஆதித்தன் சிங்கத்திலும், சந்திரன் கடகத்திலும் நின்றால் தாது என்றும்; இவை மற்றைய ராசிகளில் நின்றால் மூலம் என்றும் சொல்லுக. சனி சிங்கத்தில் நின்றால் படர்மூலம் என்றும் சொல்லுக. புதன் சிங்கத்தில் நின்றால் தாது என்றும் சொல்வது கருத்தாகும். சனி மந்த ராசிகளில் தாதுவாகவும், புதன் மந்த ராசிகளில் சீவனாகவும் இயங்கும் என்றவாறு. 73

கோள்களுக்குரிய உலோகங்கள்

உதயாரூடக் கவிப்பில் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு கோள்கள் வலிமைபெற்று நிற்றல், நோக்குதல் செய்யின் செவ்வாய்-செம்பு என்றும், புதன்-தரா என்றும், சுக்கிரன்-வெள்ளி என்றும், சந்திரன்-வெண்கலம் என்றும், ஆதித்தன்-பித்தளை என்றும், சனி-பாம்பு - இரும்பு என்றும் அறிக என்றவாறு. 74

கோள்களால் ஆயுதமறிதல்

ஆயுத விகாரமாய் கோள்கள் வந்தவிடத்து, ஆதித்தனும் செவ்வாயும் சனியும் சுக்கிரனும் ஆகிய இவர்களின் ஆட்சியும் அமையின் ஒரு வாய்க் கருவி என்றும்; சந்திரனும் புதனும் வியாழமும் இவர்களின் ஆட்சியும் நேரின் இருவாய்க் கருவி என்றும், திரிசக்கரத்தில் உதயாரூடகோள் நிலையாலும், நோக்காலும் கண்டறிக என்பது கருத்தாகும். 75

கோள்களுக்குரிய தாதுப்பொருள்

ஆதித்தன் - கல் என்றும், புதன் - மண் துகள் என்றும், சந்திரன் - உவர்மண் என்றும், சுக்கிரன் - பளிங்கு முத்து என்றும், செவ்வாய் - பவழம் என்றும், சனி - இரும்பு என்றும், வியாழன் - மனோசிலை என்றும், இவ்வாறு கிரகங்களின் விகற்பங்களால் அவ்வவற்றிற்குரிய இரத்தின தாதுப் பொருள்களை அறிக. 76

இதுவுமது

சனி-நீலக்கல், சுக்கிரன்-வயிடூரியம், புதன்-மரகதம், சூரியன்-சூரியகாந்தம், சந்திரன்-சந்திரகாந்தம் என்றறிக என்றவாறு. 77

(சூரியகாந்தம், சந்திரகாந்தம் - படிகக் கற்கள்)

கோள்களின் சேர்க்கைக்கு உலோகம், தாது

சந்திரன் இரண்டு விகற்பமாமென்பதால், சுக்கிரன் சந்திரனுடன் சேரில் - வெள்ளியமாகும் என்றும், சந்திரனுடன் சூரியன் சேரில் செம்பாகும் என்றும், சந்திரனுடன் இரும்பாகும் என்றும், சந்திரனுடன் புதனும் ஆதித்தனும் சேரில் வெண்கலமாகும் என்றும் அறிவது கருத்தாகும். 78

கோள்களால் ஆபரணம் அறிதல்

யாவனொருவன் ஆபரணம் வினவினவிடத்து, உதயாரூடத்தில் மானுட இராசியாகிய மிதுனம், துலாம்,கும்பம் ஆகியவற்றில், மானுட கிரகங்களாகிய புதன், வியாழம், வெள்ளி இவர்கள் கூடி உதயமாயினும், வலிமை பெற்று நோக்கினும், விகற்பம் செய்யினும் அந்தந்த கோள்களின் நிறத்தனவாகிய இரத்தினாபரணங்களும், இரத்தினாபரண பொன், வெள்ளி வணிகமும் ஆகும் என்றறிக என்று சொல்லுக என்றவாறு. 79

தாதுகாண்டம் முற்றும்

மூல காண்டம்

கோள்களால் - பயிர் மர வகையறிதல்

சான்றோரால் சொல்லப்பட்ட நூலினது விகற்பங்களை நுட்பமாக அறிந்துசொல்லுமிடத்து, மூல இராசிகள் என்று வகுத்துச் சொல்லப்பட்டவைகளில் செவ்வாய் - சிறுபயிர் வகை என்றும், சுக்கிரன் - விளைவயல் என்றும் சொல்லுக.

இதுவுமது

புதன் - செடிகொடித்தூர் என்றும், சூரியன் - பெரும் மரம் என்றும், சந்திரன் - கொடிவகை என்றும், வியாழம் - நெல் முதலிய தானியப் பயிர் என்றும், சுக்கிரன் - கரும்புப் பயிர் என்றும், கரும்பு முதலான வகைப்பயிர் என்றும், சனி, பாம்பு - கீழ்நோக்கி வளைந்த முள்மரம் என்றும், இக்கோள்கள் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நயமாக நின்றால் - பயன்படத்தக்கனவாகிய பயிர் மரம் என்றும், பகை நிலத்தில் நின்றால் பயன்படாதனவாகிய தாவரங்கள் என்றும் சொல்வது கருத்தாகும். *81*

இராசிகளால் - பயிர் மரவகை அடையாளமறிதல்

மேடம், விருச்சிகம் - உண்ணப்படும் நுண்பயிர் வகையாம் என்பதும், துலாம்-இடபம்-கடகம் இவையாயின் நெடிய கொடியாகப் படர்வன என்பதும், கன்னி-மிதுனம் இவையாயின் சிறு தூறு முதலானது என்றும், அறியத் தக்கதாகும். **82**

இராசிகளில் கோள்களால் பயிர் வகையறிதல்

சிங்கம், தனுசு, மீனத்தில் வியாழம் நின்றால் பெருமரம் என்றறிக. இம்மரங்களால் பயன்பெறும் என்றும் சொல்லுக. பயன்தரும் பெருமரங்கள் என்பது கருத்து. *83*

மரங்களில் முள் வகையறிதல்

உதயாரூட ராசிகளில் சனி, ராகு நிற்கில் கவிழந்த முள்ளுடைய மரமாகும். சூரியன் - விலங்கின் மரமாகும். செவ்வாய் முதுகின் முள்ளுடைய மரமாகும். மகரம், மேடம், விருச்சிகம், சிங்கம் ஆகிய ராசிகளாயின் முள்நிறைந்த மரம் என்றும் சொல்லுவது கருத்தாகும். *84*

சுனை, முள், நஞ்சு மரமறிதல்

கும்பம், மகரம் - முள்ளுடைய மரம் என்றும், மீனம் - சுனையுள்ள கரும்பு என்றும், ஆதித்தன்-செவ்வாய்-சனி இவர்கள் நஞ்சுடையதும், முள்ளுடையதுமான மரம் என்றும், சந்திரன்-புதன்-வியாழம்-வெள்ளி இவர்கள் முள் இல்லாத மரம் என்றும் அறிந்துசொல்வது கருத்தாகும். *85*

இதுவுமது

புதன் - சேர்ந்திருந்த தூறு, வெள்ளி - மாமரம், சந்திரன் - மூங்கில், வாழை, ஆதித்தன் - மலை மரம், வியாழம் - தென்னைமரம் என்பதாம். *86*

வினவியது காணும் - மரங்கள்

உதயாரூடத்தில் பாம்பும், சனியும் வலிமைபெற்று நின்றால் அவன் சொன்ன நிலத்திலே பனங்காடாக இருக்கும் என்றும், மற்றைய கோள்கள் தோன்றிடின் அவரவர் ஆட்சி உச்சங்களினால் அமைந்த மரங்களாம் என்றும், தோன்றிய கிரகங்களின் வலிமையறிந்து உள்வயிர மரம் என்றும் சொல்வது கருத்தாகும்.

வயிரம் - வயிரமல்லாத மரங்களறிதல்

உதயாரூடத்தில் சந்திரனும், சூரியனும் நிற்கில், வயிரம் இல்லத மரம் என்றும், வியாழம், வெள்ளியும் நிற்கில் உள்வயிரமுடைய மரம் என்றும், இவற்றைக் கிரகங்களின் நிறத்தால் அறிக. மற்றும் சனி-ராகு-செவ்வாய்-புதன் புறவயிறமுடைய மரங்கள் என்றும், இக்கிரகங்கள் ஆட்சி பெற்றிருப்பின் அகப்புறவயிரமுள்ள மரங்கள் என்றும் அறிந்துசொல்வது கருத்தாகும். 88

தாவர வகை - இலை, பூ, காய் அறிதல்

உதயாரூடத்தில் நின்ற கோள்களின் வலிமெலியினால் மூலவிகற்பம் வந்தவிடத்து, ஆதித்தன் - தோல், சந்திரன், செவ்வாய்-பூ, புதன்-இலை, வியாழன்-பழம், வெள்ளி-காய், சனி-வேர், பாம்பு (ராகு)-கொடி என்றறிக. மற்றும் இக்கோள் களுக்குரிய ராசிகளைக் கொண்டு அவரவர்கட்குச் சொல்லப் பட்ட தோல், கிழங்கு, பூ, இலை, பழம், காய், வேர், கொடி இவற்றையும் அறிந்து சொல்வது கருத்தாகும். 89

இராசிகட்கு - பூ, காய், பழம் அறிதல்

மேடம், விருச்சிகம் - பூ, இடபம், துலாம் - காய், மிதுனம், கன்னி - இலை, மீனம், தனுசு - பழம், கும்பம், மகரம் - வேர், சிங்கம்-தோல், கடகம்-கிழங்கு. இந்த ராசிகளில் மூலக்கோள்கள் நின்றால் இவ்வுருவாம் என்று சொல்வது கருத்தாகும். 90

கோள்களுக்கு - தானியவகை அறிதல்

உதயாரூடக் கவிப்பில் தானிய விகற்பம் வந்தவிடத்து, செவ்வாய்க்குத் தினை என்றும், சந்திரனுக்கு வெண்ணெல் என்றும், சுக்கிரனுக்கும் - வியாழத்துக்கும் - புதனுக்கும்- சனிக்கும் - ஆதித்தனுக்கும் அவ்வவற்றின் நிறத்திற்கொத்த தானியம் என்றும் அறிவது கருத்தாகும். 91

பயிறு வகை அறிதல்

புதனாயின் - சிறுபயிறு, வெள்ளியாயின்-வெள்ளைத் துவரை, கோதுமை, செவ்வாயாயின் - கொள்ளு, கடலை, சந்திரனாயின் - வெள்ளை எள், சூரியனாயின் - அவரை, வியாழமாயின் - செந்துவரை, சனியாயின் - கரும்பு, எள், பாம்பு - உளுந்து இவ்வாறாக, யாவனொருவன் வந்துநின்று வினவின மூல ராசிகள், நின்ற கோள்கள் இவற்றைக் கொண்டு, குறிப்புடன் சொல்வது கருத்தாகும். 92

ஆழ்நீர் - அறிந்து கூறல்

யாவனொருவன் ஒரு நிலத்தைக் குறித்து நீருண்டோ எனில், உதயாரூடத்தில் செவ்வாய்-சூரியன் அவ்விடத்தில் வலிமைபெறில் மேடான நிலம் நீர்மிகு ஆழத்தில் உள்ளது என்றும், ராகு-கேது வலிமைபெறின் புற்று அடையாளமுள்ள இடத்திடியில் நீருண்டு என்றும், சந்திரன் உதயமாகில் அப்பூமியடியில் வெண்மைநிற நீர் உண்டென்றும், புதன் உதயமாகில் பசுமையான நீர் உண்டென்றும், சுக்கிரன் உதயமாகில் தெளிந்த நீருள்ளது என்றும், வியாழம் உதயமாகில் பூமியடியில் கல் பறளை என்றும், சனி உதயமாகில் அடியில் கருங்கல் பாறை என்றும் கண்டறிந்து சொல்லுக என்பது கருத்தாம். தாவர வேளாண் தொழில் வர்க்கம் உரைத்தலின் கீழ்நீர் குறித்ததாம். 93

ஆரூடக்கவிப்பு

யாவனொருவன் நட்டமுட்டி சிந்தனையாக வந்து வினவினபோது, அவன் வந்த காலமும், நின்ற ராசியும் கணக்கிட்டறிந்து உதயத்தில் நின்ற கிரகங்களின் நிறமும், சுவையும், ஆபரணமும், ஆயுதங்களும், மரங்களும், மூலங்களும், இலை, காய், பூ, பழம், தோல், வேர் ஆகியவைகளும் - ஆகியவற்றை எட்டுக்கோள்களின் நிலையறிந்து, ஆரூடக் கவிப்புக்களாலும், நாற்கண்டத்துக் காணும் வலிமைகளாலும், நின்ற சீவன்களாலும், கோள்களாலும் பார்த்துச் சொல்வது கருத்தாகும். 94

மூலகாண்டம் முற்றும்.

சீவகாண்டம்

கோள்களின் முறைப்பெயர்கள், பஞ்சபூதப் பெயர்கள்

சந்திரன் மாதாவாகவும், சூரியன் பிதாவாகவும் ஆவார்கள். பிரிதியு, அப்பு, தேயு, வாயு ஆகாயம் என்கிற, நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் ஆகிய பஞ்சபூதங்களால் விளையத்தக்க சீவவிகற்பம் அறியுமிடத்து, பிரிதியு- வியாழ மாகவும், அப்பு-சுக்கிரனாகவும், தேயு- செவ்வாயாகவும், வாயு-புதனாகவும், ஆகாயம்-சனியாகவும், சப்த பரிச கந்தமாதி ஐயறிவும். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளாகவும் அறியப்படுவது கருத்தாகும். 95

★ ஐயறிவு - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலனறிவுகள்.

கோள்களின் சீவ வர்க்கம்

சீவராசியில் ஆருடக்கவிப்பு மூன்றினாலும், பூதாம்சம் உடைய கோள் ஐந்தின் வலி பார்த்துப் பலாபலன் அறிந்து சொல் என்பது. அவ்வகையில் சங்கு, அலகு, இப்பி, மூரல் ஆகிய சீவன்கள் மெய்யும் நாவுமாகிய ஈரறிவுடையனவாய் **புதன்** ஆகுமென்றும், எறும்பு, கரையான், ஈ ஆகிய சீவன்கள் மெய், நாக்கு, மூக்கு ஆகிய மூவறிவுடையனவாய் ***செவ்வாய்*** ஆகுமென்றும், வண்டு, தும்பி இவை மெய், நாக்கு, மூக்கு, கண் ஆகிய நாலறிவுடையனவாய் ***சுக்கிரன்*** ஆகுமென்றும், அறிகவென்பது கருத்தாகும். 96

இதுவுமது

தேவர்கள், மனிதர்கள், நாற்கால் விலங்குசாதிகள், பாம்புகள், பறவைகள், மீன்கள் ஆகிய இவ்வகைச் சீவன்கள் எல்லாம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவற்றால் பெறும் ஐயறிவுடையவாயும் வியாழத்தின் வர்க்கமாயும் அமையும் என்று சொல்வது கருத்தாகும். 97

இதுவுமது

மரங்களின் வர்க்கம் ஓரறிவு உடையனவாய் சனியின் வர்க்கம் என்றும், புதனுக்கு ஈறறிவு என்றும், செவ்வாய்க்கு மூவறிவு என்றும், வெள்ளிக்கு நான்கறிவு என்றும், வியாழத்திற்கு ஐயறிவு என்றும், மெய்-வாய்-கண்-மூக்கு-செவி ஆகிய ஐம்பொறிகளைக்கொண்டு நன்றாகக் காணல் முறைமை என்பது கருத்தாகும். 98

சீவன் - அறிவு - தொகுப்பு

சங்கம், அலகு இவற்றிற்கு மெய்யும் நாவுமாகிய ஈரறிவு என்றும், கறையான் வர்க்கங்களுக்கு மெய், வாய், மூக்கு ஆகிய மூவறிவு என்றும், வண்டினங்களுக்கு மெய், நாக்கு, மூக்கு, கண் ஆகிய நாலறிவு என்றும், மனிதர்களுக்கு மெய், நாக்கு, மூக்கு, கண், செவி ஆகிய ஐந்து அறிவு என்றும் முறையாக அறிவது கருத்தாகும். 99

நான்குவகை சீவன்கள்

சங்கு, கறையான், வண்டு, மானிடர் முதலாயின நால்வகை சீவன்களும், முறையே நாற்காலுடையனவாய், இருகாலுடையனவாய், காலில்லாதனவாய், பலகால்கள் உடையனவாய் நான்குவகைப்படும். பறப்பனவும், தவழ்வனவும், ஊர்வனவும், நடப்பனவும் இவை ஆகும் என்றறிவது கருத்தாகும். 100

சீபேதம் அறிதல்

பாம்பும்-அலகும்-இப்பியும்-சேங்கமும் காலின்றியே ஊர்வன என்றும், எறும்பு-பேன்-முசுட்டை-உண்ணி இவை காலுடையன என்றும், ஆமை-உடும்பு இவை தவழ்வன என்றும், ஒழிந்த சீவன்கள் எல்லாம் நடப்பன என்றும் அறிவதாகும், இவை சீவகாண்டத்துள் பஞ்சபூதப் படலம் என்றறிவது கருத்தாகும். 101

கோள்களின் நோக்கிற்காணும் சீவராசிகள்

உதயாரூடத்தில் - மீனமும், மகரமும் பறவையாய் வந்தவிடத்துப் பறவை இராசியாகிய மீன-மகரத்தைச் செவ்வாயாதல், சனியாதல் வலிபெற்று நிற்கினும், நோக்கினும் - கானாங்கோழி என்றும், சுக்கிரன் நோக்கில் அன்னம் என்றும், புதன் நோக்கில் மயில் என்றும் இவ்வாறு சொல்வது கருத்தாகும். *102*

இதுவுமது

ஆதித்தன் - மீனம், மகரம் இவற்றில் நிற்கினும் நோக்கினும் கருடன் என்றும், வியாழம் நிற்கினும் நோக்கினும் குருகினங்கள் என்றும், செவ்வாய் நிற்கினும் நோக்கினும் கோழி என்றும், பாம்பும்-சனியும் நிற்கினும் நோக்கினும் காகம் என்றும் அறிக. *103*

சீவன் வழியே பலாபலன் காணல்

இவ்வகையாகச் சொல்லப்பட்ட யோனிகளின் கோள்கள் அவ்வவை நின்ற நிலத்தினால், வலியினாதல் நிற்கினும் நோக்கினும் தன்னுடைய உதயத்தைக் காண்கினும், வினவினவனுக்கு நன்மை-தீமை, நட்டமுட்டி சிந்தனை ஆகியவற்றைத் தப்பாமல் கிரகங்களினுடைய பலாபலன் அறிந்து சொல்லுக என்பது கருத்தாகும். *104*

கோள் நிலத்தின் - பறவையறிதல்

மீனம்-மகரம் ஒழிந்த இராசிகளில் கோள்கள் நிற்றல் நோக்குதல் செய்யின், வண்ணத்த பறவையும், அம்முறையிலேயே சொல்லப்பட்ட நிலங்களில் புள்ளாம் என்றும், ஊரன-நீரன-காட்டன-ஆற்றன-மலையன

என்றறிந்து, அவ்விராசிகளில் சொல்லப்பட்ட நிலம் அவை தாமென்றறிந்து, நிலங்களுக்குத் தக்கதான பறவைகளறிந்து, அவற்றிற்குரிய கோள்களில் நற்கோளால் நல்ல பறவையும், தீக்கோளால் தீய பறவையும், அவை சேரும் இடமும் அறிந்து, நட்பு-ஆட்சி-உச்சம்-பகை-நீச்சம் ஆகியவற்றால் கண்ட வலியளவறிந்து பார்த்துச்சொல்லுக என்பது. *105*

பறவைவிதி முற்றும்

மானிட விதி

கோள்களால் - மானிட இனமறிதல்

மானிட விதியாய் மிதுனம், கன்னி, துலாம் ஆகியவற்றுள் வந்தவிடத்து, ஆதித்தன் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நின்ற நயப்பறிந்து, ஆதித்தன் (சூரியன்) உச்சத்தில் நின்றால் - அரசன் என்றும், ஆட்சி ராசியில் நின்றால் படைத்தலைவன் என்றும், நட்பு ராசியில் நின்றால் அரசியல் அதிகாரிகள் என்றும், செவ்வாய் வலிபெற்று நோக்கில் கன்னார், குயவர், வெண்கல வணிகர், சிற்பியர் என்றும், ஆசாரயினர் என்றும் சொல்லுக என்பது கருத்தாகும்.

மானிடர் - மக்கள்.

இதுவுமது

வியாழம் வலிமைபெற்று நிற்பினும் நோக்கினும் - பிராமணர், கணக்கர், மந்திரி ஆகியவர்கள் என்றும், புதன் பலம்பெற்று நிற்கினும் நோக்கினும் - பாடுவர், ஆடுபவர், தபோதனர் என்றும், சுக்கிரன் பலம்பெற்று நிற்கினும் நோக்கினும் - வெள்ளாளரென்றும், சனி, பாம்பு நிற்கினும் நோக்கினும் - சுடையர், சேலை வாணியர் என்றும் அறிந்து சொல்வது குறிப்பதாகும். *107*

இதுவுமது

செவ்வாய்கு - சுமை தூக்கும்வோர் என்றும், சனிக்கு- அடிமைத்தொண்டு என்றும், சந்திரனுக்கு-மருத்துவர் என்றும், புதனுக்கு-வேசியர், சோடசியர், சோசியர் என்றும், பாம்புக்கு- விடதாரிகள், கள்ளர் என்றும் அறிவது கருத்தாகும். *108*

சோடசியர்-அனுக்கப்பணியாளர், விடதாரி-வேடமிடுபவர், விதூஷகர்.

மானுட விதியால் தொழில்வகை அறிதல்

சீவனிற் கீழ்சாதியாய் வந்தவிடத்துச் சனி வலிமை பெற்று நின்றதனால் - மாவினையாளர், தச்சர் என்றும், வாத்தியக்காரர் என்றும் அறிக. பாம்பு வலிமை பெறின் - வலையர், செம்படவர் என்றறிக. சந்திரன் வலிமை பெறின் - வண்ணார், நுளையர் என்றறிக. சுக்கிரன் வலிமை பெறின் - சுண்ணாம்புக்காரன் என்றறிக என்பது கருத்தாகும். *109*

மானுட விதி தொகுப்பு

மானிட விதியென்று சொல்லப்பட்ட இராசிகளில் சீவக்கோள் நிற்றல் நோக்குதல் செய்தலால், அவ்விராசிக்கும் வலிபெற்ற கோளுக்குமடைந்த திசையே திசை என்றும், அக்கோளுக்கடைந்த சாதியே சாதியறிவதென்றும், அந்தந்த திசைமேலவர்கள் மண் என்றும், அந்தந்த திசையே கெடுதி சேருமிடம் என்றும், அவரவர் சிந்தனைக்கு ஏற்ப கோள்களுக்கடைத்தவையறிந்து தப்பால் சொல்லுக என்பது கருத்தாகும். *110*

மானிட விதி முற்றும்.

நாற்கால் விதி

இராசியிடத்து நாற்கால் சீவனறிதல்

உதயாரூட நாற்கண்டத்தில் நாற்கால் வீதியாய் வந்**தவி**டத்து, மேஷ ராசியில் செவ்வாய் நிற்கில் ஆடென்றும், ஆதித்தன் நிற்கில் புலி என்றும், புதன் நிற்கில் குரங்கு என்றும், சுக்கிரன் நிற்கில் பசு என்றும், சந்திரன் நிற்கில் எருது என்றும், வியாழம் நிற்கில் குதிரை என்றும், சனி-பாம்பு நிற்கில் எருமை என்றும் சொல்லுக என்பது. 111

மற்றொரு நோக்கு

இடபத்தில் சுக்கிரன் நிற்கில் பசு என்றும், செவ்வாய் நிற்கில் மான் என்றும், புதன் நிற்கில் குரங்கு என்றும், வியாழம் நிற்கில் குதிரை என்றும், சந்திரன் நிற்கில் பசு என்றும், சூரியன் நிற்கில் மரை என்றும், சனி-பாம்பு நிற்கில் எருமை என்றும் அறிவது கருத்தாகும். 112

இடபத்தை இடமாகவைத்து நின்ற கோளிற்குப்பலன் காண்க.

இதுவுமது

கடகத்தில் செவ்வாய் நிற்கில் கழுதை என்றும், மகரத்தில் செவ்வாய் நிற்கில் எருமை என்றும், இடபத்தில் செவ்வாய் நிற்கில் வண்ண விலங்கு என்றும், மிதுனம்-கன்னியில் செவ்வாய் நிற்கில் கீரி, நரி, நாவி ஈன மிருகம் என்றும், அவ்வண்ணமே தக்கனவென்றும், ஆராய்ந்தறிந்து சொல்லுக என்பதாம். 113

இதுவுமது

சிங்கத்தில் செவ்வாய் நிற்கில் புலி என்றும், ஆதித்தனும் - சந்திரனும் நிற்கில் சிங்கம் என்றும், சுக்கிரன் நிற்கில் நாய் என்றும், புதன் நிற்கில் குரங்கு என்றும், வியாழம் நிற்கில் குதிரை என்றும், சனி-பாம்பு நிற்கில் எருமை என்றும் சொல்லுக என்பதாம். 114

இதுவுமது

துலாத்தில் சுக்கிரன் நிற்கினும், இடபத்தில் சந்திரன் நிற்கினும் பசு என்று மொழிந்த கோள்கள் நிற்றல் நோக்குதல் செய்யின் கோள்களுக்குச் சொன்னபடி உண்மையறிந்து சொல்லுக என்பது கருத்தாம். *115*

மற்றொரு நோக்கு

தனுவில் செவ்வாயும் வியாழமும் சந்திரனும் நிற்கில் குதிரை என்றும், சனியும் ஆதித்தனும் நிற்கில் யானை என்றும், பாம்பு நிற்கில் கடா என்றும், சுக்கிரனும் புதனும் நிற்கில் குரங்கு என்றும் சொல்லுக என்பதாம். *116*

சிந்தித்த வாகனம் அறிதல்

வியாழம் கும்பத்தில் உதயமாக, அதற்கு ஏழாமிடம், ஐந்தாமிடம் ஒன்பதாமிடம் ஆகியவற்றொன்றில் கோள் நின்று கும்பத்தை நோக்கில், யாவனொருவன் சிந்தித்து வந்தது யானையாம் என்றும், கும்பத்தைச் சந்திரன் நோக்கின் தேவர்கள் ஏறும் தேராம் என்றும் அறிக என்பதாம். *117*

உதய ராசியில் சனி நின்ற பலன்

சிங்கத்தில் சனி நிற்கில் பகைத்திறமும், துலாத்தில் சனி நிற்கில் வாணிபமும், இடபத்தில் சனி நிற்கில் எருமையும், விருச்சிகத்தில் சனி நிற்கில் மரணமும், மேடத்தில் சனி நிற்கில் கெடுதியும், யாவனொருவன் வந்தவன் நினைத்தது என்று சொல்லுக என்பதாம். *118*

பசு, எருமை பலாபலன் அறிதல்

சுக்கிரனும் சந்திரனும் உதயத்தில் வலிமைபெறின் பால்பசு என்றும், புதன் வலிமை பெறின் இளங்கன்று என்றும் , சனியும் பாம்பும் வலிமை பெறின் மலடு என்றும், வியாழமும் ஆதித்தனும் வலிமை பெறின் சினையாவது

என்றும், செவ்வாய் வலிமைபெறின் வியாதிகொண்டு இளைத்தது என்றும், இவ்வாறு கிரக உதயங்களால் விலங்கின விகற்பமறிந்து சொல்லுக என்பதாம். *119*

சீவபேதமறிதல்

சீவனில் நாற்காலாய் வந்தவிடத்துச் சனியாயின் யானை என்றும், செவ்வாயாயின் ஆடு என்றும், இருகால் சீவனாக வந்தவிடத்துப் புதனாயின் ஆடுவார் பாடுவார் என்றும், சந்திரன் சுக்கிரன் ஆயின் புடவை விற்பார் என்றும், வியாழமாகில் குதிரை என்றும், ஆதித்தனாகில் சிங்கம் என்றும் சொல்லுக என்பதாம். *120*

சீவபேதகாண்ட அடைவு

இவ்வாறாகச் சொன்ன யோனிகளேழும், அவ்வவற்றிற்குரிய கோளும் தத்தமது நிலத்தில் உயர்வுடனே நிற்கில், இவ்வாறு சொல்லத்தக்க யோனிகளெல்லாம் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சத்தாலும் உதயாரூட சக்கரத்தாலும், நிலம் வலிபெற்று நிற்கில், கிரகங்களுக்கடைந்த யோனிகளுள் அறிந்தவையே சிந்தனையாகவும், அவையவையே பொருள் பேறாகும், அவையவையே கெடுதியாகவும், நினைத்து வந்தவன் வினவின கருமம் இவை என அறிந்துசொல்லுக என்பதாம். *121*

சீவகாண்டம் முற்றும்.

சிந்தனைக் காண்டம்

தாதுமூல சீவன் நிச்சயித்தல்

தாது இராசிகளான மேடம், கடகம், துலாம், மகரம் ஆகிய நான்கு இராசியையும், தாதுக்கோள்களாகிய குரு, சந்திரன், செவ்வாய், சனி ஆகிய நான்கு கோள்களும் நோக்கினும், கவிப்பினும், ஆரூடமும் தாதுவாய்க் கவிக்கின்ற ராசியும் தாதுவாய் கிரகமும் தாதுவாய் நிற்க, அதனை வலிபெற்ற கோள்கள் நோக்கின் தாதுவாமென்றும்;

மூல ராசியாகிய விருச்சிகம், ரிஷபம், சிங்கம், கும்பம் இவை ஆரூடத்தானமாய்க் கவிப்பும், நோக்கும் கிரகமும் மூலமாகிய இரவி, வெள்ளியாகில் மூலமென்றும், சீவராசியாகிய மிதுனம், தனுசு, மீனம், கன்னி இவை ஆரூடமான கவிப்பினை நோக்கும் சீவனாகிய வியாழமும் புதனும் சீவனாம் என்றும் அறிக என்பது.

இவ்வாறு, ஆரூடத்தாலும் கவிப்பாலும், நோக்காலும் தாது-மூல-சீவன் நிச்சயித்தறிக என்பது கருத்து. இக்கோள்கள் உதயத்திற்கு வலியனவும், நீர்க்கீழாயின் ஏழாமிடத்து வலியனவும், பகை நீச்சத்து வலியளவுமறிந்து சொல்லுவது என்றவாறு. 122

கவிப்பின் நுட்பமறிதல்

தாது விராசியை மூலங்கவித்திடின் சீவன் என்றும், தாது ராசியை சீவன் கவித்திடின் மூலம் என்றும், மூல ராசியைச் சீவன் கவித்திடின் தாது என்றும், சீவராசியை மூலம் கவித்திடின் தாது என்றும், சீவராசியைத் தாது கவித்திடின் மூலம் என்றும்,

ஆருட தாதுவாய்க் கிரகம் மூலமாய் வலிபெற்று நோக்கின் சீவதாது என்றும், ஆருடத்தாதுவாய் கிரகம் சீவனாய் வலிபெற்று நோக்கின் மூலதாது என்றும், ஆருட மூலமாய்க் கிரகம் சீவனாய் வலிபெற்று நோக்கின் மூலதாது என்றும், ஆரூடம் மூலமாய்க் கிரகம் சீவனாய் வலிபெற்று நோக்கின் மூலதாது என்றும், ஆரூடம் சீவனாய்க் கிரகம் மூலமாய் வலிபெற்று நோக்கின் சீவமூலம் என்றும் - இவ்வாறு வந்த தாது-மூலம்-சீவன் ஆகியவற்றின் வலியும் செயலுமறிந்து, வலிமை அளவுமறிந்து சொல்லுக என்றவாறு. 123

சிந்தனை அறியும் நுட்பம்

மதி என்பது ஆரூடமாயின், அந்த ஆரூடத்தைக் கண்ட கோளும் கவிக்கின்ற ராசியும் இவை யாவையும் வைத்துக்

கிடைத்தனவே சிந்தனை என்று அறிந்து, அந்த ஆரூடத்தாது மூலம் தெரிந்து இருகால், பலகால் பறவையாகிய சீவவிகற்பமும் தெரிந்து சொல்லுக என்பது கருத்து.

சீவனாக வந்தவிடத்து ஆரூட ராசியைக் கவிக்கிற ராசியில் யாதொரு கோள் நின்று, அந்தக் கோளினைக் கொண்டு இருகால் முதலாகிய சீவவிகற்பமும் சொல்வதாகும். கவிப்பிற்கோள் இல்லையாகில் ஆரூட ராசியைக் கொண்டு சொல்லுவது என்றவாறு.

சிந்தனை, நட்டம், முட்டி - காணல்

ஆரூடம் உச்சம் கவிப்பாகிய மூன்றினையும் கொண்டு நின்ற கோள்களாலும், அவற்றுள் வலிபெற்று நோக்கின கோளின் குறிப்பறிந்து, கோள்களுக்கு அடைத்த தாது-மூல-சீவன் சொல்லுமிடத்து,

ஆரூடத்தைக்கொண்டு சிந்தனையும், உதயத்தைக் கொண்டு நட்டமும், கவிப்பைக் கொண்டு முட்டியும் சொல்லுக.

இவ்வாறு சொல்லப்பட்ட ராசிகளில் செவ்வாய் நிற்க, நோக்க வினவினது களவு கேடு நினைத்தாய் என்றும் சொல்லுக என்பது. *125*

நினைத்தன, பிடித்தன, கெடுத்தன - அறிதல்

உதயாரூடத்திற்குத் தொடர்பாக மூன்றாம் ராசியில் கோள் நின்று வலிபெற்று நோக்கின், கோளுக்கடைத்த தாது-மூலம்- சீவன் இவற்றை நிச்சயித்து, நினைத்தன, பிடித்தன (கொண்டன), கெடுத்தன இவற்றை யாவருக்கும் சொல்லுக என்பது. *126*

நட்டாமுட்டிச் சிந்தனைக் காண்டம் முற்றும்.

பொருள்பேறு அழிவு காண்டம்

ஆருடம் காணும் நுட்பம்

உடம்பு என்பது ஆரூடம். அந்த ஆரூட ராசியே உதயமாக வந்த கெடுதி வினவில் காணலாம் என்றும், பிணி வினவின் தீரும் என்றும், உதயத்துக்குப் பத்தாம் ராசி ஆரூடமாக, வந்தவன் ஆக்கம் வினவின் ஆக்கம் என்றும், கெடுதியும் நோயும் மொழிய வினவினவெல்லாம் நன்று என்றும், உதயத்துக்கு நான்காமிடம் ஆரூடமாகவரின் அன்னது தப்பாது என்றவாறு. *127*

ஆரூடம் கூறும் நுட்பம்

உதயம் நீர்க்கீழ்பாடு ஆரூடம் உச்சமாகிய கண்டங்கள் இவை நான்கில் நின்று நட்பு, ஆட்சி, உச்சத்தோடு வலிபெற்று நோக்கத்தக்க பார்வையினது குறிப்பறிந்து, தாது-மூலம்-சீவன் தெரிந்து நட்புக் கோளால் முட்டியும், ஆட்சிக்கோளால் நஷ்டமும், உச்சக்கோளால் சிந்தனையும், முழு நோக்கு, அரை நோக்கு, கால் நோக்கு, அரைக்கால் நோக்கு ஆகியவற்றின் முறையறிந்து சொல்லுக என்பது.

சிந்தனை இவை என்றறிந்து கூறுதல்

உதயத்துக்குப் பத்தாம் ராசியால் சிந்தனையும், உதயத்துக்கு நாலாம் ராசியால் கற்பித்தனவும் (கண்டனவும்), கவிப்பால் முட்டியும், உதயத்துக்கு ஏழாம் ராசியால் இறந்தனவும், உதயாரூடத்தால் நஷ்டமும் சொல்லுக என்பது.

மானிட சிந்தனை, பூமி சிந்தனை

ஆதித்தன், புதன், வியாழம், சந்திரன், சுக்கிரன் இவர்கள் மானிட ராசியாகிய மிதுனம், கன்னி, துலாம், கும்பத்தில் வலிபெற்று நிற்கினும், நோக்கினும், மானிடரைப் பற்றிய

சிந்தனை என்றும், சனி இந்த ராசிகளில் நிற்கினும் நோக்கினும் பூமிபற்றிய சிந்தனை என்றும் அறிந்துசொல்லுக என்றவாறு. 130

வினவியதற்குப் பலாபலன் கூறும் நுட்பம்

யாவனொருவன் வந்து கெடுதிவினவினது உதயத்திற்கு ஆரூடமாயின், வினவினது தூரப்போகாது என்றும், காணாத பொருளும் காணலாகும் என்றும், உதயத்திற்கு ஏழாம் ராசி ஆரூடமாகவந்து கெடுதி வினவின் காணாது என்றும், கையில் இருந்த பொருளும் போமென்றும், இவ்வாறு ஆரூடத்தாலும் உதயத்தாலும் நாற்கண்டங்களில் வலிபெற்று நட்பு-ஆட்சி-உச்சத்தோடு நற்கோள் உளதாயின் நன்றென்றும், தீக்கோள் பகை நீச்சமாக உளதாயின் தீது என்றும் அறிக என்றவாறு. 131

தீமையறியும் உதயராசிகள்

உதயத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இராசிகள் ஆரூடமாக, வந்து யாவனொருவன் வினவின காரியம் அவை முடியாது என்றும், பொருள்பற்றி வினவின், உள்ள பொருளும் போமென்றும், வெற்றி வினவின் பகைவருக்கே வெற்றி என்றும் சொல்லுக என்பதாம். 132

அமைந்த ஆரூட ராசியின் பலன்

உதயராசியில் ஆரூடமாகில் தன் கருமம் என்றும், இரண்டாம் ராசி ஆரூடமாகவரின் தன் குடும்பம் பற்றியது என்றும், மூன்றாம் ராசி ஆரூடமாகவரின் தன்னுடன் பிறந்தார்கள் என்றும், நான்காம் ராசி ஆரூடமாகவரின் தாய் முதலாகிய பெண்வழிச் சுற்றத்தார்க்கு என்றும், ஐந்தாம் ராசி ஆரூடமாகவரின் தன் புத்திரர்க்கு என்றும், ஆறாம் ராசி ஆரூடமாகவரின் தன் நோய் வியாகூலம் என்றும், ஏழாம் ராசி ஆரூடமாகவரின் தன் களத்திரம் வர்க்கம் பற்றியது என்றும், எட்டாம் ராசி ஆரூடமாகவரின் தன் மரணம் பற்றியது என்றும், ஒன்பதாம் ராசி ஆரூடமாகவரின் தன் குருவுக்கு

என்றும், பத்தாம் ராசி ஆரூடமாகவரின் தன் செயற்கருமம் சீவனம் என்றும், பதினோராம் ராசி ஆரூடமாகவரின் தன்னுடைய ஆக்கம் பற்றியது என்றும், பனிரெண்டாம் ராசி ஆரூடமாகவரின் தன்னழிவு, விரையம் என்றும், இந்த வகையில் உதயத்திற்கமைந்த ஆரூடராசியின் இட எண் கண்டு, நட்பு-ஆட்சி-உச்சம்-பகை-நீச்சம் கண்டு சொல்லுக என்பதாம். 133

உதயக்கோளால் பலன் காணல்

உதயாரூடத்தில் செவ்வாய் உதயமாயின் - கலகமாகத் தன் காரியம் சிந்தித்தான் என்க. ராகு உதயமாயின் - நஞ்சு, பிணி சிந்தித்தான் என்க. சனி உதயமாயின் - கெடுதி சிந்தித்தான் என்க. ஆதித்தன் உதயமாயின் - அரசாங்க நிமித்தமாகப் பயந்துவந்தான் என்க. தேவதையால் பயம் என்றும் சொல்லுக. வியாழன், வெள்ளி, புதன், சந்திரன் உதயமாயின், வலிமைபெற்று நிற்பின் - அவர்க்குச் சொல்லப்பட்ட நற்கருமம் சொல்லுக என்றவாறு. 134

(அவர்க்கு - சொல்லப்பட்ட நற்கோள் நால்வர்க்கு)

ஆரூடம் முற்றும்.

கவிப்புப் பலன்

இராசிகளின் கவிப்பால் அறியும் பலன்

யாவனொருவன் பகைத்திறம் வினவினபோது, உதயத்திற்கு இரண்டாம் ராசியாதல், பன்னிரண்டாம் ராசியாதல் ஆரூடராசியைக் கவிக்கின் - பகை தீராது என்றும், அந்த ராசியில் பிற ராசியாதிபதி பிறகலைபதி நிற்கினும் நோக்கினும் பகை தீரும் என்றறிக என்றவாறு. 135

இதுவுமது

உதய ராசிக்கு மூன்றாம் ராசியாதல் பதினோராம் ராசியாதல் ஆரூடராசியைக் கவிக்கின், யாவனொருவன்

வினவின காரியம் நன்மையாம் என்றும், கைவிட்டு அகன்றுபோன பொருளும் விரைவில் கைக்கு வரும் என்றும், அந்த ராசியில் நற்கோள் நட்பு-ஆட்சி-உச்சத்தோடு நிற்றல் நோக்குதல் செய்யின் நன்மையாம் என்றும், தீக்கோள் பகை-நீச்சமாக நிற்கினும் நோக்கினும் தீதாகும் என்றும் சொல்லுக என்பதாம். *136*

இதுவுமது

உதயத்திற்கு ஐந்தாம் ராசி, ஒன்பதாம் ராசி ஆருட-ராசியைக் கவிக்கின் - அகன்றுபோனவர்கள் வருவார் என்றும், சிந்தித்த பொருளும் கைகூடும் என்றும், மனத்தில் உத்தேசித்தவை எல்லாம் நல்லதாகும் என்றும், அந்த ராசியில் நற்கோள் நிற்றல் நோக்குதல் செய்யின் சிறிது பலன் கூடுமென்றும் சொல்லுக என்பதாம். *137*

இதுவுமது

உதயராசிக்கு எட்டும், இரண்டும், ஆறும், பன்னிரண்டுமாகிய ராசிகள் ஆரூடராசியைக் கவிக்குமாயின் கெடுதி வினவின், காணாது-வாராது என்றும், பிணி வினவின் தீராது என்றும், நல்ல கருமங்கள் கைகூடாது என்றும், நற்கோள் நட்பு-ஆட்சி-உச்சசத்தோடு நின்ற நயப்பறிந்து சொல்லுக என்பதாம். *138*

கவிப்புப் பலன் முற்றும்.

கோள் - உதயபலன்

உதயராசியில் பிறகலைபதி உதயமாயின் சிறப்புள்ள தாகும். பொருள்பேறு உண்டாகும், வெற்றியும் உண்டாகும். பொருள் தேடப் போனவர்களும் நன்றாக வருவார்கள்.

பிணி வினவின் தீரும் என்றும், மிக்கபகை நட்பாகும் என்றும், ஆரூடத்தில் கவிப்பில் நிற்கினும் இத்தன்மையாம் என்றும், வினவினர்களுக்குச் சொல்லுக என்றவாறு. *139*

சுக்கிரன் - உதயபலன்

சுக்கிரன் உதயமாயின் மிகவும் சிறப்புடையதாம் என்றும், களவுபோன பொருள் வந்துசேரும் என்றும், பகைவர் உறவாவர் என்றும், பிணி தீரும் என்றும், பெண்கள் சேருவர் என்றும், பெருமைப்பாடுடைய பல பொருளும் பெறுதென்பதும், ஆரூடத்தில் கவிப்பில் நிற்கினும் இத்தன்மைத்தாகிய பலன்கள் அமையும் என்ற பொருள் பேறும் சொல்லுக என்றவாறு. 140

புதன் - உதயபலன்

புதன் உதயமாயின் படைத்திறம் வினவின், பகை கெடும் என்றும், பிணி வினவின், பிணி தீரும் என்றும், கோபப்பட்டவர்கள் மகிழ்ச்சியாகி வருவார் என்றும், வழக்கு வெல்லும் என்றும், ஆரூடத்தில் கவிப்பில் புதன் நிற்கினும் இத்தன்மையவாகிய பலன்களையே சொல்லுக என்றவாறு.

சந்திரன் - உதயபலன்

சந்திரன் உதயமாயின், பொருள் பேறு உண்டாகும் என்றும், சிறப்பானவை நிகழும் என்றும், நினைத்த காரியங்கள் எல்லாம் தவறாமல் வந்துசேரும் என்றும், ஆரூடக் கவிப்பில் சந்திரன் நிற்கினும் இத்தன்மையான பலன்களே கூறுக என்றவாறு. 142

செவ்வாய், சனி, சூரியன் - உதயபலன்

உதயாரூடக் கவிப்பில் சனி, சூரியன், செவ்வாய் இவர்கள் மூவரில் ஒருவர் நிற்கினும் பார்க்கினும், பொருள்பேறு வினவினால் இழக்கும் என்றும், நட்பு, வினவினால் தீங்கான நட்பு என்றும், பிணி வினவினால் மரணம் உண்டென்றும் சொல்லுக என்றவாறு. 143

இராகு, கேது - உதயபலன்

இராகு, கேதுக்கள் உதயாரூடக் கவிப்பில் நிற்கில் கொலைத்திறம் வினவின், கொலை உண்டு என்றும், களவு வினவின், களவுபோனது என்றும், நஞ்சைக் குறித்து

வினவின், விஷம் உண்டு என்றும், மரணம் வினவின், மரணம் உண்டு என்றும் சொல்லுக என்றவாறு. *144*

தீக்கோள் - உதயபலன்

உதயத்தில் தீக்கோள் நிற்கப் பிணி வினவின், மரணம் உண்டென்றும், ஆரூடத்தில் தீக்கோள் நிற்கில் பிணி விடாது என்றும், தாபம் உண்டாம் என்றும், உதயத்திற்கு இரண்டாம் இடத்தில் தீக்கோள் நிற்கில், அந்தக் குடி கெடும் என்றும், அவற்றினில், நற்கோள்கள் கொண்டதாக, நட்பு-ஆட்சி-உச்சத்தோடு நிற்கின், மேலேகண்ட கெடுதிகள் தீரும் என்றும், அவை பகை-நீச்சத்தில் நிற்கில், தீராது என்றும், கிரகங்களின் குணமறிந்து சொல்லுக என்றவாறு. *145*

இதுவுமது

உதயத்துக்கு எட்டும், ஆறும், இரண்டும், பன்னிரண்டுமாகிய ராசிகளில் தீக்கோள் நிற்க நோக்க, மரணமும், இடையூறும் உண்டு என்றும், இந்த ராசிகளில் சுபக்கோள் நிற்கினும், நோக்கினும் அவை உண்டாகாது என்றும் கூறுக என்றவாறு. *146*

கோள்களின் காட்சி, பாடு அறிதல்

துலாம் சிரோதயமாக அதற்குப் பாடாகிய மேஷம் பிருட்டோதயமாக ஒன்றுக்கொன்று காட்சியாம் என்றும், நீச்சமாகும் என்றும், ரிஷபம் உதயமாக அதற்கு விருச்சிகம் பாடாக ஒன்றுக்கொன்று காட்சியின்றி நீச்சமாகும் என்றும், ரிஷபம் பிருட்டோதயமாக அதற்குப் பாடாகிய விருச்சிகம் உதயமாக ரிஷபம் பாடாகிய ஒன்றுக்கொன்று காட்சியாம். இவை விருச்சிகத்தில் உதயமாயின் ஒன்றுக்கொன்று காட்சியின்றி நீச்சமாகும். தனுசு பிருட்டோதயமாக அதற்குப் பாடாகிய மிதுனம் சிரோதயமாக ஒன்றுக்கொன்று காட்சியின்றி நீச்சமாம் என்றும் இவ்வாறு காட்சி அறிக என்றவாறு. *147*

இதுவுமது

மகரம் பிருட்டோதயமாக, அதற்குப் பாடாகிய கற்கடகம் பிருட்டோதயமாகையால், மகரத்து உதயம் காணும் என்றும், கற்கடகம் உதயமாக அதற்குப் பாடாகிய மகரம் கற்கடகத்தைக் காணும் என்றும், சிங்கம் உதயமாக அதற்குப் பாடாகிய கும்பம் (இரண்டும்) சிரோதயமாகயால் கும்பம் காணாது என்றும், கும்பம் உதயமாக அதற்குப் பாடாகிய மீனம் காணாது கன்னி காணும் என்றும், மீனம் உதயமாக அதற்குப் பாடாகிய கன்னி காணாது, மீனம் காணும் என்றும் சொல்லுக என்றவாறு. *148*

பாடாதல் - நேர்காட்சியாதல், நேர்முகச்சந்திப்பு, நோக்கு.

உதயம் பாடாதல் - பலன்

உதயமும் பாடும் ஒன்றையொன்று காணாதபோது, கேட்டவை காணாது என்றும், சத்துருக்கள் சந்து (நட்பு) வினவின், சந்து ஆகாது என்றும், உதயமும் பாடும் ஒன்றுக்கொன்று காட்சியாகின்றபோது, கேட்டவை அழிவின்றி வந்துகூடும், சத்துருக்கள் உறவாவார்கள் இவ்வாறு அறிந்துகூறுக என்றவாறு. *149*

உதயம் ராசிகளால் - காலவகை அறிதல்

உதயத்துக்குப் பன்னிரண்டு, மூன்று, ஒன்பது, ஆறு ஆகிய ராசிகளால், சென்ற காலத்தில் நிகழ்ந்தனவும், உதயத்துக்கு ஏழு, பத்து, நான்கு ஆகிய ராசிகளால், நிகழ்கால நிகழ்ச்சிகளும், உதயத்துக்கு எட்டு, பதினொன்று, இரண்டு, ஐந்து ஆகிய ராசிகள் உதயமாக வந்துவினவில் இனிமேல் எதிர்காலத்தில் நிகழ்வனவும் இவ்வாறு நிலங்களில் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நின்ற கோள்களின் நயப்பறிந்து நற்கருமங்களும், பகை-நீச்சத்து நின்றவையறிந்து தீய கருமங்களுமாகிய இத்தன்மையவெல்லாம் யாவனொருவன் வினவின காலமறிந்து, உதயம் நீர்கீழ்ப்பாடு உச்சியாகிய

நாற்காண்டத் திரிசக்கரச் சுழல்வினாலும், சிரோதயம் - பிருட்டோதயமாகிய ராசிகள், உதயாத்தமனத்தில் இரண்டு ராசிகளின் ஒத்த பார்வைகளாலும், ஒரு ராசியின் தனிப் பார்வையாலும் அறிந்து தாது-மூல-சீவன் நிச்சயித்து, நட்டம் முட்டி சிந்தனை முதலாயினவெல்லாம் தப்பாமல் சொல்லுக என்றவாறு. *150*

உதயராசிகளின் பலன்

திரராசியாகிய இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் இவை நான்கும் உதயமாக (யாதானுமொன்று) கெடுதி வினவின் போக்கில்லை வரும் என்றும்; படை வரவு, சாவு கெடுதியில்லை என்றும், பிணி தீராது என்றும், கொடுத்த பொருள் எவ்வளவாகினும் வந்துகூடாது என்றும் சொல்லுக என்றவாறு. *151*

இதுவுமது

உதயராசியாகிய மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இவை உதயமாயின் - கெட்டபொருள் வாராது என்றும், யாத்திரைப் போகலாகாது என்றும், போனவர்கள் வர நாள்செல்லும் என்றும், பிணி ஆறுதல் பெறும் என்றும், பகைவர் உறவாவர் என்றும், வித்தை ஆரம்பம் செய்யின் அற்பவித்தையாம் என்றும், இத்திறத்தின் யாவனொருவன் வினவின காலத்துத் தன்மையாம் என்றும் சொல்லுக என்றவாறு. *152*

இதுவுமது

சர ராசியாகிய மேடம், கடகம், துலாம், மகரம் இவை உதயமாயின் - கேட்ட பொருள் காணாது என்றும், மிக்க பிணியானவை ஆறும் என்றும், கொடுத்த பொருள் இழப்பின்றியே வரும் என்றும், இத்திறத்தின் வினவின காலத்தின் தீக்கோள்களின் வகையறிந்து சொல்லுக என்றவாறு. *153*

ஆரூடம், கவிப்பு, உதயம் வழி - காணும் பலன்

ஆரூடம், கவிப்பு, உதயம் ஆகிய இவற்றில் ஒன்றில் தீக்கோள் நிற்றல் நோக்குதல் செய்யினும், அவற்றிற்கு ஏழாமிடத்தில் நின்று நோக்கினும் - கெட்டன ஒருவர் கைப்பட்டன என்றும், நற்கோள் நின்று நோக்கின் - கெட்டன காணும் என்றும் இவ்வாறு நுட்பமறிந்து சொல்லுக என்றவாறு. *154*

மேற்கூறியதின் மற்றொரு நோக்கு

உதயாரூடக் கவிப்புக்கோள், ஒன்பது, ஐந்து, ஏழென்று சொல்லத்தக்க நிலங்களில் நற்கோளாய் நிற்குதல் செய்யின் கெடுதி காணும் என்றும், தீக்கோள் நின்று நோக்கின் காணாது என்றும் சொல்லுக என்றவாறு. *155*

உதயத்திற்கு நான்காமிடத்தின் பலன்

உதயத்திற்கு நான்காமிடத்தில் சுபக்கிரகங்கள் நின்று அதற்கு மூன்று, ஐந்து, ஒன்பானாகிய நிலங்களை நோக்கின் - கெடுதி மிக்க தூரம் போயினும் நட்டமில்லாமல், நோக்கின கோளின் திசை நாட்களுக்குள்ளாக வந்தடையும் என்றறிந்து சொல்லுக என்றவாறு. நோக்கின கோள் வலிபெற்று நோக்கின் கோளினது திசைவழியே கெடுதியானவை போகும் என்றும் சொல்வது கருத்தாகும். *156*

மூன்றாமிடப்பலன்

உதயத்திற்கு மூன்றாமிடத்தில் தீக்கோள் நிற்க அதற்கு இரண்டாமிடத்தில் நற்கோள் நிற்கின் - கெடுதி கெடாது என்றும், கெட்டனவற்றை ஒருவன் தானே கொண்டிராமல் திருப்பித்தருவான் என்றும் சொல்லுக என்றவாறு. *157*

சார்புக்கோள்கட்குப் பலன்

பரிவேடம், இந்திரதனு, நுட்பம், தூமம் ஆகிய இவற்றில் ஒன்று கெடுதி வினவின காலத்து உதயத்தில்

தோன்றின் கெடுதி அகலப் போகாதவை என்றும், அவ்வற்றிற்குரிய திசை வழியே சேரும் என்றும் அறிக என்றவாறு. 158

பிருட்டோதயத்தின் பலன்

பிருட்டோதய ராசி உதயமாக, அதனிற்சந்திரன் நிற்க அல்லது நோக்க, கெட்டன சோர்வின்றியே வருமென்றும், அந்த ராசியில் சனி நிற்க-நோக்க, கெட்டன காணாது என்றும், அதற்குப் பத்தாமிடத்தில் செவ்வாய் நிற்கக் கெட்டன காணலாம் என்றும் சொல்லுக என்றவாறு. 159

இராசியிடங்களின் பலன்

உதயத்தில் ராகு, சனி நிற்பினும், உதயத்திற்கு ஆறாமிடத்தில் செவ்வாய் நிற்பினும், ஐந்தாமிடத்தில் சூரியன் நிற்பிம், மூன்றாமிடத்தில் ராகு, கேது நிற்பினும் - கெடுதி காணும் என்க. இதன் வலிமையும் பார்த்துச் சொல்லுக என்றவாறு. (உதய ராசிக்குக் கணக்கிட்டு அறிக.) 160

இதுவுமது

உதயாரூடக் கவிப்புக்கு ஏழாம் ராசியில் சந்திரனுடனே ஆதித்தன் நிற்கின் - கெடுதி தூரப்போகாது என்றும், பிற கலைப்பதியும் புதனும் சேர நிற்கின் சிந்தித்ததெல்லாம் வருத்தமின்றியே வரும் என்றும் சொல்லுக என்றவாறு. 161

வியாழத்தின் - பலன் காணல்

உதயத்தில்பிரகஸ்பதி(குரு)நிற்கின் சுவர்ணமானவைக் கெடாது என்றும், சுக்கிரன் உதயத்திற்கு நான்காமிடத்தில் நிற்கில்-வெள்ளியாலானது கெடாது என்றும், சனி ஏழாமிடத்தில் நிற்கில்-இரும்பாலானவை கெடாது என்றும், செவ்வாய் பத்தாமிடத்தில் நிற்கில்-செம்பாலானவைக் கெடாது என்றும் நிச்சயமாகச் சொல்லுக என்றவாறு. 162

(பிறகலைப்பதி - பிரகஸ்பதி, குரு)

இதுவுமது

புதன் உதயத்தில் நிற்கின் - தராவாலானவை கெடாது என்றும், சந்திரன் நான்காமிடத்தில் நிற்கின் - வெண்கலத்தால் ஆனவை கெடாது என்றும், ராகு ஏழாமிடத்தில் நிற்கின்-ஈயம் கெடாது என்றும், ஆதித்தன் பத்தாமிடத்தில் நிற்கின் - செம்பாலானவை கெடாது என்றும், இவ்வாறு நாற்கண்டங் களின் வலிமையறிந்து சொல்லுக என்றவாறு. *163*

நாற்கால் கெடுதி அறிதல்

சனியும், ஆதித்தனும், செவ்வாயும் உதயத்துக்குப் பத்தாமிடத்தில் நிற்கில், நாற்கால் சீவன் கெடுதியானவை போகாமல் தானே வரும் என்றும், கிரகங்களின் வலிமை அறிந்து சொல்லுக என்றவாறு. *164*

கெடுதி-காணாமற்போனது, களவு போனது.

நாற்கால் சீவன் கெடுதி நிலையறிதல்

உதயத்திற்கு ஏழாம் ராசி நாற்கால் சீவனறிதலாகிய அதனில் பாம்பு (ராகு) நிற்கில் கெடுதி. நாற்கால் சீவனாய் தளைப்பட்டு நின்றன என்றும், உதயராசி இருகாலாய் அதனில் பாம்பு நிற்கின், கெடுதி காணாது என்றும் சொல்லுக என்றவாறு. *165*

தளைப்படல் - பிறரால் கட்டப்பட்டிருத்தல்.

கெடுதி மனையில் சேர்விடம் அறிதல்

கடகமும், விருச்சிகமும் உதயமாயின், பொருள் மனைக்குள்ளேயே கெட்டன என்றும், மீனமும், மகரமும் உதயமாயின், கெட்டது விட்டத்திலும் இறப்பிலும் உள்ளது என்றும் கெடுதி சேருமிடம் அறிந்துசொல்லுக என்றவாறு.

கெடுதியான பொருள் உள்ள பாத்திர வகையறிதல்

நாற்கண்டங்களில் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு வலிபெற்று உதயத்தில் செவ்வாய் நிற்கின் சிறிய கலசம் என்றும், புதன் நிற்கின் கூன் என்றும், பிரகஸ்பதி நிற்கின் சிவந்த குடம் என்றும், சுக்கிரன் நிற்கின் கரகம் என்றும், சனி நிற்கின் கருகின சால் என்றும், பாம்பு நிற்கில் உறியென்றும், ஆதித்தன் நிற்கின் வாய் விரிந்த பானை என்றும், சந்திரன் நிற்கின் காடிப்பானை என்றும், இவ்வாறு கெடுதி இருக்கும் பாத்திரங்கள் அறிந்துசொல்லுக என்றவாறு. *167*

களவு செய்த ஆண் - பெண் அறிதல்

ஆரூட ராசி, உதயராசி இவை இரண்டில், உதயராசி ஆண் ராசியாய், அதில் ஆண் கோளும் நிற்கில் கெடுதி ஆண் எடுத்தான் என்றும்; ஆரூடராசி பெண் ராசியாய் அதில் பெண் கோளும் நிற்கின் கெடுதி பெண் எடுத்தது என்றும், இவ்வாறு வியன் சமன் அறிந்து நட்பு-ஆட்சி-உச்சத்தோடு நின்ற வலிபார்த்து களவு செய்தவர் பெண் - ஆண் என்று நிச்சயித்துச் சொல்லுக என்றவாறு. ***168***

கெடுதி - களவுபோன பொருள்.

களவு போகும், போகாது என்பது காணல்

மேஷம், கடகம், கன்னி இந்த ராசிகளில் ஒன்று உதயமாக, அதில் நற்கோள் நிற்காதாயினும் நோக்காதாயினும் கெடுதி வாராது என்க. கும்பம், தனுசு, இடபம் உதயமாகி அதில் நற்கோள் நன்னயத்தோடு நிற்கினும் நோக்கினும் கெடுதி காணும் என்றும், வியாழம் ஏழாமிடத்தில் நின்றால் கெடுதி காணும் என்றும், மற்றக்கோள்கள் ஏழாமிடத்தில் நின்றால் கெடுதி காணாது என்றும் சொல்லுக என்றவாறு.

களவு செய்தவர் முதலான செய்திகளிதல்

ஆரூடத்தில் நின்றகோள் வலிபெற்று நோக்கின் கோளுக்கடைத்த திசையே கெடுதியானவை போனது

என்றும், அக்கோள் நிறத்தனவே களவுபோன பொருள் என்றும், அக்கோளுக்கடைத்த சாதியானவர்களே திருடியவர் என்பதும், கோளின் திறமே அவர்களின் திறம், தொழில் என்றும், கோளுக்கமைந்த குணமே அவர்களிடத்து என்றும் அறிந்து சொல்லுக என்றவாறு. 170

களவுபோன பொருள் செல்திசையும் அளவும்

யாவனொருவன் வந்தேறின ஆரூடராசிக்குரிய திசையை நோக்கினதாகக் கெடுதிபோனது என்றும், ஆரூடத்தை நட்பு, ஆட்சி, உச்சத்தோடு கோள் நின்று நோக்கின் நற்கோளுக்கடைத்த கதிராலும், இராசிக் கதிராலும் களவுபோனது இத்தனைப் பொருள் என்றும் கண்டறிந்து சொல்லுக என்றவாறு. 171

களவுபோன பொருள் உள்ள இடம்

உதயாரூடத்தில் பிரகஸ்பதி (குரு) நிற்கின் களவுபோன பொருள் யாகசாலை, சமையலிடம் ஆகியவற்றிலுள்ளது என்றும், ஏழாமிடத்து உதயத்தில் சனி நிற்கின் அடுப்பின் கீழ் என்றும், செவ்வாய் பத்தாமிடத்தில் உதயத்தில் நிற்கின் நெருப்புள்ள இடமென்றும், சுக்கிரனும் சந்திரனும் நாலாமிடம் உதயமாக நிற்கின் நீருள்ள இடம் என்றும், ஏழாமிடத்து உதயத்தில் பாம்பு நிற்கின் புற்றும், முழையும் உள்ள இடம் என்றும், புதன் உதயத்து நிற்கின் சுவர் மரப்பொந்து உள்ள இடம் என்றும், ஆதித்தன் பத்தாமிடத்து உதயத்தில் நிற்கின் உயர்ந்த மேடென்றும் கெடுதி சேர்ந்துள்ள இடமறிந்து கூறுக என்றவாறு. 172

களவுபோன பொருள் மறைக்கப்பட்டுள்ள இடமறிதல்

சூரியன் உதயமாயின் தேவாலயம் என்றும், சந்திரன் உதயமாயின் சூளைக்கரை என்றும், செவ்வாய் உதயமாயின் அக்கினி சேரிடம் என்றும், புதன் உதயமாயின் ஆடல், பாடல் உள்ள அரங்கிடம் என்றும், வியாழம் உதயமாயின் வேத

சாத்திரம் ஓதும் இடமென்றும், சுக்கிரன் உதயமாயின் சிறைச் சாலையென்றும், சனி உதயமாயின் பாழுங்கோயில் என்றும், களவுபோன கெடுதி சேரிடம் அறிந்துசொல்லுக என்றவாறு.

கெடுதி சென்றுள்ள இடவகையறிதல்

யாவனொருவன் கெடுதி வினவின காலத்து உதய ராசியில் உதித்த நட்சத்திரம் அசுவினியாயின்-களவுபோன பொருள் ஊரிற்குள் உள்ளதென்றும், பரணியாகின்-காரியக் காவல்கட்டுள்ள இடம் என்றும், கார்த்திகையாகின்-காடு என்றும், ரோகிணியாகின்-(கள்)காடிச்சாலை என்றும், மிருகசீரிடமாயின்-கட்டிற்கீழென்றும், திருவாதிரையாயின்-தேவராலையமென்றும், புனர்பூசமாயின்-நெல்லுக்கூடு என்றும், பூசத்திற்கு-வீட்டுமேல் மாளிகை என்றும், ஆயில்யமாயின்-குப்பைமேடு என்றும் கெடுதி சேர்ந்திருக்கும் இடமறிந்து சொல்லுக என்றவாறு. *174*

இதுவுமது

மகம் உதிக்கின்-நெற்குதிர் என்றும், பூரம் உதிக்கின்-பாழ்வீடு என்றும், உத்திரம் உதிக்கின்-குளம், குளக்கரை என்றும், அத்தம் உதயமாயின்-தண்ணீர்த்துறை என்றும், சித்திரை உதயமாயின்-விளைநிலவயல் என்றும், சுவாதி உதயமாயின்-உழுத புழுதி நிலம் என்றும், அனுஷம் உதயமாயின்-பாழ்நிலம் என்றும், கேட்டை உதயமாயின் காடு என்றும் சொல்லுக என்றவாறு. *175*

இதுவுமது - தொடர்ச்சி

மூலம் உதயமாயின் - குதிரைலாயம் என்றும், பூராடம் உதயமாயின்-தாழ்ந்த கூரை என்றும், உத்திராடம் உதயமாயின் வண்ணான் துறை என்றும், திருவோணம் உதயமாயின்-கரையிடம் என்றும், அவிட்டம் உதயமாயின்-செக்காடும் இடம் என்றும், சதயம் உதயமாயின்-தெரு வீதியில் என்றும், பூரட்டாதி உதயமாயின்-தென்புறம் கீழ்சாதி மனையில்

என்றும், உத்திரட்டாதி உதயமாயின்-சேறுள்ள இடம் என்றும், ரேவதி உதயமாயின்-பூந்தோட்டம் என்றும், நட்சத்திரம் அமைந்த இந்த நாளிற் தந்த நாளுக்குச் சொல்லப்பட்ட நிலங்களிலே கெடுதியானவைசேரும் நிலம் அறிந்து சொல்லுக என்றவாறு. *176*

களவுப் பொருள் போன திசையறிதல்

யாவனொருவன் கெடுதிவினவின காலத்தில் உதயமாகின்ற ராசியை, ரிஷப ராசியில் வைத்து வலமாக எண்ணிவந்தால், உதயராசிக்குக் காட்சியான கோளுக்குரிய திசை நோக்குத் திசையிலேயே கெடுதி போனது சேரும் என்றறிந்து சொல்லுக என்றவாறு. *177*

★ களவுப்பொருள் என்பது பொது. கெடுதி போனது என்பது-களவுபோன பொன், பொருள், தானியம் என்று அறிவதுடன் கைவிட்டுப்போன-நாற்கால், இருகால் சீவன்களுக்கும் பொருந்தும் என்பது அறிதற்காகும்.

கெடுதி போன கால அளவறிதல்

உதயராசியை நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நின்று நோக்கும் கோளின் வலியறிந்து, அக்கோளுக்கு அமைந்த கால அளவறிந்து, நாழிகை-நாள்-மாதம்-வருடம் இத்தனையாகும் என்று அறிந்து, அவ்வக்கோள்களுக்கு அடைத்தனவே கால அளவாகச் சொல்லுக என்றவாறு. *178*

கெட்டுப்போனவை வரும் கால அளவறிதல்

யாதொரு கருமம், யாதொருவன் வினவின காலத்தில் உதயாநின்ற இராசியில் உச்சக்கோள் நின்றதாகில் இத்தனை நாழிகையில் வரும் என்றும், ஆட்சிக்கோள் நின்றதாயின் இத்தனை நாளையில் வரும் என்றும், நட்புக்கோள் நின்றதாயின் இத்தனை மாதத்தில் வரும் என்றும், பகை, நீச்சக்கோள் நின்றதாயின் இத்தனை வருடத்தில் வரும் என்றும், இவ்வாறு நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சத்தால் கெடுதிபோன அல்லது வினவின பல பொருளும் வந்தடையும் காலமறிந்து சொல்லுக என்றவாறு. *179*

வினவினது கூடும் நாளறிதல்

யாவனொருவன் யாதொரு காரியம் வினவின அன்று சந்திரன் நின்ற நட்சத்திரத்திற்கு அறிந்து அப்போது உதிக்கின்ற இராசியில் நின்ற நட்சத்திற்கு இத்தனை நாள் என்றறிந்து, அந்நாளில் கெடுதியானவை வந்துகூடும் என்றும், மற்றும் வினவின கருமங்கள் கூடும் நாள் என்றும், கிரகங்களுக்குச் சொல்லத்தக்க நாழிகை, நாள், திங்கள், ஆண்டு என்று வகுத்த காலங்களிலே வந்துகூடும் என்றும், உதயங்களுக்கும் சந்திரன் நின்ற நாளுக்கும் நடுவே கிரகம் நிற்கில் வந்தடைவதில்லை என்றும் சொல்லுக என்றவாறு. *180*

கெடுதியானவை-கெட்டுப்போன, களவுபோன பொருள்கள்.

கெடுதி வரும், வாராது என்பது அறிதல்

சரராசி நான்கும் உதயமாயினும், நாற்கோள் என்று சொல்லப்பட்ட புதன், வியாழன், வெள்ளி, பூர்வபட்சத்துச் சந்திரன் இவர்கள் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு கூடி உதிப்பதாயினும், கெடுதி வினவின்-காணலாம் என்றும், செவ்வாய், சனி, ஆதித்தன் அமரபட்சத்துச் சந்திரன் உதயமாகி நிற்பனவாயின் கெடுதி வினவின் காணாது என்றும் சொல்லுக என்றவாறு. *181*

இதுவுமது

உதயாரூடக் கவிப்பினுக்கு மூன்று, ஐந்து, ஒன்பதில் நற்கோள்கள் வலிபெற்று நின்றாலக் கெடுதி காணாலாம் என்றும், அந்நிலத்தில் தீக்கோள்கள் நிற்கில் கெடுதி வாராது என்று சொல்லுக, நோக்குடைய கோளுக்கமைந்த திசை மேலே கெடுதி சேருமென்றும் சொல்லுக என்பதாம். *182*

பொருட்பேரழிவு முற்றும்.

சிந்தித்தன யாவையும் அறிதல்

நல்ல பொருட்பேறும், அரச காரியங்களும், நாட்டுக் கருமங்களும், ஊர்க்கருமங்களும், நல்ல காரியங்களும்,

பெண் விஷயங்களும், தனக்கான கருமங்களும், இத்தன்மை யானவற்றில் யாவனொருவன் சிந்தித்துவந்த காலமறிந்து, அக்காலத்தைக் கொண்டு கருமத்தின் நன்மையும், தீமையும் விசாரித்தறிந்து சொல்லுக என்றவாறு. *183*

கருமங்கள் - செயல்கள், கடமைச் செயல்கள்.

உதயத்திற்கு மூன்றாமிடப்பலன்

உதயாரூடத்திற்கு அத்திரமாகிய மூன்றினை (ராசியை) சுபக்கிரகங்கள் உச்சத்தானங்களில் நின்று நோக்கின், கெடுதியான பொருள் வரும் என்றும், பெண்கள் விஷயமாக சிந்திப்பின் அவை சேரும் என்றும், இந்தத் தானத்தில் பகை நீச்சக்கோள்கள் நிற்பின் இவை சிதையும் என்றும் சொல்லுக என்றவாறு. *184*

மூன்றாமிடப் பலன் - நலமாதல்

முன்னர் சொல்லப்பட்ட உதயாரூட அத்திரத்துள் (மூன்றாம் இராசியில்) நட்புக்கோள் நிற்பினும் நோக்கினும் யாதொருவன் இருந்தவிடத்தே வந்து பகைவர் உறவாவர் என்றும், பெண்களும் வந்து சேருவார்கள் என்றும் சொல்லுக. அந்த ராசியில் பகை நீச்சக்கோள் நிற்குதல் நோக்குதல் செய்யின், பகை தீராது என்றும், பெண்கள் சேரார் என்றும் சொல்லுக என்றவாறு. *185*

இதுவுமது - தீதுகாணல்

உதயாரூட அத்திரத்தில் பகைக்கோள் நிற்குதல் நோக்குதல் செய்யின் பிணித்திறம் வினவின் உயிர் வாழ்வதில்லை என்றும், பகைத்திறம் வினவின் பகைவர் வருவர் என்றும், வெற்றி வினவின் தோல்வியாம் என்றும், பெண்கள் சேரார் என்றும், யாத்திரை போனவர்கள் வாரார் என்றும், கெடுதி வினவின் காணாது என்றும் சொல்லுக என்றவாறு. *186*

மூன்றாமிடப் பொதுப்பலன்

உதயாரூடச் சத்திரத்திற்குச் (அத்திரத்திற்கு) சொல்லத்தக்க நாற்கண்டங்களில் சந்திரனும் பிரகஸ்பதியும் (வியாழன்) நிற்கில், கெடுதி போனது வரும் என்றும், தூரப் போகாது என்றும், சாவு வினவின் சாவு இல்லை என்றும், பகை வினவின் பகையில்லை என்றும், தீக்கோள் அவ்விடத்தில் நிற்கில் நல்லனவாகச் சொன்னவை எல்லாம் தீயனவாம் என்றும் சொல்லுக என்றவாறு. *187*

இதுவுமது

உதயாரூடச் சத்திரமான ராசிகளுக்குச் சொல்லத்தக்க கண்டங்களில் பாபக்கிரகங்கள் சூரியன், செவ்வாய், சனி, ராகு நிற்கப் பத்தாமிடத்திலும் பதினோராமிடத்திலும் சுபக் கிரகங்களான வியாழம், புதன், வெள்ளி விருத்தி சந்திரன் நிற்கில் யாவனொருவன் சிந்தித்த கருமமெல்லாம் தப்பாமல் கைகூடும் என்று சொல்லுக என்றவாறு. *188*

அத்திரம் - உதய ராசியில் தோன்றிய கோள்; சத்திரம் - தோன்றிய கோள் தரும் ஆரூடம்.

உதயாரூடத்தில் ராகு நிற்கப் பலன்

உதயாரூடத்திற்கு நாற்கண்டங்களில் பாம்பு (ராகு) நிற்கின், நன்மை வினவின் வேதனைப்படுவார் என்றும், யாத்திரை போனார் வரவில்லை என்றும், கேட்ட பொருள் காணாதென்றும், வீண் திட்டமாயினும் வியாதி கொள்ளினும் நஞ்சு கொள்ளினும் சாவார் என்றும், ஊருக்குப் போனவர்கள் வாரார்கள் என்றும், தொடங்கின கருமம் முடியாது என்றும் சொல்லுக என்றவாறு. *189*

உதயாரூடத்தில் சந்திரன், சுக்கிரன் நின்ற பலன்

உதயாரூடத்திற்கு நாற்கண்டங்களில், உதயத்தில் சந்திரனும், சுக்கிரனும் நிற்கப் பத்தாமிடத்தில் சூரியனும்

வியாழமும் நிற்க, யாவனொருவன் வந்து வினவின கருமம் எல்லாம் நன்மையுடனே முடியும் என்றவாறு. *190*

உதயத்திற்கு ஏழாமிடப்பலன்

உதயத்திற்கு ஏழாமிடத்திலும் பத்தாமிடத்திலும் சுக்கிரன் நிற்கில், பெண் கருமம் வினவின் கூடும் என்றும், பொருள்வரும் என்றும், முன்சொல்லப்பட்ட நிலங்களில் சந்திரன் நிற்கில் (7,10ஆம் இடங்களில்) அரசியல் ஆக்கமும் அவர்களுடைய பாராட்டுகளும் உண்டாகும் என்றும் சொல்லுக என்றவாறு. *191*

நற்கோள்களால் நற்பயனறிதல்

ஆரூடத்திலும் உதயத்திலும் நின்று நோக்கத்தக்க நற்கோள்கள் நட்பு, ஆட்சி, உச்சத்திறத்துடன் புகுங்காலத்தில் யாவனொருவன் அந்த ராசியில் வந்து நின்று வினவின எத்தகைய கருமங்களும் அந்த நாளிலேயே தப்பாமல் வந்து கூடும் என்று சொல்லுக என்றவாறு. *192*

உதயாரூடப் பொதுப்பலன்கள்

உதயாரூடக் கவிப்பாகச் சொல்லத்தக்க கண்டங்களில் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நற்கோள் நிற்க வினவின கருமம் எல்லாம் நல்லனவாம் என்றும், அந்நிலத்தில் பாவக்கோள் நிற்குதல் நேக்குதல் செய்யின் பொருள் கேடாம் என்றும், வினவின கருமம் முடியாது என்றும் சொல்லுக என்றவாறு.

இதுவுமது

உதயாரூடக் கண்டங்களில் கோள் நட்பு, ஆட்சியுடன் நிற்க, வினவின கருமம் எல்லாம் நன்மையாம் என்றும், பகைக்கோள் நிற்பின் பகைவர் வந்து அடைவர் என்றும், உச்சக்கோள் நிற்பின் செல்வமுடன் கீர்த்தியும் உண்டாகும் என்றும், தீயக்கோள் நிற்பின் வினவின கருமம் கெடும் என்றும் சொல்லுக என்றவாறு. *194*

உதயாரூடக் கோள்நிலைப் பலாபலன் - பொது

முன்னர் சொல்லப்பட்ட நெறிகளுக்கெல்லாம் சொல்லப்பட்ட கோள்நிலைகளை உணர்ந்து, வினவினவர் கட்கு நன்மை-தீமை சொல்லுமிடத்தில், உதயாரூடக் கண்டத்து நற்கோள் நட்பாட்சியுச்சத்தோடு நிற்கில் நன்மை தருமென்றும், தீக்கோள் நிற்கின் தீங்கு தருமென்றும், நீச்சக்கோள் நிற்கின் பகையும் கேடும் வரும் என்றும், இத்தன்மையவெல்லாம் கிரகங்களுக்கு நாழிகை, நாள், திங்கள், ஆண்டு என்று சொல்லத்தக்க தொகையிலே அறிந்து சொல்லுக என்றவாறு. *195*

உதயாரூடக்கோள் பலன் முற்றும்.

பிணிக்காண்டம்

உதயத்திற்கு ஆறாமிடப்பலன்

தேவர்களது சாத்திரப்படியே நிலைபெற்று வரத்தக்க நோயும், மரணமும் சொல்லுமிடத்து, உதயத்துக்கு ஆறாம் ராசி ஆரூடமாகவரின், பிணித்திறம் வினவினால் - பிணி தீராது என்றும், உதையத்துக்கு எட்டாம் ராசி ஆரூடமாக வரின் சாவு வினவின் சாவு உண்டென்றும் சொல்லுக என்றவாறு. *196*

உதயத்திற்கு ஆறாம் ராசிப் பலாபலன்

உதயத்திற்கு ஆறாம் ராசி ஆரூடமாக வரும்பேர் களுக்குப் பிணியாமென்றும், அவ்விராசியில் தீக்கோள் பகை, நீச்சத்தில் நிற்கின் பிணி தீராது என்றும் சொல்லுக என்றவாறு. *197*

ஆரூடத்தில் தீயக்கோள் நின்ற பலன்

ஆரூடத்தில் பாம்பும் தூமமும் நிற்கப் பிணித்திறம் வினவின் சத்துருக்களாலும் பிணிப்பட்டும், நெருப்பினாலும் விஷத்தினாலும் மரணம் உண்டாகும் என்று சொல்லுக என்றவாறு. *198*

பிணி பற்றிய ஆரூடம் காணல்

கவிப்பு ராசிகளாகிய மேடம், இடபம், கற்கடகம், தனுசு, மகரம் ஆகிய ராசிகளில் ஒன்று ஆரூடமாகவரினும் அவற்றில் ஒன்று சத்திரமாயினும், அவற்றில் ஒன்று பாம்பு நிற்பினும், பிருட்டோதயமாகிய கிரகங்கள், ஆதித்தன், சனி, செவ்வாயாகிய பாபக்கிரகங்கள் நிற்பினும் நோக்கினும் பிணியானவை தீராது என்றும் சொல்லுக என்றவாறு. 199

இராசிகளுக்குரிய சரீர அங்கம்

தலை - மேடம், முகம் - இடபம், தோள்- மிதுனம், மார்பு - கடகம், முலை - சிங்கம், வயிறு - கன்னி, முதுகு - துலாம், பிருட்டம் - விருச்சிகம், தொடை - தனுசு, முழங்கால்-மகரம், கணைக்கால் - கும்பம், புறங்கால் - மீனம் என்று இராசிகளின் அங்க நிலை அறிக என்றவாறு. 200

கோள்களுக்குரிய அங்கம்

செவ்வாய் வலிமை பெறின் - தலை; வெள்ளி வலி பெறின் - முகம்; புதன் வலிபெறின் - கழுத்து, தோள்; சந்திரன் வலிபெறின் - மார்பு; சூரியன் வலிபெறின் - வயிறு; வியாழம் வலிபெறின் - அரை; சனி வலிபெறின் - குரங்கு, தொடை; ராகு வலிபெறின் - கால் என்று இவ்வகையால் சொல்லுக என்றவாறு. 210

உறுப்பில் பிணியறியும் நுட்பம்

யாவனொருவன் பிணி வினவின காலத்தில், முன்சொல்லப்பட்ட ராசிகளும், கோள்களும் சரீரத்தில் கொண்ட உறுப்பறிந்து, உதயத்தில் பலம்பெற்று நின்ற இராசிக்கும், கோளுக்கும் அடைத்த உறுப்பில் பிணியுள்ளது என்றும், உதயத்தைப் பகை நீச்சத்தானத்தில் இருந்து பாபக் கிரகம் பார்க்கின் அவ்வுறுப்பிலுள்ள பிணியானவை ஆறாது தீராது என்றும் சொல்லுக என்றவாறு. 202

உறுப்பில் நோய் நிற்கும் காலமறிதல்

உதயத்திற்கு ஆறாம் ராசியாகிய பிணிகயிறே ஆரூடமாக, அந்த ஆரூடத்தில் தீக்கோள் நிற்றல் நோக்குதல் செய்யின், அந்த கிரகத்தின் பலமறிந்து அந்த கிரகத்திற்குள்ள நாழிகை, நாள், திங்கள், ஆண்டு என்று கொண்டளவும் அறிந்து, அக்காலமளவும் அந்த உறுப்பில் பிணி தீராது என்றும் கூறுக என்றவாறு. 203

இதுவுமது

உதயத்திற்கு எட்டாம் ராசியாகிய பிணிக்கயிறு ஆரூடமாக, அதில் பாபக்கிரகங்கள் நிற்கின், மரணம் என்றும், நோய் தீராது என்றும், அதில் சுபக்கோள் நிற்கின் பிணி தீரும் என்றும் சொல்லுக என்றவாறு. 204

ஆரூடத்தில் நோய் நிலையறிதல்

உதயத்திற்கு ஆறாம் இராசியாகிய பிணிக்கயிறு ஆரூடமாக, அந்த ராசியில் நற்கோள் நின்று நோக்க, முன்னர் கோள்களுக்குச் சொன்ன நாழிகை, நாள், திங்கள், ஆண்டு என்று காணும் காலவகையில், நற்கோள்களுக்குரிய கால அளவில் பிணி தீரும் என்று சொல்லுக என்றவாறு. 205

இதுவுமது

உதயத்திற்கு ஆறாம் ராசியும், பிணிக்கயிறுமாகிய ஆரூடராசியில், தீக்கோள்கள் நிற்க, ஆறாமிடத்தில் சந்திரன் நிற்பின் பிணித்திறம் வினவினவர்களுக்குப் பிணி தீரும் என்று சொல்லுக என்றவாறு. 206

அந்தரக் கோள்களால் பிணித்திறமறிதல்

உதயத்தில் இந்திரதனுசு, பரிவேடம் இவை இருக்கும்போது பிணித்திறம் வினவின், தீராது என்றும், அந்த உதயத்தை நட்பு, ஆட்சி, உச்சத்தோடு சுக்கிரனும், புதனும் நின்று நோக்கிற் பிணி தீரும் என்றும் சொல்லுக என்றவாறு.

நோய் இன்னதென்று அறிதல்

சந்திரனுக்குத் தலைநோவு, செவ்வாய்க்கு வெப்பு நோய், சுக்கிரனுக்கு நீர்க்கொண்ட ரோகம், புதனுக்கு கைக்கீழ் கழலைக்கட்டு, ஆதித்தனுக்கு வயிற்று நோய் என்பதாம். *208*

இதுவுமது

சனிக்கு வாதநோய், கால் முடம் என்றும், பாம்புக்குப் பாண்டுரோகம் என்றும், வியாழத்துக்கு முகரோகம், கண் நோய் என்றும் காண்பதாகும். *209*

இதுவுமது

பரிவேடத்திற்குக் குட்டநோய், இந்திரதனுசுக்கு ஈளை, இருமல், நுட்பத்திற்கு உடல்வலி, தூமத்திற்குச் சூலை ரோகம். இவ்வாறே பன்னிரண்டு கிரகங்களுக்கும் அடைத்த பிணியறிந்து, யாவனொருவன் பிணித்திறம் வினவின காலத்து உதயாரூட வலிபெற்ற கோளுக்கு அடைத்தபிணி இதுவென்றும், நற்கோள் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நின்று நோக்கின் பிணி தீரும் என்றும், பாபக்கோள்கள் நின்று நோக்கின் பிணி தீராது என்றும் சொல்லுக என்றவாறு. *210*

நட்சத்திரங்களுக்குரிய உறுப்புக்கள்

யாவனொருவன் வியாதிகொண்டானென்று வந்தால், அப்பொழுது உதிக்கின்ற நாள் அறிந்து, கார்த்திகை ஆதியாய், அன்று கார்த்திகை நட்சத்திரமாயின்; கார்த்திகைக்கு-தலை, ரோகிணிக்கு - நெற்றி, மிருகசீரிடமாயின்-புருவம், திருவாதிரை யாகில்-கண், புனர்பூசமாயின்-மூக்கு, பூசமாயின் - செவி, ஆயில்யமாயின் - உதடு, முகவாய், பூர மாயின் - வலக்கை, உத்திரமாயின் - இடக்கை, அத்தமாயின் - விரல்கள் என்பதாம். *211*

இதுவுமது

சித்திரை-கழுத்து, சுவாதி-மார்பு, விசாகம்-முலை, அனுஷம்-வயிறு, கேட்டை-இடை, மூலம்-வலமுதுகு, பூராடம்-இடமுதுகு, உத்திராடம்-பிட்டம், திருவோணம்-ஆண்குறி, அவிட்டம்-பீசம், சதயம்-வலது தொடை, பூரட்டாதி - இடது தொடை என்பதாம். 212

இதுவுமது

உத்திரட்டாதி-முழந்தாள், ரேவதி-கணைக்கால், அசுவினி- புறவடி, பரணி-உள்ளடி. இந்த வகையால் யாவனொருவன் பிணித்திறம் வினவின காலத்தில், அப்பொழுது உதித்த ராசியில், நின்ற நாள் அறிந்து, அந்த நாளுக்கும், சரீரத்தில் அடைத்த உறுப்புக்களில் பிணி உள்ளது என்றும், நற்கோள் நிற்கில் ஆறுமென்றும், தீக்கோள் நிற்கின் ஆறாது என்றும் சொல்லுக என்றவாறு. 213

இதுவுமது

உதயராசியிலும், அதற்குப் பத்து, ஒன்பது, ஐந்து ஆகிய ராசிகளிலும் நற்கோள் நட்பு, ஆட்சி, உச்சத்தோடு நின்று நோக்கின் பிணி தீரும் என்றும், அந்த நிலத்துப் பகை நீச்சக் கோள் நின்று நோக்கின் பிணி தீராது என்றும் செவ்வாய் பத்தாமிடத்தில் நிற்கின் பிணி தீரும் என்றும் சொல்லுக என்றவாறு. 214

நோய்க்காண்டம் முற்றும்.

நலம் - தீங்கு காண்டம்

நன்று - தீது அறிதல்

இடபம், சிங்கம், கும்பமான இந்த ராசிகள் ஆரூடமாய்த் தம்மைத்தாமே கவிப்பினும், பத்தாம் ராசி கவிப்பினும் நன்றென்றும், துலாம் ஆரூடமாகத் தனுசு கவிக்கின் நீச்சம் என்றும், தனுசை துலாம் கவிக்கின் மரணக் கவிப்பென்றும் கூறப்பெறும் என்றவாறு. 215

கவிப்பு வகையால் காணும் பலன்வகை

மேடத்தை மிதுனம் கவிக்கின் நீச்சக் கவிப்பாம். காரியக் கவிப்பில் நீச்ச மிதுனத்தை மேடம் கவிக்கின் மரணக் கவிப்பாம். கடகத்தைக் கன்னி கவிக்கின் நீச்சக்கவிப்பாம். இதன் பலன் காரிய நாசம், பிணி தீராது. கன்னியைக் கடகம் கவிப்பினும், மேடத்தைக் கடகம் கவிப்பினும் மரணக் கவிப்பாம். கடகத்தைக் கன்னி கவிக்கினும் மரணக் கவிப்பாம். உதயம் மூன்றாம் இராசியைக் கவிக்கினும், பதினோராம் ராசியைக் கவிக்கினும் பிணி தீராது, மரணக் கவிப்பாகும் என்றறிக என்பதாம். *216*

தீது வரும் வகையறிதல்

ஆதித்தன் வலிபெற்று நிற்கின், யாவனொருவன் வினவின தீது, நெருப்பால் சாவாம். சந்திரனுக்குத் தண்ணீரால் தீதுவரும். சனிக்குப் பசியாலும், வாதத்தாலும் தீதுவரும். புதனுக்கு வெப்பு நோயால் தீதுவரும். வெள்ளிக்கு நீராலும், பேயாலும் தீது உண்டாகும். செவ்வாய்க்கு ஆயுதங்களால் தீமை வரும். ராகுவிற்கும்-கேதுவிற்கும் விஷத்தால் தீமை வரும். வியாழத்துக்கு வயிற்றுவலியால் நோயாகும் என்றவாறு சொல்லுக என்பதாம். *217*

உதயத்துச் சந்திரன் - வரும் பலன்

சந்திரன் உதயமாகி, தீக்கோள்கள் ஆறாமிடத்திலும், எட்டாமிடத்திலும் நிற்கினும், நோக்கினும், சந்திரன் உதயத்துக்கு ஏழாமிடத்தில் பாபக்கிரகம் நின்று நோக்கினும், அப்பொழுது வலிபெற்று நின்ற தீயக்கோளுக்கு ஓதப்பட்டதான நிலத்திலே மரணம் சொல்லுக என்றவாறு.

மரணம் காணும் நுட்பம்

உதயத்திற்கு எட்டாம் ராசியான மரணக்கயிற்றின் மேல் வந்து நின்ற கோளுக்கு எட்டாமிடத்திலே சந்திரன் நிற்கினும் நோக்கினும், அதற்கு ஏழாம் ராசியில் தீக்கோள் நிற்கினும்

நோக்கினும் மரணம் சொல்வதாம். அதில் வலிபெற்ற கோள்களால் அறிந்து சொல்வது என்றவாறு. 219

இதுவுமது

மரணக்கயிறாகிய உதயத்துக்கு எட்டாம் ராசியில், யாவனொருவன் வந்து நின்று வினவின் ஆரூட ராசிக்குப் பத்தாமிடத்தில் தீயக்கோள் நிற்பினும், மூன்றாமிடத்தில் சூரியன் நிற்பினும் பத்து நாளையில் மரணம் என்றும், அந்த மூன்றாமிடத்தில் ஆதித்தனும் வியாழமும் நிற்கின் ஏழு நாளையில் மரணம் என்றும் சொல்லுக என்றவாறு. 220

இதுவுமது

ஆதித்தன், செவ்வாய், சனி, ராகு ஆகிய கோள்களில் ஒன்று உதயமான ஆரூடத்திற்கு எட்டாவது நிலத்தில் (ராசியில்) நின்றால் எட்டு நாளையில் மரணம் என்றும், நான்காவது நிலத்திலும், இரண்டாவது நிலத்திலும் உதயத்திலும் பாபக்கோள் நிற்கினும், இந்த நான்காமிடத்தால் ஏழு நாளையில் மரணம் என்றும், இவ்வகையில் இரண்டாமிட உதயத்துக்குப் பதினான்கு நாளில் மரணம் என்றும் சொல்லுக என்றவாறு. 221

இதுவுமது

யாவனொருவன் மரணக்கயிற்றின்மேல் நிற்க, அப்பொழுது உதிக்கின்ற ராசியினும், அதற்கு இரண்டாம் ராசியினும் தீக்கோள் நிற்க, இரண்டாவது (நிலம்) கவிப்பாயின் மூன்று நாளையில் மரணம் என்றும், உதயத்திற்குப் பத்தாம் ராசியில் தீக்கோள் நிற்க, அதற்கு ஏழாம் ராசியில் சனி, செவ்வாய் நிற்க, ஏழு நாளையில் மரணம் என்றும் சொல்லுக என்றவாறு. 222

மரணகாலத்தளவறிதல்

மரணக்கயிறான எட்டாம் நிலத்தில் வந்து நின்றானை நோக்கிய தீக்கோள்கள் எத்தனை உள்ளனவோ, அவற்றுள்

வலிபெற்றுள்ள கோளின் கதிரளவு நாள், திங்கள், ஆண்டு என்றறிந்து அளவிட்டு அவனுக்கு மரணகால அளவு சொல்லுக என்றவாறு. 223

கிரகத்தால் மரணநோய் அறிதல்

ஆதித்தனுக்குத் தீயகோளாகிய சந்திரனுக்கு நீரால் பிணி, மரணம், சனிக்குப் பசியால், வெள்ளிக்கு வெப்பு நோயால், தீயால். புதனுக்குக் குளிர் நோய், சுவாச நோயால். செவ்வாய்க்கு ஆயுதத்தால் மரணம். பாம்பிற்கு விடத்தால் மரணம், வியாழனுக்கு வயிற்று நோயால் மரணம். இவ்வாறு மரணக் கயிற்றின் கோள்நிலையால் சொல்லுக என்றவாறு.

மரணம் உண்டா ? இல்லையா ? - பலன்

நோய் கொண்டார்க்கும், நோயில்லாதார்க்கும் மரணம் உண்டாகும் காலம் வினவின், வந்தவன் உதயத்திற்கு ஆறாம் ராசியான ஆருடத்தில் இருக்க, அதற்கு எட்டாமிடத்தில் எந்தக் கோள் நின்றனவோ அந்தக்கோளாற் சாவுபற்றிச் சொல்லுக என்றவாறு. 225

இறந்தவனுக்காகும் மறுஇடமும், பிறப்பும்

இறந்தவன் சென்றடைந்த விதிப்பயனை வினவினவனால் உதிக்கின்ற ராசியை உச்சக்கோள் நோக்கின் தேவருலகம் சென்றான் என்றும், பகை - நீச்சக்கோள் நின்று நோக்க நரகம் புகுந்தான் என்றும், பிறக்கினும் விலங்கு சாதியில் பிறப்பான் என்றும், நட்பு - ஆட்சியில் நின்ற கோள் நோக்கின் மானிடராகப் பிறப்பான் என்றும் அறிந்துசொல்லுக என்றவாறு. 226

மரணகாண்டம் முற்றும்.

உண்டி சுவை காண்டம்

அடிசில் உணவு விருந்துவகை அறிதல்

அடிசில் சமைத்த கலங்கள், அடிசில் வகை, சுவைகள், கறிவகைகள், உடனிருந்து உண்டவர்கள், உண்ட கலங்கள், அட்டினபேர்கள், மகிழ்ச்சி, கோபம் ஆகிய இவைகளைக் கூடியிருந்து அனுபவித்தவர்போலச் சொல்லுக என்றவாறு.

அடிசில் - சமைத்தல்.

இதன் பலன் காண்பதற்குரிய ஆதாரம்

ஆதித்தன் முதலான கிரகங்களின் நிறமும் சுவையும் வகையும் கண்டறிந்து, அவற்றிற்கமைந்த திசை, காலங்கள், பெண்-ஆண், நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சம், நோக்கு ஆகியவற்றையும் அறிந்து சொல்லுக என்றவாறு. 228

உண்டிவினவின் - ராசிகளால் அறிதல்

யாவனொருவன் வந்து உண்டி வினவின், உதயத்தில் மேடம், இடபம், மிதுனம் அமையின் - இலைக்கறியும், பாலும் தயிரும் பெற்றாய் என்க. தனுசு, சிங்கம் உதயமாயின் மச்சம், மாமிசம் உணவு பெற்றான் என்க. கடகம், மகரம், விருச்சிகம், மீனம் உதயமாகில் உண்டது காய், பழம் என்க. துலாம், கும்பம், கன்னி உதயமாகில் அறிந்துசொல்லுக என்றவாறு. 229

கோள்வழி உண்டியறிதல்

உதயத்து ஆதித்தன் நின்று நோக்கக் கரிப்பு, எரிப்புள்ள உண்டிவருக்கம் என்றும், செவ்வாய் நின்று நோக்குதல் செய்யின் சுடுகறியும், பொரிகறியும், குழந்தைச்சோறு

என்றும், புதனின்று நோக்குதல் செய்யின் சமைத்தன என்றும், சனி நின்று நோக்கச் சோறும் எண்ணையும் என்றும் அறிக.

இதுவுமது

உதயத்தில் பாம்பு நின்று நோக்க இலைக்கறியும், உளுந்திட்ட கறியும் என்க. வியாழம் நின்று நோக்க முதிரைக்கறி என்க. சந்திரன் நின்று நோக்கக் காய், பூ, கிழங்கு, மீன், இறைச்சி வகை உணவுக் கறி என்க. வெள்ளி நின்று நோக்கின் தேன், பால், கொண்ட உணவு என்க என்பதாம்.

கோள் உறவால் உண்டி வகையறிதல்

ஆதித்தனுடன் செவ்வாய் கூடிநிற்கில் - இறைச்சி, ஊண் பெற்றாயென்க. ராகு நிற்கில் - எண்ணெய் வார்த்துண்டாய் என்க. சந்திரனாகில்-தயிர் வார்த்துண்டாயென்க. சுக்கிரனாகில் நெய் வார்த்துண்டாயென்க. *232*

இராசிகளால் உண்ட முறையறிதல்

ஆண் ராசிகளாயின் பிடித்துண்டாயென்றும், பெண் ராசிகளாயின் திரட்டியும் அள்ளியும் உண்டாயென்றும், வியனாகிய ஆண் ராசியில் ஆண் ராசியாகிய (கோளாகிய) சனி, பாம்பு நிற்கில் பழம் பால் சோறு உண்டாயென்றும் அறிந்து சொல்லுக. *233*

இதுவுமது

சல ராசியில் சனி, செவ்வாய், பாம்பு, சூரியன் இவற்றில் ஒன்று வலிபெற்று நின்றபோது வினவின், எண்ணெய் வார்த்துண்டாய் என்றும், வியாழனும், சந்திரனும்

வலிபெற்று நின்றால் நெய்வார்த்து உண்டாய் என்றும், வெள்ளி வலிபெற்று நின்றால் வெண்ணெய்யிட்டு உண்டாய் என்றும் அறிக. *234*

இதுவுமது

தீக்கோளாயின் எண்ணெய் வார்த்து உண்டாய் என்றும், நற்கோளாயின் நெய் வார்த்து உண்டாய் என்றும், நற்கோள் தோன்றின் நல்ல கலத்தில் உண்டாய் என்றும், தீக்கோளாயின் உடைந்த கலத்தில் உண்டாய் என்றும், நோக்குகின்ற கிரகத்தின் சாதியறிந்து விருந்திட்ட பேர்களையும், கோள்களின் ஆண் - பெண் அறிந்து இன்னார் என்றும், கோள்களின் . . . . ன் (எடு சிதைவு) *235*

உண்டிக் கண்டம் முற்றும்.

காம கண்டம்

உதயாரூட கிரகத்தால் நிகழ்ச்சிகளறிதல்

சந்திரன் உதயத்தில் நிற்க, செவ்வாய் இரண்டாமிடத்தில் நிற்க, கள்ளருக்குப் பயந்து உயிர் காத்திருந்தாய் என்று சொல்லுக என்றவாறு. *236*

இதுவுமது

உதயத்திற்கு நான்காமிடம், மூன்றாமிடம், ஏழாமிடம் ஆகியவற்றில் ஒன்றில் சந்திரனும் சுக்கிரனும் நிற்க, நோக்க இரவு பெண்ணுடனே வழக்காடி அவளுடைய புடவையையும் பறித்தாய் என்று சொல்லுக என்றவாறு. *237*

பெண் - நட்பு, பகை அறிதல்

உதயத்தில் நின்ற சந்திரனுடனே தீக்கோள் நிற்க - அவள் அவனுடனே பொருந்தி நடவாள் என்றும், சந்திரனுடனே நற்கோள் நிற்கினும் நோக்கினும் நட்பு, ஆட்சி, உச்சமாயினும் இருவரும் சேர்ந்து நட்புடன் இருப்பார்கள் என்றும் சொல்லுக என்றவாறு. 238

பெண் பகை அறிதல்

உதயத்திற்கு ஆரூட ராசியில் நின்ற கோள் பகை நிலத்தில் நின்றதாயின், பகையானவர் பெண்ணென்றும், நட்பு நிலத்தில் நின்றால் நட்பானவர் பெண்ணென்றும், நீச்சத்தில் நின்றால் அப்பெண் இழிகுலம் என்றும் சொல்லுக என்றவாறு.

காமகாண்டம் முற்றும்.

மகப்பேறு காண்டம்

பிள்ளைப்பேறு அறிதல்

பெண்கள் கெற்ப சங்கையாக வினவின காலத்து உதயராசி ஆரூடராசி இரண்டில் ஒன்றில் ராகு, கேது நிற்கில், அவள் வயிற்றில் கெற்ப உற்பத்தி இராதேன்று சொல்லுக என்றவாறு. 240

மகப்பேறு உண்டென்றறிதல்

ஆரூடத்திற்கும் உதயத்திற்கும் ஐந்தாமிடம் ஏழாமிடம் ஆகியவற்றில் பிரகஸ்பதி (குரு) நிற்க, மகப்பேறு வினவின், பிள்ளைப் பெறுவையென்றும், வியாழன் நட்பு-ஆட்சி-

உச்சத்தோடு நிற்கின் பிள்ளை பெற்று சுகசீவியாக இருப்பாய் என்றும், அந்த கிரகம் பகை-நீச்சத்தில் நிற்கில் பெற்று, இழப்பாய் என்றும் தெளிந்து சொல்லுக என்றவாறு. *241*

கெற்பம் ஆண் - பெண் என்றறிதல்

பெண்கள் பிள்ளைப்பேறு வினவின காலத்தில், பரிவேடம் உண்டாதல், உதயாரூடத்தில் நிற்றல் நோக்குதல் செய்யின், பிள்ளைப்பேறு கெற்பம் உண்டாகும் என்றும், பிள்ளையை பெற்று மகிழ்வாய் என்றும், அந்த ராசிகளில் ஆண்கோள் நிற்கில், ஆண் பிள்ளையைப் பெறுவை என்றும், பெண்கோள் நிற்கில், பெண் பிள்ளையைப் பெறுவை என்றும் சொல்லுக என்றவாறு. *242*

தந்தை மகன் திறமறிதல்

உதயத்தில் சந்திரன் நிற்க, ஏழாமிடத்தில் செவ்வாய் நிற்பதாயினும், உதயத்தில் செவ்வாய் நிற்க ஏழாமிடத்தில் சந்திரன் நிற்பதாயினும், சுக்கிரனும் சந்திரனும் சேர்ந்து நிற்பதாயினும், அவர்களைத் தீக்கோள்கள் நோக்கின், பிதா மரணம் என்றும், சனி நிற்கில் உடன்பிறந்தார் மரணம் என்றும், செவ்வாய் நிற்கில் பிள்ளை மரணம் என்றும் சொல்லுக என்றவாறு. *243*

பிள்ளையால் நன்மை தீமை அறிதல்

உதயத்திற்கு இரண்டாமிடம், நான்காமிடம், பத்தாமிடம் ஆகியவற்றில் தீக்கோள் ஆட்சியில் நின்று கவிப்பினும், உதயத்தின் நற்கோள் நிற்பினும் நன்றென்பது. இரண்டு, நான்கு, பத்தாம் இடங்களிலும் உதயத்தும் தீக்கோள் பகை-நீச்சத்துடன் நிற்கின் தீதாம் என்றவாறு. இவ்விடங்களில் செவ்வாய், ஆதித்தன், ராகு இவர்கள்

மூவரில் ஒருவர் சந்திரனுடன் கூடிநிற்கச் சாதகன் ஆண் பிள்ளை பிதாவென்பவனுக்குப் பிள்ளை அன்றென்று சொல்லுக என்றவாறு. 244

சாதகனால் வரும் தீங்கறிதல்

உதயத்திற்கு ஐந்தாமிடத்தில் சுக்கிரன், சனி, சந்திரன், ஆதித்தன் இவர்கள் நிற்கில், சாதகன் தந்தைக்கும், தாய்க்கும், தனக்கும், தன்குடிக்கும் தீங்கென்று சொல்லுக என்றவாறு.

சாதகன் சார்பு அறிதல்

சென்ம லக்கினத்தையும் சந்திரா லக்கினத்தையும் சுக்கிரன், வியாழம் இருந்து நோக்காவிடினும், செவ்வாய், ராகு இவர்களில் ஒருவர் சந்திரனுடன்கூடி நிற்கினும் சாதகனானவன் பிதாவிற்குப் பிள்ளை அன்றென்று சொல்லுக என்றவாறு. 246

சாதகனால் பலனறிதல்

உதயத்தில் நின்ற சந்திரனை நற்கோள் நோக்காமல், தீக்கோள் நோக்குமாயின் தாயும் பிள்ளையும் அப்பொழுதே மரணம் என்று அறிக என்றவாறு. 247

சாதகனுக்கு நன்மை தீமை அறிதல்

சென்ம லக்கினத்தையும், சந்திரா லக்கினத்தையும் சுக்கிரன், வியாழம் இவர்கள் நட்பு, ஆட்சி, உச்சத்தில் நின்று நோக்காவிடில் தீமையும், நோக்கின் நன்மையும் உண்டாகும் என்றும் சொல்லுக என்றவாறு. 248

குறிப்பு :- 246 - 248 மூன்று பகுதிகளும், கோள்நிலைச் சோதிடவழி முறைகளால் சொல்லப்பட்டதாகும்.

பிள்ளைப்பேறு உண்டு இல்லை என்பதறிதல்

உதயாரூடத்தில் சந்திரனுடன் நற்கோள் நிற்கில் பிள்ளைப்பேறு உண்டாகும் என்றும், சந்திரனுடன் ஆதித்தனும், சுக்கிரனும் கூடி மூன்று, ஐந்து, ஒன்பது ஆகிய நிலங்களில் நிற்கில் பிள்ளைப்பேறு இல்லை என்றும் சொல்லுக என்றவாறு. *249*

கெற்பத்தால் நேர்வது அறிதல்

பிள்ளை உண்டானவள் வினவின காலத்திற்குரிய உதயாரூடத்தில் பரிவேடம் உண்டாகில் அந்த கெற்பம் அழியும் என்றும், அந்த வட்டத்துக்கு எட்டாமிடத்தில் சந்திரன் (ராகுவுடன்) நிற்கின், இரண்டு உயிர்களுக்கும் மரணம் என்றும், நட்பு-ஆட்சி-உச்சத்தோடு நின்ற நயமறிந்து சொல்லுக என்றவாறு. *250*

கெற்பம் ஆண், பெண் அறிதல்

மகப்பேறு வினவின காலத்து உதயராசியும், கேந்திரமும் ஒத்திருப்பின் ஆண் என்றும், இரட்டித்ததாயின் பெண் என்றும், *251*

உதய ராசிக்குப் பத்தாம் ராசியில் நின்ற கோளை, அசுவினி முதலாக எண்ணினால், அந்த நாள் ஒற்றையானால் ஆண் என்றும், இரட்டித்தால் பெண் என்றும் சொல்லுக என்றவாறு. *252*

இதுவுமது

உதயத்திற்குப் பதினொன்று, மூன்று, பத்து, ஒன்பது ஆகிய ராசிகளில் ஆதித்தன் நிற்கில் ஆண் பெறுதி என்றும், ஏழாம் ராசி ஒற்றித்த ராசியால் நற்கோள் நிற்கில் ஆணென்றும், சமன் ராசியாய் தீக்கோள் நிற்கின் பெண் என்றும் சொல்லுக என்றவாறு. *253*

தாய், தந்தை, பிள்ளை இவர்கட்கு வரும் தீமையறிதல்

உதயத்தில் சந்திரன் நிற்க, அதற்கு ஏழாமிடத்தில் தீக்கோள் நிற்கப் பிள்ளைக்குத் தீமையாம். உதயத்துச் சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் தீக்கோள் நிற்க, மாதாவிற்குத் தீமையாம். சந்திரனுக்குப் பனிரெண்டாமிடத்தில் தீக்கோள் நிற்கில் பிள்ளைக்குக் கண் பார்வை தீதாம் என்றும் சொல்லுக என்றவாறு. 253

பிள்ளைக்குக் கண்பார்வை அறிதல்

உதயத்திற்குப் பனிரண்டாமிடத்தில் சூரியன் நின்றால் பிள்ளையின் வலக்கண் கெடும் என்றும், அந்த நிலத்தில் சந்திரன் நிற்கில் இடக்கண் கெடும் என்றும், இருவரும் அந்த நிலத்தில் சேர நிற்கில் இரண்டு கண்களும் கெடும் என்றும் சொல்லுக என்றவாறு. 254

தந்தை அரிட்டம் அறித ல்

சனியாகினும், செவ்வாயாகினும் உதயத்தைக் காணிற் பிதாவிற்கு மரணம் என்க. இவ்விரு கோளும் சந்திரனை நோக்கின் மாதா மரணம் என்றும். சந்திரனை வியாழம் காணில் இவை இல்லையென்றும் சொல்லுக என்றவாறு.

பிள்ளை தாய் - தீமை அறிதல்

பிள்ளை பிறந்த உதயத்தில் ராகு - கேது நிற்க, அந்த ராசியைப் பிரகஸ்பதி நோக்காதிருப்பின், பிள்ளை சாகும் என்றும், உதயத்திற்கு இரண்டு பன்னிரண்டு ஆகிய ராசியில் சந்திரன் நிற்க, அதற்கு ஏழாம் ராசியில் ஆதித்தன் பகை ராசியில் நின்று நோக்கின் தாய் மடிவாள் என்றும் சொல்லுக என்றவாறு. 256

பிள்ளைக்குத் தீமையறிதல்

வியாழம் நோக்கமில்லாதவிடத்தில், பாபக்கோள்கள் பகை, நீசக் கோள்களாக நின்று, சந்திரனை நோக்கினும், ஆரூடத்திற்கு ஆறு, எட்டு, ஆகிய ராசிகளில் சனி நிற்பினும் பிள்ளைக்குத் தீங்காகும் என்றவாறு. 257

பிள்ளையின் யோகபலன்

உதயத்தின் முன்னும் சுபத்தானங்களிலும் சுபக் கோள்கள் நிற்பினும் நோக்கினும், உதயத்தில் சுபக்கோள்கள் வலிபெற்று நிற்கினும் பிள்ளை தனவானாவான் என்று சொல்லுக என்றவாறு. 258

மகப்பேறு காண்டம் முற்றும்.

சுரிகை காண்டம்

போரில் சுரிகைக்கு நேருவதறிதல்

உதயத்தில் பாம்பு சந்திரனுடன் நிற்கில், பாபக் கோள்கள் சந்திரனை நோக்கின் சுரிகை முறியும் என்றும், சுபக் கோள்கள் நோக்கின் சுரிகை முறியாது என்றும், தீயகோள்கள் பகை, நீச்சத்தில் நின்று நோக்கின் சுரிகை பழுதாம் என்றும் சொல்லுக என்றவாறு. 259

சுரிகைக் கைவலிமை அறிதல்

உதயாரூடத்தை நற்கோள்கள் நட்பு, ஆட்சி, உச்சத்தில் நின்று நோக்குமேல், சுரிகைக்கை சோர்வின்றி இயங்கும். பாபக்கோள்கள் பகை நீச்சத்தில் நின்று நோக்கின் சுரிகைக் கை சோர்வடையும், தீங்கு உண்டாகும் என்று சொல்லுக என்றவாறு. 260

சுரிகை கை சோர்தலின்மையாவது : வாள் கையை விட்டுப்போகாத வலிமையாகும்.

சுரிகை உடைமை அறிதல்

உதயாரூடத்தை நட்புக்கோள்கள் நோக்கின் சுரிகை மரபில் வந்த ஆயுதமென்றும், ஆட்சிக் கோள்கள் நோக்கின் தனக்குரிமையுடையது என்றும், உச்சக்கோள்கள் நோக்கின் தன்னின் மேலோர் வழிவந்தது என்றும், பகைக்கோள்கள் நோக்கின் பகைவருடையது என்றும் சொல்லுக என்றவாறு.

சுரிகையால் நேர்வன அறிதல்

உதயத்தில் பாபக்கோள்கள் நிற்கில் சுரிகையால் புண் உண்டாம். அதில் சுபக்கோள்கள் நிற்கில் புண் உண்டாகாது. சுபக்கோள்கள் நோக்கில் தீதுண்டாம் என்று சொல்லுக என்றவாறு. 262

சுரிகையாவது வீரர்கள் இடையில் கட்டிச் செல்வதும், போரில் கையாளுவதுமாகிய உடைவாளாகும்.

சுரிகை காண்டம் முற்றும்.

சல்லிய காண்டம்

பூமியில் காணும் சல்லியம் - 16

பூமியின் அடியில் காணும் சல்லியம் : தலைமண்டை, எலும்பு, செங்கல், ஓடு, சுள்ளி, விக்கிரகம், சாம்பல், கரி, மானுட எலும்பு, தானியம், பொன், கருங்கல், இட்டிகை, பசுவின் கொம்பு, செத்த நாயெலும்பு, மண்சாடி, (சாப) என்று சொல்வன சல்லியமானவை என்று சொல்லு என்றவாறு.

சல்லியம் அறிதல் - கணிப்பு

பூமி சல்லியம் வினவினபோது, அடியளந்து பாதச்சாயை சுளைந்து நின்றவடிவுடனே, நட்சத்திரம் இருபத்தெட்டையும் கூட்டி, மேடமாதி மீனாந்தரமான பன்னிரண்டு ராசியும் கூட்டி, கூட்டின தொகையைச்சல்லியம் பதினாறுக்கீய்ந்து, ஈய்ந்த சேடத்தை அறிந்து, சல்லிய முறையே எண்ணி, உற்ற சல்லியம் ஈதென்றறிக என்றவாறு.

சல்லியம் காணும் முறைமை

சல்லிய முறைமை என்பது சல்லியம் பதினாறும் எண்ணிவருங்கால், தானியம் (நெல்), பொன், பசுவின் கொம்பு, தப்பளை (தவளை) ஆகிய நான்கிலொன்று காணின் நற்காலச் சல்லியம் என்றும், நின்ற பன்னிரண்டு சல்லியமும் தீயக்காலச் சல்லியம் என்றும் சொல்லுக என்றவாறு. 265

சல்லியச் சக்கரம்

கார்த்திகை முதலாக நட்சத்திரம் இருபத்தெட்டினையும் கோமூத்திரிய சக்கர நியாயத்திலே வைத்து எண்ணும் காலத்தில் யாவனொருவன் சல்லியம் வினவினபோது உதயாதி நின்ற ராசியில் பொருந்தியதாகக் கார்த்திகை நட்சத்திரம் முதலாக வைத்து, அன்று சந்திரன் நின்ற நாளறையளவும் எண்ணிச் சந்திரன் நின்ற வறையிலே சல்லியம் என்று அறிந்துசொல்லுக என்றவாறு. 266

சல்லியம் உண்டென்பதறிதல்

யாவனொருவன் சல்லியம் வினவின காலத்தில் உதியா நின்ற ராசியில், சல்லியம் உற்றதாக, கார்த்திகை நின்ற ராசி அறைமுதலாக அடைவாக எண்ணி, சந்திரன் நின்ற நாள் அறையில் சல்லியம் உண்டு என்பதறிந்து சொல்லு என்றவாறு. 267

சல்லியம் இருப்பிடம் அறிதல்

யாவனொருவன் யாதொரு தேசத்தில் சல்லியம் வினவினால், அந்த நிலத்தில் இன்ன இடத்தில் சல்லியம் உண்டு என்பதனை நிச்சயித்து அறிவது, நிலத்தின் அகல - நீளத்தை அளந்து, அதனைத் தன்னிற்பெருக்கி, இருபத்தேழுக்கு ஈந்து, வந்த ஈவு முழம் என்றும், சேடமாகிய மிச்சத்தைப் பன்னிரண்டாற் பெருக்கியீயுமென்றவாறு. **268**

குறிப்பு :- முதற்பகுதியில் கூறப்பட்ட சல்லிய காண்டத்துள் சல்லிய சக்கரம் 28 நட்சத்திரங்கள் கொண்டதாக, 28 அறைகள் அமைந்த கோமூத்திரிக சக்கரமாகக் கூறப்பட்டுள்ள வேறுபாடு அறியத்தக்கதாகும்.

சல்லியம் கிடக்கும் ஆழ அளவறிதல்

முன்பு பன்னிரண்டாற் பெருக்கின தொகையை, இருபத்தெட்டுக்கு ஈந்த ஈவு சாணென்றும், ஈயாத மிச்சத்தை ஆறிற்பெருக்கி, முன்பு போன்று வந்த ஈவு அங்குலம் என்றும், இந்த வகையாற் சல்லியம் கிடந்த ஆழம்கண்ட அளவை முழம், சாண், அங்குலம் என்ற வகையாற் சொல்லுக என்றவாறு. **269**

சாண் இரண்டு கொண்டது ஒரு முழம் என்று காண்க.

சல்லியப்பலன் அறிதல்

உதயம் முதலாக சொல்லத்தக்க கண்டங்கள் நான்கில் ஒன்றில் செவ்வாய், பாம்பு, ஆதித்தன், சனி ஆகிய இவர்களில் ஒருவர் நிற்பினும், நோக்கினும் சுபமானவை இல்லை என்பதும், சுபக்கோள்கள் நிற்பினும் நோக்கினும் சுப நன்மைகள் உண்டாகும் என்றும் சொல்லுக என்பதாகும்.

சல்லிய காண்டம் முற்றும்.

கீழ் நீர்க்காண்டம்

கீழ்நீர் உண்டென்றறிதல்

யாவனொருவன் பூமியில் கீழ்நீர் வினவின காலத்து, உதயம் ஆரூடம் நீர்க்கீழ் ஆனவை இடபம், கடகம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் இவைகளாயின் - நீர் உண்டு என்றும், அவற்றில் சந்திரன் இவைகள் நிற்கினும் நோக்கினும் அந்நிலத்தில் குன்றாத நீர் ஊற்று உண்டு என்றும், புதன்-குரு இவைகள் நிற்கினும் ராசிகளை நோக்கினும் கீழ் நீர் உண்டு என்றும் சொல்லுக என்றவாறு. 271

இதுவுமது

உதயாரூடக் கீழ் நீரிடங்களில் பாம்பு நிற்கினும் அவற்றை நோக்கினும் மடங்கா நீர் உண்டு என்றும், சூரியன்-அங்காரகன்-சனி இவைகள் நிற்கினும் நோக்கினும் அடிநீர் இல்லை என்றும், நீர்க்கோள்களாகிய சந்திரன், சுக்கிரன் ஆரூடத்தில் நிற்கினும், நீரில்லாத கோள்கள் கவிப்பினும் நிலத்தில் கீழூற்று உண்டு என்றும், நீர்க்கோள்கள் கவிப்பில் நிற்க, நீரில்லாத கோள்கள் ஆரூடத்தில் நிற்கில் மேலூற்று என்றும் சொல்லுக என்றவாறு. 272

குறையாத நீர் காணல்

உதயாரூட கண்டங்களிலே, சந்திரன்-சுக்கிரன் ஆகிய நீர்க்கோள்கள் நிற்கின் நோக்கின் மடங்கா நீர் உண்டு என்றும், இந்திரதனுசு-பரிவேடம்-தூமம் ஆகியவைகள் நிற்பினும் நோக்கினும், பழைய நீர்க்குழிகளாதல் ஓடையாதல் உண்டு என்றும் அறிந்து சொல்லுக என்றவாறு.

கீழ் நீருள்ள இடமறிதல்

உதயாரூடத்தில் சூரியன் நிற்கில் காடாம். அங்காரகன், சனி நிற்கில் முட்புதரிடமாம். பாம்பு நிற்கில் தாழையூற்று, புற்றிடமாம். சந்திரன் நிற்கில் வாழைத்தூறாம். புதன் நிற்கில் பலாமரவடியாம். குரு நிற்கில் தென்னை, பனை, கமுகு, மா இவைகளுள்ள இடமுமாகும் என்றவாறு சொல்லுக என்பதாம். *274*

கீழ்நீர்ப் பயனறிதல்

கீழ் நீர்க்காணுதற்கமைந்த உதயாரூட ராசிகளில் சுபக் கோள்கள் நட்பு, ஆட்சி, உச்சக் கோள்களாக நிற்பினும் நீர் இராசிகளாகிய சந்திரன், சுக்கிரன் ஆகிய கோள்கள் வலிபெற்று நிற்கினும் நோக்கினும் கீழ்நீர்க்கிணற்றை உடையவன் தானே சுபத்துடன் அனுபவிப்பவன் என்பதறிந்து சொல்லுக என்பதாகும். *275*

கீழ்நீர்க் காண்டம் முற்றும்.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்.